திக்கில் உயர்ந்ததும், கிழக்கு அல்லது வடக்கில் ஜல ஸாரத்தை (கிழக்கு அல்லது வடக்கில் செல்லுகின்ற நீருத்தத்தை) உடையதும், சிறந்த காமதேனுவைப் போன்றதும், சூலங்கள் (முளைகள்) இல்லாததும், எலும்புகளில்லாததும், கெரி—பொந்துகள் இல்லாததுமான பூமியானது, ஸகல ஜாதியினருக்கும் யோக்கியமான பூமியாகும் என்று முற்காலத்திலிருந்த முனிவர்கள் கூறியிருக்கிறார்கள்.

பூ பரீக்ஷை என்னும் மூன்றாவது அத்தியாயம் முற்றும்.

|| சதுர்த்தோऽத்யாய: ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||௨||

[illegible] |
[illegible] ||௩||

[illegible] |
[illegible] ||௪||

நான்காவது அத்தியாயம்

மேதாவியான ஸ்தபதியானவன், உருவம்–நிறம்–ஒலி முதலிய குணங்களுடன் கூடிய பூமியை ஸங்கிரஹணம் செய்து தேவதைகளுக்கு பலிகொடுத்து, பிறகு ஸ்வஸ்தி வாசன கோஷத்துடனும், ஜய சப்தம் முதலான மங்கள சப்தங்களுடன்,

“இந்த பூமியில் வஸிக்கக்கூடிய பூதங்களும்–தேவதைகளும்–ராக்ஷஸர்களும், இந்த பூமியிலிருந்து விலகி, வேறு வாசஸ்தலத்திற்குச் செல்லவேண்டும். இந்த பூமியை நான் எடுத்துக்கொள்ளப்போகிறேன்.” என்ற மந்திரத்தைச் சொல்லி பூபரிகிரஹம் செய்யவேண்டும்.

பிறகு அந்த பூமியை உழுது, கோமயம் (பசுவின் சாணம்) கலந்த ஸகலவிதமான விதைகளையும் அந்த பூமியில் விதைக்கவேண்டும். அந்த விதைகள் முளைத்து பக்குவமடைந்ததும் பலங்களுடனும் இருப்பதைப் பார்த்து,

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ ௬ ॥

[illegible] ।
[illegible] ॥ ௭ ॥

அந்த பூமியில், காளைகளுடனும் கன்றுகளுடனும் கூடிய பசுமாடுகளை வஸிக்கும்படி செய்யவேண்டும். ஏனெனில்,—

பசுக்களினாலே ஸஞ்சரிக்கப்பட்டு, அவைகளின் காலடிகள் பட்டதும், அவைகளினால் முகர்ந்து பார்க்கப் பட்டதுமான பூமியானது, பரம பவித்ரமாகி பூஜிக்கத் தக்கதாகிறது. 5

ஸந்தோஷமடைந்த விருஷபங்களின் சப்தங்களினாலே அந்த பூமியிலிருந்த தோஷங்கள் யாவும் அலம்பப்பட்டு (விலகி) விடுகின்றன.

கன்றுகளின் வாயிலிருந்து சிந்திய நுரைகளினாலேயும், (பசுக்களின்) பால் பெருக்குகளினாலேயும், அந்த பூமியானது ஸம்கரிக்கப்பட்டதாகிறது. (சுத்தம் செய்யப்பட்டதாகிறது. 6

பசுக்களின் மூத்திரத்தினாலே நனைந்தும், அவைகளின் சாணத்தினாலே மெழுகப்பட்டும், அவைகளின் அசைவினாலே மணம் பெற்றும் விளங்குகின்ற அந்த பூமியானது, அவைகளின் குளம்படிகளினாலே, கௌதுபகந்தனம் செய்யப்பட்டதாகிறது. (காப்புக் கட்டப்பட்டதாகிறது.) 7

𑌗𑍋𑌗𑌨𑍍𑌧𑍇𑌨 𑌸𑌮𑌾𑌵𑌿𑌷𑍍𑌟𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌤𑍋𑌯𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌾𑌤𑍍 𑌪𑍁𑌨𑌃 ।
𑌤𑌥𑌾 𑌪𑍁𑌣𑍍𑌯𑌤𑍀𑌰𑍍𑌥𑍋𑌪𑍇𑌤𑍇 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰 (𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰) 𑌵𑌿𑌷𑌯𑍇 𑌶𑍁𑌭𑍇 ॥ ௮ ॥

𑌕𑌰𑌣𑍇 𑌚 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 𑌚 𑌦𑍈𑌵𑌜𑍍𑌞𑍈𑌶𑍍𑌚 𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍇 ।
𑌅𑌕𑍍𑌷𑌤𑍈𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌪𑍁𑌷𑍍𑌪𑍈𑌶𑍍𑌚 𑌬𑌲𑌿𑌕𑌰𑍍𑌮 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥ ௯ ॥

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍈𑌸𑍍𑌤𑍁 𑌯𑌥𑌾𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌾𑌚𑌯𑍇𑌤𑍍 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌵𑌾𑌚𑌕𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑌤𑍍𑌸𑍍𑌥𑌲𑍇 𑌤𑍁 𑌖𑌨𑌯𑍇𑌤𑍍 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌮𑍍 ॥ ௰ ॥

𑌹𑌸𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑌂 𑌸𑍀𑌮𑌂 𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑌮𑌂 𑌹𑍍𑌰𑌾𑌸𑌂 𑌸𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑍇𑌤𑍍 ॥ ௧௧ ॥

கீழே கூறப்பட்ட பலவிதங்களினாலேயும் அந்த பூமியானது, பசுவின் மணத்துடன் கூடியதாகிறது. பிறகு புண்ய தீர்த்தங்களைத் தெளிப்பது அல்லது பாச்சுவதனாலே, அந்த பூமியானது, ஸகலவிதமான சுபங்களையும் (மங்களங்களையும்) அளிக்கக்கூடியதாகிறது. 7½

அப்படிப்பட்ட பூமியில், ஜ்யோதிஷிகர்களினாலே சிறந்ததென விரும்பி நிச்சயிக்கப்பட்ட திதி, நக்ஷத்திரம், கரணம், லக்கினம் முஹூர்த்தம் இவைகளுடன் கூடிய சுபகரமான காலத்தில், அக்ஷதைகளினாலேயும், வெளுப்பு புஷ்பங்களினாலேயும், பலிஹரணம் செய்யவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. 9

பிறகு பிராம்ஹணர்களினாலே, ஸ்வஸ்தி வாசனம் செய்யும்படி செய்யவேண்டும். 9½

பிறகு அந்த பூமியின் மத்தியில் ஓரிடத்தில் ஒரு முழம் அகலம் நீளம் உயரத்திற்கு சச்சதுரமாக, உயரம் குறையாமலிருக்கும்படி பூமியைத் தோண்டி அதிலிருந்து மண்ணை எடுத்துவிடவேண்டும்.

[illegible] யதா²ந்யாயம் தம் குண்ட³மபி⁴வந்த்³ய ச ।
[illegible] ச ॥ ௧௩ ॥

[illegible] ।
[illegible]
ஸமாஹித: ॥ ௧௪ ॥

[illegible]
[illegible] ।

அயம் மந்த்ர: —

[illegible] ।
[illegible] ।
[illegible] ॥ ௧௫ ॥

மேதாவியாக இருப்பவன், பிறகு இரவின் ஆரம்ப காலத்தில், அந்தக் குழியை, சந்தனம் — அக்ஷதை முதலியவைகளினாலே பூஜை செய்து வணங்கி அந்தக் குழியில் ஜலத்தைவிட்டு நிறப்பவேண்டும்.

பிறகு யஜமானன் (அல்லது ஸ்தபதி;) சுத்தமாக இருந்துகொண்டு, மன அமைதியுடன், அந்தக் குழியின் பக்கத்தில் பூமியில் தர்பைகளைப் பரப்பி அதன்மீது கிழக்கில் தலையை வைத்துக்கொண்டு படுத்திருக்க வேண்டும். 13½

இது மந்திரம்.—

"ஹே பூமிதேவி நீ இந்த பூமியில் உத்தமமான வீர்யத்தை அடைந்து, (சிறந்த பூஸாரமுடையவளாக இருந்துகொண்டு,) தனம் தானியங்களுடன் மேலும் மேலும் விருத்தியடையவேண்டும். உன்னை வணங்குகிறேன்.

[illegible] ।
𑌸𑌾𑌵𑌶𑍇𑌷𑌂 𑌜𑌲𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 [illegible] 𑌸𑌰𑍍𑌵𑌸𑌮𑍍𑌪𑌦𑍇 ॥௧௫॥

[illegible] ।
[illegible] ॥ ௧௬ ॥

[illegible] ।

மங்களங்களையளிப்பாயாக.'' என்ற இந்த மந்திரத்தை ஜபம் செய்துவிட்டு, பிறகு உபவாஸத்தைத் துவக்க வேண்டும். (இந்த மந்திரத்தை ஜபித்து பூமியை வேண்டிக்கொண்டு தர்ப்பைகளாலான படுக்கையில் படுத்துக் கொண்டு, தர்ப்பைகளாலான படுக்கையில் படுத்துக்கொண்டு அந்த இரவு உபவாஸமாக இருக்கவேண்டும். என்பது பொருள்.) 15

மறுநாள் காலையில் புத்திமானான ஸ்தபதியானவன், அந்தக்குழியை பரீக்ஷித்துப் பார்க்கவேண்டும்.

அந்தப் பள்ளத்தில் விட்ட ஜலமானது முழுமையும் சுண்டிப்போகாமல், மீதி இருந்தால், அந்தப் பூமியானது, ஸகலவிதமான செல்வங்களையும் அளிக்கக்கூடியதாகும். ஆகவே அந்தப் பூமியை கிரஹித்துக்கொள்ளவேண்டும். 16

அந்தக்குழியானது ஈரநைப்பு உடையதாக இருந்தால் அது நாசத்தையளிக்கும். அந்தக் குழியானது ஈரநைப்புக் கூட இல்லாமல் உலர்ந்திருந்தால், அந்த பூமியானது, தனம்–தானியம் இவைகளை அழித்துவிடும். ஆகவே இவ்விதமான இரண்டுவித பூமிகளையும் விலக்கிவிட வேண்டும். 16½

குழியைத் தோண்டி எடுத்த மண்ணை அந்தக்குழியில் போட்டால், அந்தக் குழியானது அந்த மண்ணினாலே நிரம்பியிருந்தால், அந்த பூமியானது மத்திமமாகும். குழி

श्रैष्ठ्यावटस्थद्रवस्य प्रदक्षिणावर्तकात् ॥ ௧௮ ॥

कामधेनुप्रतिमां भूमिं गृह्णीयात् सर्वसम्पदे ।

एवं यथोक्तविधिना त्रिविधं विदित्वा
ग्रामाग्रहारपुरपत्तनखर्वटानि ।
स्थानीयखेटनिगमानि तथेतराणि
यः संविविक्षति स भूग्रहणं विदध्यात् ॥ ௧௯ ॥

इति मयमते वास्तुशास्त्रे भूपरिग्रहो नाम
चतुर्थोऽध्यायः ॥

நிறைந்து மண் மீதமிருந்தால், அந்த பூமியானது உத்தமமான பூமியாகும். குழி நிறம்பாமலிருந்தால் அந்த பூமியானது ஹீனமானதாகும். (ஹீனம்-குணமற்றது.)

அந்தக் குழியில் ஜலத்தை விட்டால், அந்த ஜலமானது, பிரதக்ஷிணமாக (வலமாக) ச்சுழன்று வந்தால், அந்த பூமியானது, ஸகலவிதமான ஸம்பத்துக்களையுமளிக்கக்கூடியதாகும். ஆகவே காமதேநுவைப்போன்ற (காமதேநுவைப் போல, எல்லாவித ஸம்பத்துக்களையுமளிக்கக்கூடிய) பூமியை கிரஹிக்கவேண்டும். 18½

இவ்விதமாகக் கூறப்பட்ட முறையின்படி மூன்று விதமான பூமிகளை (பூமியின் குணங்களை) த்தெரிந்துகொண்டு அவற்றுள் சிறந்த பூமியில், கிராமம்-அக்கிரஹாரம் புரம் - பத்தனம் - கர்வடம் - ஸ்தானீயம் - கேடம் - நிகமம் - இது போன்றவைகள் (இவைகளை நிர்மாணம் செய்து, அதில்) யாதொருவன் வஸிக்க விரும்புகிறானோ, அவன் பூ பரிக்ரஹம் செய்யவேண்டும். 19

பூ பரிகிரஹம் என்னும் நான்காவது அத்தியாயம் முற்றும்.

अथ पञ्चमोऽध्यायः ॥

सर्वेषामपि वास्तूनां मानेनैव विनिश्चयः ।
तस्मान्मानोपकरणं संक्षेपाद्वक्ष्यते क्रमात् ॥ १ ॥

परमाणुक्रमाद्वृद्धं मानाङ्गुलमिति स्मृतम् ।
परमाणुरिति प्रोक्तं योगिनां दृष्टिगोचरम् ॥ २ ॥

परमाणुभिरष्टाभिः रथरेणुरुदाहृतः ।
रथरेणुश्च वालाग्रं लिक्षा यूका यवोऽष्टधा ॥ ३ ॥

क्रमशोऽष्टगुणैर्वृद्धैः यवाष्टगुणितो
ऽङ्गुलम् ।
अङ्गुलं तु [illegible] वितस्तिः द्वादशाङ्गुलम् ॥ ४ ॥

ஐந்தாவது அத்தியாயம்

வாஸ்துக்கள் யாவும் அளவினாலேயே நிச்சயிக்கப் பட்டுள்ளன. ஆகையால் மானோபகரணத்தை முறையே சுருக்கமாகக் கூறுகிறேன். 1

பரமாணு முதல் விருத்தியடைந்தது மாநாங்குலமாகும். பரமாணு என்பது யோகிகளுக்கு மட்டிலும் திருஷ்டி கோசரமாகும். (கண்ணுக்குப் புலப்படக்கூடியதாம்)

பரமாணு 8-கொண்டது ரதரேணுவாகும்.
ரதரேணு 8-கொண்டது வாலாக்ரமெனப்படும்.
வாலாக்ரம் 8-கொண்டது லிக்ஷை எனப்படும்.
லிக்ஷை 8-கொண்டது யூகை எனப்படும்.
யூகை 8-கொண்டது யவை எனப்படும்.
யவை 8-கொண்டது அங்குலம் எனப்படும்.
அங்குலமானது மாத்திரம் என்றும் கூறப்படும்.
12-அங்குலம் கொண்டது விதஸ்தி எனப்படும்.

த்³வயம் ஹஸ்தோऽங்கு³ஷ்டம் தத் கிஷ்குரிதி சோச்யதே பு³தை⁴: |
பஞ்சவிம்ஶதிமாத்ரம் து ப்ராஜாபத்யமிதி ஸ்ம்ருதம் || ௫ ||

ஷட்³விம்ஶத்யா த⁴நுர்முஷ்டி: ஸப்தவிம்ஶோ த⁴நுர்க்³ரஹ: |
யாநே ச ஶயநே ஹஸ்த: ப்ராஜாபத்யம் விமாநகே || ௬ ||

வாஸ்தூநாம் து த⁴நுர்முஷ்டி: க்³ராமாதீ³நாம் த⁴நுர்க்³ரஹ: |
ஸர்வேஷாமபி வாஸ்தூநாம் ஹஸ்தேநைவாத²வா மத: || ௭ ||

ரத்நிஶ்சாரத்நிஶ்ச பு⁴ஜோ பா³ஹு: கர: ஸ்ம்ருத: |
ஹஸ்தஸ்ய: த³ண்ட³ஶ்சதுர்த⁴நுர்பி⁴ர்யஷ்டிஶ்ச ப்ரகீர்த்தித: || ௮ ||

விதஸ்தி 2-கொண்டது ஹஸ்தம் என்றும் கிஷ்கு என்றும் கூறப்படும்.

25-அங்குலம் கொண்டது பிராஜாபத்யம் (ஹஸ்தம்) எனப்படும்.

26-அங்குலம் கொண்டது தநுர்முஷ்டி எனப்படும்.

27-அங்குலம் கொண்டது தநுர் கிரஹம் எனப்படும்.

யாநம் (வாஹனம்) சயநம் (படுக்கை) இவைகளை ஹஸ்தத்தினுலே அளவிடவேண்டும்.

பிராஜாபத்தியத்தினுலே விமானத்தையளவிடவேண்டும். 6

வாஸ்துக்களை தநுர்முஷ்டியினுலே அளக்கவேண்டும்.

கிராமாதிகளை தநுர் கிரஹத்தினுலே அளக்கவேண்டும்.

அல்லது வாஸ்துக்கள் எல்லாவற்றையும் ஹஸ்தத்தினுலேயும் அளவிடலாகும். 7

ரத்நி-அரத்நி-புஜம்-பாஹு-கரம்-இவைகள் ஹஸ்தத்தின் பரியாய பதங்களாகும்.

4-தநுர் கொண்டது தண்டமாகும். தண்டமானது யஷ்டி என்றும் கூறப்படும். 8

த³ண்டா³ஷ்டமானா ரஜ்ஜு: த³ண்ட³மானேன ச வஸ்துஷு ।
க்³ராமம் நிக³மம் கே²டம் வேஶ்மாதீ³ன்யபி மானயேத் ॥ ௯ ॥

க்³ருஹாதீ³னாம் து ஹஸ்தேன யானஸ்ய ஶயனஸ்ய ச ।
விதஸ்தினா விதா⁴தவ்யம் க்ஷுத்³ராணாமங்கு³லேன து ॥ ௰ ॥

யவேனாணீயஸாம் மானமேவம் மானக்ரமம் விது³: ।
மத்⁴யமாங்கு³லிமத்⁴யஸ்த²பர்வமாத்ராயதம் து யத் ॥ ௧௧ ॥

கர்துர்மாத்ராங்கு³லம் ப்ரோக்தம் யாகா³தீ³னாம்
ப்ரஶஸ்யதே ।
தே³ஹலப்³தா⁴ங்கு³லம் பூர்வம் யத்து வஶிஷ்டாத் கீர்த்யதே ॥ ௧௨ ॥

ஸாமான்யேவம் விதி⁴ஸ்ஸ்யாத் து ஸர்வத்ர த்ரிவித⁴ம் ப்ரஜ்ஞ: ।

8-தண்டம் கொண்டது ரஜ்ஜு எனப்படும்.

கிராமம்-பத்தநம்-நகரம்-நிகமம்-கேடம்-வேச்ம முதலியவைகளை தண்டத்தினுலே அளவிடவேண்டும். 9

புத்திமான்கள், கிரஹம் முதலியவைகளை ஹஸ்தத்தினுலும், யாநம்-சயநம் இவைகளை விதஸ்தியினுலும், சிறிதாக இருப்பவைகளை அங்குலத்தினுலும், அல்பமானவைகளை (மிகச் சிறியவைகளை) யவையினுலும் அளக்க வேண்டும். இவ்விதமாக அளக்கவேண்டிய விதிகளைத் தெரிந்துகொள்ளவேண்டும். 10½

கர்தாவினுடைய (யஜமானுடைய) கையின் நடுவிரலின் மத்திய பர்வாவினுடைய நீளமானது, மாத்ராங்குலம் எனப்படும். இந்த மாத்ராங்குலமானது யாகம் முதலியவைகளுக்கு (யாகசாலை முதலியவைகளை அளவிடுவதற்கு)ச் சிறந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

தேஹலப்தாங்குலமானது மேலே கூறப்பட்டிருக்கிறது.

ஸம்ஜ்ஞீ ஸ்தபதிரேதேஷு மானேஷ்வேவம் ஸமாசரேத் ||௧௩||

ஸ்தபதி: ஸூத்ரக்ராஹீ ச வர்த்தகிஸ் தக்ஷகஸ்ததா |
ப்ரஸித்தே தேசஸங்கீர்ணஜாதிஜாத: ஸுலக்ஷண: ||௧௪||

ஸ்தபதி: ஸ்தாபனார்ஹ: ஸ்யாத் ஸர்வசாஸ்த்ரவிசாரத: |
ந ஹீனாங்கோऽதிரிக்தாங்கோ தார்மிகஸ்து தயாபர: ||௧௫||

அமாத்ஸர்யோऽனஸூயச்சாதந்த்ரிதஸ்த்வபிஜாதவான் |
கணிதஜ்ஞ: புராணஜ்ஞ: ஸத்யவாதீ ஜிதேந்த்ரிய: ||௧௬||

சித்ரஜ்ஞ: ஸர்வதேசஜ்ஞஸ்த்வன்னதஸ்த்வலுப்தக: |
அரோகீ சாப்ரமாதீ ச ஸப்தவ்யஸனவர்ஜித: ||௧௭||

ஸ்தபதியானவன், இவ்விதமாக மானவிதிகளை நன்கு தெரிந்துகொண்டு (வஸ்துக்களை) அளக்கவேண்டும்.

ஸ்தபதிகள் அவரவர்கள் செய்யும் காரியங்களினாலே, ஸ்தபதி 1, ஸூத்ரக்ராஹி 2, வர்த்தகி 3, தக்ஷகன் 4, என்று 4-விதமாக ஆகிறார்கள்.

பிரஸித்தமான தேசத்தில் ஸங்கீர்ண ஜாதியில் பிறந்தவனும், விரும்பத்தக்க சுபலக்ஷணங்களுடையவனும், ஸகல சாஸ்திரங்களையும், கற்றறிந்தவனும், அங்கங்கள் குறைவாகவோ கூடுதலாகவோ இல்லாதவனும், தார்மிகனாகவும், தயையுள்ளவனும், பொறாமையில்லாதவனும், அஸூயை இல்லாதவனும், சோம்பலில்லாதவனும், குலப்பெருமையுடையவனும், கணிதமறிந்தவனும், புராணங்களை அறிந்தவனும், ஸத்தியம் (உண்மை) பேசுகின்றவனும், இந்திரியங்களை ஜயித்தவனும், சித்திரக்கலையை அறிந்தவனும், ஸகல தேசங்களையும் (ஸகல தேசங்களிலுமுள்ள விசேஷங்களையும்) அறிந்தவனும், அன்னமளிப்பவனும், பேராசை இல்லாதவனும், ரோகமில்லாதவனும், தவறுதல்

ஸச்சித்தஸம்பந்நஸ்ச வாஸ்துவித்யாப்திபாரக: ।
ஸ்தபதேஸ்ஸ்ய ஸிஷ்யோ வா ஸ்ருஷ்டஸ்ருஷ்டீ
ஸம்ஸ்தாபயிதா ॥கஎ॥

ஸ்தபதேஶ்சந்தவர்த்தீ ச ஸர்வகர்மவிஶாரத: ।
ஸூத்ரதண்டப்ரமாணஜ்ஞோ மாநோந்மாநப்ரமாணவித் ॥க௯॥

ஶிலாதார்விஷ்டகாதீனாம் ஸூத்ரக்ராஹிவசானுக: ।
தக்ஷணாத் ஸ்தூலஸூக்ஷ்மாணாம் தக்ஷகஸ்ஸ து கீர்த்தித: ।

இல்லாதவனும், ஸப்த விதமான (7 - விதமான) வியஸனங்கள் (துக்கங்கள்) இல்லாதவனும், நல்ல மனது உடையவனும், நிலைத்த மனதுடையவனும், வாஸ்து வித்தையாகிய ஸமுத்திரத்தின் கரையைக் கண்டவனுமான "ஸ்தபதியானவன்" (வீடு முதலியவைகளையும், தேவாலயங்களையும், தேவதாமூர்த்திகளையும்,) நிர்மாணம் செய்து ஸ்தாபிப்பதற்கு தகுதியுள்ளவனாவான். 17½

அந்த ஸ்தபதியின் சீடன் அல்லது மகனாக இருப்பவனும், ஸ்தபதியின் உத்தரவை அனுஸரித்து நடப்பவனும், ஸகல காரியங்களையுமறிந்தவனும், ஸூத்ர பாதம்-தண்ட பாதம், (ஸூத்ரம் விழுந்த இடம், அளவுகோல் விழுந்த இடம்) இவைகளை அறிந்தவனும், அகலம்-நீளம்-உயரம் இவைகளை நன்றாக அளக்கத் தெரிந்துகொண்டவனும், "ஸூத்ரகிராஹி" (கயிறு பிடிப்பவன்) ஆவான். 19

யாதொருவன் பெரிதாகவோ, சிறிதாகவோ இருக்கின்ற கருங்கல்-மரம்--செங்கல் இவைகளை ஸூத்திர கிராஹியின் அபிப்பிராயத்தை அனுஸரித்து செதுக்குகிறானோ, அவன் "தக்ஷகன்" என்று கூறப்படுகிறான். (தக்ஷகன்-தச்சன்)

ம்ருத்கர்மஜ்ஞோ குணீ ஶக்த: ஸர்வகர்மஸ்வதந்த்ரக: ।
தக்ஷகர்மக்ருத்க்ஷணோ நாஸ்மிந் உபாயேனாபி யுக்தித: ॥ ௨௧ ॥

வ்ருத்திக்ருத் வர்த்தகி: ஸதா ஸூத்ர-
க்ராஹ்யனுகாமிந: ।
கர்மணோ நிபுணாஶ் ஶுத்தா: பலினோ தயாவரா: ॥ ௨௨ ॥

குருபக்தாஸ் ஸதா ஹ்ருஷ்டா: ஸ்தபத்யாஜ்ஞானுகாமினா: ।
தேஷாமேவ ஸ்தபத்யாக்ய: விஶ்வகர்மேதி ஸம்ஸ்ம்ருத: ॥ ௨௩ ॥

ஏபிர்விநா ஹி ஸர்வேஷாம் கர்ம கர்த்தும் ந ஶக்யதே ॥
தஸ்மாதேதத் ஸதா பூஜ்யம் ஸ்தபத்யாதி சதுஷ்டயம் ॥

மண்ணினுலாகக்கூடிய காரியங்களை அறிந்தவனும், நல்ல குணங்களுடையவனும், (எதையும் செய்யக்கூடிய) ஸாமர்த்திய முடையவனும், எல்லாக்காரியங்களையும் தன் அபிப்பிராயப்படி செய்கின்றவனும், உடனே செதுக்கக் கூடியவனும், இதில் மேன்மேலும் யுக்தியினுலே விருத்தி செய்கின்றவனும், எப்பொழுதும் ஸூத்ரக்ராஹியை அனுஸரித்து இருப்பவனும் ‘ வர்தகி ’ என்று கூறப்படுகிருன்

காரியங்களைச் செய்யும் ஸாமர்த்தியமுடையவர்களும், சுத்தமான மனதுடையவர்களும், பலமுடையவர்களும், தயவு உடையவர்களும், குருபக்தி உடையவர்களும், எப்பொழுதும் ஸந்தோஷமுடையவர்களும், எப்பொழுதும் ஸ்தபதியின் உத்திரவை அனுஸரித்து நடப்பவர்களுமான அவர்களுக்குள், ஸ்தபதியானவன், விசுவகர்மா, என்று கூறப் பட்டிருக்கிருன் இவர்களில்லாமல் எல்லோருடைய காரியங்களையும் செய்ய முடியாது. ஆகையால், ஸ்தபதி முதலிய நான்குபேர்களையும் எப்பொழுதும் பெருமையாக பாவிக்க வேண்டும்.   24

நஹி ஸ்தபத்யாதிபிஸ்து லோகே
விநா முஹூர்த்தம் ஸுக்ருதம் ந ஶக்யதே ।
தைரேவ ஸார்த்தம் மர்த்யாணாய குரோஸ்து
வ்ரஜந்தி மோக்ஷம் ஸம்ஸ்ருதேருத்தீர்ணா: ॥ ௨௫ ॥

இதி மயமதே வாஸ்துஶாஸ்த்ரே மாநோபகரணம் நாம
பஞ்சமோத்யாய: ।

இந்த ஸ்தபதி முதலியவர்களில்லாமல், இவ்வுலகத்தில் நல்லகாரியத்தைச் செய்ய முடியாது. ஆகையால், அவர்களுடன், மனிதர்கள், குருவினுலே, ஸம்ஸாரத்தினின்றும் (விடுதலையையடைந்து) மோக்ஷத்தை அடைகிருன். 25

மாஞேபகரணம் என்னும் ஐந்தாவது அத்தியாயம் முற்றும்.

அத² ஷஷ்டோ²(அ)த்⁴யாய: ||

வக்ஷ்யே(அ)ஹம் தி³க்பரிச்சே²த³ம் ஶங்குநார்கோத³யே ஸதி |
உத்தராயணமாஸே து ஶுக்லபக்ஷே ஶுபோ⁴த³யே || 1 ||

ஸ ஶுப⁴பக்ஷே வாரநக்ஷத்ரே விமலே ஸூர்யமண்ட³லே |
க்³ருஹீதவாஸ்துநோ மத்⁴யே து ஸமம் க்ருத்வா ஹஸ்தவிஸ்த்ருதே ||

ஜலேந ஜ்ஞாதேந ஸமம் து ஸமதலே க்ருதே |
தந்மத்⁴யே ஸ்தா²பயேச் ஶங்கும் தஜ்ஜ்ஞாநோக்தப்ரமாணத: || 2 ||

ஸார்த்ரமாத்ராயாமம் து ஶங்கோர்மூலம் ப⁴வேத் |

ஆருவது அத்தியாயம்.

சங்குவைக்கொண்டு திக்கு நிர்ணயம் செய்யும் முறை—ஸூர்யோதயமான பிறகு சங்குவை வைத்து திக்கு நிர்ணயம் செய்வதைக் கூறுகிறேன்.

உத்தராயணம் ஆறு மாதங்களுள் யாதாமொரு மாதத்தில், சுக்லபக்ஷத்தில், சுபகிரஹங்கள் அஸ்தமனம் அடையாத காலத்தில், சுக்லபக்ஷத்தில், சுப நக்ஷத்திரத்தில் (சுபவாரத்தில்) ஸூரியமண்டலம் நிர்மலமாக இருக்கும் பொழுது, தனக்காக கிரஹிக்கப்பட்டிருக்கிற வாஸ்துவின் மத்தியில், பூமியை ஸமப்படுத்தி, ஒருகோல் சதுரத்திற்கு, அந்த பூமியில் ஜலத்தைத் தெளித்து அதை ஸமபூமியாகச் செய்ய வேண்டும். அந்த பூமியின் நடுவில் சங்குவை ஸ்தாபனம் செய்ய வேண்டும். வைக்க வேண்டும் *

சங்குவின் மானத்தை இப்பொழுது கூறுகிறேன்:—

---

* சங்குவை, சந்தனம், குங்குமம், புஷ்பங்களினாலே அலங்கரித்து வைப்பது ஸம்பிரதாயம்.

मूलं पञ्चाङ्गुलं व्यासं सम्यग्वृत्तं निर्व्रणं
वरम् ॥ ४ ॥

अष्टादशाङ्गुलं मध्यं कन्यसं द्वादशाङ्गुलम् ।
[illegible] नाहं [illegible] (तत्त्वं) [illegible]
नवाङ्गुलम् ॥ ५ ॥

[illegible] चैव चन्दनं चैव खदिरः [illegible] ।
[illegible] शङ्कुवृक्षा उदीरिताः ॥ ६ ॥

[illegible]
वृत्तकम् ।

சங்குவின் உயரமானது ஒருமுழமாகும்* அதன் உச்சி ஆனது ஒரு அங்குலமாகும் அதன் மூலத்தின் அகலமானது ஐந்து அங்குலமாகும். அது வட்டமாகவும் வடு இல்லாமலும் (பொக்கை போரை இல்லாமலும்) இருப்பது சிரேஷ்டமாகும்

பதினெட்டு அங்குலம் உயரமுள்ளது (சங்கு) மத்யமமாகும். பன்னிரண்டு அங்குலம் உயரமுள்ளது அதமமாகும். அதன் அடியானது உயரத்திற்குத்தக்க பருமனுடையதாக இருக்க வேண்டும். ஒன்பது அங்குலம் உயரமுள்ளது அதமாதமமாகும்.

கஜதந்தம்—சந்தனம் — கருங்காலி — வெண்கருங்காலி வன்னி—பரம்பை—புளி—இவைகள் சங்கு செய்வதற்குக் கூறப்பட்ட மரங்களாகும். 6

இந்த மரங்கள் நீங்கிய ஸாரமான (அழுத்தமான) மரங்களினுலே, அதன் அக்கிர பாகத்தைச் செய்யவேண்டும். அது சித்திரங்களுடையதாகவும், வட்ட வடிவமாகவும் (குடை போலவும்) இருக்க வேண்டும்.

---

* சங்குவுக்குக் கூறப்படுகின்ற மரத்திலுலே சங்குவை செய்து, வேறு ஸாரமுள்ள மரத்திலே, ஒரு அங்குலத்தில் குடை போலச்செய்து, அதன் உச்சியில் சேர்க்க வேண்டும், என்பது பொருள்.

ஶங்கும் க்ருத்வா விதானேன தம் ந்யஸேத்யாகஸ்தலே ||௭||

ஶங்குத்விகுணமானேன தந்மத்யே மண்டலம் லிகேத் |
பூர்வாபராஹ்ணயோ: சாயா ப்ரவிஷ்டம் தத்பிந்துகம் || ௮ ||

தத்பிந்துத்வயமத்யே து மத்ஸ்யம் க்ருத்வா து யாம்யகே |
பிந்துத்வயாக்ரம் ஸூத்ரம் ஸமைர்ப்ரஹ்மபாதகம் || ௯

இவ்விதமாக சங்குவை செய்து, தனக்காகக் கொள்ளப்பட்ட பூமியில், அந்த சங்குவை, நிறுதியில் (காலைவேளையில்) ஸ்தாபிக்க வேண்டும். 7

(சங்குஸ்தாபனம் செய்யப்படும் பூமியில், சங்குவை ஸ்தாபனம் செய்வதற்குமுன்,) அந்த பூமியின் நடுவில், சங்குவின் அளவைப்போல இரண்டு பங்கு அகலமுள்ள மண்டலத்தைக் கல்பிக்கவேண்டும். பூர்வாஹ்ணத்திலும், அபராஹ்ணத்திலும் (காலையிலும் மாலையிலும்) சங்குவின் நிழலானது அந்த மண்டலத்தைத் தொடும் பொழுது, இரண்டு பக்கங்களிலும் இரண்டு பிந்துக்களை (பிந்து-புள்ளி) கல்பிக்கவேண்டும். அந்த இரண்டு பிந்துக்களையும் ஒன்று சேர்த்து ஸூத்திரத்தைக்கல்பிக்க வேண்டும் இது கிழக்கு மேற்குதிக்குகளாகும்.

இந்த இரண்டு பிந்துக்களின் மத்தியில் சுழன்று வரக் கூடிய, முகம்-புச்சங்களையுடைய மீன் வடிவத்தைக் கல்பித்து, அதை தெற்கு வடக்காக வைத்து, தெற்கு-வடக்கு-இரண்டு பக்கங்களிலும் இரு புள்ளிகளை வைத்து, அவ்விரண்டு புள்ளிகளையும் ஸூத்திரங்கொண்டு ஒன்று சேர்க்க வேண்டும். இவ்விதமாக இரண்டு ஸூத்திரங்களைக் கல்பித்துக் கொள்ள வேண்டும். 8½

பிறகு, புத்திமானான ஸ்தபதியானவன், மேற்கிலிருந்து வடக்குவரையிலும், கிழக்கிலிருந்து வடக்குவரையிலும், பக்க வாட்டில் ஸூத்திரங்களைக் கல்பித்துக் கொள்ள வேண்டும்,

த³க்ஷிணோத்தரத꞉ ஸூத்ரம் ஸமம் ஸூத்ரத்³வயம்
ந்யஸேத் ।
உத³க்³ராத்³யவநாக்³ராணி பூர்வாக்³ராணி விந்யஸேத் ॥ ௰ ॥

ஸூத்ராணி ஷட்³ப⁴தி꞉ ஸ்யாத் ரஜ்ஜு꞉ ஸ்யாத³ஷ்டஷஷ்டிமாத்ரா ச ।
கந்யாயாம் வ்ருஷபே⁴ ஸாபச்சா²யா து நாஸ்தி ஹி ॥ ௧௧ ॥

மேஷே ச மிது²நே ஸிம்ஹே துலாயாம் த்³வ்யங்கு³லம் த்யஜேத் ।
கர்கடே வ்ருஶ்சிகே மீநே வேதா³ங்கு³லம் த்யஜேத்
அங்கு³லம் ரஸாங்கு³லம் ॥ ௧௨ ॥

த⁴நு꞉கும்பே⁴ ஷட³ங்கு³ல்யம் மகரேஷ்டாங்கு³லம் ததா² ।
சா²யாயா த³க்ஷிணே வாமே நீத்வா ஸூத்ரம் ப்ரஸாரயேத் ॥

அஷ்டஷஷ்ட்யங்கு³லா ரஜ்ஜு꞉ தாலகேதகவல்கஜை꞉ ।

கன்னி-விருஷபம்-இரண்டு ராசிகளிலும் அபச்சாயை கிடையாது. மேஷம்-மிதுனம்-ஸிம்மம்-துலாம் இந்த நான்கு ராசிகளிலும் இரண்டங்குலம் தள்ள வேண்டும். கடகம்-விருச்சிகம்-மீனம்-இந்த மூன்று ராசிகளிலும் நான்கு அங்குலம் சோதிக்க வேண்டும். தநுஸ்-கும்பம் இந்த இரண்டு ராசிகளிலும் ஆறு அங்குலம் சோதிக்க வேண்டும். மகரராசியில் எட்டு அங்குலம் சோதிக்க வேண்டும். (கீழே கூறியுள்ளபடி சங்குவின் நிழலில், அந்தந்த ராசிகளில் அங்குலங்களைக் குறைக்க வேண்டுமென்பது பொருள்) 12½

சாயையின் தென்பக்கத்திலும் வட பக்கத்திலும், கீழே கூறிய கணக்குடன் ஒதுக்கி (உத்தராயணமானால், வடக்கிலும் தக்ஷிணாயனமானால் தெற்கிலும் ஒதுக்கி) ஸூத்திரத்தைக் கல்பிக்க வேண்டும்.

ரஜ்ஜுவானது 68 அங்குலம் நீளமுள்ளதாக இருக்க வேண்டும். அந்த ரஜ்ஜுவானது, பனைநாறு-தாழை

க்ஷாவ-ஶாலவம்ஶைர்த்ருணைர் ஹந்தர்ஹர்மையா
வம்ஶைர்வா || ௧௪ |

ஸம்பந்நாக்₃ரா (ம்ருது₃) மூலஸம்பூர்ணா த்ரிவ்ருத்தி: க்₃ரந்தி₂வர்ஜிதா |
தே₃வத்₃விஜக்ஷத்ரியாணாம் வைஶ்யஶூத்₃ரயோஸ்து த்₃விவர்திகா || ௧௫ ||

க₂தி₃ர: ஶ்வேதக₂தி₃ரோ மது₄க: க்ஷீரிணீ ததா₂ |
வாஸ்துஶங்கௌ ப்ரயோக்₃யா: ஸ்யு: ஸாரம் வா ஸாரதா₃ருஜம் ||

ஏகாத₃ஶாங்கு₃லாதூ₃ர்த்₄வம் ஏகவிம்ஶாங்கு₃லாந்தம் து தை₃ர்க்₄யத: |
ஶங்கோர்முஷ்டிப்ரமாணம் ஸ்யாத் நாஹம் ஸூசீநிப₄ம்
ஶுப₄ம் || ௧௭ ||

நாறினலாவது, தருப்பையினலாவது, ஆலவிழுதினலாவது மறையுரியினலாவது விரல் நுனியின் பருமனுள்ளதாக இருக்கவேண்டும். முப்பிரியுள்ளதாகவும், முடிச்சு இல்லாமலுமிருக்கவேண்டும்.

இது, தேவதைகள், பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், இவர்களுக்குக் கூறப்பட்டதாகும். மற்ற வைசியர்-சூத்திரர்களுக்கு 2. பிரிகளுள்ளதாக இருக்க வேண்டும். 15

வெண்கருங்காலி—கருங்காலி—இலுப்பை—பாலை இந்த மரங்கள், பூமியினுள் அடித்துப் புதைக்க வேண்டிய சங்குவுக்குக் கூறப்பட்ட மரங்களாகும். (மரங்கள் வைரம் பாய்ந்ததாக இருக்க வேண்டுமென்று கொள்ள வேண்டும்.)

அந்த சங்குவானது, பதினொரு அங்குலம் முதல் இருபத்தோரு அங்குலம் வரையில் நீளமுள்ளதாக இருக்க வேண்டும். அதன் அடியானது, ஒரு முஷ்டியளவு (பிடி அளவு) கனமுள்ளதாகவும், நுனியானது, ஊசியைப் போலவுமிருக்க வேண்டும். 17

[illegible] ||௧௮||

[illegible] ||

[illegible] ||

[illegible] || ௨௧ ||

மேதாவியான ஸ்தபதியானவன், கிழக்கு முகமாகவோ வடக்கு முகமாகவோ உட்கார்ந்து கொண்டு சங்குவை (சங்குவின் நுனியை பூமியிலூன்றி வைத்து) இடது கையினுல் பிடித்துக் கொண்டு, வலது கையினுல் சுத்தியை பிடித்து, வைத்துக் கொண்டு, சங்கு ஸ்தாபகனுடைய அனுமதியுடன், அந்த சங்குவை எட்டுதடவை அடிக்க வேண்டும். 18½

யாதொரு ஸூத்திரமானது அளவுகளினுல் நிச்சயிக்கப் பட்டதோ, அது, பிரமாண ஸூத்திர மெனப்படும் அதைச் சுற்றிலும் வெளிப்பக்கத்தில் கல்பிக்கப்படும் ஸூத்திரமானது, பர்யந்த ஸூத்திரமாகும் (பர்யந்தம்-பக்கம்). கர்ப்ப ஸூத்திரம் முதலியது, விந்யாஸ ஸூத்திரமாகும். இது தேவபதத்திற்கு (தேவாலயத்திற்குக்) கூறப்பட்டதாகும்.20

பதவிந்யாஸ ஸூத்திரமானது விந்யாஸ ஸூத்திர மாகும். (விந்யாஸ ஸூத்திரம் எனப்படும்.)

तत्सूत्रात् शङ्कुमात्रेण नीत्वा* शङ्कुं निखानयेत् ।
द्वारं निष्कासनं वा हित्वांशं वाऽस्य तस्य भवेत् ॥

नगरग्रामदुर्गेषु *वाय्वादि(स्वात्यादि) रज्जुपातनम् ।
याम्यादुत्तरपर्यन्तं प्राक्प्रत्यक्सूत्रमिष्यते ॥

प्रतीच्यादिपूर्वान्तं विसृजेद्दक्षिणोत्तरम् ।
ब्रह्मस्थानात् पूर्वभागं †त्रिसूत्रं तदुच्यते ॥ ௨௩ ॥

வீடுகளுக்குத் தென்பக்கத்தில் கர்பமாகும் (கர்ப ஸ்தானம்) அதன் பக்கத்தில் ஸூத்திர பாதனம் செய்ய வேண்டும். அந்த ஸூத்திரத்திலிருந்து, சங்குவின் அளவுக்கு நீக்கி சங்குவை நட வேண்டும். (அடிக்க வேண்டும்.) அதில் வெளியில் போவதற்கு வாசல்படியை கல்பிக்கவேண்டும். 22

நகரம்-கிராமம்-துர்கம்-இவைகளில், வாயு திக்கு முதல் ரஜ்ஜுபாதனம் செய்யவேண்டும். தெற்கு முதல் வடக்கு வரையில், கிழக்கு மேற்கில் செல்லும் ஸூத்திரமாகும். மேற்கு திக்கு முதல் கிழக்கு திக்கு வரையில் தெற்கு வடக்காக மற்றொரு ஸூத்திரத்தை விடவேண்டும். (கல்பிக்கவேண்டும்). பிரம்ஹஸ்தானத்திற்கு கிழக்கில் உள்ள அந்த ஸூத்திரத்திற்கு *திரி ஸூத்திரம் என்று பெயர். 24

---

* शङ्कुं उद्धृत्य सूत्रं इति पाठभेदः ।

* स्वात्यादि इति पाठभेदः ।

† पार्श्वमध्यं भवेत् इति पाठो युक्तः इति भाति ।

* அந்த ஸூத்திரமானது பிரம்ஹஸ்தானத்திற்குப் பக்கங்களிலிருந்தால அதற்கு திரிஸூத்திரம், என்று இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

ததோ தனம் வ்யவஸ்திதம் தான்யம் தக்ஷிணதம் ததः ।
ப்ரஹ்மஸ்தானாதுத்தரம் ஸுகமித்யபிதீயதே ॥ ௨௫

*ஸுகப்ரமாணம் பரிக்ஷேத்ரம் தத்ப்ரமாண-
விதோதிதே ।
ஏகஹஸ்தம் த்விஹஸ்தம் வா த்ரிஹஸ்தம் பரிதோऽதிகம் ।
விமானம் ஸ்தாவரம் ஸாரம் மண்டபஸ்ய *தத்ப்ராயகம் ॥

மேஷாதௌ தசகே த்வ்யங்குலம் மத்யமே தசகே ததா-
ஏகாங்குலம் ...

அதற்கு மேற்கிலுள்ளது, தனமாகும். (தனஸ்தானமாகும்.) அதற்கு தெற்கில் தானியஸ்தானமாகும். பிரம்ஹஸ்தானத்திற்கு வடபக்கத்திலுள்ளது ஸுகம். (ஸுகஸ்தானம்) என்று கூறப்படுகிறது. 25

ஸுகஸ்தானத்தை அளவிடுகின்ற க்ஷேத்திரத்தின் பிரமாணத்தைக் கூறுகிறேன் :—

ஸுக பிரமாண க்ஷேத்திரமானது, சுற்றிலும் ஒருமுழம்-இரண்டுமுழம்-மூன்று முழம் அதிகமாகும்.

விமானமானது உறுதியாக இருப்பதற்காக மண்டபத்தின் அகலம் எவ்வளவோ, அவ்வளவு புதைக்கவேண்டும். (அஸ்திவாரம் இருக்கவேண்டும்.) 26½

மேஷ மாதத்தில் முதலாவது 10 நாட்களில் 2-அங்குலமும், மத்தியிலுள்ள 10 நாட்களில் 1-அங்குலமும், ஒதுக்கிச்

*ப்ரமாணம் இதி பாடபேதः ।

*தத்ப்ராயகம் இதி பாடாந்தரம் ।

ஷட் ஷட் ஸவ்யாஷ்டகாலேஷூத்தரமாஸகம்
ஸந்தவேஷாம் ஸ்யாத்ஜாம்ஶகம்
ஏதத் ராத்ரம் ச ஶேஷாந்தேஷு ஜபயாபக்ஷேஷ்வபி
ஸ்தீர்த்தைஜ்ய யாஜ்ஞ்யா: ॥ ௨௭ ॥

ஸம்ஸ்க்ருத்ய ஶாஸ்த்ரமார்கேண ஸாராம்ஶகம்
த்ரயேஷ்வாரோக்தம் ப்ராக்ஶாஸ்த்ராயுக்தித: ।
தத்த்வாங்கராமாதிபய ஸூத்ர ஸஹ்ய தந்ஸாராக
விஸ்ருஜ்ய ஸூத்ரம் விந்யஸேச்ச பூமிஷு ॥ ௨௮ ॥

இதி காஶ்யபே வாஸ்துஶாஸ்த்ரே திக்பரிச்சேதோ நாம
ஷஷ்டோऽத்யாய: ।

சேர்க்கவேண்டும். (ஸூத்திரத்தை கல்பிக்கவேண்டும்.) மூன்றுவது 10 நாட்களுக்கு ஒதுக்கம் கிடையாது.

விருஷப மாதத்தில் முறையே ஒவ்வொரு 10 நாட்களிலும், 0, 1, 2 அங்குலம் ஒதுக்கவேண்டும்.

ஆனி மாதத்தில் முறையே 2, 3, 4 அங்குலங்களும்
ஆடி மாதத்தில் முறையே 4, 3, 2 அங்குலங்களும்
ஆவணி மாதத்தில் முறையே 2, 1, 0 அங்குலங்களும்
புரட்டாசி மாதத்தில் முறையே 0, 1, 2 அங்குலங்களும்
ஐப்பசி மாதத்தில் முறையே 2, 3, 4 அங்குலங்களும்
கார்த்திகை மாதத்தில் முறையே 4, 5, 6 அங்குலங்களும்
மார்கழி மாதத்தில் முறையே 6, 7, 8 அங்குலங்களும்
தை மாதத்தில் முறையே 8, 7, 6 அங்குலங்களும்
மாசி மாதத்தில் முறையே 6, 5, 4 அங்குலங்களும்
பங்குனி மாதத்தில் முறையே 4, 3, 2 அங்குலங்களும்
ஒதுக்கி ஸூத்திரத்தை கல்பிக்கவேண்டும்.

ராசியையும் ஸூரிய கதியையும் பார்த்து முன்பு கூறப்பட்ட அங்குலக் கணக்கில், யுக்தியுடன் ஒதுக்கி அதன் பிறகு, அந்த எல்லையிலிருந்து ஸூத்திர பாதம் செய்து பூமியைக் கல்பித்துக்கொள்ளவேண்டும். 28

திக் பரிச்சேதம் என்னும் ஆறுவது அத்தியாயம் முற்றும்.

அத² ஸப்தமோऽத்⁴யாய: ||

வக்ஷ்யேऽஹம் பத³விந்யாஸம் ஸர்வவாஸ்தூநாம் ஸநாதநம் |
ஸகலம் பேசகம் பீட²ம் மஹாபீட²ம் தத:பரம் || ௧ ||

உபபீடோ²க்³ரபீட²ம் ச ஸ்த²ண்டி³லம் ததா² சண்டி³தம் |
மண்டூ³கபத³கம் சைவ பத³ம் பரமசாயிகம் || ௨ ||

ததா²ஸநம் ச ஸ்தா²நீயம் தே³சீயோப⁴யசண்டி³தம் |
ப⁴த்³ரம் மஹாஸநம் பத்³மக³ர்ப⁴ம் ச த்ரியுதம் பத³ம் || ௩

வ்ரதபோ⁴க³பத³ம் சைவ கர்ணாஷ்டகபத³ம் ததா² |
க³ணிதம் பாத³வித்யாக்ஷம் பத³ம் ஸூர்யவிசாலகம் || ௪ ||

ஸுஸம்ஹிதபத³ம் சைவ ஸுப்ரதீகாந்தமேவ ச |
விசாலம் விப்ரக³ர்ப⁴ம் ச விச்வேசம் ச தத:பரம் || ௫ ||

ததா² விபுலபோ⁴க³ம் ச பத³ம் விப்ரதிகாந்தகம் |

ஏழாவது அத்தியாயம்

ஸகலவிதமான வாஸ்துவுக்கும் புராதனமாகக் கூறப்பட்டு வருகின்ற பதவிந்யாஸத்தைக் கூறுகிறேன்.

அவைகள் முறையே, ஸகலபதம் 1, பேசகபீடபதம் 2, மஹாபீடபதம் 3, உபபீடபதம் 4, உக்ரபீடபதம் 5, ஸ்தண்டிலபீடபதம் 6, மண்டூக பதம் 7, பரமசாயிகபதம் 8, ஆஸநபதம் 9, ஸ்தாநீயபதம் 10, தேசீயபதம் 11, உபய சண்டிதபதம் 12, பத்ரபதம் 13, மஹாஸனபதம் 14, பத்மகர்பபதம், 15, த்ரியுதபதம் 16, வ்ரதபோகபதம் 17, கர்ணஷ்டகபதம் 18, கணிதபதம் 19, ஸூரிய விசாலகபதம், 20, ஸுஸம்ஹிதபதம் 21, ஸுப்ரதீகாந்தபதம் 22, விசால

விசாலாக்ஷபதம் சைவ விப்ரபக்திகஸம்ஜ்ஞகம் ॥ ௬ ॥

பதம் விச்வேசஸாரம் ச ததைவேச்வரகாந்தகம் ।
இந்த்ரகாந்தபதம் சைவ த்வாத்ரிம்சத் கதிதாநி ஹி* ॥௭॥

ஸகலம் பதமேகம் ஸ்யாத் பேசகம் து சதுஷ்பதம் ।
பீடம் நவபதம் சைவ மஹாபீடம் த்விரஷ்டகம் ॥ ௮ ॥

பஞ்சவிம்சபதந்தூபபீடம் ஷட்த்ரிம்சதுக்ரபீடகம் ।
ஸ்தண்டிலம் ஸப்தஸப்தாம்சம் மண்டூகம் சாஷ்டகாஷ்டகம் ॥௯॥

பரமசாயிபதம் சைவ நவநவபதம் பவேத் ।

பதம் 23, விப்ரகர்பபதம் 24, விச்வேசபதம் 25, விபுலபோகபதம் 26, விப்ரதிகாந்தபதம் 27, விசாலாக்ஷபதம் 28, விப்ரபக்திகபதம் 29, விச்வேசஸாரபதம் 30, ஈசுவரகாந்தபதம் 31, இந்திரகாந்தபதம் 32, என்று 32 பதங்கள் கூறப்பட்டிருக்கின்றன. 7

ஏகபதமாக இருப்பதற்கு ஸகலம் என்று பெயர்.

4-பதமுள்ளதற்கு பேசகபதம் என்று பெயர்
9-பதமுள்ளதற்கு பீடபதம் என்று பெயர்
16-பதமுள்ளதற்கு மஹாபீடம் என்று பெயர்
25-பதமுள்ளதற்கு உபபீடம் என்று பெயர்
36-பதமுள்ளதற்கு உக்ரபீடம் என்று பெயர்
49-பதமுள்ளதற்கு ஸ்தண்டிலம் என்று பெயர்
64-பதமுள்ளதற்கு மண்டூகபதம் என்று பெயர்
81-பதமுள்ளதற்கு பரமசாயிபதம் என்று பெயர்

---

*அத்ர த்வாத்ரிம்சத்பதநாமாநி பவந்தி । அத: அநந்தபதம் கயோஜநபதஸம்வர்த்தாநந்தரோபயோநாத்ர யுக்தா ஸம்வர்த்தா கல்பநீயா ।

ஶூத்ரம் பரமஶாயம் ஸ்யாத் ஸர்வகர்மஸு பூஜிதம் ॥ ௰ ॥

ஸ்தாநீயம் ஸ்யாத்ததேகவிம்ஶத்யதிகம் ।
தேஶீயம் சதுஶ்சத்வாரிம்ஶத் பதம் ஶதாதிகம் ॥ கக ॥

ஷண்ணவத்யதிகம் சைவ பதம் பத்ரம் மஹாஸநம் ।
ஸபஞ்சவிம்ஶதி த்விஶதம் பத்மகர்பமிதி ஸ்ம்ருதம் ॥ க௨ ॥

நவாஶீத்யதிகம் தத் த்விஶதம் த்ரியுதம் பதம் ।
த்ரிஶதம் சதுர்விம்ஶதி வ்ரதபோகமிதி ஸ்ம்ருதம் ॥ கங ॥

த்ரிஶதம் ச (ஸ) ஏகோநஸப்ததிபதம் ததா ।
த்ரிஶதம் கர்ணாஷ்டகம் பதம் ...ம் ॥

சதுஶ்ஶதபதம் ஸூர்யவிஶாலம் பரிசக்ஷதே ।
ஸாமாந்யாதிபதம் சைவ ... ॥ கரு ॥

100-பதமுள்ளதற்கு ஆஸநபத்ம் என்று பெயர்
121-பதமுள்ளதற்கு ஸ்தாநீயம் என்று பெயர்
144-பதமுள்ளதற்கு தேசீயம் என்று பெயர்
169-பதமுள்ளதற்கு உபசண்டிதம் என்று பெயர்
196-பதமுள்ளதற்கு பத்ரபதம் என்று பெயர்
225-பதமுள்ளதற்கு மஹாஸநம் என்று பெயர்
256-பதமுள்ளதற்கு பத்மகர்பம் என்று பெயர்
289-பதமுள்ளதற்கு த்ரியுதம் என்று பெயர்
324-பதமுள்ளதற்கு விரதபோகம் என்று பெயர்
369-பதமுள்ளதற்கு கர்ணாஷ்டக பதம் என்று பெயர்
400-பதமுள்ளதற்கு கணிதபதம் என்று பெயர்
இதற்கு ஸூரிய விசாலம் என்று மற்றொரு பெயராம்

[illegible] ।
[illegible] ॥ [illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ [illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ [illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

441-பதமுள்ளதற்கு ஸம்ஸ்திதபதம் என்று பெயர்
484-பதமுள்ளதற்கு ஸம்ப்ரதிகாந்தம் என்று பெயர்
529-பதமுள்ளதற்கு விசாலபதம் என்று பெயர்
576-பதமுள்ளதற்கு விப்ரகர்பம் என்று பெயர்
635-பதமுள்ளதற்கு விச்வேசம் என்று பெயர்
676-பதமுள்ளதற்கு விபுல போகம் என்று பெயர்
729-பதமுள்ளதற்கு விப்ரதிகாந்தம் என்று பெயர்
784-பதமுள்ளதற்கு விசாலாக்ஷம் என்று பெயர்
841-பதமுள்ளதற்கு விப்ரபக்திகம் என்று பெயர்
900-பதமுள்ளதற்கு விச்வேச ஸாரம் என்று பெயர்
961-பதமுள்ளதற்கு ஈசுவர காந்தம் என்று பெயர்
1024-பதமுள்ளதற்கு இந்திரகாந்தபதம் என்று பெயர்
இவ்விதம் தந்திரங்களறிந்த முன்னோர்கள் கூறுகிறார்கள்.

(கண்டம் என்பதற்கு கூறுகள் என்று பொருள்)

ப்ரதமம் பதம் ஸகலமேகபதம் யதீநாம்
இஷ்டம் ஹி விஷ்டரமஹாஸநவஹ்நிகார்யேஷு |
பித்ருப்ரியஜநம் தேவயஜநம் ச
*ஹோமாக்நிஷ்டேயபரிநாமகஸ்ருத்யயாதே || ௨௨ ||

பைஶாசபூதவிஷபாதஹரக்ஷகாணாம்
பூஜ்யா ஹி பேசகபதே சதுரம்ஶயுக்தே |
தஸ்மிந்து விந்யஸநமத்ர விதிநா விதிஜ்ஞை:
ஶைவம் து நிஷ்கலமுமம் ஸகலம் ச யுக்த்யா || ௨௩ ||

அத பீடபதே நவாம்ஶபாதே
ஈஶாதிதிக்ஷு பதேஷ்வஷ்டகேஷு |
விதாரிபவதாத்ருத்தகம் தஹநம்
பவநம் பவநம் ப்ருதிவீ ஹ்ருதயம் || ௨௪ ||

முதலாவது ஏகபதமானது, யதிகளுக்குரிய ஸகலபதமாகும். 12, 3, 2, 1 என்ற ஸூத்திரங்களுடன் கூடிய (இந்த ஏகபதத்தில்) விஷ்டரம் (விஷ்டரம் என்ற பெயர் உடைய ஆஸநம்) மஹாஸநம் அல்லது விஷ்டரமஹாஸநம், அக்நிகார்யம், பித்ருயஜனம் (ச்ராத்தம் முதலியவை) தேவயஜநம் (யாகம் முதலிய தேவ ப்ரீதகரமான காரியம்) குருபூஜை இவைகள் விரும்பத்தக்கவைகளாகும். 22

நான்கு (4) அம்சங்களுடன் கூடிய பேசகபதத்தில் பைசாசகிரஹங்கள்-பூதகிரஹங்கள்-விஷபாதாகரகிரஹங்கள் இவைகளிடத்திலிருந்து ரக்ஷிக்கக்கூடிய தேவதைகளைப் பூஜிக்கவேண்டும். விதியை அறிந்தவர்கள், இப்பொழுது, சைவமான நிஷ்கலமூர்த்தியையும், ஸகல மூர்த்தியையும் அதில் கல்பிக்கவேண்டும். (ஸகலம் - கை கால் முதலிய அங்கங்களுடையது. நிஷ்கலம். லிங்காகாரம்.) 23

ஒன்பது (9) பாகமுள்ள பீடத்தில், ஈசானியம் முதலிய திக்குதோறும், ஜலம் 1, அக்நி 2, ஆகாசம் 3, வாயு 4

*ஹோமாந்த்ரதேய இதி வா பாடம் |

𑌷𑍋𑌡𑌶𑌾𑌂𑌶𑌂 𑌮𑌹𑌾𑌪𑍀𑌠𑌂 𑌪𑌞𑍍𑌚𑌪𑌞𑍍𑌚𑌾𑌂𑌶𑌮𑌿𑌤𑍍𑌯𑌪𑌿 ।
𑌶𑌂𑌭𑍋𑌰𑍍𑌜𑌯𑌨𑍍𑌤 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑍋 𑌭𑍃𑌶𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌤𑌥𑍋 𑌯𑌮𑌃 ॥௨௫॥

𑌭𑍃𑌙𑍍𑌗𑌃 𑌪𑌿𑌤𑍃𑌗𑌣𑌸𑍍𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑍋 𑌵𑌰𑍁𑌣𑌃 𑌶𑍋𑌷𑌮𑌾𑌰𑍁𑌤𑍌 ।
𑌮𑍁𑌖𑍍𑌯𑌸𑍋𑌮𑌾𑌦𑌿𑌤𑌿𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌬𑌾𑌹𑍍𑌯𑌦𑍇𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ॥

𑌆𑌪𑌵𑌤𑍍𑌸𑌾𑌰𑍍𑌯𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑌾 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌿𑌤𑍍𑌰𑌕𑍌 ।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌜𑍋 𑌭𑍂𑌧𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥

𑌤𑌤𑍍𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍇𑌕𑌾𑌂𑌶𑍈𑌕𑍈𑌕𑌮𑍇𑌕𑌕𑌂 𑌪𑌦𑌮𑍍 ।
𑌉𑌪𑌪𑍀𑌠𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍𑌤𑌦𑍍𑌧𑌿 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃(𑌦𑍇𑌵𑌤𑌾𑌃) 𑌪𑌦𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 ॥

இவைகளைக் கல்பிக்கவேண்டுமென்பதை அறிந்துகொள்ள வேண்டும். பூமியானது இவைகளின் எல்லையாகும். 24

பதினாறு அம்சங்களுடன் கூடியது மஹா பீடமாகும். இது 25 தேவதைகளுடையதாகும். ஈசன் 1, ஜயந்தன் 2, ஆதித்தியன் 3, பிருசன் 4, அக்கி 5, விததன் 6, யமன் 7, பிருங்கன் 8, பிதிருக்கள் 9, ஸுக்ரீவன் 10, வருணன் 11, சோஷன் 12, மாருதன் 13, முக்கியன் 14, ஸோமன் 15' அதிதி 16 இவர்கள் பாஹ்ய தேவதைகளாவார்கள். (பாஹ்யம்-வெளிப்பக்கம்) 26

ஆபவத்ஸர் 17, ஆர்யன் 18, ஸாவித்ரன் 19, விவஸ்வான் 20, இந்திரன் 21, மித்ரகன் (மித்ரன்) 22, ருத்ரஜன் 23, பூதரன் 24 இவர்கள் உள்பக்கத்தின் தேவதைகளாவார்கள். மத்தியில் பிரபுவான பிரம்மதேவன் 25 தேவதையாவார். 27

கீழே கூறப்பட்ட ஷோடசாம்சபதத்தின் இரு பக்கங்களிலும் ஒரு பாகத்திற்கு ஒன்றுவீதம் பதங்களைச் சேர்த்தால் அது உப பீடமாகும். (5×5=25 பதமாகும் என்பது பொருள்).

𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌦𑍍𑌵𑌯𑍇 𑌚𑍈𑌕𑍈𑌕𑌂 𑌸𑌂𑌯𑍋𑌜𑍍𑌯 𑌭𑌾𑌗𑌶𑌃 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌾𑌨𑍍𑌤𑌪𑌦𑌂 𑌯𑌾𑌵𑌤𑍍 𑌤𑌾𑌵𑌦𑍍 𑌭𑌾𑌗𑌾𑌨𑍍 𑌵𑌿𑌭𑌾𑌜𑌯𑍇𑌤𑍍 ॥ ௨௯ ॥

𑌸𑌮𑌾𑌨𑌿 𑌯𑌾𑌨𑌿 𑌵𑌾𑌸𑍍𑌤𑍂𑌨𑌿 𑌚𑌤𑍁𑌷𑍍𑌷𑌷𑍍𑌟𑌿𑌪𑌦𑌾𑌨𑌿 𑌚 ।
𑌅𑌸𑌮𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌏𑌕𑌾𑌶𑍀𑌤𑌿𑌪𑌦𑌾𑌨𑌿 𑌚 ॥ ௩௰ ॥

𑌪𑌦𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌮𑌣𑍍𑌡𑍂𑌕𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍 ।
𑌚𑌣𑍍𑌡𑌿𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌵𑌾𑌸𑍍𑌤𑍂𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂 𑌚 𑌯𑌥𑌾 𑌤𑌥𑌾 ॥ ௩௧ ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇𑌽𑌹𑌮𑌪𑌿 𑌤𑌦𑍍𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 ।

புத்திமானாக இருப்பவன், கீழே கூறியவிதமாக, இரு பக்கங்களிலும், ஒவ்வொரு பாகத்துடனும் மற்றொரு பாகத்தைச் சேர்த்துக்கொண்டு, இந்திர காந்தபதம்வரையில், பதங்களை பாகுபாடு செய்துகொள்ளவேண்டும். 29

ஸமபாகங்களை (இரட்டையான பாகங்களை) 64 பதத்தை விபாகம் செய்வதைப்போல, விபாகம் செய்ய வேண்டும். அஸமமான எல்லாவற்றையும் (ஒத்தப்படையானவைகளை) 81 பதங்களை விபாகம் செய்வதைப்போல, விபாகம் செய்யவேண்டும். *(கிழக்கு மேற்காக 8 பதங்களும், தெற்கு வடக்காக 8 பதங்களும் கல்பித்தால், அந்த ஸ்தலமானது $8 \times 8 = 64$ பதமாகும். கிழக்கு மேற்கில் 9 பதங்களும், தெற்கு வடக்காக 9 பதங்களும் கல்பித்துக் கொண்டால், அது $9 \times 9 = 81$ பதமாகும் என்பது கருத்து).

பதங்கள் எல்லாவற்றிலும், மண்டூகபதம் சிறந்ததாகும். இவ்விதமாகவே, சண்டிதபதமும், எல்லாவித வாஸ்துக்களுக்கும் சிறந்ததாகும். ஆகையால், இவ்விரண்டையும், தந்திரங்களிலிருந்து கிரஹித்து ஸங்கிரஹமாகக் கூறுகிறேன். (64 பதத்திற்கு மண்டூக பதம் என்றும், 81 பதத்திற்கு சண்டிதபதம் என்றும் பெயர்) 31½

𑌚𑌤𑍁𑌷𑍍𑌷𑌷𑍍𑌟𑌿𑌪𑌦𑍇 𑌚𑍈𑌕𑌾𑌶𑍀𑌤𑍌 𑌸𑌕𑌲𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑍇 ॥ ௩௨ ॥

𑌸𑍌𑌤𑍍𑌰𑍇 𑌚 𑌪𑌦𑌮𑌧𑍍𑌯𑍇 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌥𑌾𑌪𑌿𑌤𑌾-𑌸𑍍𑌸𑍁𑌰𑌾𑌃 ।
𑌪𑍍𑌰𑌾𑌗𑌾𑌰𑌭𑍍𑌯 𑌕𑍋𑌣𑌵𑌶(𑌤𑌿 𑌶)𑌈𑌶𑌾𑌨𑍇𑌷𑍍𑌵𑍇𑌵𑌾𑌗𑍍𑌨𑍇𑌯𑍇 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍 ॥ ௩௩ ॥

𑌈𑌶𑌾𑌨𑌃 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑍋 𑌜𑌯𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌃 ।
𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌃 𑌸𑌤𑍍𑌯𑌕𑌶𑍍𑌚𑍈𑌵 𑌭𑍃𑌶𑌶𑍍𑌚𑍈𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌕𑌃 ॥ ௩௪ ॥

𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 𑌪𑍂𑌷𑌾 𑌚 𑌵𑌿𑌤𑌥𑍋 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌶𑍍𑌚 𑌯𑌮𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑍋 𑌭𑍃𑌙𑍍𑌗𑌰𑌾𑌜𑌶𑍍𑌚 𑌮𑍃𑌷𑌶𑍍𑌚 𑌪𑌿𑌤𑍃𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ॥ ௩௫ ॥

𑌦𑍌𑌵𑌾𑌰𑌿𑌕𑌶𑍍𑌚 𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌦𑌨𑍍𑌤𑍋 𑌜𑌲𑌾𑌧𑌿𑌪𑌃 ।
𑌅𑌸𑍁𑌰𑌃 𑌶𑍋𑌷𑌰𑍋𑌗𑍌 𑌚 𑌵𑌾𑌯𑍁𑌰𑍍𑌨𑌾𑌗𑌮𑍁𑌖𑍍𑌯𑌕𑌶𑍍𑌚𑍈𑌵 𑌚 ॥

𑌭𑌲𑍍𑌲𑌾𑌟𑌕𑌶𑍍𑌚𑍈𑌵 𑌶𑍈𑌲𑌕𑌶𑍍𑌚𑍈𑌵 𑌮𑍃𑌗𑌸𑍍𑌤𑌥𑌾 ।

ஸகல நிஷ்கலரூபமான சதுஷ்ஷஷ்டி (64) பதத்திலும், ஏகாசீதி (81) பதத்திலும், ஸௌத்திரத்திலும், பதமத்தியிலும், பிரம்ஹா முதலான தேவதைகள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறார்கள்.

இந்த தேவதைகள், வடகிழக்கு திக்கிலிருந்து முறையே, தனித்தனியே கூறப்பட்டிருக்கிறார்கள். 33

ஈசனன் 1, பர்ஜந்யன் 2, ஜயந்தன் 3, மஹேந்திரகன் 4, ஆதித்யன் 5, ஸத்தியகன் 6, பிருசன் 7, அந்தரிக்ஷகன் 8, அக்நி 9, பூஷா 10, விததன் 11, ராக்ஷஸன் 12, யமன் 13, கந்தர்வன் 14, பிருங்கராஜன் 15, மிருஷன் 16, பிதிரு தேவதைகள் 17, தௌவாரிகன் 18, ஸுக்ரீவன் 19, புஷ்ப தந்தன் 20, ஜலாதிபன் 21, அஸுரன் 22, சோஷன் 23, ரோகன் 24, வாயு 25, நாகன் 26, முக்கியன் 27,

अदितिश्चादितिश्चैव द्वात्रिंशद्बाह्यदैवताः ॥३७॥

आपश्चैवापवत्सश्चैवान्तः प्रागुदगाश्रितौ ।
सविन्द्रश्चैव साविन्द्रस्तथा प्राग्दक्षिणे स्थितौ ॥

इन्द्रश्चेन्द्रराजश्च दक्षिणापरतः स्थितौ ।
रुद्रो रुद्रजयश्चैव पश्चिमोत्तरतः स्थितौ ॥३८॥

ब्रह्मा मध्ये स्थितः शंकर्ता [illegible] ।
आर्यको विवस्वान्मित्रस्तु भूधरश्चैव कीर्तिताः ॥

பல்லாடகன் 28, ஸோமன் 29, மிருகன் 30, அதிதி 31, ஆதிதி 32, இந்த முப்பத்திரண்டு (32) பேர்களும் பாஹ்ய தேவதைகள் (வெளிப்பக்கத்திலுள்ள தேவதைகள்) ஆவார்கள். 37

ஆபவன், அபவத்ஸன் இவ்விருவர்களும், உள்பக்கத்தில், வடகிழக்கில் கூறப்பட்டிருக்கிறார்கள்.

ஸவிந்திரன், ஸாவிந்திரன், இவ்விருவரும், உள்பக்கத்தில், தென்கிழக்கில் கூறப்பட்டிருக்கிறார்கள்.

இந்திரன், இந்திரராஜன், இவ்விருவர்களும் தென்மேற்கில் கூறப்பட்டிருக்கிறார்கள்.

ருத்திரன், ருத்திரஜயன் இவ்விருவர்களும் வடமேற்கு திக்கில் கூறப்பட்டிருக்கிறார்கள். 39

மங்களங்களை செய்யக்கூடியவரான பிரம்ஹாவானவர், மத்தியிலிருப்பவராவார்.

ஆரியன் 1, விவஸ்வான் 2, மித்திரன் 3, பூதரன் 4. இவர்கள், பிரம்ஹாவுக்கு எதிரிலிருப்பவர்களாவார்கள். (நான்கு பக்கங்களிலும் என்று பொருள்.) 40

சரகீ ச விதாரீ ச பூதநா பாபராக்ஷஸீ |
ஈசாநாதிஷு ஸ்தாப்யா: அத்ராஸ்தாநே ஸ்த்ரிய: ஸ்ம்ருதா: |
நவதா பலிபோக்தார: ஶேஷாணாம் வக்ஷ்யதே ஸ்திதி: ||

விம்ஶதி: ஸப்தசத்வார: ஷட்ஷட்ஸங்க்யாஶ்சதுஷ்டயம் |
ஷட் ஷட் ஸங்க்யா த்வாதஶ ச த்ரய: ஷட்கே: |
யுக்தே (அஷ்டகே) ஏகேந ஸங்க்யாபிராதி:
ஸம்யுக்தம் ஸ்யாத் அஷ்டகைகாசீதிகம் || ௪௨ ||

அத்ர சதுஷ்ஷஷ்டிபதே மத்யே ப்ரஹ்மணஸ்து அத்ர சதுஷ்பதம் ||

ஆர்யகாத்யா: அத்ராஷ்டௌ த்ரித்ரிபதா: ஸ்ம்ருதா: |
ஆபாத்யஷ்டௌ ச கோணேஷு அர்த்தபதா: ஸ்ம்ருதா: || ௪௩ ||

சரகீ 1, விதாரீ 2, பூதனை 3, பாபராக்ஷஸீ 4, இவர்களை, வாஸ்துவுக்கு வெளிப்பக்கத்தில், ஈசானியம் முதலிய திக்குகளில் ஸ்தாபிக்கவேண்டும். இவர்களுக்கு ஸ்தானம் கிடையாது. இவர்கள் பலியை புஜிப்பவர்கள். இவர்கள் நீங்கிய, மற்ற தேவதைகளுக்கு ஸ்தானங்கள் கூறப்பட்டு இருக்கின்றன. 41

20, 7, 4, 6, 6, 4, 6, 12, 3, 4, 8, 1, ஆக 81 பதங்களும், ஸூத்திரங்களும் ஸந்நிதிகளுமுள்ளது ஏகாசீதி 81 பதமாகும். இதற்கு சண்டிதம் என்றும் பெயர். 42½

சதுஷ்ஷஷ்டி 64 பதத்தில், நடுவில் 4 பதங்கள் பிரம்ஹ ஸ்தானமாகும். ஆர்யகன் முதலான 4 தேவர்கள் கிழக்கு முதல் 3, 3, பதங்களுடையவர்களாவார்கள். ஆபன் முதலான 8 தேவதைகளும், கோணங்களில், அர்த்தபதமுடையவர்களாவார்கள்.

महेन्द्रराक्षसाद्यास्तु पुष्पभल्लाटकादयः ।
चतुश्चतुष्कस्य अष्टानां देवाश्(च)चतुष्पदाः ॥ ४५ ॥

*जयन्तश्चान्तरिक्षश्च वितथश्च मृगस्तथा ।
सुग्रीवो रोगमुख्यश्च दितिश्चैकैकपदाः ॥ ४६ ॥

सम्पाद्यष्टाचराद्यष्टाः कोणेष्वेकपदास्स्मृताः ।
एवं क्रमेण भुञ्जन्ति मण्डूके वास्तुदेवताः ॥

स्वस्वप्रदक्षिणवशात् पदभक्तिक्रमं विदुः ।
ब्रह्माणं च निरीक्ष्यैते स्थिताः स्वस्वपदेश्वराः ॥

மஹேந்திரன் – ராக்ஷஸன் முதலியவர்களும், புஷ்பன்-பல்லாடகன் முதலியவர்களும், நான்கு நான்கு தேவதைகள் நான்கு நான்கு ஸ்தானங்களுடையவர்களாவார்கள்.

* ஜயந்தன் – அந்தரிக்ஷன் – விததன் – மிருகன் – ஸுக்ரீவன் – ரோகன் – முக்கியன். திதி – இவர்கள் ஒவ்வொரு பதமுடையவர்களாவார்கள்.

இவ்விதமாக, வாஸ்து தேவதைகள், மண்டூகபதத்தில் முறையே, ஸ்தானங்களை புஜிக்கிறார்கள். 47

---

*अस्य स्थाने अयं पाठः एवं पठनीयः —

पर्जन्याद्याश्च पूषाद्याः तथा दौवारिकादयः ।
नागाद्याश्च चतुर्विंशद्देवा ह्येकपदास्स्मृताः ॥ इति

* இந்த விஷயம் பொருத்தமாக இல்லை. ஆகவே இதை, இவ்விதம் திருத்திக்கொள்ளவேண்டும்.

பர்ஜன்யன் முதலியவர்கள், பூஷா முதலியவர்கள், தௌவாரிகன் முதலியவர்கள், நாகன் முதலியவர்கள், இவர்கள், இந்திராதிகளைச் சேர்த்து 24 தேவதைகள், ஏகபதாதிபதிகள் ஆவார்கள்.

𑌷𑌡𑍍𑌵𑌂𑌶𑍈𑌕𑌹𑍃𑌦𑌯𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑌰𑍍𑌮𑌂 𑌚𑌤𑍁𑌸𑍍𑌸𑌿𑌰𑌮𑍍 ।
𑌮𑍇𑌦𑌿𑌨𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌕𑍁𑌬𑍍𑌜𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌶𑌿𑌰𑌸𑌂
𑌵𑌿𑌦𑍁𑌃 ॥

𑌤𑌨𑍍𑌮𑍂𑌰𑍍𑌧𑌾𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑌾𑌰𑍍𑌯𑌕𑍋 𑌨𑌾𑌮 𑌦𑍇𑌵𑌤𑌾 ।
𑌸𑌵𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌬𑌾𑌹𑍁𑌃 𑌸𑌾𑌵𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌕𑌕𑍍𑌷 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥௫௰॥

𑌆𑌪𑌶𑍍𑌚𑌾𑌪𑌵𑌤𑍍𑌸𑌶𑍍𑌚 𑌸𑌕𑌕𑍍𑌷𑍋 𑌵𑌾𑌮𑌤𑍋 𑌭𑍁𑌜𑌃 ।
𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌂 𑌵𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌂 𑌮𑌹𑍀𑌧𑌰𑌃 ॥ ௫௧ ॥

𑌮𑌧𑍍𑌯𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌮𑌯𑌃 𑌕𑌾𑌯𑌃 𑌮𑌿𑌤𑍍𑌰𑌃 𑌪𑍁𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌰𑌾𑌜𑌸𑍍𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌃 𑌪𑌾𑌦𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 ॥

அந்த அந்த தேவதைக்கு வலமாக பதபுக்தி கிரமம் கூறப்பட்டிருக்கிறது.

தேவதைகள், தங்கள் பதங்களிலிருந்து பிரம்ஹாவை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். 48

வாஸ்து புருஷனானவன், பூமியில் ஆறு முதுகெலும்புகளுடையவனும், ஒரே ஹ்ருதயமுடையவனும், நான்கு, மர்மங்களுடையவனும், நான்கு ஸிரைகள் (நரம்புகள்) உடையவனும், மிகக் கூனலான சரீரமுடையவனும், கிழக்குதிக்கில் தலையையுடையவனும் ஆகிறான் என்று கூறுகிறார்கள். 49

அந்த வாஸ்து புருஷனுடைய சிரமானது, ஆரியகன் என்னும் தேவதையாம். ஸவிந்திரன் வலது புஜமாம். ஸாவிந்திரன் கக்ஷமாகும். ஆபன் - அபவத்ஸன், இவ்விருவரும் முறையே இடது கக்ஷமும் இடது புஜமுமாம். விவஸ்வான் என்பவர் சரீரத்தின் வலது பக்கமாம். மஹீதரன் இடது பக்கமாம். மத்தியில் பிரஹ்மமயமான சரீரமாகும். மித்திரன் பும்ஸ்துவமாம் என்று விதிக்கப்பட்டிருக்கின்றது. இந்திரன் - இந்திரராஜன், இருவரும் வலது பாதமென்று

ருத்ரோ ருத்ரஜயோ வாமபாதே ஸ்யாதாம் அதோமுக: |
வஸ்துத்ரிபாகமத்யே து வம்ஶாஷ்ஷட் ப்ராகுதக்
கதா: ||

வஸ்து மத்யே து மர்மாணி ப்ரஹ்மா ஹ்ருதயமுச்யதே |
நிஷ்கூடாம்ஶா நிராபுங்கா ஜ்ஞேயா: இத்யேஷ வாஸ்துபுருஷ: ஸ்ம்ருத: ||

க்ருஹே க்ருஹே மநுஷ்யாணாம் ஶுபாஶுபகர: ஸ்ம்ருத: |
தஸ்யாங்காநி க்ருஹாங்கேஷு பீடயேந்நைவ புத்திமாந் ||

வ்யாதயஸ்து யஜமாநஸ்ய ஹதாங்கேஷு து ஸம்ஶ்ரிதா: |
தஸ்மாத் ஸர்வப்ரயத்நேந புருஷாங்கம் து ஸர்வதா |
அபாலயித்வா ஸம்ஸித்தே தேவதாநாம் ஸமுச்சய: || ௫௯ ||

கூறப்படுகிறது. ருத்திரன் – ருத்திரஜயன் இருவரும் இடது பாதமாம். இத்தகைய வாஸ்து புருஷன் அதோமுகமாக (பூமியை நோக்கி முகத்துடன்) படுத்திருப்பவனுவான்.

வஸ்துவின் (குறிப்பிட்ட பூமியின்) மூன்றில் ஒரு பாகமான மத்திய பாகத்தில், ஆறு அம்சங்கள் (முதுகெலும்புகள் கிழக்கு வடக்காக இருப்பவைகளாம்.) வஸ்துவின் (பூமியின்) மர்மாக்கள் இருப்பவைகளாம். பிரஹ்மாவானவர் ஹ்ருதமாகக் கூறப்படுகிறுர். நிஷ்கூடாம்சங்கள் நிறாபுகளெனத் தெரிந்துகொள்ளவேண்டும். இவ்விதமாக வாஸ்து புருஷனுடைய வடிவம் கூறப்பட்டிருக்கிறது.

இந்த வாஸ்துபுருஷன், மனிதர்களுடைய வீடுகள் தோறும், சுபாசுபங்களைச் செய்கின்றவராகிறுர் என்று கூறப்பட்டிருக்கிறது. 54½

அறிவாளியானவன், இந்த வாஸ்துபுருஷனுடைய அங்கங்களை, கிரஹங்களின் அங்கங்களினுலே பீடிக்கலாகாது அப்படி பீடிக்கப்பட்டால், பீடிக்கப்பட்ட அங்கங்களின் எண்ணிக்கைக்கேற்றபடி, யஜமானனுடைய அங்கங்களில் வியாதிகள் உண்டாகும். ஆகையால், நிச்சயமாக,

𑌅𑌷𑍍𑌟𑌾𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑍇 𑌚𑌤𑍁𑌷𑍍𑌕𑌂 𑌪𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑌥𑌾
𑌆𑌰𑍍𑌯𑌕𑌾𑌦𑍇𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑌂𑌶𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑍇𑌰𑌂𑌶𑌕𑌂 𑌪𑌦𑌮𑍍 ।
𑌅𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌷𑍋𑌡𑌶𑌾𑌨𑌾𑌂 𑌪𑌦𑌾𑌧𑌂
𑌆𑌪𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌸𑌂𑌯𑍋𑌜𑍍𑌯 𑌷𑍋𑌡𑌶𑍈𑌵 (𑌤𑍁 𑌦𑍈𑌵𑌤𑌾𑌃) ॥

𑌪𑌰𑌮𑌶𑌾𑌯𑌿𑌪𑌦𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌨𑌵𑌾𑌂𑌶𑌕𑌃
𑌷𑌟𑍍𑌪𑌦𑌾 𑌆𑌰𑍍𑌯𑌕𑌾𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌯𑍁𑌃 ।
𑌦𑍍𑌵𑌿𑌪𑌦𑌾 (𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌦𑌾) 𑌆𑌪𑌾𑌦𑍍𑌯𑌾 𑌹𑌿 𑌵𑌿𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃
𑌬𑌹𑌿𑌃𑌸𑍍𑌥𑌾 𑌏𑌕𑌪𑌦𑌾𑌸𑍍𑌤𑍁 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ॥

𑌇𑌤𑌿 𑌮𑌯𑌮𑌤𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌪𑌦𑌦𑍇𑌵𑌤𑌾𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌸𑍋 𑌨𑌾𑌮
𑌸𑌪𑍍𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

வாஸ்துபுருஷனுடைய அங்கங்களை பிடிக்காமல் ஒதுக்கிவிட வேண்டும்.

இந்த 45 தேவதைகளும் ஒரு தொகுதியாகும். 56½

64 கண்டங்களுடன் கூடிய மண்டூகபதத்தில், பூமியில், மத்தியில் 4 பதங்கள், பிரம்மாவுக்கு உரியதாகும். அவருக்கு முன்னிலையில் இருப்பவர்களுக்கு (ஆர்யகன் – விவஸ்வான் – மித்திரன் – பூதரன் இவர்களுக்குத்) தனித் தனியே 3 அம்சங்களாகும். 24 பேர்களுக்கு ஒவ்வொரு பதமாகும் 16 தேவர்களுக்கு 8 பாகங்களாகும் ஆபன் – அபவத்ஸன், முதலியவர்களைச் சேர்த்து 16 தேவதைகளாம் என்பதை ஊஹித்துக்கொள்ளவேண்டும். 57½

பரமசாயிபதமென்னும் 81 பதத்தில் மத்தியில் 9 பதம், பிரஹ்மாம்சமாகும். பிரஹ்மாவின் முன்னிலிருக்கும் ஆர்யகாதி 4 தேவதைகளும் 6 (4) பதங்களுடையவர்களாவார்கள். விதிக்குகளிருக்கின்ற ஆபன் முதலியவர்கள் 2 பதங்கள் உடையவர்களாவார்கள். வெளியில் கூறப்பட்டு இருக்கின்ற 32 தேவதைகளும் ஒரு பதமுள்ளவர்களாவார்கள். 58½

பததேவதாவின்யாஸமென்னும் ஏழாவது அத்யாயம் முற்றும்

अथ अष्टमोऽध्यायः ॥

दैवानां ब्रह्मपूर्वाणां बलिकर्म विधीयते ।
सामान्यात्तत्क्रमेण ब्रह्मादीनां यथाक्रमम् ॥ १ ॥

गन्धमाल्यैश्च धूपेन पयसा मधुसर्पिषा ।
पायसान्नेन लाजैर्वा ब्रह्मस्थानं समर्चयेत् ॥ २ ॥

सूर्ये तु सफलं भक्ष्यं स्यान्माषान्नं च तिलाश्च ।
विवस्वति मित्रके दधि दूर्वा च कीर्तिता ॥ ३ ॥

महीधरे पयो देयं एवमन्तर्गतेषु च ।
बलिकर्म समाख्यातं देवतानां यथाक्रमम् ॥ ४ ॥

எட்டாவது அத்தியாயம்

அந்தந்த ஸ்தானங்களிலிருக்கும் பிரம்ஹாதி தேவதைகளுக்கு பலி கர்மாவானது, ஸாமானியமாகவும் சேர்த்தும் முறையே கூறப்படுகிறது. (1)

கந்தம், புஷ்பமாலை, தூபம், பால், தேன், நெய், பாயஸம், அன்னம் அல்லது பாலும் சாதமும், பொரி இவைகளினாலே பிரம்ஹஸ்தானத்தைப் பூஜிக்கவேண்டும்.

சூரியனுக்கு பழமும் பக்ஷியமுமாகும். விவஸ்வானுக்கு மாஷான்ன (உளுந்து அன்ன)மும் எள்ளுமாகும். மித்திரனுக்கு தயிரும் தூர்வையுமாகும். (தூர்வை - அருகம்புல்) மஹீதரனுக்கு பாலாகும். (இவைகளினால் பலி கொடுக்க வேண்டும் என்பது பொருள்.) இவ்விதமாக உள்ளே இருக்கும் தேவதைகளுக்கு பலி கர்மாவானது கூறப்பட்டிருக்கிறது. 3½

1. பர்ஜன்யனுக்கு நெய்யினாலே பலி கொடுக்க

ஸமுத்³ரகோணே ச மாம்ஸம் ச மத்ஸ்யாந்நம் து ஹரேத் ।
ஸத்யகே மாஷகம் த³த்³யாத் ஸூர்யாய நவநீதகம் ॥ ௫ ॥

ராக்ஷஸே ராஜந்ரிசூர்ணம் ச மமாஸ்ய ப³லிம் த³தே³த் ।
தா³ம்பூ³லஜம் தமாலம் (ச த³தே³த்) ஸகந்தா⁴: ஸர்வபா⁴ஜநம்
ப³லிம் பாயஸம் ॥ ௬ ॥

கம்பு³ஜம் விதத²ே ஸீது ராக்ஷஸே ப³லிரிஷ்யதே ।
ஸர்வபா⁴ஜநம் க்ருஸரம் யாமே ச மத்ஸ்யே ச ம்ருக³மத்ஸ்யகம் ॥ ௭ ॥

ஸர்வக³ந்தா⁴ஞ்ச க³ந்த⁴ர்வே ஸமுத்³ர மத்ஸ்யகந்து³ம்
விஷ்ணு: ।
நிர்ருதௌ திலபிண்யாகம் பீ³ஜம் தௌவாரிகே ப³லி: ॥

43860

ஸுக்³ரீவே மோத³கம் பு³ஷ்பத³ந்தகே புஷ்பமோத³கம் ।
வருணே பாயஸம் யாத்ஸ்யம் ஶோணிதம் ஸர்வதோ ப³லி: ॥

வேண்டும், 2. ஜயந்தனுக்கு வெண்ணையினாலேயும், புஷ்பத்தினாலேயும், 3. இந்திரனுக்கு புஷ்பத்தினாலேயும், 4. பாஸ்கரனுக்கு, தேன்கிழங்குகளாலேயும், 5. ஸத்தியகனுக்கு தேன் அல்லது இலுப்பப்பூவினாலும், 6. பிருசனுக்கு வெண்ணையினாலேயும், 7. ககனுக்கு உளுந்து மஞ்சள் பொடியினாலும், 8. அக்நிக்கு நெய்யுடன் பாலாலும், 9. பூஷாவுக்கு சிம்பி அன்னமும் பாயஸமும், 10. விதத்தனுக்கு கங்குதானியமும், 11. ராக்ஷஸனுக்கு சீது (பழச்சாறு மத்தியம்) என்னும் பானமும், 12. யமனுக்கு சிம்பி அன்னமும் கிருஸரமும், 13. கந்தர்வனுக்கு ஸகலவிதமான கந்தங்களும், 14. பிருங்கராஜனுக்கு கடல்மீனும், 15. மிருஷனுக்கு மத்ஸ்யான்னமும், 16. நிருருதிக்கு (பிதிருக்களுக்கு) எள்ளுப் பிண்ணாக்கும், 17. தௌவாரிகனுக்கு பீஜமும் (பருத்திக்கொட்டையும்) 18. சுக்ரீவனுக்கு மோதகமும், 19 புஷ்பதந்தனுக்கு புஷ்ப

सतिलं तण्डुलं शोषे रोगे शुष्कं च मत्स्यकम् ।
स्विन्नं हारिद्रकं वायौ नागे मद्यं च लाजकम् ॥१०॥

धान्यपूर्णं हि मुख्यस्य दधि सर्पिश्च संयुतम् ।
गुडान्नं तु भल्लाटे सोमे क्षीरान्नं तथैव च ॥

शुष्कमांसं मृगे दद्यात् मोदकं चादितेस्तथा ।
उदितेः (दितेः) तिलपिष्टेन क्षीरान्नं सर्पिरीशाय दापयेत् ॥ १२ ॥

लाजं धान्यं सवित्राय सावित्रे गन्धोदकम् ।
बस्तमेदश्च इन्द्राय मुद्गपिष्टेन्द्रराजयोः ॥ १३ ॥

रुद्रे च रुद्रजये मांसं ... ।
... शुष्कमांसं च ... ॥ १४ ॥

ஜலமும், 20. வருணனுக்கு பாயஸமும், 21. அஸுரனுக்கு ரத்தத்துடன் தானியமும், 22. சோஷனுக்கு எள்ளுடன் அரிசியும், 23. ரோகனுக்கு உலர்ந்த மத்ஸ்யமும், 24. வாயுவுக்கு நனைந்த மஞ்சளும், 25. நாகனுக்கு மத்யமும் பொரியும், 26. முக்கியனுக்கு தானியங்கள் நிறைந்த தயிரும் நெய்யும், 27. பல்லாடனுக்கு குளான்னமும், 28. ஸோமனுக்கு பால்சோறும், 29. மிருகனுக்கு உலர்ந்த மாமிசமும், 30. அதிதிக்கு மோதகமும், 31. ஆதிதிக்கு எள்ளு பக்ஷணத்துடன் க்ஷீரான்னமும், 32. ஈசானனுக்கு நெய்யும், விசேஷ பலியாகக் கொடுக்க வேண்டும். 12

ஸவிந்திரனுக்குப் பொரியும் தானியமும், ஸாவிந்திரனுக்குக் கந்தோதகமும், இந்திரனுக்கு ஆட்டின் மேதஸ்ஸும், இந்திரராஜனுக்குப் பயத்தம்பொடியும், ருத்திரனுக்கு மாமிச

மத்³யாஜ்யம் சரக்யாஸ்து விதா³ர்யா லவணோ ப³லி: ।
பூதநாயாஸ்திலபிஷ்டம் ராக்ஷஸ்யா முத்³க³ஸாரகம் ॥ ௧௫ ॥

ஸாதா⁴ரணப³லிஸ்ஸர்பிஸ்ஸஹோத³நம் ஸஹ்யுதம் த³தி⁴ ।
ஸர்வேஷாமபி தே³வாநாம் க³ந்தா⁴தீ³நி த³தே³த் க்ரமாத் ॥ ௧௬ ॥

கந்யகா வாத² வேஶ்யா வா ப³லிதா⁴ரணயோக்³யகா: ।
அங்க³ந்யாஸகரந்யாஸௌ ஶுத்³த⁴சேதா யதா²க்ரமம் ॥ ௧௭ ॥

ஓங்காராதி³நமோந்தைஶ்ச ஸ்வஸ்வநாமாபி⁴தா⁴ய ச ।
த³த்வா ஸங்கல்ப்ய ஶுத்³தா⁴த்மா ஸாதா⁴ரணப³லிம் த³தே³த் ॥

மும், ருத்திரஜயனுக்கு நனைந்த மாமிசமும், ஆபனுக்கு ஆம்பலும் மத்ஸ்ய மாமிசமும், அபவத்ஸனுக்கு சங்கு, முதலைகளின் மாமிசமும், சரகிக்கு மத்யமும் நெய்யும், விதாரிக்கு லவணமும், பூதனைக்கு எள்ளுப்பொடியும், மற்றவளுக்கு (பாபராக்ஷஸிக்கு) பயரின் ஸாரமும், விசேஷ பலி திரவியங்களாகும்.

ஸகல தேவதைகளுக்கும் நெய், தயிர் கலந்த சுத்த அன்னமானது ஸாதாரண பலி திரவியமாகும். ஸகல தேவதைகளுக்கும் கந்தம், புஷ்பம் முதலியவைகளையும் கொடுக்கவேண்டும். 16

கன்னிகையாவது அல்லது வேசியாவது பலியைத் தரிப்பதற்கு யோக்யமாவாள்.

பலிஹரணம் செய்கிறவன் அங்கநியாஸம், கரநியாஸங்களைச் செய்துகொண்டு, சுத்தமான மனதுடன் முறையே, ஓம்காராதியாயும் நமோந்தமாகவும் இருக்கின்ற (ஓம் பர்ஜன்யாய நம: என்பதுபோன்ற) மந்திரங்களினலே அந்தந்த தேவதைகளின் பெயர்களைச் சொல்லி, முதலில்

*[illegible] |
[illegible] || ௧௬ ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] *[illegible] ||

ஜலத்தை விட்டுப் பிறகு ஸாதாரண பலியைக் கொடுக்க வேண்டும்.* 18

புத்திமானாக இருப்பவன் பிறகு அந்த தேவதைகளுக்கு விசேஷமாகக் கூறியிருக்கிற பலியைக் கொடுத்துவிட்டுப் பிறகு அதன்மேல் ஜலத்தையும் விடவேண்டும்.

கிராமாதிகளில் மண்டூகபதம், பரமசாயிபதம் இவைகளில் முன்பு கூறியுள்ள விதியின்படி தேவதைகளைத் திருப்தி செய்து விஸர்ஜனம் செய்யவேண்டும்.

பிறகு (கிருஹாதி) விந்யாஸார்த்தமாக பிரம்ஹாவையும், பாஹ்யதேவதைகளையும் (ஆர்யகன் முதலான தேவதைகளையும்) அவரவர்களுக்குக் கூறப்பட்டிருக்கின்ற இடங்களில், மந்திரங்களுடன் நியாஸம் (பிரதிஷ்டை அல்லது ஆவாஹனம்) செய்யவேண்டும்.

இவர்கள் தேவாலய நிர்மாணத்திற்காகவும், * நடப்புப் பாதைக்காகவும் கூறப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்களுக்கு

---

*[illegible] |

*[illegible] |

* ஸ்கந்தாய நம: என்று சொல்லி ஸாதாரண பலியைக் கொடுக்கவேண்டும் என்பது அதிகபாடம்.

* அரசனுக்காகவும் என்பது பாடபேதம்.

𑌶𑍇𑌷𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌰𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌵𑍇𑌶𑌿𑌤𑌾𑌃 ।
𑌏𑌵𑌂 𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑌿𑌷𑍁 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌯𑌦𑍁𑌦𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 ॥ ௨௨ ॥

𑌕𑍃𑌤𑍋𑌪𑌵𑌾𑌸𑌃 𑌉𑌷𑌸𑌿 𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑍇
𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌦𑍇𑌹𑍋𑌽𑌵𑌿𑌕𑌲𑌂 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 ।
𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌬𑌲𑌿𑌂 𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌂
𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌰𑍀𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌦𑌧𑍀𑌤 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 ॥ ௨௩ ॥

𑌇𑌤𑌿 𑌮𑌯𑌮𑌤𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌬𑌲𑌿𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮
𑌅𑌷𑍍𑌟𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

ஸ்தானம் கூறப்படவில்லை. அவர்கள் ரக்ஷைக்காகக் கூறப்பட்டவர்களாவார்கள்.

கிராமாதிகளுக்காக ரஹஸ்யமாகக் கூறப்பட்டிருக்கின்ற விஷயமானது, இங்கு இவ்விதமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

ஸ்தபதியானவன், முதல்நாள் உபவாசமிருந்து காலையிலெழுந்து, ஸ்நானாதிகள் செய்து சுத்தனாக இருந்துகொண்டு பலிஹரணத்திற்குக் கூறியவைகளில் ஒன்றும் குறைவில்லாமல் எடுத்துக்கொண்டு, கூறியிருக்கின்ற முறையின்படி, தேவர்களுக்கு ஸாமான்ய பலியையும் விசேஷ பலியையும் நன்கு செய்யவேண்டும். 23

பலிகர்மவிதானமென்ற எட்டாவது அத்யாயம் முற்றும்.

𑌅𑌥 𑌨𑌵𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌮𑌾𑌨𑌂 𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 ।
𑌦𑌣𑍍𑌡𑌾𑌨𑌾𑌂 𑌪𑌞𑍍𑌚𑌶𑌤𑌂 𑌕𑍍𑌰𑍋𑌶𑌂 𑌤𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌮𑌰𑍍𑌧𑌗𑌵𑍍𑌯𑍂𑌤𑌿𑌃 ॥

𑌗𑌵𑍍𑌯𑍂𑌤𑌂 𑌤𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌂 𑌹𑍍𑌯𑌷𑍍𑌟𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌯𑍋𑌜𑌨𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 ।
𑌅𑌷𑍍𑌟𑌧𑌨𑍁𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌾 𑌕𑌾𑌕𑌣𑌿𑌕𑌾 𑌤𑌚𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌗𑍁𑌣𑌂 𑌮𑌾𑌷𑌮𑍍 ॥

𑌮𑌾𑌷𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑌨𑌕𑌂 𑌤𑌚𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌗𑍁𑌣𑌂 𑌹𑌿 𑌵𑌾𑌟𑌿𑌕𑌾 𑌕𑌥𑌿𑌤𑌾 ।

ஒன்பதாவது அத்தியாயம்.

இனி கிராமாதிகளின் மானத்தையும் (மானம்-அளவு) அவைகளின் விந்யாஸத்தையும், (விந்யாஸம் - அமைக்கும் முறை) முறைப்படி கூறுகிறேன்.

ஐநூறு (500) கோல் நீளத்திற்கு குரோசம் என்று பெயர்.

அதைப்போல இரண்டு மடங்குக்கு, 1000 கோல் நீளத்திற்கு, அர்த (பாதி) கவ்யூதி என்று பெயர்.

அர்த கவ்யூதியின் இருமடங்கு 2000 கோல் நீளத்திற்கு கவ்யூதி என்று பெயர்.

எண்ணாயிரம் கவ்யூதி கொண்டது ஒரு யோஜனமாகும். (16000000 கோல்)

எட்டு (8) தநுஸ் சச்சதுரமான இடத்திற்கு காணிகை என்று பெயர்.

காணியைப்போல் நான்கு மடங்கு சச்சதுரமான இடத்திற்கு மாஷம் என்று பெயர்.

மாஷத்தைப்போல் நான்கு மடங்கு சச்சதுரமான இடத்திற்கு வர்தனகம் என்று பெயர்.

வாடிகாயாஶ்சதுர்கு³ணிதா க்³ராமகுடும்பா³வநி: ஸ்ம்ருʼதா ||

ஏவம் பூ⁴மாநமுத்³தி³ஷ்டம் த³ண்ட³மாநேந வக்ஷ்யதே |
க்³ராமஸ்ய பரமம் மாநம் த³ண்டை³: லக்ஷாந்தமிஷ்யதே || ௪ ||

விம்ஶதி ஸஹஸ்ரத³ண்டா³தி³ தத்ஸஹஸ்ரைஸ்து வர்த⁴நாத் |
க்³ராமே விம்ஶதி பா⁴கே³ து குடும்ப³பூ⁴மிரிதி க்ரமாத் ||

த³ண்டை³: பஞ்சவிதா⁴ர்த்³தி³ஷ்டம் க்³ராமஸ்ய மாநமீதி³தம் (உக்தம்) |
தத்ராந் பஞ்சப்ரகாரேஷு யாவத் விம்ஶத்ஸஹஸ்ரகாந் ||

வர்தனகத்தைப்போல ஐந்து மடங்கு விஸ்தாரமான இடத்திற்கு வாடிகை என்று பெயர்.

வாடிகையைப்போல, நான்குமடங்கு விஸ்தாரமான இடத்திற்கு சிறந்த தான கிராம குடும்பாவனி என்று பெயர்.

இவ்விதமாகப் பூமியின் மானமானது கூறப் பட்டிருக்கிறது.

இனி அவைகளின் அளவைத் தண்டமானத்தினால் (கோலின் அளவினால்) கூறுகிறேன். 3½

கிராமத்திற்கு லக்ஷம் கோல்களினால் பர்யந்தமானம் கூறப்பட்டிருக்கிறது. (கிராமத்தின் எல்லைக்கோடிகள் வரையில் லக்ஷம் கோலளவு கூறப்பட்டிருக்கிறது. இது அகலம் நீளம் இவ்விரண்டுகளின் அளவுகளுமாகும்.)

இருபதினாயிரம் (20000) தண்டம் முதல் முறையே, 20000 தண்டம் விதமாகக கூட்டிவர, கிராமங்களின் மானமானது ஐந்துவிதமாகும்.

கிராம மானத்தில் 20ல் 1 பாகம் குடும்ப பூமியாகும். (ஜனங்கள் வஸிக்குமிடம் 20ல் 1 பங்காகும் என்பது கருத்து.)

ப்ரோக்தம் சத்வாரிம்ஶத்³பே⁴த³ம் க்³ராமஸ்ய மாநமிஷ்டம் |
த்³விஸஹஸ்ரத³ண்டா³நாம் ஸார்த⁴ஸஹஸ்ரம் ஸஹஸ்ரத³ண்ட³ம் ச ||

நவஶதஸப்தஶதம் பஞ்சஶதம் த்ரிஶதமிதி ச
விஸ்தாரம் |
நக³ரஸ்ய ஸஹஸ்ராதி³த்³விஸஹஸ்ராந்தம் ச த³ண்ட³மாநம்
ஸ்யாத் || ௮ ||

நக³ரஸ்யாஷ்டஸஹஸ்ரை: த³ண்டை³: பர்யந்தமாநமிஷ்டம்
(மாநம் ஸ்யாத்) |
த்³வித்³விஸஹஸ்ரஹீநை: த்³விஸஹஸ்ராந்தம் சதுர்வித⁴ம்
மாநம் || ௯ ||

குடும்ப பூமியானது ஐந்நூறு (500) தண்டபிரமாணம் கூறப்பட்டிருந்தால், அது கிராமத்தின் (சிறிய கிராமத்தின்) அளவாகும்.

அந்த அளவிலிருந்து ஐந்நூறு (500) கோல் விதமாக இருபதினாயிரம் (20000) கோல் வரையில் பெருக்கிவர கிராம மானமானது நாற்பது (40) விதமாகும். 6½

நகரத்தின் விஸ்தாரமானது, இரண்டாயிரம் 2000 கோல், ஆயிரத்தைந்நூறு 1500 கோல், ஆயிரம் 1000 கோல், தொள்ளாயிரம் 900 கோல், எழுநூறு 700 கோல், ஐந்நூறு 500 கோல், முந்நூறு 300 என்று ஏழு விதமாகும்.

நகர விஸ்தாரமானது ஆயிரம் 1000 தண்டம் முதல், இரண்டாயிரம் தண்டம் வரையில் இருப்பதுமாகும். 8

நகரத்தின் பர்யந்த (எல்லைக்கோடியின்) அளவானது எண்ணாயிரம் 8000 கோலாகும். 8000-த்திலிருந்து இரண்டாயிரம் கோல்விதமாகக் குறைத்து, இரண்டாயிரம் கோல் வரையில் அளக்க, நகர எல்லையின் அளவானது, நான்கு விதமாகும்.

க்ராம: கேட: கர்வடஶ்ச துர்க்கம் நகரமித்யபி பஞ்சவிதம் ।
த்ரிபேதோக்தம் மாநம் வக்ஷ்யே த்ரித்ரிதண்டேந ஸாம்ப்ரதம் ॥

அதமம் சதுஷ்ஷஷ்டிதண்டை: க்ராமஸ்யாஷ்டாவிம்ஶதி மத்யம: ।
க்ராமஸ்ய உத்தமஸ்ய த்ரிகுணம் த்ரிகுணம் ததோத்தமம்
கேடாக்ரே ॥ ௧௧ ॥

ஷட்பஞ்சாஶத் த்விஶதம் அதமம் கேடம் விம்ஶதி
த்ரிஶதம் ।
உத்தமம் சதுரஶீதி த்ரிஶதம் ॥ ௧௨ ॥

கஷ்டசத்வாரிம்ஶச் சதுஶ்ஶதம் அதமம் கர்வடம் பஞ்சஶதம் ।

(ஜனங்கள் வஸிக்குமிடமானது) கிராமம் 1, கேடம் 2, கர்படம் 3, துர்கம் 4, நகரம் 5 என்று ஐந்துவிதமாகும்.

மூன்று மூன்று பேதமுள்ள அவைகளின் அளவுகளை தண்டமானத்தினால் கூறுகிறேன். 10

அறுபத்திநான்கு 64 தண்ட விஸ்தாரமுள்ளது அதமாதமமான கிராமமாகும்.

அதைப்போல் இரண்டு பங்கு 128 தண்ட விஸ்தாரமுள்ளது மத்தியம கிராமமாகும்.

மூன்று பங்கு விஸ்தாரமுள்ளது உத்தம கிராமமாகும். 11

இருநூற்றி ஐம்பத்தாறு 256 தண்டவிஸ்தாரமுள்ளது அதமகேடமாகும்.

முந்நூற்றி இருபது 320 தண்டவிஸ்தாரமுள்ளது மத்தியமகேடமாகும்.

முந்நூற்றி எண்பத்தி நான்கு 384 தண்டவிஸ்தாரமுள்ளது உத்தமகேடமாகும்.

நானூற்றி நாற்பத்தெட்டு 448 தண்டவிஸ்தாரமுள்ளது அதம கர்படமாகும்.

𑌷𑌟𑍍𑌸𑌪𑍍𑌤𑌤𑍍𑌯𑌧𑌿𑌪𑌞𑍍𑌚𑌶𑌤𑌂 𑌖𑌰𑍍𑌵𑌟𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌮𑌿𑌤𑍀 𑌪𑌰𑌿-
(𑌪𑌰𑌿)𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ॥ ௧௩ ॥

𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌤𑍍𑌷𑌟𑍍𑌛𑌤𑌯𑍁𑌤𑌂 𑌦𑍁𑌰𑍍𑌗𑌮𑌧𑌮𑌮𑍁𑌚𑍍𑌯-
𑌤𑍇 ।
𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌦𑍁𑌰𑍍𑌗𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌸𑌪𑍍𑌤𑌶𑌤𑌂 𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌂 𑌹𑌿 ॥ ௧௪ ॥

𑌅𑌷𑍍𑌟𑌷𑌷𑍍𑌟𑍍𑌯𑌧𑌿𑌕𑌂 𑌸𑌪𑍍𑌤𑌶𑌤𑌂 𑌦𑍁𑌰𑍍𑌗𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌦𑍍𑌵𑌾𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑌷𑍍𑌟𑌶𑌤𑌯𑍁𑌤𑌂 𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌨𑌗𑌰𑌂 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ॥

𑌷𑌣𑍍𑌣𑌵𑌤𑍍𑌯𑌧𑌿𑌕𑌂 𑌨𑌵𑌶𑌤𑌂 𑌨𑌗𑌰𑌂 𑌵𑌰𑌮𑍍 ।

ஐநூற்றிருபது 520 தண்டமானமுள்ளது மத்திம கர்படமாகும்.

ஐநூற்றி எழுபத்தாறு 576 தண்டமானமுள்ளது உத்தமகர்படமாகும். 13

அறுநூற்றி நாற்பது 640 தண்டமானமுள்ளது அதம துர்கமாகும்.

எழுநூற்றிநான்கு 704 தண்டமானமுள்ளது மத்தியம துர்கமாகும்.

எழுநூற்றி அறுபத்தெட்டு 768 தண்டமானமுள்ளது உத்தம துர்கமாகும். 14

எண்ணூற்றி முப்பத்திரண்டு 832 தண்டமான முள்ளது அதம நகரமாகும்.

எண்ணூற்றறுபது 860 தண்டமானமுள்ளது மத்தியம நகரமாகும்.

தொள்ளாயிரத்து அறுபது 960 தண்டமானமுள்ளது உத்தம நகரமாகும். என்று முறையே கூறப்பட்டிருக்கிறது.

நகரமானமானது 832 தண்டம் முதல் முறையே 960 தண்டம் வரையில் 16 தண்டம் வீதம் கூட்டிவர, நகரமானம் ஒன்பது 9 விதமாகும்.

த்³விகு³ணம் த்ரிபாத³ஸம்யுக்தம் பாதா³ர்த⁴ம் தேஷாம் ஸமாயதம்
விதா⁴ஸ்யாத் || கக ||

வ்யாஸஷட³ஷ்டாம்ஶைகேநாத⁴ரம் வா யதே²ஷ்டம் ஸ்யாத் |
தஸ்மிந் விஸ்தாராயாமே த³ண்டேநைகேந மாநஸம்க்³ருஹ்ய ||

ஶேஷம் வாடிகாயாம்*(யாம்) க்³ராமாதி³ஷு ஸர்வ-
வஸ்துஷு ச |
ஶ்ரேயஸ்கரமாயாதி³ம் வ்ருத்³தி⁴ம் ஹாநிம் ச யஷ்டிபி⁴: குர்யாத் ||

ஆயவ்யயர்க்ஷயோந்யம்ஶாந்(க்ஷாம்ஶை:)ஸ்ய திதி²தி³ந
வாரௌ ஶ்ச |

நகரத்தின் முக பாகத்தின் நீளமானது, அதன் அகலத்தைப்போல் இரண்டுபங்கு, அகலத்தில் முக்கால் பங்கு, அரைப்பங்கு, கால்பங்கு என (4) விதமாகும். 16

அது அகலத்தில் ஆறில் (6ல்) ஒரு பங்கு, அல்லது எட்டில் (8ல்) ஒரு பங்கு சச்சதுரமாகவோ, அல்லது தான் விரும்புகிற விதமாகவாவது இருக்கவேண்டும்.

அதனுடைய அகல நீளத்தில் தண்டமானத்தினாலே ஒத்தைப் படையான அளவைக் கொள்ளவேண்டும். மீத மிருப்பது வாடபூமியாகும். இது கிராமாதிகளான ஸகல வித வாஸ்துக்களுக்குமாகும்

இதில் சிரேயஸ்கரமான ஆயாதிகளை உத்தேசித்து, கோலால் அளவைக் கூட்டியாவது, குறைத்தாவது அளவைக் கொள்ளவேண்டும். 18

ஆயம் 1, வியயம் 2, நக்ஷத்திரம 3, யோநி 4, ஆயுள் (அம்சம்) 5, திதி 6, வாரம் 7, இவைகளை வாஸ்து மானத்தி

---

*யாநாஹ்யம் உத்தரபாடோக்தம் |

𑌯𑌜𑌮𑌾𑌨𑌸𑍍𑌯𑌰𑍍𑌕𑍍𑌷𑌨𑌾𑌮𑌜𑌨𑍍𑌮𑌰𑍍𑌕𑍍𑌷𑍇𑌣𑌾𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌕𑌂 𑌯𑌤𑍍 ॥ ௧௯ ॥

𑌤𑌦𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍋𑌃 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌾𑌂𑌶 *𑌸𑌮𑌸𑌂𑌯𑍁𑌤𑍈𑌃 ।
𑌵𑍍𑌯𑌾𑌸𑌾𑌯𑌾𑌮𑌸𑌂𑌯𑍋𑌗𑍇 𑌵𑌸𑍁𑌭𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌿𑌤𑍇 𑌨𑍃𑌪
𑌯𑌚𑍍𑌛𑍇𑌷𑌮𑌾𑌯𑌤𑍇 (𑌹𑍃𑌤𑌶𑍇𑌷𑌂) ॥ ௨௦ ॥

𑌆𑌯𑌵𑍍𑌯𑌯𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌤𑍁 𑌸𑌮𑌸𑍍𑌤𑌂 𑌵𑌸𑍁𑌭𑌿𑌰𑍍𑌹𑍃𑌤𑍇𑌷𑍁 ।
𑌧𑍍𑌵𑌜𑌧𑍂𑌮𑌸𑌿𑌂𑌹𑌶𑍍𑌵𑌵𑍃𑌷𑌖𑌰𑌗𑌜𑌕𑌾𑌕𑌾𑌸𑍍𑌤𑍁 𑌯𑍋𑌨𑌯𑌃 ॥ ௨௧ ॥

𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾 𑌯𑍋𑌨𑌯 𑌉𑌕𑍍𑌤𑌾 𑌧𑍍𑌵𑌜𑌸𑌿𑌂𑌹𑌵𑍃𑌷𑌹𑌸𑍍𑌤𑌿𑌨𑌃 𑌸𑌮𑍍𑌪𑌦𑌾𑌃 ।

னுலே கணித்துக்கொள்ளவேண்டும். அவைகள் எஜமான னுடைய நாம நக்ஷத்திரத்திற்கும், வாஸ்துவின் ஜன்ம நக்ஷத்திரத்திற்கும் விரோதமில்லாமல் இருக்கவேண்டும். தோஷமில்லாமல் பொருத்தமாக இருக்கும் மானமானது, ஸகல விதமான ஸம்பத்துக்களையுமளிக்கும்.

வாஸ்துவின் அகலம் நீளம் இவைகளின் கூடுதல் எண்ணை, 8 ஆல் பெருக்கி வரும் தொகையை 12 ஆல் வகுக்க மீதம் வரும் எண்ணானது ஆதாயம் ஆகும். 20

வாஸ்துவின் வியாஸாயாமத்தை (அகலம் நீளம் இவைகளின் கூடுதல் எண்ணை) 9 ஆலே பெருக்கிவரும் தொகையை, 12 ஆல் வகுக்க மீதம் வரும் எண்ணானது வியயமாகும்.

அந்த எண்ணை 3 ஆல் பெருக்கி வரும் தொகையை 8 ஆலே வகுக்க மீதமானது ஜாதியோநிகளாம்.

துவஜம் 1, தூமம் 2, ஸிம்ஹம் 3, நாய் 4, விருஷபம் 5, கழுதை 6, யானை 7, காக்கை 8, இவைகள் எட்டும் யோநிகளாம்.

இந்த யோநிகளில், துவஜம், ஸிம்ஹம், விருஷபம், கஜம், இவைகள் சுபகரமான யோநிகளாகும்.

---

*𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑌂𑌯𑍁𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌃 ।

पुनरपि वसुभिर्गुणिते त्रिनवाहृता शेषम्
भः ([illegible]) शिष्टम् ॥ २२ ॥

नक्षत्रं स्यादेवं *त्रिंशद्गुणिते तिथिः सप्तहृते ।
वारः सूर्याद्येवं स्यात् प्रतिपद्वं [illegible]
गणनीयम् ॥ २३ ॥

[illegible] †[illegible] [illegible] [illegible] स्यात् ।

மறுபடியும் வாஸ்துமானத்தை எட்டால் 8 ஆல் பெருக்கி இருபத்தேழால் 27 ஆல் வகுத்து வரும் மீதமானது நக்ஷத்திரமாகும்.

வாஸ்துமானத்தை* முப்பதால் 30 ஆல் பெருக்கி ஏழால் வகுத்து வரும் மீதமானது திதியாகும்.

ஞாயிறு முதலாக வாரத்தைக் கணக்கிட்டுக்கொள்ள வேண்டும். (திதியை பிரதமை முதலாகவும், நக்ஷத்திரத்தை அசுபதி முதலாகவும் கொள்ளவேண்டுமென்பது பொருள்.)

---

*अत्रैवं पाठो योग्यः —
त्रिंशद्गुणे तिथिस्तिथिहृते स्यात् ।
वारोंऽशो नवगुणिते सप्तहृते वाराद्
अवशिष्टम् ।
तद्वद् युगगुणिते स्यात् अंशो नवहृतेऽवशिष्ट-
संख्येह ॥

‡[illegible] इति पाठोऽर्हः ।

*இங்கு இவ்விதம் பாடத்தை சோதித்துக்கொள்ள வேண்டும்:—

வாஸ்துமானத்தை முப்பதால் 30 ஆல் பெருக்கி பதினைந்தால் 15 ஆல் வகுத்து வரும் மீதமானது திதியாகும்.

ஒன்பதால 9 ஆல் பெருக்கி ஏழால் 7 ஆல் வகுத்துவரும் மீதம் வாரமாகும்.

நான்கால் 4 ஆல் பெருக்கி ஒன்பதால் 9 ஆல் வகுத்து வரும் மீதம் அம்சமாகும்.

𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑍇 𑌤𑍁 𑌵𑌿𑌪𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯
𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ ௨௪ ॥

𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌸𑌹𑌸𑍍𑌰𑌵𑌿𑌪𑍍𑌰𑍈†𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍋𑌤𑍍𑌤𑌮𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 𑌗𑍍𑌰𑌾𑌮𑌂।
𑌦𑌶𑌸𑌹𑌸𑍍𑌰𑌵𑌿𑌪𑍍𑌰𑍈𑌃 𑌉𑌤𑍍𑌤𑌮𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌷𑍍𑌟𑌸𑌹𑌸𑍍𑌰𑌵𑌿𑌪𑍍𑌰𑍈𑌃 ॥

𑌸𑌪𑍍𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑍈𑌰𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑍈𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍।
𑌷𑌟𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑍈𑌃 𑌮𑌧𑍍𑌯𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌤𑍁 𑌪𑌞𑍍𑌚𑌸𑌹𑌸𑍍𑌰𑍈𑌃 ॥

𑌅𑌧𑌮𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 𑌤𑍁 𑌚𑌤𑍁𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑍈𑌸𑍍𑌤𑍁
𑌤𑍍𑌰𑌿𑌸𑌹𑌸𑍍𑌰𑍈𑌃 ।

ஆதாயம் அதிகமானல் அது சௌக்கியத்தையளிக்கும். வியயம் அதிகமானல் அது ஸர்வ நாசத்தையளிக்கும். ஆயாதிகள் விபரீதமாக இருந்தால், அது ஆபத்தை யளிக்கும். ஆகையால் ஆயாதிகளை நன்கு கவனித்துக் கொள்ளவேண்டும். 24

பன்னீராயிரம் 12000 பிராம்ஹணர்கள் வஸிக்கின்ற கிராமமானது உத்தமோத்தம கிராமமாகும்.

பதினாயிரம் 10000 பிராம்ஹணர்கள் வஸிக்கின்ற கிராமமானது உத்தம மத்தியம கிராமமாகும்.

எண்ணாயிரம் 8000 பிராம்ஹணர்கள் வஸிக்கின்ற கிராமமானது, உத்தமாதம கிராமமாகும்.

ஏழாயிரம் 7000 பிராம்ஹணர்கள் வஸிக்குமிடம் மத்தியமோத்தம கிராமமாகும்.

ஆறாயிரம் 6000 பிராம்ஹணர்கள் வஸிக்குமிடம் மத்தியம மத்தியம கிராமமாகும்.

ஐயாயிரம் 5000 பிராம்ஹணர்கள் வஸிக்கும் கிராமமானது மத்திம அதம கிராமமாகும்.

---

†𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌭𑍇𑌦𑌃 ।

𑌅𑌯𑍁𑌤𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍇𑌵 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌮𑍍 ॥

𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑍇 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌮𑌧𑍍𑌯𑌮𑍋𑌤𑍍𑌤𑌮𑌸𑌾𑌹-
𑌸𑍍𑌰𑌾𑌯𑌤𑌾𑌃 ।

𑌸𑍍𑌥𑌾𑌪𑌿𑌤𑍇𑌷𑍁 𑌸𑌹𑌸𑍍𑌰𑌮𑍍 𑌉𑌤𑍍𑌤𑌮𑌾𑌧𑌮𑍍 ॥

𑌸𑌾𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌮𑍇𑌧𑌾𑌯𑌿𑌕𑌂
𑌤𑌥𑌾𑌪𑌰𑌿 ।

§𑌅𑌷𑍍𑌟𑌾𑌷𑍍𑌟𑌕(𑌯𑌿𑌕)𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌪𑍍𑌰𑌷𑍍𑌟𑍍𑌯 𑌹𑌿 ॥

𑌆𑌢𑍍𑌯𑌮𑍇𑌤𑌾𑌵𑌤𑍍𑌪𑌿𑌵𑍇𑌦𑍍𑌯𑍇 𑌢𑌂𑌸𑍇𑌢𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌕𑍃𑌤𑌂 𑌗𑍍𑌰𑌾𑌮𑌮𑍍 ।
𑌅𑌨𑌧𑍍𑌯𑌾𑌪𑌕𑌾𑌨𑌾𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌢𑌾𑌨𑌂 𑌢𑌂𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌚𑌾𑌧𑌿 ॥

நாலாயிரம் 4000 பிராம்ஹணர்கள் வஸிக்கும் கிராம மானது அதமோத்தம கிராமமாகும்.

மூவாயிரம் (3000) பிராம்ஹணர்கள் வஸிக்கின்ற இடமானது அதம மத்தியம கிராமமாகும்.

இரண்டாயிரம் (2000) பிராம்ஹணர்கள் வஸிக்கின்ற கிராமமானது அதமாதம கிராமமாகும்.

ஆயிரம் (1000) பிராம்ஹணர்கள் வஸிக்கின்ற கிராம மானது நீசோத்தம கிராமமாகும் என்று சில பாசார்யர்கள் கூறியிருக்கிறார்கள்.

எழுநூறு (700) பிராம்ஹணர்கள் வஸிக்கின்ற கிராம மானது நீசமத்தியம கிராமமாகும்.

ஐநூறு (500) பிராம்ஹணர்கள் வஸிக்கின்ற கிராம மானது நீசாதம கிராமமாகும்.

முறையே, நூற்றெட்டு 108 (1) பிராம்ஹணர்கள் அதைப்போல் இருமடங்கு 216 (2) பிராம்ஹணர்கள் மும்மடங்கு 324 (3) பிராம்ஹணர்கள், நான்கு மடங்கு 432 (4) பிராம்ஹணர்கள், எண்பது 80 (5) பிராம்ஹணர்

---

§𑌢𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌦𑍍𑌵𑌯𑍇 'अ𑌷𑍍𑌟𑌾𑌧𑌿𑌕𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂' 𑌇𑌤𑌿 𑌵𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌿𑌤𑌿 𑌭𑌾𑌤𑌿 ।

ஏகக்ஷுத்ரம் ஸ்மிதமேதத் க்ஷுத்ரகம் ஸ்யாத்தசைகதா
இதி கதிதம் ।
தஸ்ய ஸர்வாஶ்ரயஷ்டம் ஶேஷாணாம் துல்யகாதிநி ॥ ௩௧ ॥

யுக்மா†யுக்மவிபாகேந: த்விவிதம் ஸ்யாத் ஸர்வவஸ்து
விந்யாஸம் ।
யுக்மே ஸூத்ரபதம் ஸ்யாதயுக்மே பதமத்யமே து
வீதீ ஸ்யாத் ॥ ௩௨ ॥

க்ஷேத்ரார்த்தஸங்கரமேகத்ர துஃகதம் ஸ்யாத் ஸர்வஜந்தூநாம் ।
துல்யகலோபம் ஸ்வஸ்திகஸ்த ஸ்வஸ்திகம் வ்யத்யஸ்தம் நைவ ॥

கள் * ஆறுபத்திநான்கு 64 (6) பிராம்ஹணர்கள், ஐம்பது 50 (7) பிராம்ஹணர்கள், முப்பத்திரண்டு 32 (8) பிராம்ஹணர்கள், இருபத்திநான்கு 24 (9) பிராம்ஹணர்கள், பன்னிரண்டு 12 (10) பிராம்ஹணர்கள், பதினாறு 16 (11) பிராம்ஹணர்கள், வஸிக்குமிடமானது க்ஷுத்ர (சிறிய) கிராமமாகும். எனவே சிறிய கிராமங்கள் பத்து (10) விதமாகும். 31

ஸகலவிதமான வஸ்து விந்யாஸமும், யுக்மம் என்றும், அயுக்மம் என்றும இரண்டுவிதமாகும். (யுக்மம் - இரட்டை வரிசை. அயுக்மம் - ஒற்றை வரிசை.) யுக்மத்தில் ஸூத்திர பதம் இருக்கவேண்டும். அயுக்மத்தில் பதத்தின் மத்தியில் வீதி இருக்கவேண்டும். 32

இவ்விரண்டும் ஒன்றோடொன்று சேர்ந்தால், அது ஸகல ஜீவராசிகளுக்கும் கெடுதியை விளைவிக்கும். 32½

†யுக்மே விந்யாஸ இதி பாடாந்தரம் ।

* 64, 50 இரண்டு எண்களுக்குப் பதிலாக 48 என்று இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அப்பொழுது அல்பகிராமம் 10 விதமாகும்.

प्रस्तारं प्रकीर्णकं स्यात् नन्द्यावर्तं पराग(म्) पद्मम् ।
स्यात् श्रीप्रतिष्ठिते चैवाष्टविधं ग्रामलक्षणम् ॥

सर्वेषां ग्रामाणां मङ्गलवीथ्या तद्बहिर्न बहिः ।
ब्रह्मस्थानं ब्रह्मस्थितं (ब्रह्मपीठं) तत्र देवालयं तत्र वा पीठम् ॥ ३५ ॥

एकद्वित्रिचतुष्पञ्च दण्डविस्तारवीथयः ।
प्राक्प्रत्यग्गतमार्गाः ऋजु§दण्डमहापथाश्च ते ॥

கிராமமானது தண்டம் 1, ஸ்வஸ்திகம் 2, பிரஸ்தரம் 3, பிரகீர்ணகம் 4, நந்தியாவர்த்தம் 5, பராகம் 6, பத்மம், 7 ஸ்ரீ பிரதிஷ்டிதம் 8 என்று எட்டு (8) விதமாகக் கூறப் பட்டிருக்கிறது. 34

ஸகலவிதமான கிராமங்களுக்கும் வெளிப்பக்கமானது மங்கள வீதியினுல் சூழப்பட்டிருக்கவேண்டும அதற்கு வெளியில் வீதி இருக்ககூடாது. (மங்கள வீதி – தேவதைகள் விவாஹமான தம்பதிகள் முதலியவர்கள் ஊர்வலம் வருவதற்கான வீதி)

பிரம்ஹஸ்தானமானது முன்னமே கூறப்பட்டிருக்கிறது. அதில் தேவாலயம் அல்லது பீடம் இருக்கவேண்டும். 35

கிராமத்தின் பாதையானது ஒரு (1) வில், இரண்டு (2) வில், மூன்று (3) வில், நான்கு (4) வில் அல்லது ஐந்து (5) வில் அகலம் உள்ளதும், கிழக்கு மேற்காகச் செல்கின்ற வழியாகவும் இருந்தால், அதற்கு ருஜுமார்க்கம் என்றும், தண்டமார்க்கம் (தம்பமார்க்கம்) என்றும், மஹாபதம் என்றும் பெயர். 36

§दम्भा इति पाठान्तरम् ।

மத்யஸூத்ராஸ்ரிதாவீதீ ப்ரஹ்மவீத்யேவ நாபி: ஸ்யாத் ।
சாபஸம்மிதாவீதீ ராஜவீத்யா த்விபார்ஸ்வயோ: க்ஷுத்ரகா ॥

ஸர்வா: க்ஷுத்ரகவீத்யா மங்கலவீதி *ரதயோக்ய மார்கம் ।
தத்க்ஷம் ஆபஸம்மிதா நாராசபதா இதி வீதா ।
உத்தரதிக் ஸம்ஸ்தமார்கா: †க்ஷுத்ரமார்கவாமநவீத்ய: ॥

மங்கலவீதி மங்கலவீதிகாவீதா
பார்ஸ்வவீதி யா ஜநவீதிகா ஸ்யாத் ।
தயோர்மத்யே ராஜ்யஸ்தம்பிதா ஸ்யாத்
வாமாநதவீதிஸ்தவிதேவ ॥ ௩௯ ॥

நடுத்தரமான (மூன்று வில்) அகலமுள்ள வீதியானது பிரம்ஹ வீதி என்று கூறப்படும். அதுவே (அந்த கிராமத்திற்கு) நாபியாகும். (நாபி – தொப்பிள்)

மத்தியில் துவாரங்கள் (சந்துகள்) இருக்கின்ற வீதியானது ராஜ வீதியாகும். இதன் இரண்டு பக்கங்களிலும் சிறிய சந்துகளிருப்பதாகும். 37

சிறிய வீதிகள் எல்லாவற்றிற்கும் குட்டிமகம் என்று பெயர்.

ரதம் செல்லக்கூடிய மார்க்கமானது, மங்கள வீதி என்று கூறப்படுகிறது.

அதற்குக் குறுக்கே வழியுள்ளதானல், அதற்கு நராசபதம் என்று பெயர் வழங்கப்படுகிறது. 38

வடக்கு நோக்கிச் செல்லுகின்ற மார்க்கங்கள் க்ஷுத்ரம் என்றும, அர்களம் என்றும், வாமனம் என்றும் பெயர் உள்ளவைகளாம்.

கிராமத்தைச் சுற்றிலுமிருக்கும் வீதியானது, மங்கள வீதி

---

*ரதயோக்ய மார்கம் । இதி பாடாந்தரம் ।

†க்ஷுத்ரகா வாமநா மார்கா: । இதி பாடாந்தரம் ।

द्विजगणवसतिस्थानं सद्भिरुक्तं मङ्गलाख्यं
नृपवणिग्भिर्युक्तं सद्भिरुक्तं पुरं स्यात्।
इतरजनवासं ग्रामसंज्ञं तदाहु-
र्मठमिति वदन्ति यत् तापसानां निवासः॥ ४० ॥

प्रागग्रमुदगग्रं वा मार्गं कगणीकृतदण्डवत् तन्मध्ये।
चतुष्पथसंयुक्तं दण्डकमिति कथ्यते मुनिभिः॥ ४१॥

दण्डवदेकवीथी सा चैवं दण्डकं प्रोक्तम्।
नवपञ्चके ग्रामे परितो मार्गं पञ्चसंख्यं
भवति॥ ४२ ॥

என்று பெயருள்ளதாகும். புரத்தை (பட்டணத்தை)ச் சுற்றிலுமிருக்கும் வீதியானது, ஜன வீதி என்று கூறப்படும். பெரியோர்கள் கிராமம்—புரம் இவ்விரண்டுகளின் வீதிக்கும் ரத்யை என்னும் பெயரைக் கூறுகிறார்கள். 39

பிராம்ஹணர்கள் நிறைந்திருக்கின்ற கிராமத்திற்கு மங்களம் என்று பெயர். அரசர்களும் (க்ஷத்திரியர்களும்) வைசியர்களும் நிறைந்திருக்கின்ற வஸ்துவுக்கு புரம் என்று பெயர். மற்ற ஜனங்கள் வஸிக்கின்ற இடத்திற்கு கிராமம் என்று பெயர் கூறப்பட்டிருக்கின்றது. தபஸ்விகள் வஸிக்கின்ற இடத்திற்கு மடம் என்று பெயராம். 40

கிராமத்தின் மார்க்கமானது, கிழக்கு முகமாகவோ அல்லது வடக்கு முகமாகவோ ககணீகிருதமான (படியப் போடப்பட்ட) தண்டத்தைப்போல இருந்து, அதன் நடுவில் நான்கு (4) சந்துகளிருந்தால், முனிவர்கள் அந்த மார்க்கத்தை தண்டகம் (தண்டாகாரமான மார்க்கம்) என்று கூறுகின்றார்கள்.

சந்துகளில்லாமல் தண்டம்போல ஒரே வீதியாக இருந்தாலும் அதற்கும் தண்டம் என்று பெயர். 41½

தத்பதஸ்ய பஹிர்மார்கஸ்ய ப்ராகீசீ தக்ஷிணாம் வ்ரஜேத் |
தஸ்மாத் ப்ராக்தக்ஷிணாந்தாத் தக்ஷிணவீதீ ப்ரதீசிகா ||

தஸ்மாதவாசவாருணத: பச்சிமவீத்யுதக்கதா |
வாயவ்யாத் தத்பதஸ்யோதக்வீத்யா கதம் ப்ராகியாத் ||

ஏதத் ஸ்வஸ்திகமாக்யாதம் ஸ்வஸ்த்யாகாரதயா ததா |
ப்ராக்ப்ரத்யக்பாகயோர்மார்கா: த்ரிசதுஷ்பஞ்சஷட்ஸப்த
ஸ்ருதிமார்கா || ௪௫ ||

பஞ்சாநாமபி ஷட்ஸப்தாநாமபி மார்காணாம் ப்ரஸ்தரம்
ஸம்ஜ்ஞம் |
ப்ராக்மார்காஸ்ஸ்யு: சதுர்விம்சத்யுதக் பரிவர்த்தகா:
ஸப்தமார்கா: || ௪௬ ||

நவ பதங்களுடன் கூடிய கிராமத்தில், பதத்திற்கு வெளியில் நான்கு திக்குகளிலும் வழிகள் அமைந்திருக்க வேண்டும். அந்த வழியில் வடகிழக்கிலிருந்து தென் திசை நோக்கி கிழக்கு வீதி செல்லவேண்டும். அந்த வழியிலிருந்து தென்கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வீதியானது செல்லவேண்டும். தென் திக்கிலிருந்து வடக்கு நோக்கி வீதியானது செல்லவேண்டும். அந்த வழியானது வடமேற்கு திசையிலிருந்து கிழக்கு திக்கை நோக்கிச் செல்ல வேண்டும். இவ்விதமாக நான்கு திக்குகளிலும் ஸ்வஸ்திகத்தைப்போல் நான்கு வழிகள் அமைந்திருந்தால் அதற்கு ஸ்வஸ்திகம் என்று பெயர் கூறப்படுகின்றது. 44½

(கிராமத்தின்) கிழக்கு மேற்கு பாகங்களில், வடக்கு நோக்கிச் செல்லுகின்ற வழிகள், மூன்று (1) நான்கு (2) ஐந்து (3) ஆறு (4) அல்லது ஏழு (5) இருந்தால் இந்த ஐந்துகளுக்கும் பிரஸ்தரம் என்று பெயராம். 45½

கிழக்கு நோக்கி நான்கு (4) வழிகளும், வடக்கு நோக்கி

द्वादशैकादशवीथ्यन्तं दशकं नवाष्टकं प्रकीर्णकं
पञ्च ।
प्रागवाक्प्रत्यक् पञ्चवीथ्युदगायतास्त्रयोदश-
चतुर्दशाद्याः ॥ ४७ ॥

त्रयोदशचतुर्दशपञ्चदशषोडशसप्तदश [illegible]
वीथयः ।
युक्तं नन्द्यावर्तं दिक्षु चतुर्वीथिसमायुक्तम् ॥ ४८ ॥

नन्द्यावर्ताकृतिर्बाह्ये ग्रामे वा नगरेऽपि वा
सन्धयः ।
युक्तान्तर्बहुवीथियुक्तं नन्द्यावर्तमिति स्मृतम् ॥ ४९ ॥

उदग्गताष्टादशादिद्वाविंशत्यन्तं (पर्यन्तं)
प्राक्प्रत्यक् ।
दिक्षु वीथ्यष्टकं पञ्चवीथिसंयुक्तं
पद्मकमिति कथितम् ॥ ५० ॥

பன்னிரண்டு (12) பதினொன்று (11) பத்து (10) ஒன்பது (9) அல்லது எட்டு (8) மார்கங்களிருந்தால் இந்த ஐந்து விதங்களுக்கும் பிரகீர்ணகம் என்று பெயர் 46½

கிழக்கு மேற்காக ஐந்து (5) வழிகளும், வடக்கு நோக்கி பதிமூன்று (13) பதினான்கு (14) பதினைந்து (15) பதினாறு (16) அல்லது பதினேழு (17) வழிகளிருந்து, நான்கு திக்குகளிலும் நான்கு (4) வழிகளுமிருந்தால், இதற்கு நந்தியாவர்தம் என்று பெயர். 48

கிராமம் அல்லது நகரத்தின் வெளிப்பக்கத்தில் நந்தியாவர்தத்தைப் (நந்தியாவட்டம்பூ) போல பல சந்துகளும், உள்கையில் பல வழிகளும் அமைந்திருந்தால், இதற்கு நந்தியாவர்தாபம். என்று பெயர். 49

வடக்கு நோக்கிச்செல்லுகின்ற சந்துகள் பதினெட்டு (18) முதல் இருபத்திரண்டு (22) வரையிலும், கிழக்கு

ப்ராக்ப்ரத்யக்தீர்கமார்கை: ஸப்தபிருதக்முக-
க்ருதிவேதஸப்தகை: ।
ஷட்ஸப்தபிர்வா யாம்யோத்தை: *விம்ஶதிபி: பத்மயா பத்மம் ||

அஷ்டபிர்வா ப்ராக்மார்கை: உதக்மார்கைஸ்த்வஷ்ட
விம்ஶதிபி: ।
ஷோடஷைர்தீர்கைர்மார்கைர்யாம்யோதாயதம் யத்து ||

தச்ச்ஶ்ரீப்ரதிஷ்டிதம் ஸ்யாச்ச அஷ்டவிதம் க்ராமலக்ஷணம் ।
அதவா ஸ்ரீவத்ஸாதிகபதவிந்யாஸம் து விந்யஸேத் ||௫௩||

முகமாகச் செல்லுகின்றவழிகள் ஆறும் (6) அமைந்திருந்தால் அதற்கு பராகம் என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது. 50

கிழக்கு மேற்காகச் செல்லுகின்ற வழிகள் ஏழும், வடக்கில் செல்லுகின்ற வழிகள், மூன்று (3) நான்கு (4) ஐந்து (5) ஆறு (6) அல்லது ஏழும் (7) அமைந்திருந்தால், அந்த கிராமத்திற்கு பத்மம் என்று பெயர். இது மூன்று முதல் ஏழு வரையிலுள்ள வழிகளினுலே ஐந்து விதமாகும். 51

கிழக்கு முகமாக எட்டு (8) வழிகளும், வடக்கு முகமாக இருபத்தெட்டு (28) வழிகளும் இருந்தாலும், அல்லது கிழக்கு முகமாக பதினறு (16) வழிகளும், வடக்கு முகமாக பதினறு (16) வழிகளும் இருந்தாலும், அந்த கிராமமானது ஸ்ரீ பிரதிஷ்டிதம் என்று கூறப்படும்.

இவ்விதமாக தண்டகம் 1. ஸ்வஸ்திகம் 2. பிரஸ்தரம் 3. பிரகீர்ணகம் 4. நந்தியாவர்தம் 5. பராகம் 6. பத்மம் 7. ஸ்ரீ பிரதிஷ்டிதம் 8. என்று, கிராமங்கள் எட்டு (8) விதமாக கூறப்பட்டிருக்கின்றன. 52½

அல்லது * ஸ்ரீவத்ஸாதி விந்யாஸங்களைக் கல்பித்துக் கொள்ளவேண்டும். 53

*ராஜிதம் ஸ்யாச்ச இதி பாடோ யத்து இதி பாடா ।

* பதவிந்யாஸத்தில் ஸ்ரீவத்ஸம் என்பது கூறப்படவில்லை.

ஸர்வேஷாம் க்³ராமாணாம் நாபி⁴ம் ந வேத⁴யேத் ஸுதீ⁴꞉ |
க்³ராமே வாத² க்³ருஹே வா து த³ண்ட³ச்சே²த³ம் ந காரயேத்
கதா³சன || ௫௪ ||

ஸகலாதா³ஸநாந்தம் ச க்³ருஹாதி³வின்யாஸஸம் பத³ம்
ப³ல்பயேத் ஸுதீ⁴꞉ |
க்ஷுத்³ரே க்³ராமே சதுர்மார்கா³꞉ அஷ்டௌ மத்⁴யமே க்³ராமே ||

அஷ்டௌ வா மார்கா³꞉ க்³ராமே ஷோட³ஶ த்³வாத³ஶ உத்தமா꞉ |
ப⁴ல்லாடம் ச மஹேந்த்³ரம் ராக்ஷஸம் புஷ்பத³ந்தகம் த்³வா
ஸ்தா²நம் பதே³ || ௫௫ ||

புத்திமானாக இருப்பவன், ஸகலவிதமான கிராமங்களிலும், நாபியை (கிராம மத்திய பாகத்தை) பிணேக்காமல் இருக்கவேண்டும். (வாஸ்துவுடன் சேர்க்காமலிருக்க வேண்டும்.)

கிராமத்திலாவது கிருஹத்திலாவது தண்டச்சேதம் செய்யவும் கூடாது. (கோலளவைப் பிரித்து கணக்கிடக் கூடாது.) 54

புத்திமான்கள், ஸகலபதம் முதல் ஆஸநகாந்தபதம் வரையில், கிருஹாதிவிந்யாஸார்த்தம், பதங்களை கல்பித்துக் கொள்ளவேண்டும்.

க்ஷுத்ர (அதம) கிராமங்களில் நான்கு (4) வழிகள் இருக்கவேண்டும்.

மத்தியம கிராமங்களில் எட்டு வழிகள் இருப்பதாகும்.

உத்தம கிராமங்களில் பன்னிரண்டு (12) அல்லது பதினாறு (16) வழிகளிருப்பதாகும். 55½

பல்லாடபதம், மஹேந்திரபதம், ராக்ஷஸபதம், புஷ்பதந்தபதம், இவைகள், துவாரயதந ஸ்தானமாகும். (இவைகள் போக்குவரவுக்கு வாயிற்படி அல்லது வழி அமைப்பதற்குரிய இடங்களாகும்.)

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

இந்த நான்கு இடங்களும் ஜலமார்க்கங்களுமாம். (ஜலதாரை முதலியவைகளை கல்பிப்பதற்குறிய இடங்களும் ஆகும்.) 56½

விததபதம் (1) ஜயந்தபதம் (2) ஸுக்ரீவபதம் (3) முக்கியபதம் (4) பிருசபதம் (5) விருஷபதம் (6) பிருங்கராஜ பதம் (7) தௌவாரிகபதம் (8) சோஷபதம் (9) நாகபதம் (10) திதிபதம் (11) ஜலதபதம் (12) (ஜலாதிபதிபதம்,) இந்த எட்டு 8 (பன்னிரண்டு 12) ஸ்தானங்களும், உப துவாரங்களுக்கு உரிய இடங்களாகும். (வீட்டுக்குள் நிலைகள் வைத்துக்கொள்ளுவதற்கு உரிய இடங்களாகும். 58

துவாரத்தின் (வாயிற்படியின்) அகலமானது, மூன்று (3) முழம், ஐந்து (5) முழம், அல்லது ஏழு (7) முழமிருக்க வேண்டும் அகலத்தைப் போல் இரண்டு பங்கு உயரம் அல்லது ஒன்றரைப் பங்கு உயரமிருக்க வேண்டும். இந்த அளவில் அதன் காலின் அளவைச் சேர்க்கக்கூடாது. 59

ஸகலவிதமான கிராமங்களுக்கும் வெளியில், நான்கு

க்³ராமாத³யோऽபி நத்³யா த³க்ஷிணதீரே தத³ந்விதாயதா: ॥ ௬௦ ॥

நவநவ வஸ்வஷ்ட ஸப்தவஸ்துகமத்ர மத்⁴யே ப்³ராஹ்மம்
தத: பரம் தை³வம் ।
மாநுஷமத² பைஶாசம் க்ரமஶோ விந்யஸ்ய ஸ்தா²நாநி ॥

தை³விகமாநுஷமத்⁴யே விப்ராணாம் ஸத்³மகல்பநம் ப்ரோக்தம் ।
கர்மோபஜீவிநாம் ஸத்³ம பைஶாசே தத்ர வா
த்³விஜாவாஸம் ॥ ௬௨ ॥

தத்ராபி ஸுரக³ணாநாம் க்ரமஶ: ப்ராகா³தி³தோ ஹ்யாவாஸம் ।

பக்கங்களிலும், பெரிய கோட்டைச் சுவர்களும், அதற்கு வெளியில் அகழியும் இருக்கவேண்டும்.

கிராமாதிகளும், நதியின் தென்கரையில் இருந்தால், அது, அந்த நதியை அனுஸரித்து நீண்டிருக்கவேண்டும். 60

கிராமத்தை நவபதம், (அஷ்டபதம்,) அல்லது ஸப்தபதமாகக் கணக்கிட்டால், அதன் மத்தியமானது பிரம்ஹபதமாகும், அதற்கடுத்தது தைவபதமாகும், அதற்கு அடுத்தது மானுஷபதமாகும். அதற்கடுத்தது பைசாசபதமாகும். இவ்விதமாக முறையே ஸ்தானங்களைக் கல்பித்துக் கொள்ளவேண்டும். இந்த இடங்களில், நடுவிலுள்ள பிரம்ஹாம்சத்தை விலக்கி விட்டு, அதையடுத்துள்ள தைவாம்சம், மானுஷாம்சங்களில் பிராம்ஹணர்கள் வஸிப்பதற்கான வீட்டு வரிசையை கல்பிக்க வேண்டும். பைசாச பதத்தில் கர்மோபஜீவிகள் வஸிப்பதற்கு, (தொழில் செய்பவர்கள் வஸிப்பதற்கு) உரியஸ்தானங்களைக் கல்பிக்க வேண்டும், அல்லது அந்த விடத்தில் பிராமணர்களின் வாஸ ஸ்தானத்தைக் கல்பிப்பதுமாகும்.

அந்தவிடத்தில் தேவகணங்களுக்குரிய தேவாலயங்களை, முறையே கிழக்கு முதல் கல்பிக்க வேண்டும். 62½

𑌸𑌾𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑍃𑌦𑌯𑍇 𑌵𑌿𑌪𑍍𑌰𑌦𑍇𑌵𑌤𑌾𑌗𑌾𑌰𑌵𑌾𑌸𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥௬௩॥

𑌶𑌿𑌵𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 (𑌬𑌾𑌹𑍍𑌯𑌂) 𑌤𑍁 𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑌾𑌂 𑌸𑌂 (𑌸𑌵𑌿)
𑌬𑌾𑌹𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌵𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌭𑍃𑌂𑌗𑌰𑌾𑌜𑌾𑌂𑌶𑌕𑍇 𑌵𑌾𑌪𑌿 𑌪𑌾𑌵𑌕𑍇 𑌤𑍁 𑌵𑌿𑌨𑌾𑌯𑌕𑌃 ॥ ௬௪ ॥

𑌈𑌶𑌾𑌂𑌶𑍇 𑌶𑌿𑌵𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍋𑌮𑍇 𑌵𑌾 𑌤𑌤𑍍
(𑌤)𑌦𑌂𑌶𑌕𑍇𑌷𑍁 𑌵𑌾 ।
𑌬𑌾𑌹𑍍𑌯𑍇𑌽𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌗𑍃𑌹𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌮𑌾𑌨𑍇𑌨 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ॥

𑌶𑌿𑌵𑌾𑌲𑌯𑌂 𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌿 (𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌨𑌿)
𑌇𑌹𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌸𑍂𑌰𑍍𑌯𑌪𑌦𑍇 𑌸𑍂𑌰𑍍𑌯𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌦𑍍𑌭𑍃𑌶𑍇 𑌕𑌾𑌮𑍀𑌕𑌾 𑌮𑌤𑍇 ॥

இதன் மத்தியில் (இந்த பைசாசபத மத்தியில்) பிராம்ஹணர்கள் வஸிக்குமிடங்களையும், தேவாலயங்களையும் கல்பிப்பதாகும். (63)

கிராமத்திற்கு முற்றிலும் வெளிப்பக்கத்தில், சிவாலய மிருப்பதுமாகும்.

பிருங்கராஜாம்சம் அல்லது பாவகாம்சத்தில் விநாயக ஆலயத்தை நிர்மாணம் செய்யவேண்டும். (64)

ஈசாம்சத்தில் சிவாலயத்தை நிர்மாணம் செய்ய வேண்டும். ஸோமாம்சம் அல்லது அதற்கடுத்த அம்சங் களில் கல்பிப்பதுமாகும்.

இந்த சிவாலயத்திற்கு வெளிப்பக்கத்தில் வீட்டு வரிசையை, அளவுடனும் விதியுடனும் கல்பிக்கவேண்டும்,

சிவாலயத்தில், சிவபரிவாரங்களுக்குக் கூறப்பட்டிருக் கிற ஸ்தானங்களை இங்கு கூறுகிறேன் —

ஸூர்ய பதத்தில் (ஆதித்யபதத்தில்) ஸூரியனை ஸ்தாபிக்கவேண்டும்,

𑌭𑍃𑌶𑌭𑌾𑌗𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌗𑍃𑌹𑌂 𑌯𑌾𑌮𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌷𑌣𑍍𑌮𑍁𑌖𑌾𑌲𑌯𑌮𑍍 ।
𑌭𑍃𑌶𑌭𑌾𑌗𑍇 𑌭𑍃𑌶𑌾𑌂𑌶𑍇 𑌵𑌾 𑌪𑌿𑌤𑍃 𑌨𑍈𑌰𑍃𑌤𑍍𑌯𑌾𑌂 𑌕𑍇𑌶𑌵𑌾𑌲𑌯𑌮𑍍 ॥

𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌂𑌶𑍇 𑌗𑌣𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌦𑌨𑍍𑌤𑌪𑌦𑍇𑌽𑌪𑌿 𑌵𑌾 ।
𑌶𑌾𑌸𑍍𑌤𑍁𑌰𑍍𑌭𑌵𑌨𑌂 𑌨𑌿𑌰𑍃𑌤𑍌 𑌵𑌾𑌰𑍁𑌣𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌾𑌲𑌯𑌂
𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௬௮ ॥

𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌾𑌸𑌨𑌶𑌯𑌨𑌂 𑌯𑌥𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌤𑌲𑍇𑌷𑍁 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣
𑌪𑍍𑌰𑌯𑍁𑌞𑍍𑌜𑍀𑌤 ।
𑌅𑌥𑌵𑌾 𑌮𑍂𑌲𑌤𑌲𑌂 𑌕𑌠𑌿𑌨𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ॥

அக்னி பதத்தில் காளிகோவிலை நிர்மாணம் செய்ய வேண்டும். (66)

பிருச பாகத்தில் விஷ்ணு ஆலயத்தைக் கல்பிக்க வேண்டும்.

யமபதத்தில் ஷண்முகாலயத்தைக் கல்பிக்கவேண்டும்.

பிருசாம்சத்திலாவது, நிருருதி அம்சத்திலாவது (பிதிரு அம்சத்திலாவது) கேசவாலயத்தை நிர்மாணிப்பதுமாகும்.

ஸுக்ரீவாம்சத்தில் கணபதியின் ஆலயத்தை கல்பிக்க வேண்டும். புஷ்பதந்த பதத்தில் கல்பிப்பதுமாகும்.

ஐயனர் கோவிலை நிருருதி அம்சத்தில் கல்பிக்க வேண்டும்.

வருணம்சத்தில் (ஜலாதிபாம்சத்தில்) விஷ்ணுவின் ஆலயமிருக்கவேண்டும். (68)

இந்த விஷ்ணுவின் ஆலயத்தில், மேல்தலத்திலிருந்து முறையே, ஸ்தானக பிம்பம், ஆஸந பிம்பம், சயநபிம்பம் இம்மூன்றையும் கல்பிப்பதுமாகும்.

அல்லது மூலதலத்தை கடினமாகக் கல்பித்து, அதன்

ஸுக்ரீவாம்ஶே ஸுக்ரீவே ப்ருங்கராஜே ததைவ
*நுபாலயம் ।

முக்யாம்ஶே வாயௌ மத்யம் காத்யாயநீ வாஸ: ॥ ௭௦ ॥

ஸோமே யக்ஷ(தநத)க்ருஹம் வா மாத்ருணாமாலயம் தத்ர ।
ஈஶாம்ஶே ஶங்கரஸ்யாலயம் பர்ஜந்யே ஜயந்தே வா ॥ ௭௧ ॥

ஸோமே †யக்ஷக்ருஹம் வா ஶோஷபதே வா விதாதவ்யம் ।

மேல்தலத்தில் ஸ்தானக பிம்பத்தை பிரதிஷ்டை செய்வதுமாகும். (69)

ஜிநாலயத்தை ஸுகதாம்சத்தில் (ஸுக்ரீவாம்சத்தில்) கல்பிக்கவேண்டும்.

பிருங்கராஜாம்சத்தில் ராஜகிருஹத்தை நிர்மாணம் செய்யவேண்டும். (ஜிநாலயத்தை என்பது பாடபேதம்.)

வாயுபதத்தில் மதிராலயத்தை (கள்ளுக்கடையை) கல்பிக்கவேண்டும்.

முக்கியாம்சத்தில் காத்தியாயநீ கிருஹத்தைக் கல்பிக்க வேண்டும். (70)

ஸோமாம்சத்தில் தநத கிருஹத்தை (தநகிருஹத்தை) யாவது, ஸப்தமாதாக்களின் ஆலயத்தையாவது கல்பிக்க வேண்டும்.

ஈசாம்சத்தில் சிவாலயத்தை நிர்மாணம் செய்ய வேண்டும். பர்ஜந்யாம்சம் அல்லது ஜயந்தாம்சத்தில் நிர்மாணிப்பதுமாகும். (71)

ஸோமபதம் அல்லது சோஷபதத்தில் தநத (தந) கிருஹத்தைக் கல்பிக்கவேண்டும்.

*ஜிநாலய இதி பாடாந்தரம் ।

†ஸோமக்ருஹம் இதி பாடாந்தரம் ।

தத்ர மஹாநந்தநவநம் ஹர்ம்யைர்வா சாத்ரகோஷ்டம் ஸர்வத: ||

மத்⁴யே விஷ்ணோரயிஷ்ணோஸ்து தத்ர ஸபா⁴மண்ட³பம் ப்ரகல்பயேத் |
ப்³ரஹ்மஸ்தா²நாதை³ஶாந்யே வாக்³நேய்யாம் வா ஸபா⁴ஸ்தா²நம் ||எங||

தத்³வாயவ்யே மஹாவிஷ்ணோ: † ஹரிஸத³நம் த³க்ஷிணே பர: |
க்ரூரவஸ்தும் பஞ்ச ப்ரத்யயஜநகம் மத்⁴யே து ||எச||

அஷ்டாஷ்டபதே³ வா ப்³ரஹ்மஸ்தா²நேऽஷ்டநவமாநே |
த்³விபத³பீட²ம் ஸாமம் வா பரமஶாயிகம் ச க்ரமஶ: ||

அவ்விடத்தில் (சோஷாம்சத்தில்) கணேசாலயத்தைக் கல்பிக்கவேண்டும்.

அதிதிபதத்தில் மாதிருகோஷ்டத்தை ஸப்தமாதாக்களின் ஆலயத்தைக் கல்பிக்கவேண்டும். (72)

விஷ்ணுவின் ஆலயமத்தியில் ஸபாமண்டபத்தை நிர்மாணம் செய்யவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அந்த ஸபாமண்டபமானது, பிரம்ஹஸ்தானத்திற்கு ஈசானிய பாகம் அல்லது ஆக்னேய பாகத்திலிருக்கவேண்டும். (73)

அந்த ஸபாமண்டபமானது விஷ்ணுவாலயத்திற்கு வடமேற்கு பாகத்திலிருக்கவேண்டும். அதை அடுத்து தென்பாகத்தில் விஷ்ணுவின் ஆலயமிருக்கவேண்டும். (73½)

அதன் மத்தியில், பயங்கரமானதும், நம்பிக்கையை உண்டு பண்ணக்கூடியதுமான ஐந்து விஷயங்களிருக்கவேண்டும். (74)

அஷ்டபாகம் அல்லது நவபாகத்தில், இரட்டைப்படை அல்லது ஒற்றைப்படையில், (64 பதம் 81 பதம்போன்ற

† ஹரிஸத³நம் இதி பாடா²ந்தரம் |

[illegible]

[illegible]

[illegible]

வஸ்துக்களில்) பிரம்ஹ ஸ்தானத்தை விலக்கி, கிழக்கு முதலான திக்குகளில், முறையே, 1 நளினகபவனம். 2 ஸ்வஸ்திகம் 3 நந்தியாவர்தம் 4 ப்ர(ந)லீனகம் 5 ஸ்ரீபிரதிஷ்டிதம் 6 சதுர்முகஹர்மியம் 7 பத்மஸமம் 8 விஷ்ணுச்சந்தவிமானம் இவைகளை, திரிதலாதி துவாதச தலாந்தமாக (மூன்று அடுக்கு கோபுரம் முதல் பன்னிரண்டு அடுக்கு கோபுரம் வரையிலுடையதாக) நிர்மாணம் செய்ய வேண்டும். இவ்விதமான கோபுரமானது தேவாலயத்தின் வெளிப்பக்கத்திலும் கல்பிக்கப்படவேண்டும். இவ் விஷயத்தை கிராமாதிகளிலும் கல்பிக்கவேண்டும். (77)

(இவ்விதம் கல்பிக்கப்பட்ட தேவாலயங்களில்) ஸ்தித மூர்த்தி, ஆஸீன மூர்த்தி, சயன மூர்த்தி, இவைகளில் எந்த மூர்த்தி இஷ்டமோ, அந்த மூர்த்தியை பிரதிஷ்டை செய்யவேண்டும்.

விமானமானது முறையே, உத்தமம், மத்யமம், அதமம், நீசம், என்று நான்குவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது.

கிராமாதிகளில், நீசபவனமானது (மிகச்சிறிய வீடானது)

க்ஷுத்ரே க்ஷுத்ரவிமானம் யத்ர யத்ரோசிதம்
விதாதவ்யம் || ௭௯ ||

த்ரிதலஞ்ச சதுஸ்தலம் தஸ் ஹீநே ஹீநே(நம்) ஸா
மாந்யம் ।
க்ராமே வா நகரே வாபி உத்க்ருஷ்டே தேவாலயம் த
நீசஞ்சேத் || ௮௰ ||

நீசா பவந்தி புருஷா: ஸ்த்ரியோபி து:ஶீலதாம் யாந்தி ।

கூறப்பட்டிருக்கிறது. ஆயினும் உத்தமமான தேவாலயத்தில் நீச விமானத்தை (அதமாதமமான மிகச் சிறிய விமானத்தை) கல்பிக்கக்கூடாது.

கிராமமானது க்ஷுத்திர கிராமமாக இருந்தால், தேவாலயத்தின் விமானம் க்ஷுத்திரமாக (சிறியதாக) இருப்பதாகும். எங்கு எவ்விதமான விமானம் உசிதமோ, அந்த விமானத்தை அங்கு (அந்த கிராமத்தில்) கல்பித்துக் கொள்ளுவதாகும். 79

அந்த விமானமானது, த்ரிதலம், சதுஸ்தலம், பஞ்சதலம், முதலியவைகளாம். (3, 4, அல்லது 5 தலங்களுடையது.)

ஹீனமான கிராமத்தில், தேவாலயத்தின் விமானமானது, ஹீனமாகவோ அல்லது ஸாமானியமாகவோ இருப்பதாகும்.

உத்கிருஷ்டமான (பெரிய) கிராமம் அல்லது நகரத்தில் தேவாலயமானது நீசமாக (சிறியதாக) இருந்தால், அந்த கிராமம் அல்லது நகரத்திலிருக்கும் புருஷர்கள், நீசர்கள் (அல்பத்தனம் உடையவர்கள்) ஆவார்கள். ஸ்திரீகள் துச்சீலைகள் (கெட்ட நடத்தையுடையவர்கள்) ஆவார்கள்.

ஆகையால் தேவாலய விமானங்களை, கிராமாதிகளுக்கு ஏற்றபடி ஸமமாகவோ பெரியதாகவோ கல்பிக்கவேண்டும்.

தத்பாஹ்யே ஸதேஶிகம் வா தத்ஸத்மோர்த்வம் (யா)
வ்யபோஹயேத் || ௮௧ ||

ஹரிஹரஸத்மப்யாம் வா ப்ரோக்தாத் ஸமுந்நதோத்ஸேதம் யதேஷ்டம் ஸ்யாத் |
அந்யேஷாம் கார்யோ யத்ந: காலீ ச ப்ரஸந்நா பவேத் ||

காலீஸ்தாநம் வஹ்நௌ தைத்யே ஜலாதிகா: ப்ரோக்தா: |
ப்ராக்ப்ரத்யங்முகமேவம் ப்ராகாரதிஷு தத்
ஸர்வாஸாமேவம் ப்ரோக்தம் || ௮௨ ||

விஷ்ணுக்ருஹம் ஸர்வேஷாமேவம் ப்ராகுத்தராநநம்
ப்ரோக்தம் |

இவ்விஷயமானது விஷ்ணுவின் ஆலயம், சிவாலயம் இவைகளுக்குக் கூறப்பட்டதாகும்.

[சிவாலயம்-விஷ்ணு ஆலயங்கள், மற்ற வீடுகளைக் காட்டிலும் பெரிதாகவும் உயரமாகவும் இருக்கவேண்டும் என்பது பொருள்]

மற்றபடி வீடுகள் யாவும் மனம்போல் இருப்பதாகும். 81½

சண்டிகேசுவரர் 1, குமாரன் 2, தனதன் 3, காளி 4, பூதனை 5, காளிநாதன் 6, கட்கீ 7, இவர்கள் கிராமத்தின் வாயில் காப்பாளர்களாவார்கள்.

கிராமங்களில் சிவாலயமானது, கிழக்கு முகம், அல்லது மேற்கு முகமாக இருக்கவேண்டும். அந்த சிவாலயமானது கிராமாபிமுகமாக இல்லாமலிருப்பது சுபத்தையளிப்பதாகும்.

விஷ்ணுவின் ஆலயமானது எந்த திக்கையும் நோக்கி இருப்பதாகும். கிராமத்தை நோக்கி இருப்பது சுபபலனை அளிப்பதாகும்.

[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]

மற்ற தேவதைகளின் ஆலயங்கள் கிழக்கு முகமாக இருக்கவேண்டும்.

ஸப்த மாதாக்களின் ஆலயமானது வடக்கு முகமாக இருக்கவேண்டும். 84

ஸூரியனின் ஆலயமானது மேற்கு முகமாக இருக்க வேண்டும்.

வீடுகளைக் கட்டத் துவங்குவதற்கு முன்னமே தேவாலயங்களைக் கட்டிவிடவேண்டும்.

கிராமாதிகளின் ஹ்ருதயஸ்தானம் (1) முதுகெலும்பு ஸ்தானம் (2) நலஸ்தானம் (3) ஸூத்திர ஸ்தானம் (4) ஸந்தி ஸ்தானம் (5) கர்ணநாடீ ஸ்தானம் (6) இந்த ஆறு (6) இடங்களில் தேவாலயம் முதலியவைகளை நிர்மாணம் செய்யக்கூடாது. 85½

கோசாலையானது, தேவாலயத்திற்குத் தென்பக்கத்தில் இருக்கவேண்டும். வட பக்கத்தில் பூந்தோட்டம் இருக்க வேண்டும். கிழக்குக் கோபுர வாயிலின் பக்கம் அல்லது மேற்குப் பக்கத்தில் தபஸ்விகள் வஸிக்குமிடம் இருக்க வேண்டும்.

† [illegible]

ஸர்வதி³க்ஷ்வேவ ஜலாஶயாதி³ஷு வாபீ ச கூபம் ச ||௮௭||

வைஶ்யாநாம் த³க்ஷிணத: வஸதிஸ்தா²நம் து ஶூத்³ராணாம் |
ப்ராச்யாம் வாப்யுத்தரே கே³ஹம் காரயேத்
குலாலாநாம் || ௮௮ ||

தத்ரைவ நாபிதாநாஞ்ச கர்மகாராணாம் |
மத்ஸ்யோபஜீவிநாம் ஸ்யாத் வாஸம் வாயவ்யதே³ஶே து ||

பஶ்சிமே மாம்ஸவிக்ரீதாநாம் நிவாஸ: ஸ்யாத் |
தைலோபஜீவிநாம் சோத்தரே க்³ருஹஶ்ரேணி: ||௯௦||

ஜலாசயம் (குளம் முதலியவைகள்) குட்டை, கிணறு இவை எந்தத் திக்கிலும் இருப்பதாகும். 87

(தேவாலயத்திற்கு) தென் பக்கத்தில் வைசியர்களின் வாஸஸ்தலம் இருக்கவேண்டும்.

தேவாலயத்திற்கு நான்கு பக்கங்களிலும் சூத்திரர்களின் வீடுகள் இருக்கவேண்டும்.

கிழக்கு அல்லது வடக்குப் பக்கத்தில் குயவர்களின் வீடுகள் இருக்கவேண்டும். 88

அந்தவிடத்திலேயே நாபிதர்களின் வீடுகளும் மற்ற தொழிலாளர்களின் வீடுகளும் இருக்கவேண்டும்.

வாயு திக்கில் மத்ஸ்யோபஜீவர்களின் (மீன் வியாபாரத்தினலே ஜீவிப்பவர்களின்) வாஸஸ்தானம் இருக்க வேண்டும். 89

மேற்கு திக்கில் மாமிஸ வியாபாரிகளின் வாஸஸ்தலம் இருக்கவேண்டும்.

வடக்கு திக்கில் எண்ணெ வியாபாரம் செய்யும் வாணியர்களின் வீட்டு வரிசை இருக்கவேண்டும். 90

யத்ர த்ரிபி: பஞ்சபிர்வா ஸப்தபிர்வா நவபி: தநுர்மாநைர்
விஸ்தார: ।
உக்தாத்வ்யாஸாத் ததூர்த்வம் க்ரமாத் த்வித்விகரவ்ருத்தித: ॥ ௯௧

வ்யாஸாத்த்விகுணாவதிகம் யாவதிஷ்டம் தைர்க்யம் ப்ரகல்பயேத் ।
தஸ்மிந்நேவ ஹஸ்தமாநேந கேஹம் கல்பயேத் யதாவிதி ॥

ருசக: ஸ்வஸ்திகோ வா நந்த்யாவர்தம் ச ஸர்வதோ
பத்ரம் ।
வர்த்தமாநோ நவேதாகார பேதாத் ததா தச்சதுர்விதம் விதுர் ॥

தண்டகஶாலாலாங்கலம் வா கூர்மம் ச யதேஷ்டம் ஸ்யாத் ।

வீட்டின் எல்லையானது, மூன்று (3) ஐந்து (5) ஏழு (7) அல்லது ஒன்பது (9) தநுஸ் அகலமுள்ளதாக இருப்பதாகும் என்று கூறப்பட்டிருக்கிறது அந்த அளவுக்குமேல் முறையே இரண்டு இரண்டு கோல் விதமாக அகலத்தை விருத்திசெய்துகொள்ளுவதாகும். 91

அகலத்தைப்போல இரண்டு பங்கு அளவு வரையில் விருப்பப்படி நீளத்தை வைத்துக்கொள்ளுவதாகும்.

அதே இடத்தில் ஹஸ்தமானத்தினால், விதிப்படி வீட்டைக் கல்பித்துக்கொள்ளுவதுமாகும். 92

ருசகம் 1. ஸ்வஸ்திகம் அல்லது நந்தியாவர்த்தம் 2. ஸர்வதோபத்திரம் 3. வர்தமானம் 4. என்று அவைகளின் உருவபேதத்தினாலே நான்குவிதமான வீடுகள் கூறப்பட்டிருக்கின்றன. 93

அந்த வீடுகள் தண்டகம்–1, சாலை–2, லாங்கலம்–3 அல்லது கூர்பம் என்ற பேதங்களுள் இஷ்டமான பேதத்தில் இருப்பதாகும்.

ம்ராகஸ் ஸ்தி²தீநாம் வாஸகஷ்டிபெரவா வாயள ||௯௪ ||

வாஸ: ஸ்யாத் த்³வ்யவதீநாம் பெரஷ்ணாம் தத்ர ந ஸ்தவஸ்யேத் |

தஸ்மாத் ஸ்தி²தீநாம் ரஜகாதீநாம் நிவாஸ: ஸ்யாத் ||௯௫||

அஞ்ஞாருக்புரோணி வாரவஸீயாம் ஜைராபஸாத்³ தத் |

அஞ்ஞாருயோஷித்தா: தாஜாயஸ்வஸமஷணாஸவஸா: ||

வஸவாஸெள உருமொகஷ்கீ யோஷிதா *ம்ராஸராவெயஸ் |

வராமுத்ரவிஸி ஷஜோத: வஞுயரெஜ: ஸ்யாத்

பவாவாஸ்ய || ௯௭ ||

பெரஷ்ணாஸெவி தத்ஷ்ணெ ஜுவெர புரயாமும் ஸ்யாத் |

கிராமத்திற்கு அப்பால் ஸ்வல்ப தூரத்தில் அக்னி மூலை அல்லது வாயுமூலையில் ஸ்தபதிகளின் வாஸஸ்தானம் இருக்க வேண்டும்.

அவ்விடத்தில் மற்றவர்களுக்கும் வீடுகளிருப்பதாகும்.

அதற்கு அப்பால் ஸ்வல்ப தூரத்தில் வண்ணான் முதலியவர்களின் வாஸஸ்தானம் இருக்கவேண்டும். 95

கிராமத்திற்குக் கிழக்கு திக்கில் ஒரு குரோச தூரத்தில் சண்டாளர்கள் வஸிக்கும் குடிசைகள் கல்பிக்கப்பட வேண்டும். அந்த சண்டாளர்களின் ஸ்திரீகள் செம்பு, இரும்பு, ஈயம் இவைகளினுலே செய்யப்பட்ட நகைகளை அணிந்திருப்பவர்களாவார்கள். 96

முன்பகலில் மலமூத்திர மோசனத்திற்குத் தகுதியான பூமியானது, கிராமத்திற்குத் தென்மேற்கு திசையில் இருக்க வேண்டும்.

கிராமத்திற்கு வடகிழக்கு திக்கில், ஐநூறு (500) கோலுக்கப்பால் சுடுகாடு இருக்கவேண்டும். 97

---

*ம்ராஸெளஜீத்ராம் ஜதி வாரொ யாக்த ஜதி ஹாதி |

[illegible] ||௯௮||

[illegible] பரிவ்ருத்தி: |
வ்யஸநம் க்ராமவிநாஶ: ந்ருபாவமாநம் பவதி மரணம் ச ||

தேவாலயாந்தராபண[illegible] அபி |
[illegible] க்ராமஸ்ய ஶூந்யதா
[illegible] || ௱ ||

க்ராமாதீநாம் ச ஸர்வேஷாம் கர்பவிந்யாஸம் உச்யதே |

மற்றவர்களுக்கும் அவரவர்கள் இருக்குமிடத்திலிருந்து 500 கோல் தூரத்திற்கப்பால் சவம் அடக்கம் செய்யும் பூமி இருக்கவேண்டும். 97½

சண்டாளர்கள், சர்மகாரர்கள் (தோல் பதனிடுபவர்கள்) இவர்களின் வாஸஸ்தலம், ச்மசானம், ஜலாசயத்திற்குப் போகும் வழி இவைகள் தேவாலயம் விசுவகோஷ்டம் (பொதுச் சாவடி) கிராமத்தைச் சுற்றிலுமுள்ள இடம், வழி இவைகளைச் சுற்றிப் போகவேண்டியதாக (இருக்கக் கூடாது, அவ்விதம்) இருந்தால், வியஸனம் (துன்பம்) கிராமத்திற்கு அழிவு, அரசனுக்கு அவமதிப்பு, மரணம் இவைகளையளிக்கும். 99

தேவாலயத்திற்குள் கடைகளில்லாதிருப்பது (அல்லது கடைகளிருப்பது, தேவதாமூர்த்திகளில்லாமல் சூன்யமாக இருப்பது) குப்பைகளிருப்பது, வழியில் அசுத்தமானவைகளைப் போடுவது இதுபோன்றவைகள் கிராமத்திற்கு சூனியத்தன்மையை உண்டுபண்ணும். (கிராமத்தை உருவமில்லாமல் செய்துவிடும்). 100

கிராமம் முதலிய எல்லாவற்றிற்கும் கர்பவிந்யாஸத்தை கூறுகிறேன்.

𑌸𑌗𑌰𑍍𑌭𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑍈 𑌵𑌿𑌗𑌰𑍍𑌭𑌂 𑌸𑌰𑍍𑌵𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ||

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌗𑌰𑍍𑌭𑌂 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌵𑌿𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍇𑌤𑍍 ।
𑌮𑍃𑌤𑍍𑌕𑌨𑍍𑌦𑌧𑌾𑌨𑍍𑌯𑌸𑌲𑍍𑌲𑍋𑌹𑌧𑌾𑌤𑍁𑌰𑌤𑍍𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌨𑍀𑌲𑌕𑍈𑌃 ||௨||

𑌪𑌣𑍇𑌨 𑌗𑌰𑍍𑌭𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌿 𑌨𑌿𑌰𑍍𑌦𑍋𑌷𑌾𑌣𑍍𑌯𑍇𑌵 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍇𑌤𑍍 ।
𑌸𑌲𑌿𑌲𑌾𑌪𑍂𑌰𑌿𑌤𑍇 𑌶𑍍𑌵𑌭𑍍𑌰𑍇 𑌮𑍃𑌦𑌾𑌦𑍀𑌨𑌿 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 𑌬𑍁𑌧𑌃 ||

𑌧𑌾𑌨𑍍𑌯𑍋𑌪𑌰𑌿 𑌨𑌿𑌧𑌾𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑌾𑌮𑍍𑌰𑌭𑌾𑌜𑌨𑌮𑌚𑌲𑌮𑍍 ।
𑌤𑌾𑌮𑍍𑌰𑌭𑌾𑌜𑌨𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 [illegible] || ௪ ||

[illegible] ।
𑌉𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌤𑌾𑌵𑌦𑍇𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 [illegible] ||௫||

ஸகர்பமான (கர்பநியாஸத்துடன் கூடிய) கிராமாதிகள் ஸகல ஸம்பத்துகளையும் அளிக்கும். கர்பநியாஸமில்லாத கிராமாதிகள், எல்லாவற்றையும் அழித்துவிடும். ஆகையால் ஸகலவிதமான முயற்சிகளையும் செய்து, நன்கு கர்ப விந்யாஸத்தைச் செய்யவேண்டும்.

மண் (தசமிருத்திகை), கிழங்கு (தாமரை), தானியங்கள், சுத்தமான உலோகங்கள், தாதுக்கள், ரத்னம், இந்திர நீலம், பணம் (நாணயம்) ஆகிய திரவியங்களைக் குற்றமற்றவைகளாக ஸங்கிரஹிக்கவேண்டும். அந்த மண் முதலியவைகளை ஜலத்தினாலே நிரப்பப்பட்ட குழியினுள் வைக்க வேண்டும். 103

தானியத்தின்மேல் செப்புப் பாத்திரத்தை அசையாமல் வைக்கவேண்டும். தாமிரப் பாத்திரத்தின் அகலமானது அரத்னி (ஒரு முழம்) 12 அங்குலம், 10 அங்குலம், 8 அங்குலம், 4 அங்குலம் என்று 5 விதமாகக் கூறப்பட்டிருக்கிறது. அதன் உயரமானது அகலத்துக்கு ஸமமாகவே

வ்ருத்தம் வா சதுரஶ்ரம் வா நவகோஷ்டகமேவ வா ।
உபபீடே² தேவதா꞉ திஷ்ட²ந்தி பாத்ரே து ஸம்ஜ்ஞி(ஜ்ஞி)தா꞉ ॥

ரஜதேந வ்ருஷ꞉ ஸூர்யே வஜ்ரீ ஹாடகநிர்மித꞉ ।
யமே து யமராஜஶ்ச பஞ்சலோஹாயஸோ வாரண꞉ ॥ ௱எ ॥

ஹைமஸ்ஸிம்ஹ꞉ பரே ரௌப்யேண வருணோ ச ஜயாயிவ꞉ ।
வாஜீ ஶுப்⁴ரத்வப꞉ ஸௌமே ராஜதோ த்³விஜராஜக꞉ ॥ ௱அ ॥

ஐஶே ச வைக்ராந்தமாக்³நேயே பித்தலம் து நைர்ருதே ।
*ஸ்வர்ணம் ஸமீரணே ஜாதிஹிங்குலம் து ஜயந்தகே ॥

இருக்கவேண்டும், அந்தப் பாத்திரமானது வட்டவடிவமாக, சச்சதுரமாக, 10 பட்டைகளுள்ளதாக அல்லது ஒன்பது பட்டைகளுள்ளதாக இருக்கவேண்டும். அந்தப் பாத்திரத்தில் உபபீடஸ்தானத்தில் தேவதைகள் வஸிக்கிறார்கள்.

ஸூரியஸ்தானத்தில் வெள்ளியினால் விருஷபம் 1, தங்கத்தினால் இந்திரன் 2, யமஸ்தானத்தில் சுல்பத்தினால் (   )யமராஜன் 3, இரும்பினால் யானை 4, தங்கத்தினாலே சிங்கம் 5, வருணதிக்கில் வெள்ளியினாலே வருணன் 6, வெண்மையானகுதிரை. 7, ஸோமதிக்கில் வெள்ளியினாலே சந்திரன் (ஸோமன்) 8, இவைகளைக் கல்பிக்கவேண்டும். 108

ஈசானதிக்கில் வைக்கிராந்தம், அக்னிதிக்கில் பித்தளை, நைருருதிதிக்கில் ஈயம், வாயுதிக்கில் ஸுவர்ணம். (பணம் என்று மற்றொரு பாடம்.) ஜயந்தஸ்தானத்தில் ஜாதிஹிங்குலியம், பிருசஸ்தானத்தில் அரிதாரம், விததஸ்தானத்தில் மனோசிலை, பிருங்கராஜஸ்தானத்தில் ஸுவர்ணமாக்ஷிகம், ஸுக்ரீவஸ்தானத்தில் ராஜாவர்தம், சோஷபாகத்தில்

*பணம் இதி பாட²꞉ ।

ஹரிதாலம் ப்ருஶே ச ஹாநே ச விதத்யாத்து ஈஶஸ்த்ரியா |
காக்ஷிகம் ஸூர்யமாஸ்தேஜ ஸத்யாக் பர்ஜந்யதஸ்ஸம்ஸ்க்ருதே ||

கைரிகம் ஸோமஸ்தாநே து முக்யே சாஞ்ஜநம் ந்யஸேத் |
அதிதௌ தரதம் விந்யஸ்ய ஸர்வமேவ க்ரமேண து ||௧௧௧||

அந்தர்த்ருஷ்ட்யா ச லோகேஶா: ஸ்தாப்யா: ஸ்வஸ்வாந்தராந்தரா: |
ஷட்பி: பஞ்ச சதுஸ்த்ரித்வ்யங்குலைர் பிம்போதயம் பவேத் ||

ததர்த்தம் வாஹநோத்ஸேதம் ஸ்தாநகாஸநமேவ வா |
முக்தாமாபவத்ஸே மரீசௌ வித்ருமம் ஸவிதர்யதா ||௧௧௨||

பத்மராகம் ச வைடூர்யம் விவஸ்வதி விநிக்ஷிபேத் |

கைரிகம், கணமுக்கிய (முக்கிய) ஸ்தானத்தில் அஞ்ஜனம். (அஞ்சனக்கல்) அதிதிஸ்தானத்தில் தரதம் (இவைகளை இவ்விதமாக, முறையே, வைக்கவேண்டும். 111

லோகபாலர்களை நாச்சந்தில் உள்பககத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும்படி (பாஜனத்திற்குள் முறையுடன் வைத்து) ஸ்தாபிக்கவேண்டும். லோகபாலர்களின் பிம்பத்தின் உயரமானது, 6, 5, 4, 3, அல்லது 2. அங்குலமிருக்கவேண்டும். 112

அவர்களின் வாஹனங்களின் உயரமானது, அவர்களின் உயரத்தில் ஸரிபாதி உயரமிருக்கவேண்டும். அவர்கள், ஸ்தானகமூர்த்தியாகவோ அல்லது ஆஸனமூர்த்தியாகவோ இருப்பதாகும். 112½

அந்தந்த தேவதைகளின் பாவங்களை அறிந்தவர்கள் கொண்டுவந்து கொடுத்த ரத்னங்களில், ஆபவத்ஸ ஸ்தானத்தில் முத்து, மரீசி ஸ்தானத்தில் பவழம்,

வஜ்ரமிந்த்ரஜயே வித்யாதிந்த்ரநீலம் து மித்ரகே || ௧௧௪ ||

ருத்ரராஜே மஹாநீலம் மரகதம் து மஹீதரே |
மத்யே பத்மராகம் து விந்யஸேத் கர்பபாஜநே || ௧௧௫ ||

ரத்நாநி யதாவச்சைவ ஸ்வஸ்வஸ்திகாகாரபாஜநே |
தஸ்யைவ ப்ராந்தபாகேஷு ஸ்தாநேஷு ந்யாஸயேத் || ௧௧௬ ||

ஹேமாயஸ்தாம்ரரௌப்யேஷு ஸ்வஸ்திகாநி சதுஷ்டயம் |
ப்ரஹ்மஸ்தாநாத் பஹிஷ்டாநி ப்ராச்யாதௌ ந்யாஸயேத்
க்ரமாத் || ௧௧௭ ||

ஸுவர்ணே ஶாலிம் ரஜதே வ்ரீஹிம் ஆயஸே
கோத்ரவம் |
தாம்ரகே ... திலம் வைக்ர(க்ரா)ந்தகே ... ||

ஸவித்ரு ஸ்தானத்தில் வஜ்ரம், விவஸ்வான் ஸ்தானத்தில் வைடூர்யம், இந்திரஜய (ராஜ) ஸ்தானத்தில் வைரம், மித்ரஸ்தானத்தில் இந்திரநீலம், ருத்திரராஜஸ்தானத்தில் மஹாநீலம், மஹீதரஸ்தானத்தில் மரகதம், மத்தியில் பத்மராகம், என்று இவ்விதமாக, கர்பபாஜனத்தில், வைக்கவேண்டும். 116

தங்கம்- இரும்பு- தாமிரம்- வெள்ளி, இந்த லோஹங்களினாலே, 4 ஸ்வஸ்திகாகிருதிகளைச் செய்து கர்பபாஜனத்தின் நான்குபக்கங்களிலும் வைக்கவேண்டும். இவைகளை பிரம்ஹஸ்தானத்திற்கு வெளியில் கிழக்கு முதலிய திக்குகளில் முறையே வைக்கவேண்டும். 117

மேலும், ஸுவர்ணத்தினாலே சாலி (சம்பாநெல்) தானியம் வெள்ளியினாலே வ்ரீஹி (சிறுநெல் தான்யவிசேஷம்) தானியம், இரும்பினாலே கோத்ரவம், (வரகுதானியம்)

ரீத்யாம் காரியாஸம் தாம்ரம் கம்ஸ்யேஷு ஸீஸலோஹஜாத் ।
பாஜநாய பலிம் தத்வா பஸ்சாத் ஸர்வம் நிதாபயேத் ॥

கர்பந்யாஸவிதிஜ்ஞோயம் பாஜநோர்த்வே ஸ்தாபயேத் ।
பஹிர்பாஜந விஸ்தாராதேகாங்குலமதிகம் ததா ॥

த்வாதஶாங்குலம் தீர்கம் ஸ்யாத் விஸ்தாரம் அதிகம் ததா ।
பாஜநஸ்ய து பஞ்சாங்குலம் மஹதோ விஸ்தாரத: ॥

ஸ்தாநீயே (அ)த்ரோணமுகே கார்வடே பத்தநேபி ச ।

பித்தளையினாலே கங்குதானியம், ஈயத்தினாலே உளுந்து, வைக்ராந்தத்தினாலே (லோஹ விசேஷம்) எள்ளு, இரும்பினாலே பயறு, தாமிரத்தினாலே கொள்ளு இவைகளைச் செய்து, அந்த கர்பபாஜனத்திற்குள் வைத்து, கர்ப பாஜனத்திற்கு பலி கொடுத்து, பிறகு அந்த கர்ப பாஜனத்தை பூமிக்குள் புதைக்கவேண்டும். 119

கற்ப நியாஸ விதியை அறிந்தவர்கள், அந்த கர்பபா ஜனத்திற்குமேலே, கருங்காலியினாலே இந்திரகீலம் (மூடி) போடவேண்டும். அது பாஜனத்தின் விஸ்தாரத்தைக் காட்டிலும் ஒரு அங்குலம் அதிக விஸ்தாரமுள்ளதாகவும், 12. அங்குலம் நீளமுள்ளதாகவும் இருக்கவேண்டும். (கர்பபாஜனத்தின் அளவு இருக்கவேண்டும் என்பது பொருள்.)

(கர்பபாஜனமானது அதிக விஸ்தாரமுள்ளதாக இருந்தால்,) 5 அங்குலம் அதிக விஸ்தாரமுள்ளதாக இருப்பதாகும். இவ்விதமாக 32 அங்குலம் வரையில் விஸ்தாரமாக இருப்பதுமாகும். (மானஸாரத்தில் கர்பபாஜன விஸ்தாரமானது 32 அங்குலம் வரையில் கூறப்பட்டிருக்கிறது.) 121

ஸ்தானீயம் 1, துரோணமுகம் 2, கார்வாடம் 3, பிரதி

𑌗𑍍𑌰𑌾𑌮𑍇 𑌚 𑌨𑌿𑌗𑌮𑍇 𑌖𑍇𑌟𑍇 𑌪𑌤𑍍𑌤𑌨𑍇 𑌕𑍋𑌷𑍍𑌠𑌕𑍋𑌲𑌕𑍇 ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾𑌰𑍍𑌯𑌾𑌰𑍍𑌕𑌭𑌾𑌗𑍇𑌷𑍁 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑌿 𑌯𑌮𑍇 𑌤𑌥𑌾 ।
𑌮𑌿𑌤𑍍𑌰𑍇 𑌚 𑌵𑌾𑌰𑍁𑌣𑍇 𑌚𑍈𑌵 𑌸𑍋𑌮𑍇 𑌚 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌧𑌰𑍇 ॥

𑌦𑍍𑌵𑌾𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌵𑌾 𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑍇 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌗𑌰𑍍𑌭 𑌇𑌷𑍍𑌯𑌤𑍇 ।
𑌪𑍁𑌷𑍍𑌪𑌦𑌨𑍍𑌤𑍇 𑌚 𑌭𑌲𑍍𑌲𑌾𑌟𑍇 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇 𑌚 *𑌗𑍃𑌹𑌕𑍍𑌷𑌤𑍇 ॥

𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌸𑍍𑌥𑌾𑌨𑍇𑌽𑌥𑌵𑌾 𑌪𑍁𑌨𑌃 ।
𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌦𑍍 𑌗𑍍𑌰𑌾𑌮𑌰𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌾𑌭𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌯𑍇 ॥

𑌗𑌰𑍍𑌭𑌾𑌣𑌾𑌂 𑌵𑌿𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌬𑌿𑌮𑍍𑌬𑌂 𑌤𑌦𑍁𑌪𑌰𑌿 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ।

நாகரம் 4, கிராமம் 5, நிகமம் 6, கேடம் 7, பத்தனம் 8, கோத்ம கோலகம் 9, ஆகிய 9 விதமான கிராமாதி பேதங்களில், பிரம்ஹாம்சம் 1, ஆரியாமசம் 2, அர்காம்சம் 3 விவஸ்வான் அம்சம் 4, யமாம்சம் 5, மித்திராம்சம் 6, வருணாம்சம் 7, ஸோமாம்சம் 8, பூதராம்சம் 9, இவைகளில், துவாரத்தின் வலது பக்கமானது, இவர்களின் கர்பஸ்தானமாகும். (கர்பபாஜனத்தை வைக்கவேண்டிய ஸ்தானமாகும் என்பது பொருள்.)

வீட்டில், கீழே கூறப்பட்ட 9 அம்சங்களுடன், புஷ்பதந்தாம்சம், பல்லாடாம்சம், மஹேந்திராம்சம் இவைகளும் கர்பஸ்தானமாகும். 124

கிராமத்தின் ரக்ஷைக்காகவும் ஸகலவிதமான விருப்பங்களின் அபிவிருத்திக்காகவும், விஷ்ணுவின் ஸ்தானம், லக்ஷ்மீஸ்தானம் அல்லது ஸுப்ரம்ஹண்யஸ்தானம் இவைகளில் கர்பஸ்தாபனம் செய்யவேண்டும். 125

---

*𑌗𑍃𑌹𑌕𑍍𑌷𑌿𑌤 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑍋 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌭𑌵𑍇𑌦𑌿𑌤𑌿 𑌭𑌾𑌤𑌿 ।

ஶிலேஷ்டகாஶ்ரிதே வாபி பாஷாணஸ்யோபரிஸ்திதே ||௧௨௬||

அநுக்தாநாம் ச ஸர்வேஷாம் ப்ரஹ்மாம்ஶாதிஷு ந்யஸேத் |
ஸ்தபதிஸ்து யதா பத்ரம் ஸ்த்வதிஃ ஸ்தாபயேத் ஸ்திரம் ||

அத்ராநுக்தம் து தத்ஸர்வம் த்ரஷ்டவ்யம் கர்பலக்ஷணே ||

ஏவம் ப்ரோக்தா க்ஷிதிபரிமிதயோ தேவதாநாம்
வர்ணாநாம் ஆலயாஶ்ச ஜாத்யநுபாணாஶ்ச |
க்ராமாதீநாம் மாநவிந்யாஸமார்கம்
ஸாரம் ஸம்யக் ஸம்க்ஷிப்ய தந்த்ராத் || ௧௨௯ ||

புருஷனுடைய கை எடுப்பு மட்டத்திற்குக்கீழே, சிலை அல்லது செங்கல்லினலே கட்டப்பட்ட, கர்ப ஸ்தானத்தில் கர்பபாஜனத்தை வைத்துவிட்டு, அதற்குமேலே, விஷ்ணு முதலியவர்களின் பிம்பங்களை வைத்து பிரதிஷ்டை செய்ய வேண்டும். 126

இங்கு கூறப்படாத மற்றவிடங்களில், பிரம்ஹாம்சம் முதலியவிடங்களில் கர்பஸ்தாபனம் செய்யவேண்டும்.

ஸ்தபதியானவன், கர்பமானது பத்திரமாக இருக்கும்படி, கர்பபாஜனத்தை அசையாமலிருக்கும்படி வைக்க வேண்டும். 127

இங்கு கூறப்படாத விஷயங்களை கர்பலக்ஷணத்தில் பார்த்துக்கொள்ளவேண்டும். 128

இவ்விதமாக தேவாலயங்களின் பூமியளவு, பிராம்ஹணதி ஜாதிகளின் வீடுகளின் அளவு, கிராமாதிகளின் மான வின்யாஸ மார்கம், இவைகள், தந்திரங்களிலிருந்து எடுத்து சுருக்கமாகவும் நன்கும் கூறப்பட்டிருக்கின்றன. 129

𑌤𑍁𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌚 𑌨𑌰𑌪𑌃 𑌸𑍍𑌥𑌪𑌤𑌿𑌕𑌾𑌦𑌿 𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑍇𑌭𑍍𑌯𑌃
𑌸𑌨𑍍𑌮𑌾𑌨𑌾𑌦𑌿𑌕𑌂 𑌚 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑌸𑍍𑌯 𑌭𑍁𑌵𑌂 𑌚 𑌗𑌾𑌂 𑌚 ।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌯𑌥𑌾 𑌜𑌗𑌤𑌿 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌰𑍍𑌕𑌤𑌾𑌰𑌕𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍
𑌯𑌾𑌵𑌦𑍍𑌗𑍍𑌰𑌾𑌮𑌶𑌿𑌵𑌾𑌲𑌯𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑍁𑌖𑌾𑌵𑌹𑌃 (𑌸𑌃) ॥௧௩௦॥

𑌇𑌤𑌿 𑌮𑌯𑌮𑌤𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌗𑍍𑌰𑌾𑌮𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌸𑍋 𑌨𑌾𑌮
𑌨𑌵𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

ஸ்தபதி முதலியவர்களினாலே அளவுகளுடன் அமைக்கப்பட்ட, கிராமாதிகளும், வீடுகளும், தேவாலயங்களும், சந்திரன் நக்ஷத்திரங்களிருக்கும் வரையில் சாசுவதமாக இருப்பதைக் காண்கிறோம். ஆகவே அரசன், மானாதி காரியங்களில் ஸமர்த்தர்களான ஸ்தபதி முதலிய நான்குவித பிரிவினர்களுக்கும், தக்க ஸம்மானங்களையும், பூமிகளையும், பசுக்களையும் வெகுமதியாக அளிக்கவேண்டும். 130

கிராமவின்யாஸமென்னும் ஒன்பதாவது அத்தியாயம் முற்றும்.

𑌅𑌥 𑌦𑌶𑌮𑍋𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌨𑌗𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌮𑌾𑌨𑌂 𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌚 𑌕𑍍𑌰𑌮𑌾𑌦𑌹𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 ।
𑌆𑌦𑍍𑌯𑌂 𑌧𑌨𑍁𑌷𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌶𑌤𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍 𑌶𑌤𑌦𑌣𑍍𑌡𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌦𑌵𑌧𑌿 ॥

𑌸𑌾𑌷𑍍𑌟𑌕𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌭𑍇𑌦𑌾𑌷𑍍𑌟𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌂 𑌯𑌾𑌵𑌤𑍍 ।
𑌨𑌗𑌰𑌾𑌣𑌾𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌹𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍂𑌰𑌿𑌭𑌿𑌃 ॥௨॥

𑌶𑌤𑌦𑌣𑍍𑌡𑌾𑌦𑌿† 𑌦𑌶𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌤𑍍𑌰𑌿𑌃 𑌸𑌪𑍍𑌤 𑌤𑍍𑌰𑌿𑌶𑌤𑌦𑌣𑍍𑌡𑌾𑌨𑍍𑌤𑌂 ।
𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌿𑌤𑌿𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌂 𑌨𑌗𑌰𑌾𑌣𑌾𑌮𑍇𑌵 𑌭𑍇𑌦𑌤𑌃 ॥௩॥

𑌉𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌰𑌿𑌭𑌿𑌃 𑌨𑍃𑌪𑌤𑍇𑌰𑍍𑌦𑍇𑌶𑌵𑌿𑌷𑍍𑌟𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑍈𑌃 ।

பத்தாவது அத்தியாயம்

நகரம் முதலியவைகளின் அளவையும், அதன் விந்யாஸத்தையும் (விந்யாஸம் — அமைப்பின் முறை) முறையே கூறுகின்றேன்.

நகரத்தின் முதலாவது விஸ்தாரம் முன்னூறு (300) தனுஸ் அளவாகும். அந்த அளவுக்குமேல், (100) தனுஸ் வீதமாக, (8000) தனுஸ் வரையில் அளவைக் கூட்டிவர நகரத்தின் விஸ்தாரமானது எழுபத்தெட்டு (78) விதமாகும். இவ்விதமாக முன்னோர்கள் நகரத்தின் அளவுகளைக் கூறியிருக்கிறார்கள். 2

க்ஷுத்திர (சிறிய) நகரங்களின் விஸ்தாரமானது நூறு (100) தண்டம் முதல், பத்து தண்டம் வீதமாக முன்னூறு தண்டம் வரையில் விருத்தி செய்துவர, இருபத்தோரு (21) விதமாகும். 3

---

† 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 ।

ஆத³ண்ட³ஸஹஸ்ரகாணாம் ஸங்க்²யோக்தா நாக³ரஸ்ய ஸங்க்²யா ஸ்ம்ருதா ||

த்ரிஶதாதி³ சது:ஶதகம் யாவத் வ்ருத்³த்⁴யா து விம்ஶதிபி⁴: |
ஷட்³விதா⁴ஸ்து கே²டம் ஶ்ரேஷ்ட²மத்⁴யகனீயஸம் விஸ்தாரம் || ௫ ||

ததா²பி சதுர்விம்ஶத்யா த்³ரோணஸ்யைவ ஸங்க்²யா ஸ்ம்ருதா |
ஷண்ணவதி சது:ஶதகம் யாவத்தாவத்து விஸ்தாரம் || ௬ ||

த்³விஶதாதி³ சது:ஶதகம் யாவத் ஸங்க்²யா பஞ்சாஶத்³வ்ருத்³த்⁴யா |
ஸங்க்²யா கர்வடஸ்யைவம் பஞ்சவித⁴விஸ்தார உதி³ஷ்ட: || ௭ ||

த்³விஶதாதி³ஸப்தவ்ருத்³த்⁴யா அஷ்டாவிம்ஶதிஶதாந்தம் ஸ்யாத் |

உத்தமபுரத்தின் **பரிதியானது** (சுத்தளவானது) ராஜ தண்டத்திலை பதினாறாயிரம் (16000) கோலளவு இருப்பதாகும். அந்த அளவில ஐநூறு (500) தண்டம் வீதம், நாலாயிரம் (4000) தண்டம வரையில் குறைத்து வர, பரிதிமானமானது இருபத்திஐந்து (25) விதமாகும். 4

முன்னூறு கோல் முதல், நானூறு (400) கோல் வரையில், முறையே, இருபது (20) கோல் வீதம் கூட்டிவர ஆறு (6) விதமான **கேடங்களின்** அளவாகும். இவைகள் முறையே சிரேஷ்ட - மத்திம- அதம கேடங்களின் விஸ்தாரமாகும். 5

நானூறு (400) கோலளவு முதல், இருபத்திநான்கு (24) கோல் வீதமாக நானூற்றித்தொண்ணூற்றாறு (496) கோல் வரையில விருத்தி செய்து வர **துரோண முகத்தின்** மானமானது ஐந்து (5) விதமாகும். 6

இருநூறு (200) கோலளவு முதல் நானூறு (400) கோல் வரையில் ஐம்பது (50) கோல் வீதமாக விருத்தி செய்து வர **கர்வடத்தின்** விஸ்தாரமானது ஐந்து (5) விதமாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. 7

[illegible] || ௮ ||

[illegible] |
[illegible] || ௯ ||

[illegible] |
[illegible] || ௰ ||

[illegible] |
[illegible] || ௧௧ ||

[illegible] |
[illegible] ||

இருநூறு (200) கோலளவு முதல் முன்னூத்தி நாற்பது கோலளவு வரையில், பத்து (10) கோல் வீதம் கூட்டிவர நிகமத்தின் விஸ்தாரமானது பதினைந்து (15) விதமாகும்.

நூறு (100) தண்டம் முதல் ஐநூறு (500) தண்டம் வரையில் நூறு (100) தண்டம் வீதம் கூட்டி வர, கோத்தும கோலகத்தின் மானமானது ஐந்து (5) விதமாகும். 9

மேதாவிகளான வித்வான்கள் புரத்திற்குக் கூறப் பட்டிருக்கின்ற அளவில், இருநூறு (200) தனுஸ் முதல் ஐநூறு (500) தனுஸ் வரையில், ஐம்பது (50) தனுஸ் வீதம் விருத்திசெய்து வர, விடம்பத்தின் அளவானது, ஏழுவித மாகும். என்று இவ்விதமாக இவைகளின் மானத்தை கூறியிருக்கிருர்கள். 11

நகரம் முதலியவைகளின் முகாயதமானது (முன் பக்கத்தின் நீளமானது) அதன் விஸ்தாரத்தைப்போல் இரண்டு பங்கு, முக்கால் பங்கு, அரைப்பங்கு, அல்லது

𑌅𑌥𑌵𑌾𑌗𑍍𑌰𑌾𑌯𑌤𑌾𑌗𑍍𑌰𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌾𑌯𑌤𑌂 𑌤𑍁 𑌵𑌾 |
𑌷𑌡𑍍𑌭𑌾𑌗𑌂 𑌚𑌾𑌷𑍍𑌟𑌭𑌾𑌗𑌂(𑌵𑌾) *𑌵𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌾𑌗𑍍𑌰𑌤𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ||

𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑌾𑌯𑌤𑌂 𑌚𑌾𑌯𑌤𑌵𑍃𑌤𑍍𑌤†𑌕𑌂 𑌶𑌿𑌲𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 |
𑌏𑌕𑌾𑌦𑌿𑌪𑌾𑌦𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌾𑌵𑌲𑌿𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 ||

𑌭𑌿𑌤𑍍𑌤𑌿𑌤𑍍𑌤𑌾𑌰𑌂 𑌷𑌡𑍍𑌭𑌾𑌗𑌂 𑌭𑌾𑌗𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌂 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍 |
§𑌸𑌪𑍍𑌤𑌾𑌷𑌡𑍍𑌭𑌾𑌗𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌃 𑌹𑌸𑍍𑌤𑌮𑌾𑌨𑌂 (𑌤𑍁)𑌤𑍍𑌰𑌯𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 ||

கால்பங்கு இருக்கவேண்டும். அல்லது அதன் முன் பக்கத்தின் நீளமானது, அதன் அகலத்தில் ஆறில் ஒருபங்கு ($\frac{1}{6}$) அல்லது எட்டில் ஒருபங்கு ($\frac{1}{8}$) இருக்கவேண்டும். 12

நகரம் முதலியவைகளின் கோட்டைச் சுவற்றின் உருவமானது, சச்சதுரம் 1, நீண்டசதுரம் 2, வட்டம் 3, நீண்ட வட்டம் 4, கோளத்தைப்போன்ற வட்டம் 5, என்று ஐந்து விதமாகும். 13

அந்தக் கோட்டைச் சுவற்றின் எல்லையானது, அதன் அகலத்தில் (சுவற்றின் நீளத்தில்) பத்தில் ஒரு பாகம், எட்டில் ஒரு பாகம், ஏழில் ஒரு பாகம், ஐந்தில் ஒரு பாகம், அல்லது நான்கில் ஒரு பாகத்தில், முறையே ஏழுபாகம், ஆறுபாகம், ஐந்துபாகம், நான்குபாகம், மூன்றுபாகம், (10ல் 7 பாகம், 8ல் 6 பாகம், 7ல் 5 பாகம், 5ல் 4 பாகம், 4ல் 1 பாகம்) இருக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

கோட்டைச்சுவரின் அகலமானது, இரண்டு முழம், மூன்று முழம், அல்லது நான்கு முழங்கள் இருக்கவேண்டும்.

---

*𑌵𑌪𑍍𑌰𑌃 𑌕𑌥𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑍁 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 |

†𑌤𑌕𑍍𑌕𑍃𑌤𑌂 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 |

§𑌸𑌪𑍍𑌤𑌾𑌷𑌡𑍍𑌭𑌾𑌗𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌃 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 |

பரித: பரிகாபாஹ்யேऽந்தர்பாஹ்யே தேவாலயாதீநி ।
பைசகாதாஸநாந்தம் ஸண்டிதம் ப்ரோக்தம் ॥ ௧௬ ॥

ஸூத்ராதீந்யபி விஷமஸ்தாநாநி ச வர்ஜயேத்புத்திமாந் ।
ப்ராகுதங்முகம் மார்க்கம் சேத்தத்ர யதேஷ்டம் ந்யாஸகம் விதிநா ॥ ௧௭ ॥

தண்டாதிஸப்ததண்டம் யாவத் தண்டார்த்தவ்ருத்திதஸ்து ।
மார்க்கவிஸ்தாரோ ஹ்யேவம் த்ரயோதச ஸ்யுர்விதா: ॥ ௧௮ ॥

அதன் உயரத்தின் உச்சியானது, * பதினேழு (17) முழம், அல்லது பதினொரு (11) முழமிருக்கவேண்டும். அல்லது இந்த அளவுகளில் மூன்றில் ஒரு பாகம் குறைவாக இருப்பதுமாகும். 15

கோட்டையின் வெளிப்பக்கத்தில், சுற்றிலும் அகழி இருக்கவேண்டும். கோட்டையின் உள் பக்கத்தில் தேவாலயாதிகள் இருக்கவேண்டும்.

பேசக பாகம் முதல் ஆஸனபாகம் வரையிலுள்ள ஸ்தானத்திற்கு சண்டிதம் (சண்டித பதம்) என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது. 16

புத்திமானாக இருப்பவன், ஸூத்திராதிகளையும் விஷம ஸ்தானங்களையும் விலக்கிவிடவேண்டும்.

வழியானது, கிழக்குமுகம் அல்லது வடக்குமுகமாக இருந்தால், அங்கு விதியுடன் இஷ்டப்போல் நியாஸத்தைக் கல்பித்துக்கொள்ளுவதாகும். 17

வீதியின் விஸ்தாரமானது, ஒரு கோல் முதல் ஏழு (7) கோல் வரையில், அரை (½) கோல் வீதமாக விருத்தி செய்யப்பட்டுவந்தால், அதன் விஸ்தாரமானது பதிமூன்று (13) விதமாகும். 18

* 17, 9, அல்லது 11 முழம் என்று பாடபேதம்.

ஸாதூனாம் யத்ர பாஹுல்யம் ஸஜ்ஜநபஹுளே நதீஸமீபே வா ।
நகரம் கல்பயேத்வா ராஜக்ருஹோபேதராஜதானீம் வா ||௧௯||

திக்ஷு சதுர்த்வாரயுதம் ப்ராகாரயுக்தம் ச ஸாமுராஜ்யே ।
க்ரயவிக்ரயகைர்யுக்தம் ஸர்வஜநாவாஸஸங்கீர்ணே ||௨௰||

ஸர்வதேவாலயஸஹிதம் நகரமிதம் கேவலம் ப்ரோக்தம் ।
ப்ரத்யகுதக்திசி மஹத்வா பரித்ஸாலா பஹிஸ்ஸைகதாம்ஸமயா ||

பரித: பரிகா பாஹ்யே பரிவிரசிதா நைகஸைனிகஸம்ஸ்தா ।
பஹுவிதரக்ஷா தக்ஷிணபூர்வமுகிர்வா ராஜபவனயுக்தா || ௨௨ ||

(தேசமத்தியில்) ஸாதுக்கள் (நல்லோர்) அதிகமாக இருக்குமிடத்தில், நதியின் ஸமீபத்தில், நகரத்தை நிர்மாணம் செய்யவேண்டும். அல்லது ராஜ கிரஹத்துடன் கூடிய ராஜதானியை நிர்மாணம் செய்யவேண்டும். 19

நான்கு திக்குகளிலும் நான்கு கோபுரங்களுடையதும், கோட்டைச் சுவர்களுடன் கூடியதும், பதார்த்தங்களை வாங்கி விற்பனை செய்யும் வியாபாரிகளுடன் கூடியதும், ஸகலவித ஜனங்களும் வஸிக்கத்தக்க வீடுகள் நிறைந்ததும், ஸகல தேவாலயங்களுடன் கூடியதுமான வாஸ்துவானது நகரம் என்று கூறப்பட்டிருக்கிறது.

மேற்கு திக்கு வடக்கு திக்குகளில் பிரவேசிக்க முடியாததும், (வழி இல்லாததும்) சுற்றிலும் கோட்டைச் சுவர்களுடன் கூடியதும், அதன் வெளிப்பக்கத்தில் மணல் குவியல்களுடன் கூடியதும் கோட்டையைச் சுற்றிலும் அகழிகளுடன் கூடியதும், அதற்கு வெளிப்பக்கத்தில், கூடாரங்களுடன் (ஸேனைகள் தங்குமிடங்களுடன்) கூடியதும், அநேகம் விதமான ரக்ஷைகளுடன் கூடியதும், கிழக்கிலும் தெற்கிலும் அபிமுகமாக இருப்பதும், ராஜ

𑌉𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌗𑍋𑌪𑍁𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌨𑌾𑌨𑌾𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌲𑌿𑌕𑌾𑌵𑍇𑌷𑍍𑌟𑌾 ।
𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌾𑌲𑌯𑌸𑌹𑌿𑌤𑌾 𑌨𑌾𑌨𑌾𑌗𑌣𑌿𑌕𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾 𑌬𑌹𑍂𑌦𑍍𑌯𑌾𑌨𑌾 ॥

𑌹𑌸𑍍𑌤𑍍𑌯𑌶𑍍𑌵𑌰𑌥𑌪𑌾𑌦𑌾𑌤𑌿 𑌬𑌹𑍁𑌲𑌾 𑌸𑌰𑍍𑌵𑌜𑌨𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 ।
𑌦𑍍𑌵𑌾𑌰𑍋𑌪𑌦𑍍𑌵𑌾𑌰𑌯𑍁𑌤𑌾 𑌰𑌥𑍍𑌯𑌾𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌽𑌨𑍇𑌕𑌜𑌨𑌵𑌾𑌸𑌾 ॥௨௪॥

𑌯𑌾 𑌨𑍃𑌪𑌵𑍇𑌶𑍍𑌮𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌸𑌾 𑌕𑌥𑌿𑌤𑌾 𑌰𑌾𑌜𑌧𑌾𑌨𑍀𑌤𑌿 ।
𑌕𑌾𑌨𑌨𑍇 𑌵𑌨𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌜𑌨𑌾𑌵𑌾𑌸𑌸𑌂𑌕𑍀𑌰𑍍𑌣𑌕𑍇 ॥ ௨௫ ॥

𑌕𑍍𑌰𑌯𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑌿𑌕𑍈𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌿𑌯𑍁𑌤𑌂 𑌯𑌤𑍍 𑌤𑌦𑍇𑌵 𑌨𑌗𑌰𑌮𑌿𑌤𑌿 ।
𑌶𑍂𑌦𑍍𑌰𑍈𑌰𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌂 𑌯𑌤𑍍 𑌨𑍃𑌪𑌾𑌶𑍍𑌰𑌯𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌂 𑌤𑌤𑍍 𑌤𑌤𑍍 𑌵𑍇𑌟𑌮𑍍 ॥

பலத்துடன் கூடியதும், உயரமான கோபுரத்துடன் கூடியதும் பற்பல விதமான மாளிகைகளுடன் (ஜனங்கள் வஸிக்கும் வீட்டு வரிசைகளுடன்) கூடியதும், ஸகலவிதமான தேவாலயங்களுடன் கூடியதும், நாநாவிதமான கணிகை (தாஸிகள்) களுடன்கூடியதும், பல உத்தியானங்களுடன் கூடியதும், யானைப்படைகளுடனும், குதிரைப் படைகளுடனும் ரதங்களுடனும், காலாட்படைகளுடனும் கூடியதும், ஸகலவிதமான ஜனங்களுடன் கூடியதும, துவாரங்களுடனும், உப துவாரங்களுடனும், (பெரிய வழிகளுடனும், சந்துகளுடனும்) கூடியதும், கோட்டையினுள் அநேகவிதமான ஜனங்கள் வஸிக்கக் கூடியதும், இருப்பதுடன், ராஜபவனத்துடன் கூடியதுமான நகரமானது, ராஜதாநீ என்று கூறப்பட்டிருக்கிறது. 24½

காடு அல்லது தோட்டத்தில், ஸகலவிதமான ஜனங்களும் வஸிக்கத்தக்க வீடுகளுடன் கூடியதும், கிரய விக்கிரயங்கள் செய்யும் வியாபாரிகளுடன் கூடியதுமான இடத்திற்கு புரம் என்று பெயர். இந்த புரத்திற்கு நகரம் என்றும் பெயர். 25½

𑌸𑌰𑌿𑌤𑌃 𑌪𑌰𑍍𑌵𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌖𑌰𑍍𑌵𑌟𑌕𑌂 𑌸𑌰𑍍𑌵𑌜𑌨𑌸𑌂𑌹𑌿𑌤𑌮𑍍 |
𑌖𑌰𑍍𑌵𑌟𑌖𑍇𑌟𑌕𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌜𑌾*𑌵𑌾𑌸𑌂 𑌜𑌨𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑍁𑌬𑍍𑌜𑌮𑍍 || ௨௭ ||

𑌦𑍍𑌵𑍀𑌪𑌾𑌨𑍍𑌤𑌰𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑌹𑌿𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌜𑌨𑌸𑌂𑌹𑌿𑌤𑌮𑍍 |
𑌕𑍍𑌰𑌯𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌰𑌤𑍍𑌨𑌧𑌨𑌕𑍍𑌷𑍌𑌮𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌮𑍍 || ௨௮ ||

𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌤𑍀𑌰𑌸𑌾𑌮𑍀𑌪𑍍𑌯𑌂 𑌤𑌦𑍁𑌦𑍍𑌦𑍇𑌶𑌵𑌣𑌿𑌗𑍍𑌜𑌨𑌮𑍍 |
𑌪𑌤𑍍𑌤𑌨𑌂 𑌤𑌤𑍍𑌸𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌵𑌤𑍍 || ௨௯ ||

𑌶𑌤𑍍𑌰𑍁𑌰𑌾𑌜𑌾𑌨𑍍𑌯𑌰𑌾𑌜𑌦𑍇𑌶𑌸𑌾𑌮𑍀𑌪𑍍𑌯𑌂 𑌶𑌿𑌬𑌿𑌰𑌮𑌿𑌤𑌿 𑌚 𑌪𑌦𑌂 |

நதிகளாலும் மலைகளாலும் சூழப்பட்டு, சூத்திரர்கள் வஸிக்கின்ற இடத்திற்கு கேடம் என்று பெயர். 26

நான்கு பக்கங்களிலும் மலைகளினாலே சூழப்பட்டதும், ஸகலவிதமான ஜனங்களும் வஸிக்கக்கூடியதுமான இடத்திற்கு கர்வடம் என்று பெயர். 26½

கர்வடம், கேடகம், இவைகளின் மத்தியில், ஜனங்கள் வஸித்துவரும் இடத்திற்கு ஜனஸ்தான குப்ஜம் (ருப்ஜம் என்பது பாடபேதம்) என்று பெயர். 27

துவீபாந்தரங்களிலுள்ள பதார்த்தங்களுடன் கூடியதும், ஸகலவிதமான ஜனங்களுடன் கூடியதும், விலைக்கு வாங்கி விற்கும் வியாபாரிகளுடன் கூடியதும், ரத்னங்கள், தனம், வெண்பட்டுக்கள், முதலிய பண்டங்களுடன் கூடியதும், ஸமுத்திரக்கரையின் ஸமீபத்திலிருப்பதும், அந்த பதார்த்தங்களை உத்தேசித்து வருகின்ற ஜனங்களுடன் கூடியதுமான இடத்திற்கு, பத்தனம் என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது.

சத்ரு ராஜாக்களின் அல்லது இதர ராஜாக்களின் தேசத்திற்கு ஸமீபத்தில், யுத்தத்தைத் துவக்குவதற்கு

*𑌵𑌾𑌸𑌂 𑌤𑍁 𑌖𑌰𑍍𑌵𑌟𑌂 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌃 |

𑌸𑌰𑍍𑌵𑌜𑌨𑍈𑌸𑍍𑌸𑌂𑌕𑍀𑌰𑍍𑌣𑌂 𑌨𑍃𑌪𑌸𑌦𑍍𑌮𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑌦𑍇𑌵 𑌤𑌥𑌾 ||௩௰||

𑌬𑌹𑍁𑌰𑌕𑍍𑌷𑌾𑌵𑍃𑌤𑌂 𑌯𑌤𑍍 𑌸𑍇𑌨𑌾𑌮𑍁𑌖𑌮𑍁𑌦𑌿𑌤𑌂 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑍈𑌃 ।
𑌨𑌦𑍍𑌯𑌦𑍍𑌰𑌿𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌸𑍍𑌥𑌂 𑌨𑍃𑌪𑌸𑌦𑍍𑌮𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑌬𑌹𑍁𑌰𑌕𑍍𑌷𑌮𑍍 ||௩௧||

𑌯𑌤𑍍𑌰 𑌵𑌸𑌤𑌿𑌸𑍍𑌥𑌾𑌪𑌿𑌤𑌕𑌂 𑌤𑌤𑍍 𑌸𑍍𑌥𑌾𑌨𑍀𑌯𑌂 𑌸𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌷𑍁 ।
𑌨𑌦𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌸𑌾𑌗𑌰𑍇 𑌵𑌣𑌿𑌗𑌾𑌦𑌿𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 || ௩௨ ||

𑌸𑌰𑍍𑌵𑌜𑌨𑌾𑌵𑌾𑌸𑌂 𑌯𑌤𑍍 𑌦𑍍𑌰𑍋𑌣𑌮𑍁𑌖𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍈𑌃 ।
𑌗𑍍𑌰𑌾𑌮𑌸𑌮𑍀𑌪𑍇 𑌜𑌨𑌤𑌾𑌵𑌸𑌿𑌤𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌵𑌿𑌟𑌂𑌬𑌮𑌿𑌤𑌿 || ௩௩ ||

வேண்டிய காரியங்களுடன் கூடியதும், ஸேனைகளுடனும், ஸேனாபதிகளுடனும் கூடியதுமான இடத்திற்கு, சிபிரம் என்று பெயர், என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். 29½

அதே இடமானது, ஸகலவிதமான ஜனங்களினாலும் நிறைந்தும், ராஜபவனத்துடன் கூடியும், அனேகவிதமான காவல்களுடன் கூடியும் இருந்தால், அதற்கு ஸேநாமுகம் என்று பெயர், என்று அந்த விஷயத்தையறிந்தவர்கள் கூறுகிறார்கள். 30½

பக்கங்களில் மலைகளும் நதிகளுமிருக்குமிடத்தில், ராஜ பவனத்துடனும், பலவித கட்டுக்காவல்களுடனும், அரசனால் அமைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு, ஸ்தானீயம், என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது 31½

சில்பாசாரியர்கள், நதியின் தென்பக்கத்திலும் ஸமுத்திரத்தின் வடபக்கத்திலுள்ளதும், வியாபாரிகள் முதலியவர்களுடன் கூடியதும், ஸகலவித ஜனங்களும் வஸிக்கத் தக்கதுமான இடமானது, துரோணமுகம், என்று கூறப்பட்டிருக்கிறது, என்று கூறியுள்ளார்கள்.

இது கிராமத்திற்கு ஸமீபத்தில் ஜனங்கள் வஸிக்கக் கூடிய இடமாக இருந்தால், அதற்கு விடம்பம் என்று பெயர், என்று கூறியுள்ளார்கள். 33

வநமத்யே ஜநாவாஸம் யத் கோத்மகோலகம் ஸ்ம்ருதம் |
சாதுர்வர்ண்யஸமேதம் ச ஸர்வஜநாவாஸஸங்கீர்ணம் || ௩௪ ||

பஹுகர்மகராயுக்தம் நிகமம் தத் ப்ரசக்ஷதே |
நத்யத்ரிவநஸமேதம் பஹுஜநஸமாயுக்தம் ஸராஜபவநம் || ௩௫ ||

ஸ்கந்தாவாரம் தத்பார்ச்வே சேரிகா ஸ்ம்ருதா |
கிரிவநஜலபங்கேரிணதைவதமிச்ராணி ஸப்ததுர்காணி || ௩௬ ||

கிரிமத்யம் கிரிபார்ச்வம் கிரிசிகரம் பார்வதம் த்ரிதா |
அஜலம் தருவநகஹநம் வநதுர்கம் துஷ்ப்ரவேசம் ஸ்யாத் || ௩௭ ||

வனமத்தியில் ஜனங்கள் வஸித்துவந்தால், அந்த இடத்திற்கு கோத்மகோலகம் என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது.

பிராம்ஹணர்கள் முதலிய நான்குவிதமான ஜாதிகளுடன் கூடியதும், ஸகலவிதமான ஜனங்களும் வஸிக்கின்ற வீடுகளுடன் கூடியதும், பலவிதமான தொழிலாளிகளுடன் கூடியதுமான ஸ்தலத்திற்கு நிகமம் என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது. 34½

நதீ-மலை-வனம் இவைகளுடன் கூடியதும், பஹுவித மான ஜனங்களுடன் கூடியதும், ராஜபவனத்துடன் கூடியதுமான ஸ்தானத்திற்கு ஸ்கந்தவாரம் என்று பெயர். இதன் பக்கத்தில் சேரி இருக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

கிரிதுர்கம் 1, வனதுர்கம் 2, ஜலதுர்கம் 3, பங்க (சேறு) துர்கம் 4, இரிண (பொட்டல்வெளி) துர்கம் 5, தைவத துர்கம் 6, மிச்ரதுர்கம் 7. என்று, துர்கங்கள் ஏழுவிதங்களாகும்.

கிரிமத்யம், கிரிபார்சுவம், கிரிசிகரம் என்று கிரிதுர்கம் மூன்றுவிதமாகும். (1)

ஜலமில்லாமலும், மரங்கள் அடர்த்தியாக உள்ள காடுகளால் (சூழப்பட்டிருப்பதால்) துஷ்பிரவேசமாகவும் இருப்பது வனதுர்கமாகும். (2)

தைவம் தத் ஸஹஜம் ப்ரோக்தம் பங்கபூர்தம் பங்கதுர்கம் உச்யதே ।
நத்யப்திபரிவ்ருதம் யத் ஜலதுர்கம் நிர்வ்ருக்ஷோதகமிரிணம்
உச்யதே ॥ ௩௮ ॥

கக்ஷபஞ்ஜராண்யாட்யம் ஸ்ருஷ்டிபாதோக்தம் ஸமாயுதம் ।
ஸர்வம் ஹி துர்கஜாலம் ஸப்ராகாரம் ஸமந்ததோ வப்ரகம் ॥

*பஹிர்துர்கம் ரஹிதவனம் ஸதீர்கம் துஷ்ப்ரவேசம் ச ।
கோபுராட்டாலகோபேதம் கோபுரைர்மண்டபைர்யுதம் ॥ ௩௯ ॥

கிரிதுர்கம், வனதுர்கம் இரண்டும் சேர்ந்திருப்பது மிச்ர துர்கமாகும். (3)

இயற்கையாகவே அமைந்திருக்கும் துர்கமானது தைவதுர்கமாகும். (4)

நகரத்தைச் சுற்றிலும் சேற்றினாலாகியது பங்கதுர்கம் எனப்படுகிறது. (5)

நதியினாலும், ஸமுத்திரத்தினாலும் சூழப்பட்டிருந்தால், அது ஜல துர்கமாகும். (6)

காடுகளோ, ஜலமோ, இல்லாமல் ஒரே பொட்டலாக இருப்பது, இரிண துர்கமாகும். (7) 38

நகரமானது, கீழே கூறப்பட்ட துர்க்கங்களால் சூழப்பட்டதாக இருந்தாலும், கோட்டைச் சுவர்களுடன் கூடியதாகவும், அநேகம் விதமான காவந்துகளுடன் கூடியதாகவும் இருக்கவேண்டும். 39

வனதுர்கமில்லாத நகரமானது, கோட்டைக்கு வெளிப் பக்கத்தில் அகழியுள்ளதாகவும், மறைக்கப்பட்ட வழியுடையதாகவும், பகைவர்கள் நுழைய முடியாததுமாக இருக்கவேண்டும். மேலும்,—

கோபுரங்களுடனும் மண்டபங்களுடனும் கூடின

*பஹிர்துர்கவிஹீனம் வா இதி பாடஃ ।
† கோபுரைர்மண்டபைர்யுதம் இதி வா பாடஃ ।

𑌸𑌕𑌵𑌾𑌟§𑌚𑌤𑍁𑌰𑍍𑌹𑌸𑍍𑌤𑍋𑌚𑍍𑌛𑍍𑌰𑌿𑌤𑌾𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑍀𑌲𑌯𑍁𑌤𑌂 𑌤𑌥𑌾 ।
𑌸𑌸𑍍𑌤𑍂𑌣𑌮𑌧𑍍𑌯𑌶𑌾𑌲𑌂 𑌚𑍇𑌷𑍍𑌟𑌕𑌸𑌹𑌿𑌤𑌂 𑌸𑌮𑌗𑍁𑌪𑍍𑌤𑌸𑍋𑌪𑌾𑌨𑌕𑌮𑍍 ॥௪௧॥

𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌣𑌿 𑌮𑌣𑍍𑌡𑌪𑌸𑌭𑌾𑌶𑌾𑌲𑌾𑌕𑌾𑌰𑌾𑌣𑌿 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌶𑌾𑌲𑌾𑌯𑌾 𑌆𑌕𑌾𑌰𑌾𑌃 *𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌤𑌥𑌾𑌯𑌤𑌂 𑌚 𑌵𑌜𑍍𑌰𑌃 । ௪௨ ॥

‡𑌚𑌕𑍍𑌰𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌕𑍌𑌳𑌕𑍂𑌟𑌂 𑌕𑍁𑌮𑍍𑌭𑌂 𑌨𑌾𑌗𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌚 ।
𑌮𑌗𑍍𑌨𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌕𑍋𑌣𑌾𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌰𑌂 𑌨𑍇𑌮𑌿𑌖𑌣𑍍𑌡𑌂 𑌚 ॥ ௪௩ ॥

𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌕𑌾𑌰𑌾𑌶𑍍𑌚𑍈𑌤𑌾 𑌶𑌾𑌲𑌾𑌯𑌾 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾 𑌮𑌹𑍀𑌸𑍁𑌰𑌾𑌃 ।

தாகவும், மறைக்கப்படாததாக இருப்பினும், படிக்கட்டுகளாலே மறைக்கப்பட்டதாகவும், இரண்டு கதவுகள், பரிகமென்னும் ஆயுதங்களாலான தாப்பாள்கள், ஒரு முழம் உயரமுள்ள இந்திரகீலம் (தாப்பாள்) இவைகளுடன் கூடியதும், தூண்களுடன் கூடிய மத்தியமாலயத்துடன் கூடியதும், இட்டகத்துடன் (கல்) கூடியதும், ரஹஸ்யமான படிக்கட்டுகளையுடையதுமாக இருக்கவேண்டும். 41

துவாரங்களை, (கோட்டைவாயில்களை) மண்டபம்—ஸபை—சாலை—இவைகளைப்போன்ற வடிவமுள்ளவைகளாக அமைக்கவேண்டும்.

சாலையின் உருவங்கள், * சதுரம், 1, விருத்தம் 2, ஆயதம் (ஆயதவிருத்தம்) 3, சக்ரம் 4, விருத்தம் 5, கௌளக்குடம் 6, கும்பம் 7, நாகவிருத்தம் 8, மக்ன சதுரம் 9, த்ரிகோணம் 10, அஷ்டாச்ரம் 11, நேமிகண்டம் 12, என்று பன்னிரண்டுவிதமாகும். 43

---

§𑌚𑌤𑍁𑌰𑍍𑌹𑌸𑍍𑌤𑍋𑌚𑍍𑌛𑍍𑌰𑌯𑌂, 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌃 ।

*𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌯𑌤𑌂 𑌚 𑌪𑍁𑌰𑌂 । 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌃 ।

‡𑌨𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌂 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌃 ।

* சதுரச்ரம் 1, விருத்தம் 2, ஆயதம் 3, புரம் 4, நந்தியாவர்தம் 5, கௌளக்கூடம், 6. என்று மற்றொரு பாடம்,

உச்ச்ராயார்த்தவிஸ்தாரம் மூலே த்ரிஹஸ்தஸஞ்சாரா || ௪௪ ||

ஸவப்ரைஸ்த்ரைஸ்(த்ரா)ஸ்தாத் பாம்ஸூச்சயோபரிஷ்டாத்
யந்த்ரயுதம் ।

பரித: பரிகோபேதம் பாம்ஸூச்சயே ஸஸந்தாட்டாலகம் ||௪௫||

பரித: சிபிரோபேதம் நாநாஜநாவாஸஸங்கீர்ணம் ।
ந்ருபஹர்ம்யஸமோபேதம் ஹஸ்த்யஶ்வபதாதிஸமாவ்ருதம் ||

தாந்யைஸ்தைலைஸ்ததா க்ஷாரை: ஸமித்வநைரௌஷதைஸ்ததா ।

கோட்டைச் சுவர்கள் யாவும் செங்கற்களால் கட்டப்படவேண்டும். அவைகள் பன்னிரண்டு (12) முழ உயரத்திற்குக் குறைவில்லாமல் இருக்கவேண்டும். அவைகளின் அகலமானது, உயரத்தின் அளவில் சரிபாதி அளவு இருக்க வேண்டும். அதன் அடித்தலத்திலுள்ள சுவரானது மனித ஸஞ்சார யோக்யமாக இருக்கவேண்டும். 44

கோட்டைச் சுவர்களின் உள்பக்கத்தில், மண் குவியல்களுக்கு மேலே அநேக யந்திரங்கள் (பீரங்கிகள்) வைக்கப்பட்டிருக்கவேண்டும். கோட்டைச் சுவர்களைச் சுற்றி அகழிகள் இருக்கவேண்டும். மண்குவியல்களிலமைந்துள்ள சந்துகளையுடையதாக இருக்கவேண்டும். (இந்த சந்தானது அகழிக்கும் கோட்டைச் சுவருக்கும் மத்தியிலுள்ளதாகும். இதற்கு அலங்கம் என்று பெயர். இது படைகள் ரஹஸ்யமாக ஸஞ்சரிப்பதற்காகக் கூறப்பட்டதாகும்.) கோட்டைச் சுவற்றிலும் சிபிரங்களிருக்கவேண்டும். (சிபிரம் – பதாதிகளும் ஸேனாபதிகளும் ஆயுதங்களுடன் தங்குவதற்கான இடம்.) கோட்டைக்குள் பற்பலவிதமான ஜனங்கள் வஸிக்கும் வீடுகளும் ராஜபவனமும் இருக்கவேண்டும். யானைப் படைகள், குதிரைப் படைகள், ரதங்கள், பதாதிகள் இவர்களால் நிறைந்திருக்கவேண்டும்.

தானியங்கள், தைலங்கள், க்ஷாரங்கள் (க்ஷாரம் - உப்பு),

ஸ்நாயுஶஸ்த்ராயுத⁴விஷாணவேணுநிசயாம்ஸ்ததா² || ௪௭ ||

த்ருணாங்கா³ர (காஷ்ட²)யுக்தம் ஸத்³ருட⁴ம் (த்³ருட⁴மே:)
ஸாரதா³ருயுதம் |

து³ர்க³மம் து³ர்லங்க்⁴யம் து³ர்த⁴ர்ஷம் து³ர்வகா³ஹம் ச || ௪௮ ||

ரக்ஷார்த²ம் ச ஜயார்த²ம் ஶத்ருபி⁴ரபே⁴த்³யம் ச து³ர்க³மிஷ்டம்
ஸ்யாத் |

இந்த்³ரோ வாஸுதே³வோ கு³ஹோ ஜயந்தஶ்ச வைஶ்ரவண: ||

அஶ்விநௌ ஶ்ரீமதி³ரே ஶிவஶ்ச து³ர்கா³ ஸரஸ்வதீதி |
ப்ராகாராப்⁴யந்தரஸ்தா² து³ர்க³நிவேஶே ச விஜ்ஞேயா: || ௫௰ ||


[illegible] ।
[illegible] ||௱௨||

[illegible] ।
[illegible]
[illegible] ||

[illegible] ।
[illegible] ||௱௪||

(நான்கு கல்லுகளினாலே இணைக்கப்பட்ட கல்லை) பகலிலேயே வைக்கவேண்டும். 101

எந்த கர்பத்திற்கு எது ஸ்தானமோ, அந்த இடத்தில் பிரதமேஷ்டகையை (முதலாவது கல்லை) வைக்கவேண்டும்.

முன்பு கூறப்பட்ட அஷ்டமிருத்திகைகள், பஞ்சகந்தங்கள் (5 விதமான கிழங்குகள்), தானியங்கள், சிறந்த உலோகங்கள், தாதுக்கள், ரத்னங்கள், ஔஷதிகள் இவைகளுடனும் விதைகளைச் சேர்த்து, பிரதமேஷ்டகையைச் செய்யவேண்டும். 102½

கருங்கற்களால் கட்டப்படும் வாஸ்துக்களில் கருங்கல்லினாலேயே பிரதமேஷ்டகை இருக்கவேண்டும். செங்கற்களினாலே கட்டப்படும் வாஸ்துவில் செங்கல்லினாலேயே இருக்கவேண்டும். அவ்விதமிருப்பது சுபங்களையளிக்கும். 103

அந்த பிரதமேஷ்டகையானது, கர்ப பாஜனத்தின் விஸ்தாரமும், அதைப்போல் இருமடங்கு நீளமுள்ளதாகவும், அகலத்தில் அரைப்பங்கு கனமுடையதாகவும், நான்கு கற்களைச் சேர்த்து செய்யப்பட்டதாகவுமிருக்கவேண்டும். இது, சகல வாஸ்துக்களுக்கும் பொதுவாகக் கூறப்பட்ட விதியாகும். 104

அஷ்டௌ த்வாதஶ வா க்ராஹ்யா மத்யமே ச உத்தமே |
சதுரஶ்ரேஷு ஶிலா ஸம்ஸ்தாப்ய ஸமஸம்ஸ்தாப்ய வம்ஶ்யஹாநக: ||

ருஜ்வாயதாங்குலிஸம்யுக்தா ஸா வக்ரரேகா நபும்ஸகம் |
ஸம்ஹிதா: ஸமத்ருஶ்யாஶ்ச ஸம்ஸ்தாநா: ஸம்ஶோபநா: ||

பும்ஸ்த்ரீநபும்ஸகே ஶிலே யோஜயேத் யதாக்ரமம் |
யதா ஜாதா பவேத் தத்ர ஸ்தாபநீயா ததா ஶிலா ||

ப்ரதமேஷ்டகா விநிர்திஷ்டா விப்ரேஷ்வாதிவர்ணதா |
ஶூத்ராணாம் சதுர்த்வா ஸுதாயாம் ப்ரயுக்ஷ்ணா ||

மத்தியமோத்தம வாஸ்துவில், சதுரிஷ்டகங்களில் எட்டு அல்லது பன்னிரண்டு, எடுத்துக்கொள்ளவேண்டும்.

நேராக நீண்ட விரல் அடையாளமுள்ள கல்லானது, ஆண்கல்லாகும். 105

விரல் பதிந்திருப்பது ஒத்தப்படையாக இருந்தால், அது ஸ்திரீயாகும்.

அந்தக் கற்களில் கோணலாகக் கோடுகள் இருந்தால், அந்தக்கல் அலியாகும். 105½

மேடுபள்ளங்களில்லாமலும், ஒரே விதமாக சுடப்பட்டும் நல்ல ஒலியுடையதாகவும், அழகாகவும் இருக்கின்ற கற்கள் சிறந்தவைகளாம். 106

இவைகளில், புருஷக் கற்களை புருஷ கிரஹங்களிலும், ஸ்திரீ கற்களை ஸ்திரீ கிரஹங்களிலும், நபும்சகக் கற்களை நபும்சக கிரஹங்களிலும் வைக்கவேண்டும். கற்கள் எவ்விதமாக உருவாயிற்றோ, அவ்விதமாகவே அவைகளை வைக்கவேண்டும். (ஜாதிக்கேற்ப வைக்கவேண்டும்) 107

பிரதமேஷ்டகைக்கான சிலையானது, முன்னமே

निर्व्रणास्वच्छला विमाने तु कृत्वा गर्भस्य मस्तके न्यसेत् ।
तस्याग्नेयदिशि पश्चात् त्रिकोणेषु च
प्रदक्षिणम् ॥ १०८ ॥

देवानां द्विजातीनां स्थापयेत् स्थपतिः क्रमात् ।
केचित् श्वभ्रस्य मञ्जीरे वस्त्वंशोपावसानके ॥

इष्टकाशिलाकृते वाथ वक्ष्ये प्रथमेष्टकाम् ।
पञ्चांशद्व्यंशयोरूर्ध्वे तत्र न्यासयेत् ॥

सर्वाण्युक्तानि ... याथवत्
वास्तु ... संहृतानि ...
... ।

சஷாலத்தில் பிந்துக்கள், ரேகைகள் இல்லாமல், தோஷங்களில்லாமல் செய்யப்பட வேண்டும். 108

விமானத்தில், கர்பத்திற்காக தோண்டப்பட்ட குழியில் கர்பத்தின் சிரஸ்ஸில் பிரதமேஷ்டகையை வைக்க வேண்டும். பிறகு அதற்கு தென்கிழக்கில் வைக்கவேண்டும். அதன் பிறகு, வலமாக திரிகோணங்களில் வைக்க வேண்டும்.

ஸ்தபதியானவன், இவ்விதமாக தேவதைகளுக்கும் பிராம்ஹணர்களுக்கும் கர்பஸ்தாபனத்தை செய்ய வேண்டும். 109½

சிலர், கர்பத்திற்காகத் தோண்டி, கற்களாலே கட்டப்பட்ட பள்ளத்தில், அந்த பள்ளத்தின் ஐந்தில் இரண்டு பங்கு அளவுக்கு மேலே பிரதமேஷ்டகையை வைக்க வேண்டுமென்று கூறுகிறார்கள்.

ஸ்தபதியானவன், முன்போலவே நன்கு அலங்காரஞ்

𑌰𑍂𑌪𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌾𑌨𑍍𑌯𑍌𑌷𑌧𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑌿 𑌚 𑌦𑍀𑌪𑍍𑌤𑌿𑌮𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌾𑌦𑍍𑌯𑌷𑍍𑌟𑌲𑍋
𑌹𑌾𑌨𑍍𑌯𑌪𑌿
𑌧𑌾𑌤𑍂𑌨𑍍 𑌚𑌾𑌞𑍍𑌜𑌨𑌾𑌦𑍀𑌨𑍍 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌗𑌰𑍍𑌭𑌪𑌾𑌤𑍍𑌰𑍇
𑌸𑍁𑌭𑌾𑌹𑌨𑍀 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ||

𑌸𑍁𑌰𑌨𑌰𑌵𑌿𑌮𑌾𑌨𑌦𑍍𑌵𑌾𑌰𑌯𑍋𑌗𑌸𑍍𑌥𑌾𑌨𑍇
𑌪𑌾𑌦𑌮𑍂𑌲𑍇 𑌗𑌰𑍍𑌭𑌪𑌾𑌤𑍍𑌰𑌮𑌪𑌿 |
𑌤𑌤𑍍𑌪𑌰𑌿 𑌸𑌕𑌲𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌂
𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 𑌗𑌰𑍍𑌭𑌮𑍁𑌪𑍆 ||

𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌗𑌰𑍍𑌭𑌂 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍
𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑌾𑌣𑌾𑌂 |

கள் செய்துகொண்டு, அந்தவிடத்தில் யுக்தியுடன் கற்களை வைக்கவேண்டும். 111

தேவதாதி ரூபங்கள், ஓஷதிகள், ஒளி பொருந்திய ரத்னங்கள், சுவர்ணம் முதலான அஷ்ட லோகங்கள், தாதுப்பொருள்கள், அஞ்சனக்கல் முதலியவைகளையும், அஷ்டமிருத்து, தானியங்கள், இவைகளையும், கர்ப பாத்திரத்தில் வைத்து, சுபதினம், சுபபக்ஷம், சுபநக்ஷத்திரம், சுப ஹோரை, சுபமுஹூர்த்தம், இவைகளுடன் கூடிய சுப காலத்தில், புத்திமானன சில்பியானவன், ராத்திரியில் அந்த கர்ப பாஜனத்திற்குப் பலி கொடுத்து, குழியில் ஜலத்தை விட்டு, அந்த ஜலத்தில், கர்ப பாஜனத்தை யுக்தியுடன் முதலில் வைக்கவேண்டும். 112

தேவர்கள் மனிதர்கள், இவர்களின் விமானங்களில், துவாரம் கூடுமிடத்தில், அதன் பாதமூலத்தில், அங்கங்கள் குறைவில்லாத கர்பத்தை முதலில் விதியுடன் வைத்து, அதன்மேலே சகல பதார்த்தங்களுடனும் செய்யப்பட்ட சதுரிஷ்டகத்தை, கர்பத்திற்கு மேலே வைக்கவேண்டும்.

सर्वमङ्गलसंयुक्तपात्रं तत्
स्थापयेत् स्थपतिः प्रथमेष्टकयोर्द्वयम् ॥ १०४ ॥

इति मयमते वास्तुशास्त्रे गर्भविन्यासो नाम द्वादशोऽध्यायः ॥

ஸ்தபதியானவன், ஐந்து ஐந்து கலசோதகங்களாலே அபிஷேகம் செய்யப்பட்டு பரிசுத்தமாக இருப்பவைகளும், வெண் சந்தணம் - புதிய வஸ்திரங்களுடன் கூடியவைகளும், சகலவிதமான மங்கள பதார்த்தங்களாலேயும் ஆச்சரியத்தையளிப்பவைகளும், பாதஸ்தானத்தில் சேர்த்து வைக்கவேண்டியவைகளுமான அந்த கர்ப பாஜனம், பிரதமேஷ்டகை இரண்டையும் வைக்கவேண்டும்.

கர்பவிந்யாசம் என்னும் பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றும்.

அத த்ரயோதசோऽத்யாய: ||

அதிஷ்டானஸ்ய அதஸ்தாத் உபபீடம் ப்ரயோஜயேத் |
ரக்ஷார்த்தமுச்சதார்த்தம் ச சோபார்த்தம் ச ப்ரயுஜ்யதே ||

ஸமம் த்ரிபாதமர்த்தம் வா பஞ்சாம்சத்வ்யம்சமேவ வா |
ஸபாதம் வாத ஸார்த்தம் வா பாதோனத்விகுணம் து வா ||

த்விகுணம் வா ப்ரகர்த்தவ்யமதிஷ்டானஸ்ய துங்கத: |
உத்ஸேதம் தசபாகே து † ஏகைகேந விவர்த்தநாத் ||

பஞ்சாம்சாததிஷ்டானஜன்மாத் பாஹ்யே து நிர்கமம் |

பதிமூன்றுவது அத்தியாயம்.

அதிஷ்டானத்திற்குக் கீழே உபபீடத்தை வைக்க வேண்டும். அந்த உபபீடமானது, அதிஷ்டானத்தின் ரக்ஷைக்காகவும், அதிஷ்டானமானது உயரமாக இருப்பதற்காகவும், அழகுக்காகவும் வைக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. 1

அந்த உபபீடமானது, அந்த அதிஷ்டானத்தின் உயரத்திற்கு ஸமம், முக்கால்பங்கு, அரைப்பங்கு, ஐந்தில் இரண்டுபங்கு, ஒண்ணேகால் பங்கு, ஒண்ணரைப்பங்கு, ஒண்ணேமுக்கால்பங்கு அல்லது இரண்டுபங்கு, உயரமுள்ளதாக இருக்கவேண்டும். 3

அதன் உத்ஸேதமானது (பருமனானது) அதிஷ்டானத்தின பருமனில், பத்தில் ஒருபாகம், பத்தில் இரண்டுபாகம், பத்தில் மூன்றுபாகம், பத்தில் நான்குபாகம், அல்லது பத்தில் ஐந்துபாகம்வரையில், அதிஷ்டான ஜன்மத்திற்கு வெளியில் நிர்கமம் இருப்பதாகும். [அதிஷ்டானத்திற்கு வெளியில் நீட்டிவைக்கவேண்டும்] 3½

---

† பாகேநைகேந உக்த பாதாம்சகம் |

𑌅𑌂𑌶𑌂 𑌵𑌾 𑌸𑌾𑌰𑍍𑌧𑌾𑌂𑌶𑌂 𑌵𑌾 𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑌂 𑌵𑌾 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌕𑌮𑍍 ॥ ௪ ॥

𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌰𑍍𑌧𑌮𑌧𑍍𑌯𑌾 𑌵𑌾 𑌸𑌮𑌂 𑌤𑌤𑍍𑌪𑌾𑌦𑌬𑌾𑌹𑍍𑌯𑌕𑌮𑍍 ।
𑌵𑍇𑌦𑌿𑌭𑌦𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌦𑍍𑌰𑌂 𑌸𑍁𑌭𑌦𑍍𑌰𑌂 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௫ ॥

𑌉𑌤𑍍𑌸𑍇𑌧𑍇 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌂𑌶𑍇 𑌤𑍁 𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑍇𑌨𑍋𑌪𑌾𑌨𑌮𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑌦𑍍𑌮𑌾𑌂𑌶𑌂 𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌰𑍍𑌧𑌂 𑌕𑍍𑌷𑍇𑌪𑌣𑌂 𑌪𑌞𑍍𑌚𑌭𑌾𑌗𑌿𑌕𑌮𑍍 ॥

𑌗𑍍𑌰𑍀𑌵𑌮𑌰𑍍𑌧𑍇𑌨 𑌕𑌮𑍍𑌪𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌏𑌕𑍈𑌕𑍇𑌨𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌶𑍇𑌷𑌾𑌂𑌶𑌂 𑌵𑌾𑌜𑌨𑌂 𑌕𑌮𑍍𑌪𑌮𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑌮𑍁𑌪𑌪𑍀𑌠𑌕𑌮𑍍 ॥ ௭ ॥

𑌷𑌡𑌙𑍍𑌗𑌂 𑌵𑌾 𑌵𑌿𑌨𑌾 𑌤𑌦𑍍𑌵𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌧𑌸𑍍𑌤𑌾𑌦𑍍𑌵𑌿𑌨𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌮𑍍 ।
𑌵𑍇𑌦𑌿𑌭𑌦𑍍𑌰𑌂 𑌦𑍍𑌵𑌯𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑍇𑌷𑍁 𑌯𑍋𑌗𑍍𑌯𑌕𑌮𑍍 ॥ ௮ ॥

அதன் பாதபாஹ்யமானது, (பாஹ்யம்-வெளிப்பக்கம்) ஒருகோல், ஒன்றரைக்கோல், இரண்டுகோல் அல்லது மூன்று கோலளவு இருக்கவேண்டும். 4½

உபபீடமானது வேதிபத்ரம் பிரதிபத்ரம், ஸுபத்ரம், என்று மூன்றுவிதமாகும்.

அதன் உயரத்தை பன்னிரண்டு (12) பாகங்களாகச் செய்து அவற்றுள் உபானம் இரண்டு (2) அம்சம் பத்மம் ஒரு (1) அம்சம், அதற்குமேலே அரை (½) அம்சம் க்ஷேபணம், ஐந்து (5) பாகம் க்ரீவம், அரை (½) அம்சம் கம்பம், ஒரு (1) பாகம் அம்புஜம், மீதமுள்ளபாகம் (2 பாகம்) வாஜனமும் கம்பமும், இவ்விதமாக எட்டு (8) அங்கங்களுடனுவது, அல்லது கீழேயும் மேலேயும் கூறப்பட்டிருக்கிற அம்புஜங்களை நீக்கி ஆறு (6) அங்கங்களுடனுவது இருப்பது இவ்விரண்டும் வேதிபத்ரமாகும். இது, ஸகலவிதமான ஹர்மியங்களுக்கும் யோக்யமாகும். 8

†अश्विनीषु द्विकैकांशैः सार्धसार्धांशकांशकैः |
त्र्यंशकांशकसार्धैर्भिः शाखाग्रांशं विभाजयेत् ||

जन्मादिवाजनान्तं तु तुङ्गं सप्तविंशतिके |
पादुकं पङ्कजं कम्पं कण्ठमुत्तराम्बुजम् || १० ||

कपोतपालिकान्तं हि प्रतिवाजनमुच्यते |
प्रतिभद्रमिति ख्यातं सर्वालङ्कारसंयुतम् || ११ ||

यन्मध्यसारकर्णान्तं पकांशैश्च द्व्येकाष्टांशांशकांशकैः |
त्र्यंशैकांशकैः स्यात् खण्डत्रिपादांशैकभागैश्च भाजयेत् || १२ ||

[1] ஜன்மாதி வாஜனாந்தமான உயரத்தை இருபத்தேழு (27) பாகமாகச் செய்து, அந்த அம்சங்களில் இரண்டு (2) அம்சம், ஐந்து (5) அம்சம், இரண்டு (2) அம்சம், ஒரு (1) அம்சம், பன்னிரண்டு (12) அம்சம், ஆறு (6) அம்சம், ஒரு (1) அம்சம், மூன்று (3) அம்சம், ஒரு (1) அம்சம், இரண்டு (2) அம்சம் இவைகளால் சேர்க்கவேண்டும்.[2] 9½

பாதுகம், பங்கஜம், கம்பம், கண்டம், உத்தராம்புஜம், இவைகளை கபோதபாலிகாந்தம் முதல் கல்பிக்கவேண்டும். இதற்குப் பிரதிவாஜனம் என்று பெயர். இது ஸகல விதமான அலங்காரங்களுடன் கூடியதானால் இதற்குப் பிரதி பத்திரம் என்று பெயர். 11

---

†अश्विन्यंशैः प्रतिभद्रे सार्धसार्धांशकांशकैः |
उद्धि वारांशः ;

1. 2, 14, 9, 12 1, 1, அம்சங்களுடன் என்பது பாடபேதம்

2. இங்கு கூறியுள்ள அம்சங்கள் பொருத்தமாக இல்லை. அதை சீர்படுத்திக்கொள்ளவேண்டும்.

பாதுகம் பங்கஜம் சைவ ஆலிங்காந்தரிதம் ததா ।
ப்ரத்யூர்த்வவாஜனம் கண்டோத்தராப்ஜகபோதகம் ॥௧௫॥

ஆலிங்காந்தரிதம் சோர்த்வம் வ்ருத்திரூர்த்வவாஜனம் ।
த்விதீயம் ப்ரதிபத்ரம் ஸ்யாதேகபாகாதிகம் தத꞉ ॥௧௬॥

உபபீடோதயே தத்ர ஏகவிம்ஶாம்ஶபாஜிதே ।
ஜன்மாப்ஜே கண்டமப்ஜே த்வே(ம்) த்வ்யம்ஶம் வாஜனம் ॥௧௭॥

அப்ஜார்த்தம் ததா கம்பம் கண்டமஷ்டாம்ஶமீரிதம் ।
கம்போத்தரமப்ஜார்த்தம் கபோதம் த்ரிபி꞉ ॥௧௮॥

ஆலிங்கமர்த்தாம்ஶம் ஸ்யாத் அந்தரிதம் அர்த்தம் ।

பாதுகம் இரண்டு (2) அம்சம், பங்கஜம் ஒரு (1) அம்சம், ஆலிங்காந்தரிதம் இரண்டு (2) அம்சம், பிரத்யூர்துவ வாஜனம் இரண்டு (2) அம்சம், கண்டம் ஒரு (1) அம்சம், உத்தராப்ஜம் (8) அம்சம், கபோதம் இரண்டு (2) அம்சம், ஆலிங்காந்தரிதம் இரண்டு (2) அம்சம், ஊர்துவ ப்ரதி (விருதி) இரண்டு (2) அம்சம், ஊர்துவ வாஜனம் ஒரு (1) அம்சம், இவைகளுடன் கூடியது பிரதிபத்திரமாகும்.

இவைகளுடன் ஒருபாகம் அதிகமாக உள்ளது மற்றொரு பிரதிபத்ரமாகும். இவ்விதமாக பிரதிபத்ரம் இரண்டுவிதமாகும். 14

உபபீடத்தின் உயரத்தை இருபத்தோரு (21) பாகமாகச் செய்துகொண்டு, அவற்றுள், ஜன்மம் இரண்டு (2) அம்சம், அம்புஜம் இரண்டு (2) அம்சம், கண்டம் அரை ($\frac{1}{2}$) அம்சம், பத்மம் அரை ($\frac{1}{2}$) அம்சம், வாஜனம் இரண்டு (2) (2) அம்சம், அப்ஜம் அரை ($\frac{1}{2}$) அம்சம், கம்பம் அரை ($\frac{1}{2}$) அம்சம், கண்டம் எட்டு (8) அம்சம், உத்தரம் பத்மம் ஒண்ணரை ($1\frac{1}{2}$) அம்சம், கோபானகம் மூன்று (3) அம்சம்,

[illegible] ॥ ௧௭ ॥

[illegible] ।
[illegible] ॥ ௧௮ ॥

[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௧௯ ॥

[illegible] ।
[illegible] ॥

ஊர்த்துவ கம்பம் அரை (½) அம்சம் என்று, அதன் அங்கங்களைக் கல்பிக்கவேண்டும். இதற்கு ஸுபத்திரம் என்று பெயர். 16½

உபபீடத்தின் உயரத்தில் ஜன்மம் இரண்டு (2) அம்சம், பத்மம் மூன்று (3) அம்சம், கந்தரம் ஒரு (1) அம்சம், வாஜனம் இரண்டு (2) அம்சம், கம்பம் ஒரு (1) அம்சம், களம் எட்டு (8) அம்சம், கம்பம் ஒரு (1) அம்சம், வாஜனம் இரண்டு (2) அம்சம், கம்பம் ஒரு (1) அம்சம், இவ்விதமாக அமைக்கப்பட்டதும் ஸுபத்ரமாகும். இவ்விதமாக ஸுபத்திரமானது இரண்டுவிதமாகும். இது ஸகலவிதமான அலங்காரங்களுமுள்ளதாகும். 16½

இதில் ஸிம்ஹம், யானை, மகரம் வியாளம், (யாளி) பூதங்கள், இலைகள், இவைகளையமைக்க வேண்டும். இதன் முகப்புதோறும், மகர மத்ஸ்யத்தையமைக்கவேண்டும். அதன் வாலானது தலையில் ஏறி இருக்கவேண்டும். 19½

இதை அர்பிதஹர்மியம், அனர்பிதஹர்மியம், (மாடியுள்ளது, மாடி இல்லாதது) இவைகளில் எங்கும் கல்பிக்க வேண்டும். 20

ஸம்புடம் ப்ரதிப்ரஜை: வ்ருத்திஹ்ராஸௌ யதாக்ரமே |
ததா மஸூரகாணாம் து யுஞ்ஜ்யாதுபபீடகே || ௨௧ ||

குத்தாதிஷ்டானதுங்காத் த்விகுணமத ஸமம்
ஸார்த்தமர்த்தம் த்ரிபாதம்
பஞ்சாம்ஶத்வ்யம்ஶகம் வா த்ரியம்ஶஹ்ருதே
த்வ்யம்ஶகோ த்ராவபீடே |
ஸப்த்யம்ஶம் ஸமம் ஸ்யாத் ததபி ச மஹதா
வாஜநேநாவயர்க்கம்
ஸர்வஶில்பாந்யமூநாம்ஸ்த்ரிபதஸதிநா
யோஜிதவ்யம் பதாயாம் ||

இதி மயமதே வஸ்துஶாஸ்த்ரே உபபீடவிதானோ நாம
த்ரயோதஶோऽத்யாய: |

புத்திமான்களாக இருப்பவர்கள், இதன் ஒவ்வொரு அங்கத்திலும் அளவை கூட்டியும் குறைத்தும் கொள்ளுவதாகும்

அவ்விதமே மஸூரகங்களின் உபபீடங்களிலும் கல்பிக்க வேண்டும். 21

உபபீடமானது அதிஷ்டானத்தின் உயரத்தைக் காட்டிலும் இரண்டு (2) பங்கு, அதற்கு சமமான உயரம், ஒண்ணரைப்பங்கு, அரைப்பங்கு, முக்கால் பங்கு ஐந்தில் இரண்டு பங்கு, மூன்றில் இரண்டு பங்கு, இருப்பதாகும். இந்த உபபீடத்தின் அங்கங்களின் அளவு ஸமானமாக இருப்பதாலும், வாஜனம் பெரிதாக இருக்கவேண்டும். திடமான புத்தி சக்தியுள்ளவன், அதன் அடிப்பக்கத்தில் மனோஹரமான சில்பங்கள் எல்லாவற்றையும் கல்பிக்க வேண்டும். இது உபபீடத்திற்கு வலுவைக்கொடுப்பதற்காகவாகும். 22

உபபீடவிதாநம் என்னும் பதின்மூன்றாவது அத்தியாயம் முற்றும்.

𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌜𑌾𑌤𑍀𑌨𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌗𑍃𑌹𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 ।
𑌤𑌦𑍍𑌯𑍋𑌗𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌜𑌾𑌙𑍍𑌗𑌲𑌾𑌨𑍂𑌪𑌭𑍇𑌦𑌤𑌃 ॥

𑌸𑍍𑌥𑍂𑌲𑌶𑌰𑍍𑌕𑌰𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌖𑌨𑌨𑍇 𑌸𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑍇𑌵 𑌚 ।
𑌸𑌿𑌤𑌾𑌂𑌬𑍁 𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌤𑍋𑌯𑌾𑌢𑍍𑌯𑌂 𑌜𑌾𑌙𑍍𑌗𑌲𑌂 𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌂 𑌸𑌦𑌾

𑌖𑌨𑍍𑌯𑌂 𑌶𑌰𑍍𑌕𑌰𑌾𑌶𑍍𑌮𑌸𑍁 … 𑌯𑌥𑌾 ।
†𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍋𑌪𑌲𑌕𑌶𑍇𑌰𑍁𑌾𑌦𑍍𑌯𑌂 … 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑌥𑌾 … ।

𑌆𑌤𑍋𑌯𑌦𑍃𑌷𑍍𑌟𑌿 … 𑌶𑌰𑍍𑌕𑌰𑌾 … ॥
𑌉𑌷𑍍𑌣𑍋𑌷𑌧𑍍𑌯𑌾𑌦𑌿 … 𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌃 ॥ ௨ ॥

பதினான்காவது அத்தியாயம்

தேவதைகள், பிராமணர்கள், மற்ற ஜாதிகள், இவர்களுடைய கிருஹ காரியங்களில், அதற்கு யோக்யமான பூமியானது, ஜாங்கலம் - அநூபம் என்று இரண்டுவிதமாகும்.

பெருமணலுடன் கூடியதும், தெல்லும்பொழுது மிகவும் அழுத்தமாக இருப்பதும், வெளுப்பு நிறமான ஸ்வல்ப ஜலமுடையதுமான பூதலமானது, ஜாங்கலம் என்று பெயருடையதாகும். 2

கெல்லப்படுகிற பூமியானது, பலத்தை அனுஸரித்து, கூழாங்கற்களுடனும் கசேரு முதலியவைகளுடனும் கூடியதாகவும், சிறுமணலுடன் கூடியதும், கெல்லும் பொழுது ஜலத்தைக் காணும் வரையில், கற்கள் - கூழாங்கற்கள், மணல், இவைகளுடன் கூடியதும், பசையுள்ளதுமான பூமியானது, அநூபம் எனப்படும். 4

---

† …

ஸிகதாபி: க்ரமாத் பூர்ணம் நிச்சித்ரம் ஸமவேக்ஷ்ய ஶிலா।
ஸந்நிக்ருத்ய ஹஸ்திபாதைஶ்ச காஷ்டைஶ்சைவ மஹத்தரை:॥

தத்பூர்ணே ஸலிலேனைவ ஸம்ஸ்திதே க்ஷயதா ஶுபா।
ஸமத்வம் ஸலிலேனைவ ஸ்தாபயித்வா விசக்ஷண: ॥௬॥

ஶுத்தம் பரீக்ஷ்ய தாம் நீத்வா கர்ப்பம் தத்ர ந்யாஸயேத்।
தஸ்யோர்த்வம் ஸ்தாபயேத் உபானம் தத்யோபரி ஸமாஹிதம் ॥ ௭ ॥

உபானோந்நதி பாதம் வா த்ரிபாதம் வா தத்த்வயாத்யத:।
யதா ஶோபாஸமம் தத்ர பத்மாத்யம் தத்ர விசக்ஷண: ॥௮॥

உந்நதம் ப்ராக்ருதிம் ஹஸ்தம் க்ருத்வா ஸந்த்ருடம் ப்ருஶம்।
ஸந்நிக்ருத்ய தஸ்யோர்த்வம் உபானம் ஜந்ம காரயேத் ॥௯॥

கெல்லப்பட்டுள்ள பள்ளத்தை, முறையே மணல்களால் ஓட்டையில்லாமல் தூற்று, அதை யானையின் கால்களினாலும், பெரிய மரத்துண்டுகளாலும் கெட்டித்து, அதில் ஜலத்தை நிரப்பவேண்டும். அது குறையாமல் ஜலத்துடன் சமமாக இருந்தால், அந்த பூமியானது, சுபகரமாகும். சமர்த்தனாக இருப்பவன், அத்தகைய பூமியைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்தில் கர்பஸ்தாபனம் செய்து, அதன் மேலே, உபானத்தை வைக்கவேண்டும். 6½

அந்த உபானமானது, (அதன் மேலே வைக்க வேண்டிய) ஸ்தம்பத்தின் உயரத்தைப் போல இரண்டு அல்லது மூன்று பங்கு உயரமுள்ளதாகவும், அதன் பஹுளத்தில் (கனத்தில்) பாதி கனமுள்ளதாகவும் இருக்கவேண்டும். அந்த உபானத்தின்மேல், பத்மத்தையும், அதன்மேல், உபோபானத்தையும் அழகாக இருக்கும்படி அலங்காரங்களுடன் செய்யவேண்டும். 8

இயற்கையாக உள்ள பூமியை ஒரு முழம் உயரமாகச் செய்து அதைக் கெட்டிக்கவேண்டும். அதற்கு மேலே இருப்

𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌹𑍍𑌯𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌂 𑌸𑍋𑌪𑌪𑍀𑌠𑌂 𑌤𑍁 𑌕𑍇𑌵𑌲𑌮𑍍 ।
𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌂 𑌵𑌾 𑌸𑌕𑍁𑌡𑍍𑌯𑌂 𑌵𑌾 𑌜𑌙𑍍𑌘𑌾𑌵𑌰𑍍𑌗𑌂 𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌗𑌮𑍍 ॥

𑌭𑍂𑌮𑌿𑌦𑍇𑌶 𑌇𑌤𑌿 𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌕𑌪𑍋𑌤𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌗𑌤𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌃 ।
𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌾𑌦𑍀𑌨𑌿 𑌵𑌸𑍍𑌤𑍂𑌨𑌿 𑌆𑌧𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌯𑌸𑍍𑌮𑌿𑌂𑌸𑍍𑌤𑌤𑍍 ॥ ௧௧ ॥

𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌂 𑌤𑌦𑍁𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌜𑌾𑌤𑌿𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑌵𑌶𑌾𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌧𑌾 ।
𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌹𑌸𑍍𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌹𑌸𑍍𑌤𑌾𑌰𑍍𑌧𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌨𑍍𑌮𑌨𑌾𑌮𑍍 ॥

𑌨𑍃𑌪𑌾𑌣𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌕𑌰𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌦𑍍𑌵𑌿𑌹𑌸𑍍𑌤𑌂 𑌯𑍌𑌵𑌰𑌾𑌜𑌕𑍇 ।
𑌦𑍍𑌵𑌿𑌹𑌸𑍍𑌤𑌂 𑌵𑌣𑌿𑌜𑌾𑌂 𑌚𑍈𑌕𑌹𑌸𑍍𑌤𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑍇 ॥௧௨॥

பதற்கு, உபானம் என்றும் ஜன்மம் என்றும் பெயர் கூறப்பட்டிருக்கிறது 9

அதற்குமேலே உபபீடம் மட்டிலுமிருந்தால், அதற்கு அதிஷ்டானம் என்று பெயர்.

அந்த உபபீடமானது, ஸ்தம்பத்துடனாவது சுவற்றுடனாவது இருந்தால், அதன் மேலேயுள்ள பாகத்திற்கு (அதாவது உபபீடத்தின் மேலுள்ள தூண், சுவர், இவைகளுக்கு) ஜங்காவர்கம் என்று பெயர். 10

கபோதத்திற்கு மேலேயுள்ள பிரதியானது பூமிதேசம் எனப்படும்.

பிராஸாதம் முதலிய வாஸ்துக்கள், எதன்மீது இருக்கின்றனவோ, அதற்கு, அதிஷ்டானம் என்று பெயர். 11

அந்த அதிஷ்டானத்தின் உயரமானது, ஜாதியின் வசத்தினாலும், பூமியின் வசத்தினாலும், இரண்டு விதமாகும். தேவர்களின் அதிஷ்டானத்தின் உயரமானது, நான்கு (4) முழமிருக்கவேண்டும். பிராம்ஹணர்களின் அதிஷ்டானமானது, மூன்றரை (3½) முழம் உயரமுள்ளதாக இருக்க வேண்டும். அரசனின் அதிஷ்டானத்தின் உயரமானது,

ஸார்தம் ஜாதிவசாத் ஹஸ்தமாநமேவ யுஜ்யதே |
உச்சம் க்ஷத்ரியாணாம் து ஸார்தபாதத்ரயம்
த்ரிஹஸ்திகம்(தம்) || ௧௪ ||

த்ரயோதசாத்யேகஷட்கம் பாதோநம் விஹீநகம் |
க்ஷத்ராண்யாதயா நீத்யா வியாதவ்யம் விசக்ஷணை:* ||௧௫||

மூன்று (3) முழம் உயரமுள்ளதாக இருக்கவேண்டும். யுவ ராஜாவின் அதிஷ்டானமானது இரண்டரை ($2\frac{1}{2}$) முழம் உயரமுள்ளதாக இருக்கவேண்டும். வைசியர்களுக்கு இரண்டு (2) முழமும், சூத்ரர்களுக்கு ஒரு (1) முழமும் உயர முள்ளதாக இருக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. 13

இந்த அளவுகள் ஜாதிகளைப் பொருத்தவைகளாகும். இனி பூமி வசத்தினாலே அளவுகள் கூறப்படுகின்றன. $13\frac{1}{2}$

துவாதச (12) பூமி முதல் த்ரி (3) பூமி வரையில் அதிஷ்டானத்தின் உயரமானது ஒரு (1) கோலளவுக்கு ஆறு (6) அங்குலம் குறைவாக இருக்கவேண்டும். 14

உத்தம த்ரி (3) தலத்தின் அதிஷ்டானோச்சமானது, ஒன்னே முக்கால் ($1\frac{3}{4}$) முழம் இருப்பது விரும்பத்தக்க

---

* ௧௫ பாதாந்தே அயமதிக: பாட:—

ஸப்ததலாந்தம் வஸு ஹஸ்த ஆரப்ய ஸார்தமுக்தம் |
த்ரயோதசம் வா ஷட்விம்சத்யங்குலவிவர்தநாத் ||

அஷ்டத்ரிம்சத்தலாந்தாம்சம் து பாதோநம் விஹாயதி: |
ஷடாதீநாம் ச பஞ்சாங்கதலம் த்ரிபுரதக: ||

நவத்ரிம்சத்தலாந்தாம்சம் அர்தார்தம் ஸார்தம் து |
த்ரயார்தஹஸ்தமாத்ரேண நவதலேஷு விசக்ஷண: ||

க்ஷுத்ரக்ஷேத்ராம்சமாநேந வாமிஷ்ரேணாத்யயம் விதே: |
கேச்சித் தந்த்ர ப்ரகாரேண வியாதவ்யம் விசக்ஷணை: ||

தத்த்ராஷ்டாம்ஶேந ஷஷ்டாம்ஶேநாநதத: ।
ஸமித்தாநஸ்ய ஶோபைஶ்வர்யம் பாதாங்க்ரதிதி ஸம்பவாத் ॥

யதா²வாநஸ்ய நிஷ்காஸம் தத் க்ருத்யோபபந்ந விதாநயேத் ।
த்ரைக்யகாம்யம் ஸமந்த்ரம் ஸ்தம்பமேயம் காரயேத்வய: ॥

தாகும். மேதாவிகள் இந்த முறையை அனுஸரித்து அதம த்ரி (3) தலம் முதலியவைகளின் உயரத்தைக் கல்பித்துக் கொள்ளவேண்டும். * 15

வாஸ்து வஸ்துவில் ப்ரவேசத்திலே அதிஷ்டானத்தின் உயரமானது அதனின் பாதோதயத்தில் அரைப்பங்கு ஆறில் ஒரு பங்கு அல்லது எட்டில் ஒரு பங்கு குறைவாக இருக்க வேண்டும். 16

புத்திமானாக இருப்பவன், உபானத்தின் யாதொரு நிஷ்க்ராந்தம் உண்டோ அதை மூன்று (3) பங்காகச்செய்ய

---

* அதிக பாடம் —

பீடத்தின் உயரம் ஐந்து (5) முழமிருந்தால், அதன் மஸூரிகையின் உயரம், முப்பத்திரண்டு (32) அங்குலமாகும். முப்பது (30) அங்குலம் முதல், இரண்டு (2) அங்குலம் வீதம் கூடுதலாக முப்பத்தெட்டு (38) அங்குலம் வரையில இருப்பது மாகும். அதன் அகலம் பதிமூன்று (13) அங்குலமாகும்.

பீடத்தின் உயரம் ஆறு (6) முழம் முதல் பத்து (10) முழம் வரையிலிருந்தால், அதன் மஸூரிகோச்சம் முப்பத்தோ (31) ரங்குலம் இருக்கவேண்டும்,

பீடோச்சம் பதினான்கு (14) முழமிருந்தால், மஸூரி கோச்சம் முப்பத்தொன்பது (39) அங்குலமிருக்கவேண்டும்.

பீடத்தின் உயரமானது மூன்று (3) அல்லது நான்கு (4) முழமுள்ள வீடுகளில், ஸாமர்த்தியசாலிகள், இந்த முறையில் மஸூரிகோச்சத்தை கணக்கிட்டுக்கொள்ளவேண்டும்.

மஸூரிகையின் உயரத்தைக்கொண்டு, அதிஷ்டானத்தின் உயரத்தைக் கல்பித்துக்கொள்ளுவதுமாகும்.

புத்திமான்கள், இந்த முறையிலும் பீடோச்சத்தைக் கல்பித்துக்கொள்ளுவதாம்.

तद्वत् कुमुदपट्टं च तद्वत् कण्ठस्य वेशनम् ।
उपानादिसमुच्छ्रायं तु भागमानेन वक्ष्यते

चतुर्विंशतिभागाङ्गं
अंशैः वसुभिरिन्द्रैश्च क्रमात् ।
वप्रं कुमुदं कम्पं
कम्पवाजनयोर्द्धकम्पकम् ॥ १७ ॥

पादबन्धोच्छ्रितं तत्र
भागान्विंशतिचतुर्भिः* तांशके कृते ।
वप्रं वसुवेदांशैः
वेदकम्पवसुभिः पादांशके ॥ १८ ॥

வேண்டும். அதில் ஒரு பாகத்தை வெளியில் ஒதுக்கிவிட்டு அந்த இடத்தில் ஜகதியை கல்பிக்கவேண்டும். 17

அதைப்போலவே குமுத பட்டத்தையும் அதைப் போலவே கண்டவேசனத்தையும் கல்பிக்கவேண்டும்.

உபானத்தில் காணப்படும் உயரத்தை பாகமானத்தினாலே கூறுகிறேன். 18

பிராசீனர்களான முனிவர்கள், பாதபந்தத்தின் உயரத்தை *இருபத்திநான்கு (24) பாகங்களாகச் செய்து, அவைகளில், முறையே, வப்ரம் எட்டு (8) பாகம், குமுதம் ஏழு (7) பாகம், கம்பம் ஒரு (1) பாகம், கந்தரம் எட்டு (8) பாகம், கம்பம் ஒரு (1) பாகம், வாஜனம் எட்டு (8) பாகம், ஊர்த்துவ கம்பம் ஒரு (1) பாகம், என்று பாககல்பனம் செய்துகொண்டு, இந்த அங்கங்களை கல்பிக்கவேண்டுமென்று கூறியுள்ளார்கள். இது தேவர்கள், பிராம்ஹணர்

---

*चतुस्त्रिंशति युक्तः पाठः ।

* முப்பத்திநான்கு (34) பாகங்களாக என்று பாடம் இருக்கவேண்டும்.

அம்ஶாஷ்டாதஶ ஸம்விபக்தே பாதோத்ஸேதே
யதாக்ரமம் ஸஹைகாம்ஶகை: க்ரமாத் |
வாஜனம் வ்ருத்திஜாலம் த்ர்யஶ்ரகம்
நேத்ரம் அவ்ருத்தகுமுதம் ததா வஜ்ரகம் || ௨௧ ||

த்ருதீயம் ஸஹைகாம்ஶகே ததோ
நாகவக்த்ரஸமம் வ்ருத்திஜயம் |
தேவவிப்ரந்ருபாணாம் தத்
யோக்யம் உரகபந்தகம் ஹிதம் || ௨௨ ||

ஸம்பாத்ய ... : அம்ஶாஷ்டாதஶ
... :

... வாஜனாதிகம் ... குமுதகம் ...
... |

கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள், இவர்களுக்குப் பொதுவாகக் கூறியுள்ளதாகும். (20)

பாததலத்தின் உயரத்தை (18) பாகங்கள் செய்து கொண்டு, அந்த பாகங்களில், ஒரு (1) பாகம் வாஜனம், இரண்டு (2) பாகம் விருத்திமுகம், ஒரு (1) பாகம் த்ரியச்ரம், ஒரு (1) பாகம் நேத்ரம், ஆறு (6) பாகம் விருத்தகுமுதம், ஏழு (7) பாகம் வஜ்ரம், இவைகளை, முறையே கல்பிக்க வேண்டும். 21

இவ்விதம் பதினெட்டு (18) பாகங்களினாலே (வாஜனம் முதலியவைகளுடன்) கல்ப்பிக்கப்பட்ட பாததலத்தில், ஸர்ப முகத்தைப்போன்ற இரண்டு (2) ப்ரதிகளை (விருதிகளை) கல்பிக்கவேண்டும். இத்தகைய உரக பந்தமானது தேவாலயம், பிரம்ஹண கிருஹம், ராஜகிருஹம், இவைகளுக்கு யோக்கியமாகும். 22

பாதோச்சத்தின் அம்சங்களில், முறையே, ஒன்று (1)

க்ஷுத்ரோபாநாப்ஜகம் தத்கம்பஜகதீ குமுதம் கம்பயுக்தம்
ப்ரதிவாஜநம் ததூர்த்வே ஆலிங்காந்தரயுக்தம்
பத்மஸஹிதம் ப்ரதிமுகம் ॥ ௨௩ ॥

வ்ருத்தம் தத் ஸாலப்ரதிக்ரமம்
விபக்திஸ்தம் பத்ரவல்ல்யாதிரூபகை: ।
ஸ்தம்பஹர்ம்யோசிதம் ப்ரோக்தம்
ஹஸ்திரூபம் புஷ்டிகரம் ஜயாவஹம் ॥ ௨௪ ॥

பாதோச்சே ஷட்விம்ஸதிபாகைஸ்து †பாது
அம்ஸகைஸ்தது க்ரமாத்
ஏகமேகம் பாதத்ரயம் ஸார்த்தம் சதுர்பாகம் த்விபாகம்
த்ரிபாகம் அ ।

அரை (½) அரை (½) ஏழு (7) ஆறு (6) ஒன்று (1) இரண்டு (2) ஒன்று (1) இந்த அம்சங்களினால், க்ஷுத்ரோபானம், அப்ஜம், கம்பம், ஜகதீ, குமுதம், அதன் உச்சியில் தாரை, இவைகளுடன், ஆலிங்காந்தரியாயும் ஆலிங்காந்தமாயுமிருக்கின்ற வாஜனம், பத்மத்துடன் கூடிய பிரதிமுகத்தையும், கல்பிக்கவேண்டும். தலோச்சமானது இருபத்தோறு (21) அம்சங்களுடையதானால், அதில், யானை, சிங்கம், மகரம், யாளி, இவைகளினாலே அலங்கரிக்கப்படவேண்டும். 23

இலை, கொடி, முதலிய உருவங்களினாலே அலங்கரிக்கப்பட்ட அந்த ப்ரதி (விருதி) க்ரமமானது, தேவாலயத்திற்கு உசிதமாகும். யானைகளின் வடிவமாக இருப்பது, புஷ்டிகரமும் ஜயபிரதமுமாகும். 24

பாதோச்சத்தை இருபத்தாறு (26) அம்சங்களாகச் செய்துகொண்டு, அவைகளுள், முறையே, ஒன்று (1)

---

†பாது இதி ஸ்வாதே பாத இதி வாசே, க்ஷுத்ரோபாநம் ஸார்த்தம் ஸார்த்தி ஹாதி ।

வப்ரம் பத்மம் க்ரமாப்ஜம் கண்டோத்தோபரிபத்மம் ச கம்பம்
மத்யம் ததா
கம்பம் பத்மம் ச பட்டிகாம்புஜோபரி கம்பம் ச
ஷட்விம்ஶாம்ஶகை ॥ ௨௫ ॥

பத்மகேஸரமேதத்து உக்தம் கம்பவாஜநபங்கஜைர்யுதம் ।
கும்பவப்ரயுதம் ச ஸ கந்தரம் ஶாம்பவாலயே ததா
ப்ரவிதீயதே ॥ ௨௬ ॥

ஹாரமேகலிகாயுக்தகாமதே ஶோபோத்தரம் ச ததாயுக்தம்
காமதே:
அந்யயுக்தாய ஶிகாமேக: தத்தம் ச ததாயுக்தம்
காமதேஷு ஜந்ம ।
வப்ரம் கண்டம் க்ரமாப்ஜம் ததூர்த்வே கண்டம் பங்கஜம் கம்பகண்டம்
கம்பம் பத்மம் ஶாலாபத்ரோர்த்வே குமுதம் கம்பகம் கண்டஜாப்யதம் ॥

இரண்டு (2) ஒன்று (1) ஆறு (6) ஒன்று (1) ஒன்று (1) ஒன்று (1) *எட்டு (8) ஒன்று (1) ஒன்று (1) இரண்டு (2) ஒன்று (1) இரண்டு (2) ஒன்று (1) ஒன்று (1) இந்த (1+2+1+6+1+1+1+8+1+1+2+1+2+1+1=30) அம்சங்களினால், முறையே, ஜன்மம், அப்ஜம், வப்ரம், பத்மம், களம், அப்ஜம், குமுதம், உபரிபத்மம், கம்பம், களம், கம்பம், பத்மம், பட்டை, கமலம், உபரிகம்பம், இவைகளைக் கல்பிக்கவேண்டும். 25

கம்பம், வாஜனம், பத்மம், இவைகளுடனும், கும்பம், வப்ரம், இவைகளுடனும் கந்தரத்துடனும் கூடியது, பத்ம கேஸரம் எனப்படும். இது சிவாலயத்திற்கு விதிக்கப்பட்டதாகும். (இவைகளை அதிஷ்டானத்தில் கல்பிக்க வேண்டும்). 26

* உபரிபத்மம் 8 பாகம் என்பதை 4 பாகம் என்று திருத்திக் கொண்டால் அம்சங்கள் 26 என்பது பொருத்தமாகும்.

[illegible]

[illegible] || ௨௮ ||

[illegible]

[illegible] || ௨௯ ||*

(அதிஷ்டானத்தின் உயரத்தின்) பாகங்களில், ஒரு(1) அம்சம் ஜன்மம், அரை (½) அம்சம் வப்ரம், அரை (½) அம்சம் பத்மம், அரை (½) அம்சம் களாப்ஜர், ஒரு (1) அம்சம் குமுதம், அரை (½) அம்சம் பத்மம், இரண்டு (2) அம்சம் கம்பம், அரை (½) அம்சம் கண்டம், ஒரு (1) அம்சம் கம்பம், அரை (½) அம்சம் பத்மம், இரண்டு (2) அம்சம் மஹாவாஜனம், அரை (½) அம்சம் உபரிதளம், ஒரு (1) அம்சம் கம்பம், அரை (½) அம்சம் கண்டம், இவைகளை (முறையே) கல்பிக்க வேண்டும். 27

சில்பிகளால், ஊர்துவமுகமாகவும் மத்தியம முகமாகவும் இருக்கும் விமானத்தில், அதன் சுற்றுப் புறங்களில் அதன் உயரத்தில் பத்தொன்பது (19) பாகங்களால், புஷ்பங்கள் நிறைந்ததாகச்செய்யப்பட்டால், அது பூஜிக்கத் தக்கதாகும். 28

இரண்டு (2) அம்சம், ஒரு (1) அம்சம், ஏழு (7) அம்சம் ஒரு (1) அம்சம், ஒரு (1) அம்சம், நான்கு (4) அம்சம்,

---

*[illegible]

ஸ்ரீப³ந்த⁴ம் ஸ்தா²பயேத்தத்ர அத²வா ஸர்வ காயாரோஹ-
வர்யநிர்ஜ்ஜித꞉ ।
தே³வேஶாநாம் உதி³தேஷு ஸர்வஶஸ்த்ரம் ஸ்ரீஸௌபா⁴க்³யாரோக்³ய
போ⁴க³ஸௌக்²யம் த³தா³தி ॥௩௰॥

தா³ந்தே மஷ்ட்வம்ஶம் வாஹய ஜந்மகைரவம் கம்பகண்ட²ம்
கம்பம் த³லம் கபோதம் தத்³வதி ச தயா த்³விலிங்கா³ந்தாதி³வத்க்ரமாத் ।
கம்பம் ஹாரேண ஷட்³பி⁴꞉ ஸாரஸபி⁴ந்நாம்ஶைஸ்து
பா⁴கா³ம்ஶகாம்ஶை꞉
ஆத்³யாத்³யேந காயாஸி ஸஹஸ்ராம்ப³ உக்தபா⁴க³꞉ ॥

ஒரு (1) அம்சம், ஒரு (1) அம்சம், மூன்று (3) அம்சம் ஒரு (1) அம்சம், ஒரு (1) அம்சம், நான்கு (4) அம்சம் ஒரு (1) அம்சம் ஒரு (1) அம்சம், மூன்று (3) அம்சம், ஒரு (1) அம்சம் (இந்த அளவுகளினால் முறையே) மோஹாம ராப்ஜம். ஹ்ருத்பத்மம், கைரவம், அப்ஜம், கந்தரம், கண்டம், கம்பம், தளம், கபோதம், துவிலிங்காந்தாதிகம், வாஜனம், பங்கஜத்துடன் கூடிய பிரதிமுகம், இவைகளை கல்பிக வேண்டும் * 29

சாந்தமான மனதையுடைய வர்தகியானவன், உயரத்தின் முப்பத்திரண்டு (32) பாகங்களினால், இவ்விதம் அமைத்தால் அதற்கு ஸ்ரீபந்தம் என்று பெயர். இதை தேவ மந்திரங்களில் கல்பிக்வேண்டும். இது ஐசுவரியம், சௌபாக்கியம், ஆரோக்யம், சுகபோகங்கள், இவைகளை யளிக்கும். 30

உயரத்தை (பீடோச்சத்தை) இருபத்தாறு (26) அம்சங்களாகச்செய்து அவைகளில் முறையே, ஒன்று (1) ஆறு (6) ஐந்து (5) ஒன்று (1) ஆறு (6) ஒன்று (1) ஒன்று (1) எட்டு (8) ஒன்று (1) ஒன்று (1) இரண்டு (2) ஒன்று(1) அம்சங்களில் (1+6+5+1+6+1+1+8+1+1+2+1=34) குரம்,

* இங்கு கூறப்பட்டிருக்கும் விஷயம் பொருத்தமாக இல்லை

[illegible] ||௩௨||

[illegible] || ௩௩ ||

ஜகதீ, கைரவம், கம்பம், கண்டம், கம்பம், பத்மம், கபோதம், நிம்னம், அந்தாதிவக்திரம், கம்பம், இவைகளைக் கல்பிக்க வேண்டும். இதற்கு மஞ்சபந்தம் என்று பெயர். இதை தேவாலயங்களிலும், ராஜகிரஹங்களிலும் கல்பிக்க வேண்டும் * 31

இது ஆலிங்கத்துடனிருந்தும் இரண்டு பிரதி (விருதி) களின் மத்தியிலிருந்தும், வாஜனத்துடன் கூடியுமிருந்தால், இதற்கு ஸ்ரீகாந்தகஸௌரகம் என்று பெயர். (இதன்) குமுதமானது அஷ்டகோணமாகவாவது, வட்டமாகவாவது, இருக்கவேண்டும் அது தேவர்களுக்குரியதாகும். 32

அதிஷ்டானோச்சத்தை இருபத்தாறு (26) அம்சங்களாகச் செய்து, அவைகளில் ஒரு (1) அம்சம் ஜன்மம், இரண்டு (2) அம்சம் அப்ஜம், ஒரு (1) அம்சம் கம்பம், ஆறு (6) அம்சம் ஜகதீ, நான்கு (4) அம்சம் குமுதம், ஒரு (1) அம்சம் கம்பம், இரண்டு (2) அம்சம் கண்டம், ஒரு (1) அம்சம் கம்பம், இரண்டு (2) அம்சம் பத்மம் ஒரு (1)

---

*இதில் அம்சாதிகள் பொருத்தமாக இல்லை.

ஸார்த்3த்3வ்யம்ஶகாம்ஶேந பட்டம் வாஜநமம்பு3ஜம்
அர்த்3தே4கைகேந ஜந்ம

க்ஷுத்3ரம் பத்3மம் பஞ்சகம் கம்பம் கம்போபரி பத்3மம் ததா
ஊர்த்4வலிங்கம் |

ஶ்ரேணீப3ந்த4: ஸ்ம்ருʼதிவர்ஜ நராணாம் க்ருʼதிகா யோஜயேத்
ஸுதீ4ஷ்வம்ஶே

தே3வாநாம் தே3வப்ரஸாதா3நாம் கல்பிதமாலயம்‡ பத்3மம் ப3ந்த4ம்
பு3த4ஸ்ம்ருʼதம் ||

அஷ்டாத3ஶாம்ஶகாம்ஶே* ஸார்த4ம் ஜந்மஸார்த4ம்பிவர்த்3த4க:
அம்பு3ஜம் ஸோபாநம் நீசம்

ஹாரோத்தரா வாஜநகம் தத்3வைரி அ ததா கம்ப வம்பு3ஜம்
அ கம்பத்3ரு |

அம்சம் பட்டம், இரண்டு (2) அம்சம் கண்டம், ஒரு அம்சம் வாஜனம், ஒன்றரை ($1\frac{1}{2}$) அம்சம் அப்ஜம், அரை ($\frac{1}{2}$) அம்சம் பட்டம், என இவ்விதமமைந்திருந்தால் இதற்கு ச்ரேணீபந்தம் என்று பெயர். இது தேவர்களின் ஆலயங்களுக்குக் கூறப்பட்டதாகும். 33

அதிஷ்டானத்தை பதினெட்டு (18) அம்சங்களாகச் செய்து, அவற்றுள், ஒன்றரை ($1\frac{1}{2}$) அம்சம் ஜன்மம், அரை ($\frac{1}{2}$) அம்சம் க்ஷுத்திரம், (க்ஷுத்திரபத்மம்) ஐந்து (5) அம்சம் பத்மம், ஒரு (1) அம்சம் கம்பம், ஒரு (1) அம்சம் அப்ஜம், மூன்று (3) அம்சம் குமுதம், (1) அம்சம் உபரிபத்மம் ஒரு (1) அம்சம் ஊர்த்துவலிங்கம், ஒரு (1) அம்சம் ஆலிங்காந்தம், இரண்டு (2) அம்சம் பிரதி, ஒரு (1) அம்சம் வாஜனம், இவைகளை முறையே கல்பிக்கவேண்டும். இதற்கு பத்மபந்தம் என்று பெயர். இது தேவேசுரர்களுடைய ஆலயங்களில் கல்பிக்கப்படவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. 34

‡பத்3மம் இதி வாடாந்தரம் | *அஷ்ட இதி வா பாட2: |

வப்ரம் பட்டம் ச கண்டம் ததூர்த்வம் ச ததா கம்பவப்ரம் ச பட்
டம் தத்பத்மபந்தம் ததூர்த்வே ச ஸம்ஹிதம்
[illegible] ||

ததைவ வ்ருத்தம் குமுதம் து வாஜநே
கபோதயுக்தம் ஹி கபோதபந்தகம் |
ததைவ வேத்யா:(ஷ)ப்ரதிவாஜநம் ப்ரதி:
த்ர்யச்ரயுக்தம் ப்ரதிபந்தமுச்யதே || ௩௧ ||

[illegible]
[illegible] வப்ரகம்போதயோ கம்ப
கண்டம் ச கம்பகம் |

அதிஷ்டானோச்சத்தை இருபத்திரண்டு (22) பாகங்களாகச்செய்துகொண்டு, அவைகளில் இரண்டு (2) பாகம் உபானம், ஒரு (1) பாகம் அப்ஜம், ஒரு (1) பாகம் கம்பம் *ஐந்து (5) பாகம் வப்ரம், ஒரு (1) பாகம் கும்மம் நான்கு (4) பாகம் பத்மம், ஒரு (1) பாகம் பட்டம், ஒரு (1) பாகம் கண்டம், இரண்டு (2) பாகம் கம்பம், ஒரு (1) பாகம் பத்மம், ஒரு (1) பாகம் பட்டி, இரண்டு (2) பாகம் பட்டம், ஒரு (1) பாகம் வப்ரபந்தம். 35

அதுவே, விருத்தம், குமுதம், வாஜனத்தில் கபோதங்களுடன் கூடியதாக இருந்தால், அதற்கு கபோதபந்தம் என்று பெயர். 35½

அதுவே, நான்கு பிரதிவாஜனம், திரியச்ரங்களுடன் கூடிய பிரதியுடன் கூடியதாக இருந்தால், இதற்கு பிரதி பந்தம் என்று கூறப்பட்டிருக்கிறது. 36

அதிஷ்டானத்தின் உயரத்தை இருபத்திநான்கு (24)

---

*ஐந்து என்பதை நான்கு என்று திருத்திக்கொண்டால் அம்சங்களின் கூடுதல் இருபத்திரண்டாகும்.

பத்³மம் பட்டாம்பு³ஜநிம்நம் கலஶோபரி கும்ப⁴ம் த³ளம் த்³வயம் நிம்நஸமந்தரம்
யஸ்யோர்த்⁴வே ப்ரதிவாஜநஞ்ச கலஶாத்³யம்
ஸமாமாஸூரயேத் ||

ஏதாநி ஶோத⁴யேத் ஸ்தா³ சதுர்த³ஶைவ
ப்ரோக்தாநி தந்த்ரஜ்ஞை: மஸூரகாணி |
ஸர்வாணி நாஸ்யம் ப்ரயாதாநி யுக்த்யா
த்³ருடீ⁴க்ருதாம்ஶாநி ஸமாஹிதாநி || ௩௮ ||

ஹர்ம்யாணாம் ப்ரவாதாம் ப்ரஹிதம் யாமுநாத்⁴யாய
அம்ஶ்ராயவாதை:
ஶாஸ்த்ரவித்³பி⁴: ஸாம்ப்ரதம் ஸ்த²பதிநா யோஜிதவ்யா
ப³ஹுதா⁴ |

பாகங்களாகச் செய்துகொண்டு, அவைகளில், ஒரு (1) அம்சம் குரம். இரண்டு (2) அம்சம் கமலம், ஒரு (1) அம்சம் கம்பம், மூன்று (3) அம்சம் கண்டம், ஒரு (1) அம்சம் கம்பம், இரண்டு (2) அம்சம் பத்மம், ஒரு (1) அம்சம் பட்டம், இரண்டு (2) அம்சம் பத்மம், ஒரு (1) அம்சம் நிம்னம், ஒரு (1) அம்சம் கமலம், ஒரு (1) அம்சம் உபரி கும்பம், இரண்டு (2) அம்சம் தளம், ஒரு (1) அம்சம் அந்தரம், ஒரு (1) அம்சம் ஊர்த்வப்ரதி, ஒரு (1) அம்சம் வாஜனம், இரண்டு (2) அம்சம் கலசம், ஒரு (1) அம்சம் * இவைகளைக் கல்பிக்கவேண்டும். 37

சில்பசாஸ்திரமறிந்தவர்கள், இவ்விதமாக பதினன்கு (14) விதமான மஸூரிகங்களைக்கூறி இருக்கிறார்கள். இவைகள் எல்லாவற்றையும் நாஸி, அங்கிரியுடன் யுக்தியுடன் கல்பிக்கவேண்டும். இவ்விதம் உறுதியுடன்கூடிய அங்கங்களைக் கூறியிருக்கிறேன். 38

* இதில் கடைசியிலுள்ள ஒரு அம்சத்திற்கு விஷயம் கூறப் படவில்லை.

[illegible]
[illegible]
[illegible] || ௩௯ ||

[illegible] ।
[illegible] || ௪௦ ||

[illegible] ।
[illegible] ||

இவைகளில் திருடமான புத்தியுள்ளவன், இந்த அளவுகளை, கூறியுள்ள அளவு, அதில் அரைப் பங்கு, முக்கால் பங்கு, கால் பங்குகளிலும், இரண்டு பங்கு, அண்ணே முக்கால் பங்குகளிலும் கல்பிப்பதாகும். அவைகளிலும், அவைகள் பலமாக இருக்கும்பொருட்டு, அங்குலக் கணக்கில், அங்கங்களின் அளவுகளைக் கூட்டியும் குறைத்தும் கொள்ளுவதாகும்.

ஸ்திரமான புத்தியையுடையவர்களும், சில்பதந்திரங்களை அறிந்தவர்களுமான பழய காலத்திய முனிவர்கள், அங்கவிருதிகளுடன் கூடிய உத்தம, மத்திம, அதம கிரஹங்களில், தளங்களின் அழகுக்காக இவிதம் அங்கங்களின் அளவுகளைக் கூறியுள்ளார்கள். 39

மஸூரகம், அதிஷ்டானம், வஸ்துவாதாரம், தராதலம், தலம், குட்டிமம், ஆதியங்கம், இவைகள் பரியாயவாசகங்களாகும். 40

ஜகதியின் நிஷ்கிராந்தம் எவ்வளவு இருக்கின்றதோ அவ்வளவு குமுதத்தின் நிஷ்கிராந்தம் இருக்கவேண்டும்.

தாமரைப்பூக்களின் நிர்கமமானது, அதன் உயரத்திற்கு ஸமமாக இருக்கவேண்டும். 41

उच्छ्रायात्तीव्रमंशेन पादं पादार्धमेव वा ।
वेत्राणामपि सर्वेषां चतुर्भागैकनिर्गमम् ॥

तत्समं वा त्रिपादं वा महावाजननिर्गमम् ।
सर्वं तीव्रक्रमं प्रोक्तं शोभायुक्तवशात्तु वा ॥

प्रवेशनिर्गमं कुर्यात् सर्वाङ्गानां मसूरके ।
प्रतिच्छेदं न कर्तव्यं सर्वत्रैव विचक्षणैः ॥

द्वारार्थं यत् प्रतिच्छेदं सम्पद्द्वारं अदोषकृत् ।
पादबन्धाधिष्ठानं छेदनीयं यथोचितम् ॥ ४५ ॥

தளாக்கிரத்தின் தீவ்ரமானது, அதன் உயரத்தைக் காட்டிலும் கால்பங்கு, அல்லது அரைக்கால் பங்கு இருக்க வேண்டும்.

வேத்திரங்களெல்லாவற்றிற்கும் (வேத்திரம்—பிரம்பு) நான்கில் ஒரு பாகம் நிர்கம் இருக்கவேண்டும். 42

மஹாவாஜநத்தின் நிர்கமமானது, வேத்திர நிர்கமத்திற்குச் சமமாகவோ, அதில் முக்கால் பங்காகவோ இருக்க வேண்டும்.

இவ்விதமாக தீவிர கிரமமானது கூறப்பட்டிருக்கிறது. அழகு உறுதி இவைகளைப்பொருத்துமிருக்கலாம். 43

மஸூரகத்தில் எல்லா அங்கங்களுக்கும் பிரவேச நிர்கமம் செய்யவேண்டும்.

ஸமர்தர்களாக இருப்பவர்கள், சகல அங்கங்களிலும் பிரதிச்சேதத்தைச் செய்யாமலிருக்கவேண்டும். 44

துவாரார்தமான பிரதிச்சேதமானது, ஸம்பத்துவாரமாக இருக்கக்கூடாது என்பதில்லை.

பாதபந்தமுள்ள அதிஷ்டானத்தை உசிதம்போல் சேதிக்கவேண்டும். 45

ஜந்மாதிவர்க்கபஞ்சே து தத்தத்துங்காவஸாநகே ।
ஸபட்டிகாஞ்சாதிஷ்டாநேऽப்யந்யேஷ்வேவம் ஸமூஹ்ய தாந் ।
யத் யத்தேசே து யோக்யம் ஸ்யாத் தத் தத்தேசே து
ஸம்யோஜயேத் ॥ ௪௬

ஸ்தம்போச்ச்ராயஸமம் வா மஸூரோச்ச்ராயகம்
தத்ஷட்ஸப்தாஷ்டாம்சகம் ஹாநமேவ து ।
வஸ்த்வாதாரம் ஹ்யேவம் ஸர்வவஸ்து-
ஷ்வேவம் புரா ஸம்ப்ரோக்தம் ஸர்வகர்த்ருணா ॥ ௪௭ ॥

இதி மயமதே வாஸ்துசாஸ்த்ரே அதிஷ்டாநவிதாநம் நாம
சதுர்தசோऽத்யாய: ॥

ஜன்மாதிகளான பஞ்சவர்கங்களில், அதனின் துங்காவஸானத்திலும், (உயரத்தின் முடிவில்) பட்டிகையோடு கூடிய அதிஷ்டானத்திலும், மற்றவைகளிலும் இவ்விதமாகவே ஊஹித்துக்கொள்ளவேண்டும். எது எந்த இடத்தில் பொருத்தமாக இருக்குமோ, அதை அந்த இடத்தில் உபயோகிக்கவேண்டும். 46

மஸூரோச்சத்தின் அளவானது, ஸ்தபோச்சத்திற்கு ஸமம், அல்லது, அதில் ஆறு, ஏழு, அல்லது எட்டில் ஒரு பாகம் குறைவாக இருப்பதாகும். சகலவிதமான வாஸ்துக்களிலும், வஸ்துவாதாரமானது, இவ்விதமிருக்கவேண்டுமென்று பரமேசுவரன், முன்னமே கூறியிருக்கிறார். 47

அதிஷ்டானவிதி என்னும் பதினான்காவது அத்தியாயம் முற்றும்.

அத பாதாத்யாய: ||

பாதாயாமம் ஸவிஸ்தாரம் ஸாகாரம் பூஷணாதிகம் |
ஸம்ஜ்ஞாலக்ஷணஸம்யுக்தம் ஸம்க்ஷேபத: க்ரமாத் ||

ஸ்தாணு: ஸ்தூணா ச பாதஸ்ச ஜங்கா ச சரணோ-
ங்க்ரிக: |
ஸ்தம்பஸ்து தளி: கம்ப: பர்யாயவசனானி ஹி || ௨ ||

ஸவிதஸ்த்யஷ்டஹஸ்தோக்தம் ஆத்யபாதாஸ்த்ய பாதகம் |
தத்த்வித்ர்யூர்த்வதள ஹீனம் ஸ்தம்போச்சம் த்வாதசாங்குலம் || ௩ ||

க்ஷுத்ரே க்ஷுத்ராம்சகாந்தேஷு வாத்யாம்சம் வா விதீயதே |
க்ஷுத்ராம்சோன்னதம் வாஸ்து ஹீனம் வாஸ்து பாதோன்னதம் || ௪ ||

பதினைந்தாவது அத்தியாயம்

பாதாயாமத்தையும், அதன் விஸ்தாரத்தையும், அதன் ஆகிருதியையும், அலங்காரங்களையும், மற்ற லக்ஷணங்களையும், நன்றாகவும், முறையுடனும், சுருக்கமாகவும் கூறுகிறேன். 1

ஸ்தாணு, ஸ்தூணம், பாதம், ஜங்கை, சரணம், அங்கிரி, ஸ்தம்பம், தூபம், கம்பம் இவைகள் பரியாயபதங்களாகும்.

எட்டு முழமும் ஒரு சாண் (12 அங்குலம்) உயரமுள்ளது, துவாதச பூமியின் (பன்னிரண்டு அடுக்குக்கட்டிடத்தின்) ஆத்தியபாதமாகும் (முதல் தலத்தின் ஸ்தம்பமாகும்). இரண்டாவது தலம் முதல், அந்த அளவில் முறையே பன்னிரண்டு அங்குலம் வீதமாக உயரத்தைக்குறைத்து, ஸ்தம்பத்தின் உயரத்தைக்கொள்ளவேண்டும். 3

அல்லது அந்த தலத்தில் காணப்படுகின்ற உயரத்தின் அம்சமானத்தினாலேயும், ஸ்தம்போச்சத்தைக் கொள்ளுவதாகும்.

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

ஸ்தம்பத்தின் உயரமானது, அதிஷ்டானத்தின் உயரத்தைப்போல் இருமடங்கு உயரமிருக்கவேண்டும். 4

ஸ்தம்பத்தின் உயரமானது, அதிஷ்டானோச்சத்தின் இரண்டு பங்கு உயரத்திற்கு அதிகமாக இருக்கவேண்டுமென்று பிரம்ஹதேவர் கூறி இருக்கிறார். 4½

மூல பூமியின் ஸ்தம்பத்தின் விஸ்தாரமானது இருபத்தெட்டு (28) அங்குலம இருக்கவேண்டும். 5

இரண்டாவது பூமி முதலிய பூமிகளிலுள்ள ஸ்தம்பங்களின் அகலமானது, முறையே, இரண்டிரண்டு அங்குலம் குறைந்து வரவேண்டும். எனவே பன்னிரண்டாவது தலத்தில் ஸ்தம்பத்தின் விஸதாரமானது ஆறு (6) அங்குலமிருக்கவேண்டும். 5½

பாதோச்சத்தில் பத்து (10) ஒன்பது (9) அல்லது எட்டு (8) பாகங்களில் ஒருபாகம், பாதவிஸ்தாரம் ஆகும். 6

குட்யஸ்தம்பத்தின் விஸ்தாரமானது, அதில் அரைப் பங்கு, கால்பஙகு, அல்லது முக்கால்பங்கு இருப்பதாகும்.

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ ௰ ॥

[illegible] ।
[illegible] ॥

அதைப்போல் இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஐந்து (5) அல்லது ஆறு (6) பங்கு, பித்தியின் (பித்தி சுவர்) விஸ்தாரம் இருக்கவேண்டும். 7

ஜன்மத்தின் உச்சியில், ஸ்தம்பம், நிக்ஷேபம், ஹோமம், இவைகள் ஸ்தம்பமிதியில் கூறப்பட்டிருப்பவைகளாம். 8

பிரதிக்குமேலே பிரதி ஸ்தம்பமிருக்கவேண்டும். அது உத்தரத்திற்குக் கீழ்வரையில் பொருந்தி நீண்டு இருக்க வேண்டும்.

ஜன்மத்திற்கு மேலே ஸ்தம்பத்தை வைக்கவேண்டும். ஸ்தம்பத்தின் உயரத்தில் மூன்றில் ஒருபங்கு ஆழமான பள்ளம் செய்து, அந்த இடத்தை ஸ்திரமான தலமாகச் செய்யவேண்டும். அதற்கு மேலே ஸ்தம்பத்தை வைக்க வேண்டும். அந்த ஸ்தம்பமானது பாதுகம் முதல் உத்தராந்தமாக இருக்கவேண்டும். இதற்கு நிகாதஸ்தம்பம் என்று பெயர். (நிகாதஸ்தம்பம்—பூமட்டத்திற்குக் கீழே புதைக்கப்பட்டிருக்கும் ஸ்தம்பம்.) 10

அந்த ஸ்தம்பத்தின் அக்ரபாகத்தின் அகலமானது, அதோபாகத்தின் அகலத்தில் பன்னிரண்டில் ஒருபாகம் முதல், ஆறில் ஒருபாகம் வரையில் குறைவாக இருப்பதாகும். 11

†[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥[illegible]॥

[illegible] ।
[illegible] ॥[illegible]॥

[illegible] ।

இரண்டாவது தலம் முதல் பன்னிரண்டாவது தலம வரையிலுள்ள ஸ்தம்பத்தின் உயரமானது, மூலஸ்தம்பத்தின் உயரத்தில், முறையே, ஆறில் ஒருபாகம குறைவாக இருக்கவேண்டும். இவ்விதமே அதன் விஸ்தாரத்தையும் கொள்ளவேண்டும். 12

ஸ்தம்பாக்ரத்தின் ஆகாரமானது, சதுரச்ரமாகவும், கும்பம், மண்டி இவைகளுடனும் இருக்கவேண்டும். இதற்கு "ப்ரம்ஹகாந்தம்" என்று பெயர்.

ஸ்தம்பத்தின் அக்ரமானது, அஷ்டாச்ரமாக இருந்தால் அதற்கு "விஷ்ணுகாந்தம்" என்று பெயர். 13

அது ஷடச்ரமாக இருந்தால் அதற்கு "இந்துகாந்தம்" என்று பெயர்.

அது ஷோடசாச்ரமாக இருந்தால் அதற்கு 'ஸெளம்யம்' என்று பெயர்.

அதன் அடியில் கர்ணமாத்திரம் சதுரச்ரமாகவும், அதன் உச்சியில் அஷ்டாச்ரம் அல்லது ஷோடசாச்ரம்

---

†[illegible] । [illegible] ।

கும்போத்ஸங்க்யாந்தம் வாபி பாதே காந்தம் ஸமீரிதம் ||௧௫||

விஸ்தாரத்விகுணம் ஶீர்ஷேऽஷ்டாஶ்ரம் யாம்யாஶ்ரகம் ।
வியுக்தம் கும்பஸங்க்யாப்யாம் மத்யாஷ்டாஶ்ரம் ததுச்யதே ||

அந்தராஷ்டாஶ்ரவ்ருத்தாஸ்ரம் பாதே ருத்ரச்சந்த: ।
தண்டார்த்தோர்த்வே த்விதண்டோச்சம் த்விகுணவிஸ்த்ருதம் ||

பத்மாஸநம் து கர்தவ்யம் மூலே பத்மாஸநம் ஸ்ம்ருதம் ।
யதேஷ்டாக்ருதிஸம்யுக்தம் மூலேஷு ஶோபாஸமந்விதம் || ௧௬ ||

அதோவாகக்ருதிவ்ருத்தம் மூலே பத்மாஸநாந்விதம் ।

அல்லது, விருத்தம், அல்லது, கும்பம், மண்டி இரண்டும் இருந்தால் அதற்கு "பூர்வாச்ரம்" என்று பெயர். 14½

அது விருத்தமாக இருந்தால் அதற்கு "ருத்ரகாந்தம்" என்று பெயர். 15

அதன் விஸ்தாரத்தைப்போல் இரண்டு பங்கு அஷ்டாச்ரம், அல்லது, சதுரச்ரம் இருந்து, கும்பம், மண்டி இரண்டும் இல்லாதிருந்தால் அதற்கு "மத்யாஷ்டாச்ரம்" என்று பெயர். 16

அதன் மத்தியில் சதுரச்ரம், அஷ்டாச்ரம், விருத்தம் இவைகள் ஸமமாக இருந்தால் அதற்கு "ருத்ரச்சந்தம்" என்று பெயர். 16½

தண்டத்தின் (தூணின் உச்சியின் அகலம்) அரைபாகத்திற்கு மேலே, இரண்டு தண்டம் உயரத்தில் இரண்டு பங்கு விஸ்தாரமாக பத்மாசனத்தைக் கல்பிக்கவேண்டும். இதற்கு "மூலேபத்மாஸனம்" என்று பெயர். 17

விரும்பிய உருவத்துடன் கூடியதாக இருந்தாலும்,

ஸஹஸ்ரம் மத்யஹாரே து ஹஸ்தகம் தஸ்ய விந்யஸேத் ||௧௯||

வ்யாலேபஸிம்ஹபூதாத்யைர்விந்யஸ்தம் பாதமூலத: |
யதேஷ்டாக்ருதிஸம்யுக்தம் தத்தந்நாம்நா விசேஷிதம் || ௨௰ ||

ச்ருதேவ தத்ராயாமே பாதே கண்டபேதஸமந்விதம் |
யுக்தம் தத் கும்பமண்டிப்யாம் பாதம் தத்கண்டபாதகம் ||

ஊர்த்வே கர்ணப்ரமாணம் சதுரச்ரம் ததோ ஹி |
தண்டார்த்தாயாமத: பத்மம் து அஷ்டாச்ரவஸிதம் ||௨௨||

தத்ரோர்த்வே பத்மம் வ்ருத்தம் வா ஷோடசாச்ரம் ததோ |

உச்சியில் மண்டிதத்துடன் கூடியதாக இருந்து, சக்கிரவாகங்களின் உருவங்களினால் சுற்றிலும் நிறைந்திருந்து, அதன் அடியில் பத்மாஸனமிருந்து, மத்தியில் பத்ரத்துடனுமிருந்தால், "துவிமண்டிதப்பத்ரகம்" என்று பெயர். 19

அடியில் யாளி, யானை, சிங்கம், பூதங்கள், இந்த உருவங்களுடன் கூடியதாக இருந்து, விருப்பமான உருவத்துடன் கூடியதாகவுமிருந்தால், அந்தந்த உருவங்களுக்குத் தக்க பெயராகும். 20

அதன் உயரத்தில் கிடைத்தகே கண்டபேதத்துடனிருந்து, அது கும்பம், மண்டி, இவைகளுடன் கூடியதாகவுமிருந்தால், அதற்கு கண்டபாதம் என்று பெயர். 21

அதுவே, விடப்பட்ட மேலேசெய்யவேண்டிய காரியங்களுக்கு அங்கமான பிண்டிபாதமாகும்.

அதன் உச்சியில் கர்ணத்தின் அளவு, சதுரச்ரத்துடன் கூடியதாகவும், அதற்குக்கீழே அரைதண்ட அளவில், (தண்டம்-தூணின் உச்சியின் அகலம்) பத்மம், அஷ்டாச்ர

தது³ர்த்⁴வே விகாராக்³ரம் ஊர்த்⁴வாந்தரம் ததோ வேதி³கா ||

ததூ³ர்த்⁴வோத்தரே மத்⁴யபட்டம் ப்ரமாணகம் |
பத்³மம் ச ஷோட³ஶாஸ்ரம் ச வேதி³கா பரிகல்பயேத் ||உச||

மத்⁴யே பூர்வம் ப்ரமாணம் யதா³ சித்ரகண்டம்
ததா³க்²யாதே |
ததே³வாஷ்டாஸ்ரகம் மத்⁴யபட்டம் ஸ்ரீகண்டமாக்²யாதே ||உரு||

மத்⁴யபட்டம் கலாஸ்ரம் சேத் ஸ்ரீவஜ்ரஸ்தம்ப⁴மாக்²யாதே |
சதுரஸ்ரகாரம் ப்ரமாணம் யதா³ த்ரிபட்டக்ஷேபணாந்விதம் ||

க்ஷேபணஸ்தம்ப⁴மித்யுக்தம் பட்டம் பத்ராதி³(பத்ரவிசி)
ஶோபி⁴தம் |

மும், அதற்குக்கீழே ஸ்காரா ரச்ரமும், ஒருதண்டமாத்திரத்தில் அப்ஜமும், அதற்குக்கீழே ஒரு தண்ட அளவில், மத்திய பட்டமும், பூகாசமும், முன்பு கூறப்பட்டதைப்போல பத்மம் ஷோடசாச்ரம் இவைகளையும் கல்பிக்கவேண்டும். அதற்குக்கீழே, மீதமுள்ள பாகமானது சதுரச்ரமாக இருக்க வேண்டும். இவ்விதமாக இருப்பதற்கு "சித்திரகண்டம்" என்று பெயர். 24½

அதுவே அஷ்டாச்ரம், மத்தியபட்டத்துடனிருந்தால், அதற்கு "ஸ்ரீகண்டம்" என்று பெயர்.

அதன் மத்தியபட்டமானது கலாச்ரமாக (ஷோடசாச்ரமாக) இருந்தால், அதற்கு "ஸ்ரீவஜ்ரஸ்தம்பம்" என்று பெயர்.

(ஸ்தம்பத்தின்) உச்சியின் உருவமானது சதுரச்ரமாகவும் த்ரிபட்டம் க்ஷேபணத்துடனும் இருந்தால், அதற்கு "க்ஷேபணஸ்தம்பம்" என்று பெயர். அதன் பட்டமானது, பத்திரங்களினாலே (பத்ரம் - இலை) விசேஷமாக அலங்கரிக்கப்பட்டிருக்கவேண்டும். 26½

[illegible]

ஸ்தம்பத்தின் உச்சியிலும் கீழேயுமிருக்கின்ற சிகையின் மானமானது, (உச்சியின் அகலத்தில்) மூன்றில் ஒரு பங்கு அல்லது நான்கில் ஒருபங்கும் (உயரமும்) அவைகள் போதிகையுடன் (பொதிக்கட்டையுடன்) பொருந்தியும், பல உருவங்களினுலே அலங்கரிக்கப்பட்டுமிருக்கவேண்டும்.

ஸ்தம்பத்தின் உச்சியின் அகலத்திற்கு, "தண்டம்" என்று பெயர் கூறப்படுகிறது. 28

ஹர்மியங்களின் (வீடுகளின் அல்லது மாடிக்கட்டிடங்களின்) சகல அங்கங்களேயும், தண்டமானத்திஞல் அளக்க வேண்டும். 28½

கலசங்களின் (தூணின் உச்சியில் அமைக்கப்படும் குடத்திற்கு) உயரமானது, தண்டமானத்தில், முறையே ஒன்ணேகால், ஒன்ணரை, ஒன்ணேமுக்கால், இரண்டு பங்குகளிலிருந்தால், அவைகளுக்கு, முறையே, ஸ்ரீகரம், சந்திரகாந்தம், ஸௌமுக்யம், பிரியதர்சனம், என்று பெயர்கள் கூறப்பட்டிருக்கின்றன. 30

[illegible]
[illegible] प्रकीर्तितम् ॥ ३२ ॥

[illegible] हीरकम् ।
हीरं पादसमव्यासं तत्कर्णनास्य विस्तृतम् ॥

तत्कर्णं कुम्भविस्तारं तत्कर्णं फलकायतम् ।
अथवा फलकायामं चतुर्दण्डं त्रिदण्डकम् ॥ ३४ ॥

[illegible] त्रिदण्डकम् ।
[illegible]
[illegible] ॥ ३५ ॥

போதிகை கண்டத்தின் மத்தியம், கும்பம், ஸ்கந்தம், பத்மம், மாலாஸ்தானம், இவைகளை ஸ்தம்பாக்கிரத்திலிருந்து கிரமமாகக் கல்பிக்கவேண்டும். 31

கும்பத்தின் உயரத்தில் ஒன்பதில் இரண்டு அல்லது நான்கு பாகங்களினுல் கமலம், ஒரு பாகத்தினுல் கண்டம், ஒரு பாகத்தினுல் முகம், ஒரு பாகத்தினுல் பத்மம், அரை பாகத்தினுல் ஹீரகம், அரைபாகத்தினுல் விருத்தம், அரை பாகத்தினுல் இரண்டு ஹீரகம், இவைகளை கல்பிக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. 32½

ஹீரங்கள் இரண்டும், பாதத்திற்கு சமமான விஸ்தாரமுள்ளவைகளாக இருக்கவேண்டும். அதன் ஆஸ்ய விஸ்தாரமானது, அதன் கர்ணத்திற்கு சமமாக இருக்கவேண்டும். அந்த கர்ணமானது, கும்பத்தின் விஸ்தாரமிருக்கவேண்டும். அந்த கர்ணமானது பலகையின் அகலமிருக்கவேண்டும். அல்லது பலகையின் நீளமானது நான்கு தண்டம், அல்லது மூன்று தண்டமிருக்கவேண்டும். 34

அதனுடைய நீளமானது மூன்றரை தண்டமாகும்.

भागेन वेत्रमंशेन पद्मं पाल्याभमिष्यते ।
नागवक्त्रसमाकारमावेत्रात् पादरूपवत् ॥ ३६ ॥

पादविस्तारविस्तारं धृक्कण्ठं वीरकाण्डकम् ।
सर्वेषामपि पादानां वीरकाण्डं चतुरश्रकम् ॥ ३७ ॥

तदुच्चस्कन्धयत्रिपादांश(ं) दण्डांशं संसमिष्यते ।
तदधस्तात्तदर्धेन पद्मं पत्रविचित्रितम् ॥ ३८ ॥

मालास्थानस्य कण्ठस्य दण्डमानसमुन्नतिः ।
पादविस्तारविस्तारा पोतिका तत्समोदया ॥

உயரமானது மூன்று தண்டமாகும் அதன் உயரத்தில் மூன்றில் ஒருபாகம், உத்ஸந்தி இருக்கவேண்டும் என்று விரும்பப்படுகிறது. ஒருபாகம் வேத்திரம், ஒரு அம்சம் பத்மம் இருக்கவேண்டும். அந்த பத்மமானது பாலியைப் போல இருக்கவேண்டும். 35½

பாதத்தின் உருவத்தைப்போலும், வேத்திரத்திலிருந்து நாகத்தின் முகத்தைப் போன்ற உருவமுடையதாகவும் இருக்கவேண்டும். 36

த்ருக்கண்டம், வீரகாண்டம் இவைகள், பாதத்தின் விஸ்தாரத்தைப் போன்ற விஸ்தாரமுடையதாக இருக்க வேண்டும். 36½

பாதங்கள் எல்லாவற்றுக்கும், வீரகாண்டமானது சதுரச்ரமாக இருக்கவேண்டும். 37

ஸ்கந்தமானது, அதனுடைய உயரத்தில் முக்கால் பங்கு இருக்கவேண்டும். அதற்குக்கீழே அதற்கு அரைப் பங்கு, பத்திரங்களினாலே அலங்கரிக்கப்பட்ட பத்மம் இருக்கவேண்டும். அதற்குக் கீழே மாலாஸ்தானமானது, தண்டத்தின் அளவு உயர்ந்திருக்கவேண்டும். போதிகையானது, பாதத்தின் விஸ்தாரத்தைப் போன்ற விஸ்தாரமும், அதைப்போன்ற உயரமுமுடையதாக இருக்கவேண்டும்.

पञ्चदण्डसमायामा श्रेष्ठा योत्तमा कनिष्ठिका |
श्रयता सा त्रिदण्डेन अर्धदण्डेन दीर्घ(दीर्घ)का ||

त्रिभागोनात्रिभागोच्चायामा पोतिका भवेत् |
सवेदिकं तत्सहितानां सकुम्भानां
अर्धमध्यमम् || ௪௧ ||

त्र्यंशं केवलानां तु पादानां प्रविधीयते |
सर्वेषामपि पोतानां यथेष्टायतमीरितम् || ௪௨ ||

तद्द्वित्रि अर्धहस्तोर्ध्वा वा विस्तारे तु पट्टिका |
कर्णं त्र्यंशवृद्धं मायामं विधीयते ||

பொதிகையானது ஐந்து தண்டத்திற்கு ஸமமான உயர முடையது உத்தமமாகும். அதில் அரைப்பங்கு (பாதத்தைப்போல் 2½ பங்கு) உயரமுள்ளது அதமமாகும்.

அந்தப் பொதிகையானது மூன்று தண்டம் விஸ்தார முள்ளதாகவும், நான்கு தண்டம் நீளமுள்ளதாகவும் இருக்க வேண்டும். 40

கீழே கூறப்பட்ட உயரத்திலும் அகலத்திலும் மூன்றில் ஒரு பங்கு குறைவாக இருக்கும் பொதிகையானது மத்திம மாகும். 40½

அந்தப் பொதிகையானது, மண்டியுடனும் கும்பத் துடனுமிருந்தால் அதன் அகலமும் உயரமும் நான்கு பங்கு (பாத விஸ்தாரத்தைப் போல்) இருக்கவேண்டும். 41

பாதமானது மண்டி முதலியவைகளில்லாமல் சாதாரண மாக இருந்தால், அதன் அகலமும் உயரமும், பாத விஸ்தாரத்தைப்போல் மூன்று பங்கு இருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. 41½

பொதிகைகள் எல்லாவற்றிற்கும் நீளமானது, இஷ்டம் போல் கல்பித்துக்கொள்ளுவதாகும். 42

त्रिभागं वा चतुर्भागं तत्समानाद्विहीनके ।
सक्षुद्रक्षेपणं मध्यपट्टं पत्रविचित्रितम् ॥४४॥

सर्वत्र समास्त्वन्योन्यहीना वा तरङ्गकाः सम्मताः ।
शिखानिष्क्रान्तमर्धं वा त्रिभागं वा स्वतारतः ॥४५॥

मुष्टिबन्धोपरिक्षिप्तव्यालसंघसमाकृतिः ।
रम्यबन्धक्रियावल्ली चित्रा वा ग्रन्थ(न्थि)पट्टिका ॥४६॥

सनासीकं सवक्त्रं सनाटकस्थानकं वा ।

பொதிகையின் மேலேயுள்ள பட்டிகையானது, பொதிகையின் உயரத்தில் மூன்றில் ஒரு பங்கு, அல்லது நான்கில் ஒரு பங்கு உயரமுள்ளதாக இருக்கவேண்டும்.

அதன் சாயாமானமானது அதில் அரைபாகம், மூன்றில் இரண்டுபாகம், அல்லது முக்கால் பங்கு இருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. 43

அதன் தரங்கஸ்தானமானது மூன்று அல்லது நான்கு பங்கு இருக்கவேண்டும். க்ஷுத்திர க்ஷேபணத்துடன் கூடிய மத்தியபட்டமானது, பத்திரங்களினல் அலங்கரிக்கப் பட்டிருக்கவேண்டும். 44

எந்த இடத்திலும் தரங்கங்கள் (தரங்கம்—அலை) ஸமமாகவும், ஒன்றுக்கொன்று குறைவாகவும் இருப்பது அனுமதிக்கப்பட்டதாகும். 44½

உச்சியின் நிஷ்கிராமமானது அதன் விஸ்தாரத்தில், அரைப்பங்கு அல்லது மூன்றில் ஒருபாகம் இருக்கவேண்டும்.

கிரந்த (தி) பட்டிகையானது, முஷ்டி பந்தத்திற்கு மேலே கல்ப்பிக்கப்பட்ட யாளியின் கூட்டத்தைப்போன்ற உருவமுடையதாயும், அழகான பந்தக்கிரியை, கொடி, இவைகளினலே விசித்திரமாகவுமிருக்கவேண்டும். 46

பூதேப⁴மகரைர்வ்யாலைர்யுக்தம் ததூர்த்⁴வபூ⁴ஷணம் ॥ ௪௭ ॥

பார்ஶ்வயோ: போதிகாமத்⁴யே பட்டம் பாத³விஸ்தாரமேவ ச |
நாநாசித்ரைர்விசித்ரா சேத் ஸா ப்ரோக்தா சித்ரபோதிகா ॥ ௪௮ ॥

பத்ரைர்விசித்ரிதா பத்ரபோதிகேதி ப்ரகீர்திதா |
மஹார்ணவதரங்கா³ப⁴தரங்கா³ட்⁴யா தரங்கி³ணீ ॥ ௪௯ ॥

அஷ்டஷட்சதுஸ்ஸங்க்²யா வா ஸூர்யாந்தரங்ககா: |

அல்லது நாளீகத்துடன் கூடியதாகவோ, அல்லது ஸம தலமாகவோ, அல்லது நாடகத்துடன் கூடியதாகவோ இருக்கவேண்டும்.

அதன் உச்சியின் அலங்காரமானது, பூதங்கள், யானைகள், மகரங்கள், யாளிகள், இவைகளுடன் கூடியதாக இருக்கவேண்டும். 47

பொதிகையின் மத்தியில் பக்கங்களின் பட்டமானது, பாதத்தின் விசாலமுள்ளதாக இருக்கவேண்டும்.

பலவித சித்திரங்களினாலே அலங்கரிக்கப்பட்டிருந்தால், அதற்கு "சித்திரபோதிகை" என்று பெயர். 48

அந்தபோதிகையானது, இலைகளினாலே அலங்கரிக்கப்பட்டிருந்தால், அதற்கு, "பத்ரபோதிகை" என்று பெயர்.

அது, மஹா ஸமுத்திரத்தின் அலைகளைப்போன்ற அலைவடிவங்களினாலே அலங்கரிக்கப்பட்டிருந்தால், அதற்கு, "தரங்கிணீ" என்று பெயர். 49

அந்த தரங்கங்கள் (தரங்கம்—அலை) நான்கு (4) ஆறு (6) எட்டு (8) பத்து (10) அல்லது பன்னிரண்டு (12) இருக்கவேண்டும். 49½

𑌬𑌹𑌵𑍋𑌽𑌪𑌿 𑌸𑌮𑌾𑌸𑍍𑌵𑍇𑌤𑍇 𑌆𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌃 𑌸𑌮𑌾𑌃
𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ॥ ௫௦ ॥

𑌪𑌾𑌦𑌾𑌰𑍍𑌧𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌂 𑌵𑌾 𑌭𑌿𑌤𑍍𑌤𑍇𑌃 𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑌮𑍍 ।
𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌾𑌷𑍍𑌟𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥ ௫௧ ॥

𑌦𑍍𑌵𑌿𑌹𑌸𑍍𑌤𑌾𑌦𑍍𑌯𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌹𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ।
𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌤𑍁 𑌨𑌵𑌭𑍇𑌦𑌂 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ॥

𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑍋𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌾𑌂𑌶𑌭𑍇𑌦𑍇𑌨 𑌯𑌥𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑍇 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌶𑌿𑌕𑍇 ॥

பல அலைகளிருந்தாலும், அவைகள் ஒன்றுக்கொன்று ஸமமாகவும், முறையே சிலாக்யமானவைகளாகவும்மிருக்க வேண்டும். 50

பித்தியின் ஸ்தம்பநிர்கதமானது, (நிர்கதம்—பூமட்டத்திற்குக் கீழேயுள்ள பாகம்) ஸ்தம்போச்சத்தில் கால்பங்கு, அரைப்பங்கு அல்லது முக்கால் பங்கு இருக்கவேண்டும். இந்த விகிதமானது, முறையே, சதுரச்ரம், அஷ்டாச்ரம், வ்ருத்தமான ஸ்தம்பங்களுக்குக் கூறப்பட்டதாகும். 51

ஸ்தம்பங்களின் இடைவெளியானது, இரண்டு முழம் முதல் நான்கு முழம் வரையிலிருப்பதாகும். அது, இரண்டு முழம் முதல் ஆறு அங்குலம் வீதமாகக் கூட்டிவர, ஏழுவித மான அளவுடையதாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. 52

தூணில் காணப்படும் உயரத்தில், யுக்தியுடன் அம்ச விபாகம் செய்துகொள்ளுவதுமாகும்.

ஒரு ஸ்தம்பத்திற்கும் மற்றொரு ஸ்தம்பத்திற்கும் மத்திய பாகத்தின் அளவானது, எல்லா இடங்களுக்கும் பொதுவாகக் கூறப்பட்டதாகும். 53

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।

ஸ்தம்பபாகத்தை விஷமமாகப் (சமபாகமில்லாமல்) பிரித்தால், அது, வாஸ்துவையும் வஸ்துவையும் நாசம் செய்துவிடும்.

நீண்டவையாவும் அந்தந்த பெயரையே அடையும்.54

சிலாஸ்தம்பத்தின் விசாலமானது, தாருஸ்தம்பத்தின் விசாலம், அதைப்போல் ஒண்ணரைப்பங்கு, இரண்டு பங்கு, அல்லது மூன்று பங்கு இருப்பதாகும். சிலாஸ்தம்பத்தின் விசாலமானது, தேவாலயங்களுக்குக்கூறப்பட்டதாகும். மனிதர்களின் வாஸ்துவுக்குக் கூறப்பட்டதல்ல. 55

ஸ்தம்பங்கள் எல்லாவற்றையும், செங்கற்கள், கருங்கல், சகலவிதமான மரங்கள், இவைகளினாலே கல்பிக்க வேண்டுமென்று பழய காலப் பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். 55½

ஸ்தம்பங்கள், தேவாலயங்களில் ஒத்தப்படையாகவும் இருப்பதாகும், இரட்டைப்படையாகவும் இருப்பதாகும்.

மனிதர்களின் வாஸ்துக்களில், ஸ்தம்பங்கள் ஒத்தப் படையாகவே தானிருக்கவேண்டும் என்று கூறப் பட்டிருக்கிறது. 56

गृहाणां भित्तिमध्ये तु शालानां तु तथा भवेत् ॥

प्रासादानां तु पादबाह्ये पादमध्ये शयनासने ।
उपानादिशिरः केचित् केचित् स्तूप्यन्तमुन्नतम् ॥

उभयं सर्वत्रोक्तं प्रासादे मानवेदिभिः ।
पादबाह्ये पादमध्ये वा सभामण्डपयोर्मतम् ॥

अन्तर्बहिस्तु मध्ये तु [illegible] ॥
[illegible] एवमेवं तु सर्वेषां सम्मतं मतम् ॥

அந்தஸ்தம்பம், பஹிஸ்தம்பம் இவைகள், (கூடம் தாவரம் போன்ற இடங்களிலுள்ள தூண்கள்.) ஒரே சூத்திரத்தில் (நேருக்கு நேராக) இருக்கவேண்டும். 56½

கிருஹங்களில் ஸ்தம்பமானது, பித்தியின் மத்தியிலிருப்பதாகும். சாலைகளிலும் அவ்விதமே, ஸ்தம்பங்கள் பித்தி மத்தியிலிருப்பதாகும். 57

பிராஸாதங்களில், (தேவாலயம்-ராஜகிருஹங்களில்) பாத பாஹ்யத்திலும் (பாஹ்யம்-வெளிப்பக்கம்) பாதமத்தியிலும் (பித்தியிலுள்ள ஸ்தம்பமானது) இருப்பதாகும். இவ்விதமே சயனத்திலும், ஆசனத்திலும், இருப்பதாகும். 57½

சிலர், உபானம்முதல், சிரஸ் (உச்சி) வரையில், உயரத்தைக் கணக்கிடுகிறார்கள். மற்றும் சிலர், உபானம் முதல் ஸ்தூபி வரையில் (ஸ்தூபியின் உச்சிவரையில்) உயரத்தைக் கணக்கிடுகிறார்கள். 58

முனிவர்கள் இந்த இரண்டுவிதமான அளவுகளையும் எல்லாவிடங்களிலும் பிராஸாத விஷயமாகக் கூறியிருக்கிறார்கள். 58½

சபை, மண்டபம் இவைகளின் உயரத்தை, பாத பாஹ்யம், அல்லது பாதமத்யம், இவைகளில் அளந்து கொள்ளுவதாகும். 59

விபரீதே விபத்தி: ஸ்யாதிதி ஶாஸ்த்ரவிநிஶ்சய: ।
ஸ்தம்போத்தராதிகாநாம் து த்ரவ்யம் த்ருமஶிலேஷ்டகா: ॥

ஸ்நிக்தஸாரா ஸுஸாராஶ்ச ஸம்யக் பாகஸமந்விதா: ।
அவக்ரா நிர்வ்ரணாஸ்ஸர்வே ம்ருஷிதவர்ஜா ஸுஶீர்ணஹா: ॥

புண்யாத்ரிவநதீரோத்தா த்ருஶ்யரம்யா மநோரமா: ।
ஸர்வஸம்பத்ஸம்ருத்தித: ஸந்தேஹோ ந ஸம்ஶய: ॥

சாலைகளின் (ஸ்தம்ப) சூத்திரமானது, வெளியிலும் உள்ளேயும் மத்தியிலுமிருக்கவேண்டும். இதை இவ்விதமாகவே உபயோகிக்கவேண்டும். இவ்விதம் செய்வதால் சகலவிதமான சம்பத்துக்களுமுண்டாகும். 60

இதற்கு விரோதமாக உபயோகிக்கப்பட்டால், அது விபத்துக்களையுண்டுபண்ணும். 60½

ஸ்தம்பங்கள், உத்தரங்கள் முதலியவைகளின் திரவியமானது, மரம்—கருங்கல்—அல்லது செங்கல்லாக இருக்கவேண்டும். 61

ஸ்தம்பம் உத்தரம் முதலியவைகளுக்கான மரங்கள், தைலப்பசையுள்ளவைகளாகவும், நல்ல உறுதியுள்ளவைகளாகவும், நன்கு வைரம் பாய்ந்தவைகளாகவும், கிழட்டுத்தனமடையாதவைகளாகவும், தருணவஸ்தையில்லாதவைகளாகவும், கோணலில்லாதவைகளாகவும், காயம்படாதவைகளாகவும் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட மரங்களையே கிரஹிக்க வேண்டும். 62

புண்ணியமான பூமி, மலை, வனம், நதீ, இந்த இடங்களிலிருப்பவைகளும், பார்ப்பதற்கு அழகாக இருப்பவைகளும், மனதிற்கு இன்பமளிக்கக் கூடியவைகளுமான மரங்கள், சகலவிதமான சம்பத்துக்களின் சம்ருத்தியையும் அளிப்பவைகளாகும். அதில் சந்தேகமில்லை. 63

𑌕𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑌃 𑌶𑌾𑌕𑌸𑍍𑌤𑌥𑌾 𑌮𑌧𑍂𑌕𑌃 𑌸𑍍𑌤𑌪𑌕𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌶𑌿𑌂𑌶𑌪𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌾𑌜𑌕𑌰𑍍𑌣𑍀 𑌕𑍍𑌷𑍀𑌰𑌿𑌣𑍀 𑌪𑌦𑍍𑌮𑌚𑌨𑍍𑌦𑌨𑍇 ॥

𑌪𑌿𑌶𑌿𑌤𑍋 𑌧𑌨𑍍𑌵𑌨𑌃 𑌪𑌿𑌣𑍍𑌡𑍀 𑌸𑌿𑌂𑌹𑍋 𑌰𑌾𑌜𑌾𑌦𑌨𑌃 𑌶𑌮𑍀 ।
𑌤𑌿𑌲𑌕𑌶𑍍𑌚 𑌪𑍁𑌮𑌾𑌂𑌸𑌸𑍍𑌤𑍇 𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌯𑍋𑌗𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌮𑍀𑌰𑌿𑌤𑌾𑌃 ॥௬௫॥

𑌨𑌿𑌮𑍍𑌬𑌾𑌸𑌨𑌶𑌿𑌰𑍀𑌷𑌾𑌶𑍍𑌚 𑌏𑌕𑌃 𑌕𑌾𑌲𑌶𑍍𑌚 𑌕𑌟𑍍𑌫𑌲𑌃 ।
𑌤𑌿𑌨𑌿𑌶𑍋 𑌵𑌿𑌕𑌙𑍍𑌕𑌤𑌶𑍍𑌚𑍈𑌵 𑌪𑌨𑌸𑌃 𑌸𑌪𑍍𑌤𑌪𑌰𑍍𑌣𑌕𑌃 ॥௬௬॥

𑌭𑍌𑌮𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌗𑌵𑌾𑌕𑍍𑌷𑍀 𑌚 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌃 ।
𑌏𑌕𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌃 𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌾 𑌮𑌨𑍋𑌹𑌰𑌾𑌃 𑌸𑍁𑌖𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ॥

𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌦𑌕𑍍𑌪𑍍𑌰𑌵𑌣𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌶𑌿𑌲𑌾𑌶𑍍𑌶𑍁𑌭𑌦𑌾𑌃 ।

கருங்காலி, தேக்கு, இலுப்பை, ஸ்தபகம், சிம்சுபை, மருது, அஜகர்ணி, க்ஷீரிணீ, பத்மம், சந்தனம், பிசிதம், தன்வனம், பிண்டி, ஸிம்ஹம், ராஜாதனம் (முறள்), வன்னி, திலகம், இவைகள் புருஷ விருக்ஷங்களாம். இந்த விருக்ஷங்கள் ஸ்தம்பங்களுக்கு உபயோகிக்கத் தக்கவைகளாகக் கூறப்பட்டிருக்கின்றன. 65

வேம்பு, வேங்கை, வாகை, ஏகம், காலம், கட்பலம், சிமிசை (தினிசை), விகுசம் (சார எலுமிச்சை), பலா, ஏழிலைப்பாலை, பௌமை, கவாக்ஷீ, இந்த மரங்கள் ஊர்துவ விருக்ஷங்களாம். (ஸ்தம்பங்களுக்கு மேலே செய்யக்கூடியவைகளுக்கு உபயோகிக்கத் தக்கவைகளாம்). 66½

ஒரே நிறமுள்ளவைகளாகவும், உறுதியுள்ளவைகளாகவும், மனோஹரமானவைகளாகவும், சுககரமான ஸ்பர்சமுடையவைகளாகவும், கிழக்கில் சாய்ந்தும் வடக்கில் சாய்ந்தும் இருப்பவைகளாகவும் இருக்கும் சிலைகள், சுபங்களையளிப்பவைகளாம். 67½

ஸ்த்ரீலிங்காஸ்சாபி பும்லிங்கா: நிர்தோஷாஸ்ச நபும்ஸகா: ||

ஸம்பந்நாஸ்ச த்(ரி)யாஸ்ச ஸம்வ்ருதாஸ்லேஷகாஸ்சுபா: |
ஸ்த்ரீலிங்காஸ்சாபி பும்லிங்கா ஹீநாஸ்ச்சித்ராதிவர்ஜிதா: || ௬௯ ||

ஏதைரேவம்விதைர்த்ரவ்யை: க்ருதம் வஸ்து ஸம்ருத்தயே |
தர்மார்த்தகாமஸௌக்யாநாம் ஸாதநம் பவதி நிஸ்சிதம் ||

ந தேவதாலயாந்தஸ்தா: வ்ருக்ஷா வா ந வித்யுதா |
ந தாவாநலஸம்ப்லுஷ்டா ந பூதாலயமத்யகா: || ௭௧ ||

பெண்சிலை, ஆண்சிலை, தோஷமற்ற நபும்ஸகசிலை இவைகள் நல்ல கனமுள்ளவைகளாகவும், சமமாக செதுக்கப்பட்டவைகளாகவும், இனிமையான ஒலியுள்ளவைகளாகவும் இருப்பவைகள், சுபகரமானவைகளாம். அந்த சிலைகள், ஸ்திரீ சிலைகளானாலும், புருஷசிலைகளானாலும், உடைந்து அல்லது துவாரமுள்ளவைகளாக இருக்கக் கூடாது. 69

இவ்விதமான திரவியங்களினாலே நிர்மாணம் செய்யப் படும் வஸ்துவானது (கிருஹமானது), ஸகல ஸம்ருத்திகளையு மளிப்பதாகும். தர்மம், அர்த்தம், காமம், சௌக்கியம் இவைகளையளிக்கத் தக்கதாகும் என்பது நிச்சயம். 70

தேவாலயத்திற்குள்ளிருக்கும் மரங்களை கிரஹிக்கக் கூடாது.

இடிவிழுந்த மரங்களை கிரஹிக்கக்கூடாது.

காட்டுத்தீயினால் பொசுங்கிய மரங்களை கிரஹிக்கக் கூடாது.

பூதாலயங்களின் மத்தியிலுள்ள மரங்களை கிரஹிக்கக் கூடாது. 71

ந மஹாபதஸம்ஜாதா ந க்ராமாந்தஸமுத்பவா: ।
கடாம்ப:ஸிராஸிக்தா பக்ஷிப்ராணிநிஷேவிதா: || ௭௨ ||

ந வாயுபக்நா ந கஜை: ஸம்பக்நா நைவ ம்ருதாஸ்ததா ।
ந சண்டாலஜநாகீர்ணா ந ஸர்வஜநஸேவிதா: || ௭௩ ||

அந்யோந்யவேஷ்டிதா பக்நா ந வல்லீகுல்மஸம்ஶ்ரிதா: ।
ந ஸ்நாயுஸம்யுதா ஶீர்ணா ந ஸிராகோடராவ்ருதா: ||

மஹாபதங்களில் (ராஜமார்கங்களில்) முளைத்திருக்கும் மரங்களை கிரஹிக்கக்கூடாது.

கிராமங்களில் முளைத்த மரங்களை கிரஹிக்கக்கூடாது.

குடத்தினுல் ஜலம் விட்டு வளர்க்கப்பட்ட மரங்களை கிரஹிக்கக்கூடாது

பக்ஷிகளும் மிருகங்களும் தங்கும் மரங்களை கிரஹிக்கக் கூடாது. 72

காற்றடித்து முறிந்த மரங்கள், யானைகளினுல் முறிக்கப் பட்ட மரங்கள், ஜீவனற்ற (மடித்துப்போன) மரங்கள் இவைகளை கிரஹிக்கக்கூடாது.

சண்டாள ஜனங்களினுல் சூழப்பட்டிருக்கும் மரங்களை கிரஹிக்கக்கூடாது.

சகல ஜனங்களும் தங்கக்கூடிய மரங்களை கிரஹிக்கக் கூடாது. 73

ஒன்ருேடொன்று பின்னிக்கொண்டு முறிந்த மரங்கள், புத்துக்கள் வளர்ந்த மரங்கள், இவைகளை கிரஹிக்கக் கூடாது.

கொடிகளினுல் சூழப்பட்ட மரங்கள், நெருக்கமாக முளைத்திருக்கும் மரங்கள், இவைகளை கிரஹிக்கக்கூடாது.

நரம்புகள் தெரியும் மரங்கள், பொந்துகள் விழுந்த மரங்கள், இவைகளை கிரஹிக்கக்கூடாது. 74

நாங்குராவ்ருதஸர்வாங்கா ந ப்⁴ருஶம் கீடதூ³ஷிதா: ।
நாகாலப²லிநோ க்³ராஹ்யா ந ஶ்மஶாநஸமீபகா³: ॥

ஸபா⁴சைத்யஸமீபஸ்தா² தே³வார்தா²நாம் ந ஸம்ஶ்ரயா: ॥
வாபீகூபதடாகாதி³வாஸ்துஷ்வபி ச ஸம்ப⁴வா: ॥ ௭௬ ॥

விஶீர்ணவாஸ்துஜாதஸ்து வ்ருக்ஷ: ஸர்வவிபத்கர: ।
தஸ்மாத் ஸர்வப்ரயத்நேந ஶுத்³த⁴ம் வ்ருக்ஷம் ப்ரக்³ருஹ்யதாம் ॥

ஶீர்ஷா தே³வாலயே க்³ராஹ்யா விப்ராதி³நிலயோசிதா: ।
பார்தி²வாநாம் ச கர்தவ்யா ந க்ஷயாந்தக வேஶ்ம
ப்ரதிஷ்டயோ: ॥ ௭௮ ॥

மரம் முழுமையும் முளைகளுள்ள மரங்கள், பூச்சிகளினுல் மிகவும் கேடடைந்த மரங்களை கிரஹிக்கக்கூடாது.

அகாலத்தில் பலனைக்கொடுக்கும் மரங்களைக் கிரஹிக்கக் கூடாது.

சுடுகாட்டிற்கு சமீபத்திலுள்ள மரங்களைக் கிரஹிக்கக் கூடாது. 75

சபை, நாற்சந்துகளிலுள்ள மரங்கள், தேவாலயங்களுக்கு சொந்தமான மரங்கள், இவைகளைக் கிரஹிக்கக்கூடாது.

குட்டைகள், கிணறுகள், குளங்கள், வீடுகள், இவைகளிலுள்ள மரங்களைக் கிரஹிக்கக்கூடாது. 76

இடிந்து பாழாகப்போன இடத்தில் முளைத்திருக்கும் மரமானது, சகலவிதமான ஆபத்துக்களையும் உண்டு பண்ணும்.

ஆகையால் இத்தகைய தோஷங்களில்லாமல், சுத்தமாக இருக்கும் மரங்களையே கிரஹிக்கவேண்டும். 77

பிராஹ்மணர்கள், அரசர்கள் இவர்களுக்கு வீடு கட்டு

[illegible] யதி³ [illegible] த⁴ர்மகாமார்த²நாஶக்ருத் ।
ஏகத்³ரவ்யக்ருதம் ஶுத்³த⁴ம் மிஶ்ரம் த்³வித்³ரவ்யநிர்மிதம் ॥௭௯॥

த்ரித்³ரவ்யஸம்யுக்தம் யத்து தத்ஸங்கீர்ணமுதா³ஹ்ருதம் ।
ஸர்வேஷாமபி [illegible] வாஸேஷு [illegible] ஸம்பதா³ம் பத³ம் ॥

ஸர்வதோமுக²நக்ஷத்ரே ஶுப⁴பக்ஷே முஹூர்த்தகே ।
[illegible] க்ருதகௌதுக: [illegible] ॥௮௧॥

[illegible] ।

வதற்கு, தேவாலயத்தின் சிலையை கிரஹித்துக்கொள்ளுவதாகும்.

பாஷண்டிகளுக்கும் கிரஹித்துக்கொள்ளுவதாகும்.

வைசியர்கள், சூத்திரர்களுக்கு கிரஹிக்கக்கூடாது. 78

அதை, வைசிய சூத்திரர்களுக்கு கிரஹித்து கிருஹத்தில் உபயோகித்தால், அது தர்மம் — காமம் — அர்த்தம் (செல்வம்) இவைகளை அழித்துவிடும். 78½

ஒரே வஸ்துவினால் கல்பிக்கப்படும் வாஸ்துவானது, சுத்தம் எனப்படும். இரண்டுவிதமான திரவியங்களினாலே கல்பிக்கப்பட்டது மிச்ரம் எனப்படும். மூன்றுவித வஸ்துக்களினாலும் கல்பிக்கப்பட்ட வாஸ்துவானது, சங்கீர்ணம் எனப்படும். இவைகளினால், முன்பு கூறப்பட்டிருக்கும்படி அவரவர்களின் வாஸஸ்தலங்களை கல்பித்தால், அது சகல விதமான சம்பத்துக்களுக்கும் இருப்பிடமாகும். 80

வாஸ்துவுக்கு வேண்டிய விருக்ஷாதி திரவியங்களை விரும்புகிறவன், சர்வதோமுகமான நக்ஷத்திரத்தில், சுபகரமான பக்ஷத்தில், சுப முஹூர்த்தத்தில் கௌதுகபந்தனம் செய்துகொண்டு அரணியத்திற்குப் புறப்படவேண்டும். 81

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

சுபகரமான நிமித்தங்கள், சுபகரமான சகுனங்கள், சமயோசிதமான மங்கள சப்தங்கள், இவைகளுடன் புறப்பட்டு அதற்கு வேண்டிய ஸகல சாதனங்களுடனும் அரண்யத்திற்குச் செல்லவேண்டும். அங்கு, கந்தம், புஷ்பங்கள், தூபங்கள், மாமிசம், கிருசரம் (எள்ளும் வெல்லமும்), பாயசான்னம், மத்ஸ்யங்கள், பலவிதமான பக்ஷ்யங்கள், இவைகளினுல் விரும்பிய சகல தேவதைகளையும், வனதேவதைகளையும் மரங்களையும் பூஜித்து, பூதங்களுக்குரிய க்ரூர பலியைக் கொடுத்துவிட்டு, பிறகு வாஸ்து காரியங்களுக்கு உபயோகப்படக்கூடிய மரங்களை கிரஹிக்கவேண்டும். 83½

அடியிலிருந்து நுனிவரையில் நேராகவும் வட்ட வடிவமாகவும் பல கிளைகளுடனுமிருக்கும் மரமானது ஆண் மரமாகும்.

அடிப்பக்கம் பருத்தும், நுனி சிறுத்துமிருக்கும் மரமானது, பெண் மரமாகும்.

நுனி பருத்தும், அடி சிறுத்துமிருக்கின்ற மரமானது நபும்சக விருக்ஷமாகும்.

ஸர்வேஷாம் ஶேஷவஸ்தூநாம் பும்ஸ்த்ரீஷண்டம் புரோதிதம்॥

ஶர்வர்யாம் ஶுத்தஸ்யாஜ்யஸ்ய பீத்வைக: ஶுசிஸ்தபதி:
ஸுதீ: ।

ஸ்வதக்ஷிணபார்ஶ்வே து ஸம்ஸ்தாப்ய பரஶும் ஸுதீ:॥

வீக்ஷா ப்ராங்முகம் ஶயீத ராத்ரௌ ஶயனாஹிதேऽபர: ।

ஸ்தபதிர்வரவேஷாட்ய: ஶுக்லயேத் ஸ்வாயுதை:॥௮௮॥

அயம் மந்த்ர: —

அபக்ராமந்து பூதாநி தேவதாஶ்ச ஸகுஹ்யகா: ।

யுஷ்மப்யம் து பலிம் ஹ்யேஷ: ஶோபநோ க்ரியதாம் வாஸவா:॥

முஹூர்த்த ஸ்தம்பத்தை உத்தேசித்து, ஆண் மரம் கூறப்பட்டிருக்கிறது.

வீடுகளின் மற்ற அங்கங்களுக்கு ஆண் மரங்கள், பெண் மரங்கள், அலிமரங்கள் இவை யாவும் கூறப்பட்டிருக்கின்றன. 86

சிறந்த புத்திமானான ஸ்தபதி இரவு சுத்தமான பாலைக் குடித்துவிட்டு, சுத்தமாக இருந்து முஹூர்த்த ஸ்தம்பத்திற்கான விருக்ஷத்திற்குக் கிழக்கு திக்கில் தர்பைகளைப் பரப்பி விட்டு, தனது வலது பக்கத்தில் கோடாலியை வைத்துக் கொண்டு தூங்கவேண்டும். மற்றொருவன், மேற்கு முகமாகப் படுத்து இரவு தூங்கவேண்டும். 87½

(மறுநாள் காலையில்) சிறந்த ஆபரணங்களையணிந்து கொண்டு ஸ்தபதியானவன் கோடாலியை வைத்துக் கொண்டு அபிமந்திரணம் செய்யவேண்டும். 88

இது மந்திரம் —

ஶிவமஸ்து மஹீபுத்ரா: தேவதாஶ்ச ஸகுஹ்யகா: ।
கர்மைதத் ஸாதயிஷ்யாமி க்ரியதாம் வாஸபர்யய: ॥௯௦॥

ஏவமுக்த்வா நமஸ்க்ருத்ய பாதபேப்யோ நர:(தத:)ஶுசி: ।
துக்தைஸ்தைலைஸ்ததா ஸர்பி: ஸம்ம்ருஜ்ய பரஶோர்முகம் ॥

உபக்ரமேத்தம் சேத்தும் யதாகாமம் வநஸ்பதிம் ।
மூலே ஹஸ்தம் வ்யபோஹ்யாத்ர த்ரி:ப்ரஹ்ருத்ய ததோ வ்ர-
ணமீக்ஷயேத் ॥ ௯௨ ॥

வாமேநாவா விவ்ருஜ்யேத க்ஷீரம் வா ஶ்ரவிஷ்யதி ।
ஶோணிதம் ஸ்ராவிதம் ஹந்யாத் ஸஜ்ஜயேத்தம் வ்ருத்த: ॥

இந்த மரத்தில் வஸிக்கின்ற பூதங்களும், குஹ்யகர்களுடன் கூடிய தேவதைகளும், இதைவிட்டுச் செல்ல வேண்டும்.

ஹே விருக்ஷங்களே, ஸோமன், உங்களுக்கு மறுபடியும் பலத்தைக்கொடுப்பாராக. பூமிபுத்திரர்களான ஹே மரங்களே! உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும். குஹ்யகர்களுடன் கூடிய ஹே தேவதைகளே! நான் இந்தக் காரியத்தை சாதிக்கின்றேன். நீங்கள் வேறு இடத்திற்குச் செல்லுங்கள். இவ்விதமாகச் சொல்லி சுத்தனாக மரங்களுக்கு நமஸ்காரம் செய்யவேண்டும். பிறகு, 90½

பால், எண்ணெ, நெய், இவைகளினால் கோடாலியின் நுனியை நன்கு தேய்க்கவேண்டும். 91

பிறகு விருப்பப்படி மரத்தை வெட்டுவதற்குத் துவக்க வேண்டும். அந்த மரத்தின் அடியில் ஒருமுழம் ஒதுக்கி விட்டு, அதற்கு மேலே கோடாலியினாலே மூன்று தடவை மரத்தை வெட்டிவிட்டு அந்த வெட்டுவாயைப் பார்க்க வேண்டும். 92

பதநே ஸிம்ஹஶார்தூலப்ரும்ஹிதஸந்நிபஸ்வநா ஶுபதா: ।
ருதிதம் ஹஸிதம் க்ரோஶம் கூஜிதம் நிந்திதம் ஸதா ॥

பாதயேதுத்தராக்ரம் து பூர்வாக்ரம் வா வநஸ்பதிம் ।
தே திஶௌ ஶுபதே ஸ்யாதாமந்யாஶாஶு விபத்தயே ॥

ஶாலாஶ்மர்யஜகர்ணீநாமூர்த்வே து பதநம் ஶுபம் ।
மூலே வ்ருக்ஷாஸ்பதே பந்துப்ருத்யேஷ்வபி விநாஶநம் ॥

வெட்டுவாயில் ஜலம் பெருகினுல் அது அபிவிருத்தியை யளிக்கும். பால் பெருகினுல், புத்திரவிருத்தியையளிக்கும்.

ரக்தம் பெருகினுல் அது யஜமானனைக் கொன்றுவிடும். ஆகையால் அதை முயற்சியுடன் விலக்கிவிடவேண்டும். 93

மரமானது விழும்பொழுது அதன் சத்தமானது ஸிம்ஹம், புலி, யானை இவைகளின் சத்தத்தைப்போல் இருந்தால், அது சுபகரமாகும். 93½

அது அழுதால், சிரிப்பு, இறைச்சல் இவைகளைப் போலிருந்தால், இகழ்ச்சிக்குரியதாகும் என்று பெரியோர்கள் கூறியுள்ளார்கள். 94

மரத்தைவெட்டி விழ்த்தும்பொழுது அதை வடக்கு அல்லது கிழக்கில் தலைப்பக்கம் விழும்படி வெட்டிச்சாய்க்க வேண்டும். அந்த இரண்டு திக்குகளும் சுபகரமானவை களாம். மற்ற திக்குகள் விபத்துக்களை உண்டுபண்ணக் கூடியவைகளாம். 95

ஸால விருக்ஷம், (மராமரம்) அச்மரீ, அஜகர்ணீ, இந்த மரங்கள், வெட்டிய மரத்தின் அடிக்கட்டையின் மேலே விழுந்தால், அது சுபமான பலத்தையளிக்கும்.

அதன் அடியானது வேரில் உதைந்துநின்றுல், பந்துக் களுக்கும், சேவகர்களுக்கும் அழிவையுண்டுபண்ணும். 96

ச்சிந்ந: ஸ்தித: ஸக்த்வா வ்ருக்ஷாந்தர நிபாதநே |
ஶிரஸ்ஸம்பந்தே நாஶஸ்ஸ்யாத் மூலஸம்பந்ததஶ்ஶ்ரம: ||

ஶரீரநாஶம் கர்த்ரூணாம் நாஶயேத்வத்ஸராத்பரம் |
புத்ரநாஶம் ததஶ் பூஜ்யம் த்வயோ: பாதயதஸ்ததா ||

அதாஸ்ரம் ருஜும் க்ருத்வா மௌஹூர்த்திகஸ்தம்பஸம்மதம் |
ஸிதவஸ்த்ரேண ஸஞ்சாத்ய ஸ்யந்தநே ஸ்தாப்ய வை ஶயேத் ||

தேவத்விஜமஹீபாநாம் விஶாம் வை ஶகடேந து |
பஶ்சாத்ஸ்ய வாஹாக்ஷேஷு நாநீயாத்து விசக்ஷண: ||

வெட்டப்பட்ட மரமானது, அதை விட்டுக் கிளம்பி, வெட்டப்பட்ட மரத்தின் அடிக்கட்டையின் மேலேயே நின்று, மற்றொரு மரத்தைத் தள்ளுவதற்காக அதன் உச்சியில் சம்பந்தப்பட்டால், நாசமுண்டாகும். அதன் அடியில் சம்பந்தப்பட்டால், சிரமமுண்டாகும். யஜமான னுக்கு சரீர நாசத்தையும், அதற்குப் பிறகு புத்திர நாசத்தையுமுண்டுபண்ணும். 97½

இரண்டு மரங்களும் விழுந்தால், அது பூஜிக்கத்தக்க தாகும்.

வெட்டிய மரத்தை இரு பக்கங்களிலும் சமமாக இருக்கும்படி துண்டு செய்யவேண்டும். 98

அதை சதுரச்ரமாகவும், நேராகவும் செய்து, முஹூர்த்த ஸ்தம்பத்திற்கான அந்த மரத்தை, வெளுப்பு வஸ்திரத்தினாலே போர்த்தி, அது தேவதைகள், பிராஹ்மணர்கள் அல்லது அரசர்களுக்கானால், அதைத் தேரில் ஏற்றிப் படுக்கையாக வைக்கவேண்டும்.

வைசியர்களுக்கானால், வண்டியில் வைக்கவேண்டும்.

[illegible]

[illegible]

[illegible] ||௱௨||

[illegible]

சூத்திரர்களுக்கானல், அதை மனிதர்களின் தோளில் தூக்கி எடுத்துக்கொண்டுவரவேண்டும். 100

இந்திர கீலங்கள் (தூண்கள்) எல்லாவற்றையும் இவ் விதமே முயற்சியுடன் எடுத்துவரவேண்டும். மற்ற மரக் குவியல்களையும் நுனியை நுனிப்பக்கத்திலும் அடியை அடிப் பக்கத்திலும் வைக்கவேண்டும். 101

அவைகளை முஹூர்த்தஸ்தம்பத்தின் இரண்டு பக்கங் களிலும் படுக்கையாக வைக்கவேண்டும். பிறகு வண்டியில் ஏத்திப் படுக்கையாக வைத்துக்கொண்டு வரவேண்டும்.

ஸ்தபதி பின் தொடர்ந்துவர அந்த மரத்தை சுபகர மான துவாரத்தின் வழியாக எடுத்துவந்து, வேலை செய்யும் மண்டபத்திலிறக்கி மணலின் மேலே படுக்கையாக வைக்கவேண்டும்.

அதை கிழக்கு நுனியாக அல்லது வடக்கு நுனியாக வைத்து, பிறகு, அது காயும் வரையில் அப்படியே வைத்து ரக்ஷித்து வரவேண்டும். 103

ஆரக்³வத⁴ஶ்ச க²தி³ர: ஸக²தி³ரஶ்ச மது⁴கக: ।
ராஜாத³நோ யதா²ஸங்க்²யம் விஸ்தாராயாமமுச்யதே ॥

ஸ்தம்பா⁴ர்கருத்³ரதி³க³ங்கவிதஸ்த்யாயாமஸம்யுதா: ।
தத்ஸங்க்²யாங்கு³லவிஸ்தீர்ணா: ஸத³ஶாம்ஶோநாக்³ரவிஸ்தரா: ॥ ௱௫ ॥

ஹஸ்தஸார்த⁴சதுர்வேத³த்ரிதாலாயதநிகா²தகா: ।
ஹஸ்திஹஸ்திவிபா⁴கா³க்³ரம் க்ஷேத்ரஸங்கோ⁴ஷ்டம் விவர்ஜ்யம் தத்³வா ॥

ஶுஷ்காமூலாக்³ரவேத⁴ம் தத் ஸர்வத்ர விபாதம்
பரிவர்ஜயேத் ।

அந்த மரத்தை எவ்விதமாகவும் திருப்பக்கூடாது. வைத்தவிதமாகவே ஆறுமாதகாலம் இருக்கவேண்டும்.

தேவதைகள், பிராம்ஹணர்கள், இவர்களுக்கு முறையே முஹூர்த்த ஸ்தம்பங்களுக்கான மரங்கள், கொன்னை, கருங்காலி, வெண் கருங்காலி, இலுப்பை, ராஜாதனம் (பழமுண்ணிப்பாலை) இவைகள் முறையே கூறப்பட்டவைகளாம். இனி இவைகளின் விஸ்தாரத்தையும் நீளத்தையும் கூறுகிறேன். 105

ஸ்தம்பங்கள், பன்னிரண்டு (12) பதினொன்று (11) பத்து (10) ஒன்பது (9) சாண் நீளமும், அந்த எண்களின் அங்குளிகள் விஸ்தாரமும், அதில் பத்தில் (10) ஒருபாகம் குறைவான அக்கிரத்தின் விஸ்தாரமும், ஐந்து (5) நாலரை (4½) நாலு (4) மூன்று (3) தாலம் (அடி) நிகாதமும், (புதைக்கப்படவேண்டிய பாகம்) உள்ளவைகளாக இருக்கவேண்டும். 106½

இவ்விதமாக ஸ்தம்பங்களின் உச்சம், அகலம், இவைகள் அந்தந்த பூமிக்குத் தக்கபடி கூறப்பட்டிருக்கிறது. 107

அஶ்வத்தோதும்பரஶ்சைவ ப்லக்ஷஶ்ச வடவ்ருக்ஷக: ||௱அ||

ஸப்தபர்ணஶ்ச பில்வஶ்ச பலாஶ: குடஜ(ஜ)ஸ்ததா |
பீலு: ஶ்லேஷ்மாதகீ லோத்ர: கதம்ப: பாரிஜாதக: ||

ஶிரீஷ: கோவிதாரஶ்ச திந்த்ரிணீகோ மஹாத்ரும: |
ஶிலீந்த்ர: ஸர்பமாரஶ்ச ஶால்மலீ ஸரலஸ்ததா || ௧௧௦ ||

கிம்ஶுகஶ்சாரிமேதஶ்ச ஹரீதக்யக்ஷாமலகத்ருமா: |
கபித்த: கண்டகஶ்சைவ புத்ரஜீவஶ்ச டுண்டுகா: ||௧௧௧||

காரஸ்கர: கரஞ்ஜஶ்ச வாரணஶ்சாஶ்வமாரக: |
பதரோ வகுள: பிண்டீ பத்மகஸ்திலகஸ்ததா || ௧௧௨ ||

பாடல்யகருகர்பூரா: ஸுரார்ஹாஸ்தருஜாதய: |

எந்த விடத்திலும் ஜ்ஜஷால (மத்ஸ்யாகாரம்) ஸ்தம்பமாக இருந்தால், நிகாதம் செய்யக்கூடாது. 107½

அரசு, அத்தி, ப்லக்ஷம், (இரளி—கல்லொளி) ஆல், ஏழிலைப்பாலை, பில்வம், புரசு, வெட்பாலை, பீலு, (ஊவக்காய்) நறுவிலி, வெள்ளலொத்தி, அடப்பை, பாரிஜாதை, (பவழமல்லி) வாகை, மலையகத்தி, திந்திரிணீகம், (புளி) மஹாத்ருமம், சிலீத்ரம், சர்பமாரம், முள்ளிலவு, சரளம், புரசு, அரிமேதம், (துர்கந்தமுள்ள கருங்காலி) கடு (கடுக்காய்மரம்) தானி, நெல்லி, விளா, கண்டகம், புத்திரஜீவி, டுண்டுகம், காரை, புங்கை, நொச்சில், அசுவமாரம், இலந்தை, மகிழ், பிண்டீ, பத்மகம், திலகம், பாதிரி, அகில், கற்பூரம் இந்த மரங்கள் யாவும், தேவயோக்கியமானவைகளாம்.

இவைகள் மனிதர்களின் வீடுகளுக்குக் கூடாதவைகளாம்.

தைவயோக்யா ந தே ஸர்வே மாநுஷாணாமஸம்மதா: ॥

தஸ்மாத் ஸர்வப்ரயத்நேந மநுஷ்யாணாம் நிவாஸகே ।
ஊஷரம் பாண்டுரம் க்ருஷ்ணம் ஸ்நிக்தம் தாம்ரவர்ணகம் ॥௧௧௪॥

ஏதாஸ்வேவ சதஸ்ருஷு ம்ருத்ஸ்நாஸு தாம்ரபுல்லகம் ।
இஷ்டகாஸம்ப்ரஸித்த்யர்த்தம் ஶ்ரேஷ்டம் ச தாம்ரபுல்லகம் ॥௧௧௫॥

ஸிகதாஶர்க்கராமூலாஸ்தி ஶல்கவர்ஜிதம் ।
ஏகவர்ணம் ம்ருது ஸ்பர்ஶே ஜாதம் லோஷ்டம் ததா: ॥௧௧௬॥

ஶ்ரோத்ரமாத்ரம் ஜலே லோஷ்டாந் க்ஷிப்த்வா பஶ்சாத் பதை: ।
க்ஷீரவ்ருக்ஷகஷாயாம்பு க்ஷிப்த்வா ஜலேऽபி ॥௧௧௭॥

இந்த விருக்ஷங்களை மனிதர்களுக்கு உபயோகிக்கலாகாது. உபயோகித்தால் அனர்த்தங்களை உண்டுபண்ணும். ஆகையால் இவைகளை சகலவிதமான முயற்சிகளும் செய்து மனிதர்களின் வீடுகளில் உபயோகிக்காமலிருக்கவேண்டும். 118½

ஊஷரமண், வெளுப்புமண், கருப்புமண், பசையுள்ள செம்மண், என்று, மண் நான்குவிதமாகும். இந்த நான்குவிதமான மண்களுள், தாம்ரபுல்லகமென்னும் நல்ல செம்மண்ணையே கல்லுகளுக்காக கிரஹிக்கவேண்டும். 115

மணல் இல்லாமலும், கூழாங்கற்களில்லாமலும், வேருகளில்லாமலும், எலும்புகளில்லாமலும், செல்லிகளில்லாமலும், ஒரேவிதமான நிறமுள்ளதும், கைக்கு மிருதுவாகவும் இருக்கின்ற மண்ணானது- ஓடுகள் கற்களைச்செய்வதற்கு சிறந்த மண்ணாகும். 115½

முதலில் மண்கட்டிகளை முழங்கால் மட்டம் ஜலத்தில் நிறப்பவேண்டும். பிறகு அதை நன்கு கலந்து கால்களினால்

त्रिफलाम्बुभिरासिक्तां मर्दयेन्मासमात्रकम् ।
चतुःपञ्चषडङ्गुलिभिः मात्रैर्व्यासाद्द्विगुणायताः ॥

व्यासार्धार्धत्रिभागैकत्रिपादं वा घनं भवेत् ।
इष्टकाबहवः प्रोक्ताः समशुद्धाः प्रयत्नतः ॥ககஅ॥

शनैः शुष्के ततः सर्वाः समस्तैस्तु विचक्षणः ।
एकत्र पक्ष्यते यत्र ज्वालाग्न्याद्यस्तथैव तु ।
निरन्तरं प्रयोक्तव्या इष्टका इष्टकागणे ॥

துகைக்க வேண்டும். இவ்விதம் நாற்பது தடவை செய்ய வேண்டும். 116½

பிறகு, பாலுள்ளமரங்கள், அடப்பமரம், மாமரம், கடுக்காய்மரம், தானிமரம் இவைகளின் பட்டைச்சாறுகள், திரிபலாஜலம், இவைகளைவிட்டு, ஒருமாதம் வரையில் நன்கு மர்திக்கவேண்டும். 117½

பிறகு அந்த மண்ணைக்கொண்டு, நான்கு, ஐந்து, ஆறு அங்குலம் அகலமும், அதன் இருமடங்கு நீளமும், அகலத்தில் சரிபாதி, கால்பாகம் அல்லது முக்கால் பங்கு கனமுமுள்ள கற்களைச் செய்யவேண்டும். இவைகள் முறையே உத்தம மத்திமாதமக்கற்களாம்.

இவைகளை நன்கு காயவைத்து, பிறகு அந்தக் கற்கள் யாவும் ஒரே விதமாக இருக்கும்படி, அவைகளைக் காளவாயில் எறிக்கவேண்டும். 119

சமர்த்தஞன சில்பியானவன், அவைகளை, ஒருமாதம், இரண்டு மாதம், மூன்று மாதம், அல்லது நான்கு மாதம் ஆறப்போட்டு, பிறகு அவைகளை எடுத்து, சாவதானமாக, அவைகளை ஜலத்திற்குள் போட்டு, பின்பு அவைகளை ஜலத்திலிருந்து எடுத்து, அவைகளில் ஈரமில்லாமல் ஜலம் நன்கு சுண்டிய பிறகு, அவைகளை இஷ்டமான காரியங்களில் உபயோகிக்கவேண்டும். 120

ஏவம் த்ருடேஷ்டகஶிலாதிபிர்மஹீஜை:
காஷ்டைஸ்து ஸம்விஹிதா ஹி வாஸ்துஸம்ருத்த்யை |
யத்ஸித்தம் ஸ்வபரவஸ்து பரிஷ்காராத்யை:
த்ரவ்யம் விநஷ்டஸவநவ்ரஜஸம்பவம் விபத்த்யை || ௧௨௧ ||

ஸ்தம்பாயாமம் தாரமாகாரமேதம்
ஸாலங்காரம் ஸம்க்ஷணம் ச க்ரமேண |
யா க்ருத்யா யுக்தம் ஸம்பதாமாஸ்பதம் தத்
தேவாகாரம் ந்ருணாம் தைத்யாநாம் ச கேஹ || ௧௨௨ ||

இதி மயமதே வஸ்துஶாஸ்த்ரே த்ரவ்யபரிக்ரஹோ
நாம பஞ்சதஶோऽத்யாய: ||

இவ்விதமாக, மரங்கள், சிலைகள், கற்கள், இவைகளை முறையுடன் எடுத்து, அவைகளினால் கல்பிக்கப்படுகின்ற வாஸ்துக்கள் சிறந்தவைகளாகவும், சகல சமிருத்தியையு மளிக்கக்கூடியவைகளாகவுமிருக்கும்.

வேறு வாஸ்துக்களுக்கு உபயோகித்து மிஞ்சியதும், சீரழிந்து வீணாகப் போன வீடுகளிலிருந்து கிடைத்தவைகளுமான கற்கள் முதலியவைகளினால் நிர்மாணிக்கப் படுகின்ற வாஸ்துவானது, ஆபத்துக்களையளிக்குமென்று, ஆதி காலத்திய பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். 121

தேவாலயங்கள், மனிதர்களின் கிருஹங்கள், இவைகளில் வைக்கக்கூடிய தூண்களின் நீளம், அகலம், உருவம், அவைகளில் செய்யக்கூடிய அலங்காரங்கள், இவைகள் முறையுடன் அழகாகக் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளை யுக்தியுடன் கல்பித்துக்கொண்டால், அது ஸகலவிதமான ஸம்பத்துக்களுக்கும் காரணமாகும். 122

திரவிய பரிகிரஹமென்னும் பதினைந்தாவது அத்தியாயம் முற்றும்.

𑌅𑌥 𑌷𑍋𑌡𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌉𑌤𑍍𑌤𑌰𑌾𑌦𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑌾𑌰𑌾𑌵𑌯𑌵𑌂 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌸𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌵𑌾𑌸𑍍𑌤𑍂𑌨𑌾𑌮𑍁𑌪
𑌯𑍋𑌗𑌤𑌃 ॥ ௧ ॥

𑌉𑌤𑍍𑌤𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌪𑌾𑌦𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑌤𑍍𑌸𑌮𑍋𑌦𑌯𑌮𑍍 ।
𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑍋𑌦𑌯𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌥𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌪𑌾𑌦𑌤𑌤𑍍𑌸𑌮𑌮𑍍 ॥ ௨ ॥

𑌖𑌣𑍍𑌡𑍋𑌤𑍍𑌤𑌰𑌂 𑌪𑌤𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑌂 𑌰𑍂𑌪𑍋𑌤𑍍𑌤𑌰𑌮𑌿𑌤𑌿 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 ।
𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌂 𑌵𑌾 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌾𑌰𑍍𑌧𑌮𑌰𑍍𑌧𑌂 𑌵𑌾 𑌕𑌰𑍍𑌣𑌨𑌿𑌰𑍍𑌗𑌮𑌃 ॥

𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌂 𑌵𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑌂 𑌚 𑌨𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌕𑌵𑌤𑍍𑌕𑍃𑌤𑌿𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌰𑌨𑌿𑌵𑍇𑌶𑌨𑌮𑍍 ॥ ௩ ॥

பதினாறுவது அத்தியாயம்

ஸகலவிதமான வாஸ்துக்களுக்கும் உபயோகமாக, உத்தரம் முதல் விருதி வரையில், பிரஸ்தாராவயவங்களை, முறையே ஸங்கிரஹமாகக் கூறுகிறேன். 1

உத்தரமானது, பாதத்தின் விஸ்தாரம் அவ்வளவு உயரமுள்ளது, பாதத்தில் முக்கால் பங்கு உயரம் பாதத்தின் விஸ்தாரமுள்ளது, நடுத்தரமான உயரம் பாத விஸ்தாரம் உளது, என்று மூன்று விதமாகும். 2

ஷண்டோத்தரம், பத்திரபந்தம், ரூபோத்தரம், என்று மூன்றுவிதமாகும். 2½

உத்தரங்களின் கர்ணநிர்கமமானது, முக்கால்பங்கு, மூன்றில் இரண்டு பங்கு, அல்லது அரைப்பங்கு இருக்க வேண்டும். 3

ஒவ்வொரு உத்தரத்தின் நிவேசனமும், ஸ்வஸ்திகாகாரம், வர்தமானுகாரம், நந்தியாவர்தத்தைப் போன்ற

த்ரிபாகைகம் சதுர்பாகம் வாஜநம் நிர்கமேது ச |
ததூர்த்⁴வம் முஷ்டிப³ந்த⁴ந்து சதுரஶ்ரம் த³லாக்³ரகம் ||

தந்முஷ்டிப³ந்த⁴நம் வா கல்ப்யம் ஸ்தம்ப⁴வ்யாஸே து வாஜநோபரி |
ஸ்தம்ப⁴வ்யாஸார்த்⁴தம் ஸ்யாத் தீவ்ரம் பட்டம் பங்கஜக்ரியம் ||

ஸந்நாளிகாயஸ்தோர்த்⁴வ வாஜநாத் நிம்னமேவ ச |
உத்ஸ்ருதம் ஸ்தம்பே⁴ வேதா தது³ர்த்⁴வே த்ரு ஸ்தம்பா⁴லிகா ||

ஸ்தம்ப⁴வ்யாஸஸமோத்ஸேதா⁴ வா த்ரிபா⁴கைகநீவ்ரகா |
சதுர்பா⁴கைகம் வா நீவ்ரஸஹிதா ||௮||

ஆகாரம், அல்லது ஸர்வதோபத்ரத்தைப் போன்ற ஆகாரமுடையதாக இருக்கவேண்டும். 4

வாஜனமானது, மூன்றில் ஒரு பங்கு, அல்லது கால் பங்கு, கர்ண நிர்கமத்தில் சென்றிருக்கவேண்டும். அதன் உச்சியிலிருக்கும் முஷ்டிபந்தனமானது, சதுரச்ரமாகவும், நுனியில் இலையுடையதாகவும் இருக்கவேண்டும். 5

அந்த முஷ்டி பத்தனத்தை துலாச்சேதம் செய்து கல்பிப்பதுமாகும்.

வாஜனத்தின் மேல்பாகத்தில், ஸ்தம்ப விஸ்தாரத்தில் அரைப் பங்கு தீவ்ரமும், கால்பங்கு பட்டமும் தாமரை மலருமிருக்கவேண்டும். அதன் அடிப்பக்கத்தில் மூளை இருக்கவேண்டும். அது வாஜனத்திலிருந்து ஸ்தம்பத்தில் சொருகக்கூடியதாக இருக்கவேண்டும். எனவே, வாஜனமானது, மேல்பக்கம் கீழ்பக்கம் இரண்டு பக்கங்களிலும் குடுமியுடையதாகும். 7

அதற்குமேலே ப்ரமாலிகையாம். அது, ஸ்தம்பத்தின் அகலத்திற்கு ஸமமான உயரமுள்ளதாகவும் மூன்றில் ஒரு பாகம், அல்லது நான்கில் ஒருபாகம் நீப்ரமுள்ளதாக

தண்டிகா ஸமநிஷ்க்ராந்தா ததூர்த்வே தண்டிகா பவேத் ।
ஸ்தம்பார்த்வவிஸ்தாரா ஸார்த்ததீர்கா ததர்த்தநிஷ்க்ரமா

முஷ்டிபந்தஸமாகாரா சதுரச்ரா யதா ததா ।
யதேஷ்டவிஸ்தாரோத்ஸேதம் தத்ஸமோத்ஸேதவேசநம் ॥௰॥

வலயம் ஸ்யாத்ததூர்த்வே து கோபாநம் வா ததூர்த்வத: ।
முஷ்டிபந்தவிஸ்தாரோத்ஸேதா பட்டிகா க்ஷேபணாம்புஜா ॥௧௧॥

தண்டிகாவிஸ்தாரவஸிஷ்டா து கண்டிகோபரிபட்டிகா ।

இருக்கவேண்டும். அதன் உச்சியில் யானையின் மண்டையைப்போன்ற கும்பம் மண்டி இவைகளிருக்கவேண்டும். 8

அதற்கு மேலே, ஸமமாகப் பொருத்தப்பட்ட தண்டியம் இருக்கவேண்டும். அந்தத் தண்டியமானது ஸ்தம்பத்தில் அரைப்பங்கு? விஸ்தாரமுள்ளதாகவும், அதில் அரைப் பங்கு நீளமுள்ளதாகவும், அதில் அரைப்பங்கு நிஷ்கிரமமுள்ளதாகவும் இருக்கவேண்டும். அது வாஜனத்திலுள்ள முஷ்டிபந்தனத்தைச் சொறுகக்கூடியதான சதுரச்ரமுடையதாக (சதுரச்ரமான துவாரமுடையதாக) இருக்கவேண்டும். 9½

அல்லது தண்டியமானது விரும்பும் அளவு அகலம் உயரமுள்ளதாகவும், அதே உயரமுள்ள வேசனமுடையதாகவும் இருப்பதாகும். 10

அந்த தண்டியத்திற்கு மேலே வலயம் இருக்கவேண்டும். அல்லது கோபானம் இருக்கவேண்டும். அதற்கு மேலே முஷ்டிபந்தனத்தின் விஸ்தாரமும் உயரமுமுள்ள பட்டிகையும் க்ஷேபணம்புஜமும் இருக்கவேண்டும்.

தண்டிகையின் மேலேயுள்ள பட்டிகையானது

𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌤𑍁 𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌗𑍋𑌪𑌾𑌨𑌂
𑌆𑌵𑌰𑍍𑌤𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ॥௧௨॥

𑌉𑌤𑍍𑌤𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌵𑌷𑍍𑌟𑌮𑍍𑌭𑌂 𑌵𑌾 𑌯𑌥𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌿 𑌯𑌥𑌾𑌰𑍁𑌚𑌿 ।
𑌵𑌾𑌜𑌨𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌤𑍁𑌲𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌵𑌾 𑌗𑍋𑌪𑌾𑌨𑌂 𑌯𑍋𑌜𑌯𑍇𑌦𑍍
𑌬𑍁𑌧𑌃 ॥௧௩॥

𑌤𑍁𑌲𑌾𑌨𑍍𑌤𑌰𑌸𑌮𑌂 𑌗𑍋𑌪𑌾𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌗𑍋𑌪𑌾𑌨𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌤𑌸𑍍𑌯 𑌵𑌾𑌜𑌨𑌾𑌨𑍍𑌤𑌾𑌵𑌷𑍍𑌟𑌮𑍍𑌭𑌨𑍇 ॥

𑌦𑌣𑍍𑌡𑌾𑌯𑌾𑌮𑌵𑌿𑌷𑍍𑌕𑌮𑍍𑌭𑌂 𑌹𑍍𑌰𑌾𑌯𑌾𑌮𑌂 𑌦𑍍𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌗𑍋𑌪𑌾𑌨𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌤𑌃 ।
𑌕𑌮𑍍𑌪𑍍𑌰𑌂 𑌸𑌮𑌾𑌨𑌂 𑌕𑌾𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑌰𑍍𑌷𑌯𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌮𑍇 ॥௧௪॥

அதிலிருந்து செதுக்கி வைக்கப்பட்டு மிஞ்சியதாக இருக்க வேண்டும்.

அதில் அதே அளவு சோதித்து கோபானத்தை வைக்க வேண்டும். 12

அந்த தண்டியமானது உத்திரத்தினுள் பிடியுள்ளதாக வாவது (சொருகப்பட்டாவது) அல்லது விருப்பம்போல் கல்பிக்கப்பட்டாவது இருப்பதாகும்.

கோபானத்தை (குறுக்கு வட்டத்தை) வாஜனத்தின் உச்சியிலாவது, துலாத்தின் உச்சியிலாவது (பொருத்தி) வைக்கவேண்டும். 13

கோபானத்தின் மத்தியபாகமானது (இடைவெளியானது) * துலாத்தின் இடைவெளிக்கு ஸமமாக இருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. 13½

கோபான தண்டத்திற்குமேலே வாஜனாந்தமாக அவலம்பனம் (தாங்கல்) இருந்தால், அது கோபானத்திற்கு

---

* துலாம் என்பது குறுக்கு வட்டத்தைச் சொருகி வைப்பதற்காக உத்தரத்தின் மத்தியில் வைக்கப்படும் இரண்டு குத்துக்கால்களை குறிப்பதாம்.

தண்டிகாவாஜநாந்தஸ்த்தம் காயபாதம் ததம்ஶகே |
பாதவிஸ்தாரமேகாம்ஶநிஷ்க்ராந்தம் ஸாக்ரபட்டிகம் ||௧௬||

பாதாந்தரம் ச்சாத்யம் ஸ்யாத் பலகை: ஸாரதாருபி: |
அஷ்டாங்குலவிஶாலம் ச்சாதநம் பலகாத்மநா ||௧௭||

கோபாநஸ்யோபரிஷ்டாத் ச்சாதயேல்லோஹேஷ்டகை: |
கபோதபாலிகாஸ்யோத்ஸேதநிஷ்க்ராந்தம் த்ரிஹஸ்தகம் ||

ஸார்த்தஹஸ்தம் த்விஹஸ்தம் வா .... ஸார்த்த ஸம்மிதே |

மேலே, தண்டத்தின் அரைப்பங்கு விஸ்தாரமும், அதில் அரைப்பங்கு தீவ்ரமும் (ஒதுக்கம்) உள்ளதாகவுமிருக்க வேண்டும். அதில் வலயத்தின் (வளை) யின் துவாரத்தில், ஸமமாக இருக்கும்படி, கம்பத்தைக் கல்பிக்கவேண்டும். தண்டிகையின் வாஜனத்திற்குள்ளிருக்கின்ற காயபாதமானது, அதற்குறிய அம்சத்திலிருக்கவேண்டும்.

பாதத்தின் விஸ்தாரமானது கால்பங்கு நிஷ்கிராந்தமாகவும், (கால்பங்கு வெளியில் நீண்டிருப்பதாகவும் அதன் அக்ரபாகத்தில் பட்டிகையுடையதாகவுமிருக்கவேண்டும்.

பாதங்களின் மத்திய பாகமானது பலகைகள் அல்லது ஸாரமுள்ள மரங்களினுலே மூடப்படவேண்டும்.

மேலே மூடப்படும் பலகையானது எட்டு அங்குலம் விஸ்தாரமுள்ளதாக இருக்கவேண்டும். 17

கோபானஸிக்கு மேலே (விட்டத்திற்கு மேலே) லோஹங்களினுலே செய்யப்பட்ட ஓடுகளினுலே மூட வேண்டும். 17½

கபோதபாலிகையின் (உத்தரத்திற்கு மேலேயுள்ள விட்டத்தின்) நிஷ்கிராந்தமானது (உயரமானது)

யதாஶோபம் யதாவ்ருத்தம் கபோதே கர்ணபாலிகா ||௧௮||

ததா யுக்த்யா ஸ்த்திதா வாபி ஸௌதே ஶைலே ஸமாஹிதா ।
விதேயா வாஜனஸ்யோர்த்வே பூதஹம்ஸாதிகாவலி: ||

ஏகதண்டாத்வா த்ரிபாதாத்வா வாஜனம் பூர்வவத் பவேத் ।
கபோதாலம்பனம் தஸ்யோக்தம் ஏகாம்ஶம் வாத ஏகக: ||

அர்த்தாதித்ர்யேகாந்தம் கபோதாத்விநிர்கமஸ்ததா ।
ஸார்த்தைகம் வா த்ரிதண்டம் வா விதேயா வாஜனாவதி ||௨௨||

தண்டம், மூன்று தண்டம், ஒரு முழம், அல்லது இரண்டு முழமிருக்கவேண்டும். இது சிறிய பெரிய வீடுகளுக்குக் கூறப்பட்டதாகும்.

கபோத கர்ணபாலிகையாயானது சோபாகரமாகவும், ஆச்சரியகரமாகவும் இருக்கவேண்டும். 19

சிலாமயமான ஸௌதத்தில் (மாளிகையில்) கல்பிக்கப் படும் கபோதபாலிகையானது, மத்தியத்திலிருக்கும்படி கல்பிக்கப்படவேண்டும்.

அதன் வாஜனத்திற்கு மேலே பூதங்கள், ஹம்ஸம் முதலியவைகளை வரிசையாகக் கல்பிக்கவேண்டும்.

அந்த வாஜனமானது ஒரு தண்டம், அல்லது முக்கால் தண்டம் உயரத்தில் இருக்கவேண்டும். அது முன்பு கூறப் பட்டிருப்பதைப்போலவே இருக்கவேண்டும். 20

அது கபோதத்திற்கு ஆலம்பனமாக இருக்க வேண்டும். 20½

அந்த கபோதத்தின் உச்சநிர்கதமானது (கபோதம் நீண்டிருக்கும் உயரமானது) அரை தண்டம், ஒரு தண்டம், இவவிதமாக ஒண்ணரை தண்டம் முதல் மூன்று தண்டம் வரையிலிருப்பதாகும். 21½

த்ரிபாதோநாம் துங்கமுச்சம் ஸ்யாத் கபோதோச்சம் து பூர்வவத் ।
ஏவம் ஸ்யாத் வாஜனஸ்யோர்த்வம் தச் சிலேஷ்டகாத்ரவ்யகை: ॥

யதா து த்ருடதரம் ஸ்தைர்யம் து ததா யோஜ்யம் விசக்ஷணை: ।
கபோதோச்சத்ரிபாகம் வா பாதம் வா க்ஷுத்ர நிர்கதி: ॥ ௨௪ ॥

கபோதே நாஸிகா க்ஷுத்ரே நீப்ராக்ரோச்சஸ்தித கணிகா ।
ஸர்வாஸாமபி ஸர்வாஸாம் விஸ்தாரா ஸ்திதா ॥

வாஜனத்திற்கு மேலே வஸந்தகம் அல்லது நித்திரையைக் கல்பிக்கவேண்டும். 22

அது வாஜனத்திற்கு மேலே வாஜனத்தின் உயரத்தில் முக்கால் பங்கு உயரமுடையதாகக் கல்பிக்கப்படவேண்டும். கபோதத்தின் உயரமானது முன்பு கூறப்பட்டதைப் போலவே இருக்கவேண்டும்.

இவ்விதமாக அதை சிலையினாலே மட்டிலுமாவது இஷ்டகைகளினாலே மட்டிலுமாவது உறுதியாக இருக்கும்படி கல்பிக்கவேண்டும். 23

ஸமர்த்தனாக இருப்பவன், எவ்விதமாகக் கல்பித்தால் அது உறுதியுடனிருக்குமோ அவ்விதமாகக் கல்பிக்க வேண்டும்

அதன் க்ஷுத்திர நிர்கதியானது (வால்வீச்சானது) கபோதோச்சத்தில் மூன்றில் ஒருபாகம், நான்கில் ஒரு பாகமிருக்கவேண்டும். 24

கபோதத்தின் நாஸிகா க்ஷுத்திரத்தில் (கபோதத்தின் இறுதியில் நீண்டிருக்குமிடத்தில்) நீப்ரத்தின் உச்சியில்

ஸிம்ஹஶ்ரோத்ரஶிகாகாரம் பட்டிகாக்ரஸ்ய பட்டிகா ।
விதேயா ஸ்வஸ்திகாகல்பா நாஸிகோர்த்வே து நாஸிகா ॥

குக்ஷிமானம் யதாமானம் யதாஶோபமதோபி வா ।
ப்ரதிவாஜநகஸ்யோர்த்வே நேஷ்யதே நாஸிகோச்ச்ரய: ॥

ஆலிங்கம் பாதபாதோச்சம் பாதாம்ஶம் விநிர்கத: ।
தஸ்யாந்தர்ஞ்சிதம் ஶீர்ஷே நிஷ்க்ராந்தாவேஶநக்ரியா ॥

க்ரீவாயாமம் ஹி பாதோச்சம் பாதே பாதாம்ஶவிஸ்த்ருத: ।

இருக்கும் கர்ணிகையானது ஒண்ணேகால் தண்டம், ஒண்ணரை தண்டம், அல்லது இரண்டு தண்டம் விஸ்தாரமுள்ளதாக இருக்கவேண்டும். 25

பட்டிகையின் இறுதியிலுள்ள பட்டிகையானது, ஸிம்ஹத்தின் காதுகள், சிகை, (தலைமயிர்) இவைகளைப் போலிருக்கவேண்டும்.

அதன் நாஸிகையின்மேலே, ஸ்வஸ்திகாரமான நாஸிகையைக் கல்பிக்கவேண்டும். 26

அதன் குக்ஷியின் (மத்திய பாகத்தின்) அளவானது, அதன் அளவுக்கேற்றபடி அழகாக இருக்கவேண்டும். 26½

பிரதிவாஜனத்திற்குமேலே நாஸிகை உயர்ந்திருப்பது விரும்பத்தக்கதல்ல. அதன் ஆலிங்கனமானது பாதத்தில் கால்பங்கு உயரமுள்ளதாக இருக்கவேண்டும். அதன் விநிர்கதமானது கால் பங்கில் கால்பங்கு இருக்கவேண்டும். (விநிர்கதம்—வெளியத்தில் ஒதுக்கம்) அதன் உச்சியில் நிஷ்கிரந்தாவேசன கிருயையானது, அதற்கு உள்ளடங்கியதாக இருக்கவேண்டும். (நிஷ்கிரந்தாவேசன கிரியை—(வெளியில் நீண்டிருக்கும் கூறில் பொருத்தமாகச் சொருகி வைப்பது) 28

தண்டம் த்ரிபாதமர்த்தம் வா வ்ரு(வ்ர)த்த்யுத்ஸேதம்
ததூர்த்வத: ||௨௯||

ஸ்வோத்ஸேதத்ரிபாதநிஷ்க்ராந்தா ப்ரதிரர்த்தேந வா ததா ।
தண்ட: ஸபாதஸார்த்தேந வா ப்ரதிவக்த்ரம் விநிர்கத: ||௩௦||

தாவதூர்த்வகதிஸ்தஸ்யா: ப்ரக்ருதிர்வ்யாளயுக்தா ।
ஸவ்யாளா வா ஸஸிம்ஹா வா ருஜ்வீ வா ஸ்யாத் ப்ரதே:
க்ருதி: || ௩௧ ||

தத்பாதத்ர்யர்த்தோத்ஸேதம் வாஜநம் நிர்கமோதயே ।

பாதத்தில், பாதாந்தரத்திலிருக்கின்ற த்ரிபட்டமானது, பாதத்தில் கால்பங்கு உயரமுள்ளதாக இருக்கவேண்டும்.

அதன் மேலேயுள்ள பிரத் (விருத்) யுத்ஸேதமானது (விருதி-வட்டம், உத்ஸேதம்-உயரம்) ஒரு தண்டம், முக்கால் தண்டம், அல்லது அரை தண்டமிருக்கவேண்டும்.

பிரதியானது அதன் உயரத்தில் முக்கால் பங்கு அல்லது அரைப்பங்கு நிஷ்கிராந்தத்தையுடையதாக இருக்க வேண்டும்.

அவ்விதமே தண்டமானது ஒவ்வொரு முகத்திலும், கால் பங்கு, அல்லது அரைப்பங்கு, விநிர்கமமுடையதாக இருக்கவேண்டும். (வெளியில் நீண்டிருக்கவேண்டும்.) 30

அதன் ஊர்துவகதியானது அதே அளவு இருக்க வேண்டும். (விருதி உயரச்சென்றிருப்பது தண்ட விநிர்கமத்தின் அளவே இருக்கவேண்டும்.) 30½

விருதியின் செய்கையானது (அலங்காரமானது) வியாளத்துடன் கூடியதாவோ, ஸிம்ஹத்துடன் கூடியதாகவோ, நேராகவோ இருக்கவேண்டும். 31

வாஜனத்தின் நிர்கமத்தின் உயரமானது அதன்

ஸமகரம் சித்ரகண்டம் நாகவக்த்ரமிதி த்ரிதா ॥ ௩௨ ॥

நாகவக்த்ரம் நாகபணம் ஸ்வஸ்திகாக்ருதி சிர: க்ரியத் ।
தைவிகாநாம் த்விஜாதீநாம் ஸதைவ ஸமகரா வ்ருத்தி: ॥ ௩௩ ॥

சதுரச்ரம் தத்வ கண்டாக்ரம் ஸமகரம் சித்ரகண்டகம் ।
க்ஷத்ரியாணாம் வணிஜாம் சூத்ராணாமர்த்தசந்த்ரகம் ॥ ௩௪ ॥

ஹஸ்திப்ருஷ்டம் ஹஸ்திதுண்டம் வ்ருத்த்யக்ரம் சித்ரஸந்நிபம் ।
க(ம)கரம் கர்கடம் பந்தமித்யேவமாதி ஸமூஹ்யதாம் ॥ ௩௫ ॥

உயரத்தில் மூன்றில் ஒரு பங்கு அல்லது நான்கில் ஒரு பங்கு இருக்கவேண்டும்.

அது, மகரத்துடன் கூடியது, சித்திரகண்டம், நாகவக்திரம் என்று மூன்றுவிதமாகும். 32

நாகவக்திரம் என்பது, ஸர்பத்தின் படத்தைப்போன்றதாகும். ஸ்வஸ்திகத்தைப்போன்ற சிரஸ்கிரியையையுடையதாகும்.

தேவர்களுக்கும், பிராஹ்மணர்களுக்கும், விருதியானது, மகரத்துடன் கூடியதாக இருக்கவேண்டும். 33

க்ஷத்திரியர்களுக்கும், வைசியர்களுக்கும், கண்டாக்ரமானது, சதுரச்ரமாகவும், மகர வடிவமாகவும், அல்லது சித்திரகண்டமாகவும் இருக்கவேண்டும்.

சூத்திரர்களுக்கு அர்த்த சந்திர வடிவமாக இருக்கவேண்டும். 34

பிரதி (விருதி) யின் அக்ரமானது, யானை வடிவமாகவும், அதன் மண்டையின் வடிவமாகவும், சித்திரத்தைப் போலவும் இருக்கவேண்டும்.

ககர (மகர) பந்தம், கர்கடபந்தம், இதுபோன்ற மற்றவைகளை ஊஹித்துக்கொள்ளுவதுமாகும். 35

வாஜநோர்த்⁴வே வலீகோர்த்⁴வே துலாம் ஸம்யக் நிவேஶயேத் |
த³ண்டோ³ச்சம் வா த்ரிபாதோ³ச்சம் தாரஸமந்விதம் ||௩௫||

த்ரிசதுஷ்பஞ்சத³ண்ட³ம் தீ³ர்க⁴ம் தத் ஸாக்³ரே நாளிகம் |
ஸவ்யாலாக்³ரம் ஸம்ப்ருதாக்³ரம் வா பார்ஶ்வம் தரங்க³வத் ||

வலீகம் ஸ்யாத் வலீகோர்த்⁴வே கர்தவ்யா வர்ணபட்டிகா |
த³ண்டா³ர்தா⁴ர்த⁴விஶாலோச்சா மத்⁴யம் ஸ்யாத்³ த்³வாரவர்ஜிதம் ||

ஸம்ஶ்லிஷ்டோர்த்⁴வே து த³ண்டோ³ச்சாயா துலா ஸ்தி²ரா |
த்ரிபாத³விஸ்த்ருதா ந்யஸ்தா வா ப்ரவேஶாந்தமதா ஶுபா⁴ ||

வாஜனத்திற்கு மேலேயும், வலீகத்திற்கு மேலேயும், துலாத்தை, நன்ருகப் பொருத்திவைக்கவேண்டும். 35½

அது, தண்டத்தின் உயரம், அல்லது தண்டத்தில் முக்கால் பங்கு உயரமும், அதில் சரிபாதி விஸ்தாரமும், மூன்று, நான்கு, அல்லது ஐந்து தண்டம் நீளமும், நுனியில் நாளமுள்ளதாகவும் இருக்கவேண்டும். 36½

வலீகமானது, பார்சுவாங்கத்திலிருக்கின்ற தரங்கத்தைப்போல், வியாளாக்கிரம், அல்லது ஸம்பிருதாக்கிரமாக இருக்கவேண்டும். 37½

வலீகத்திற்கு மேலே வர்ணபட்டிகையை கல்பிக்க வேண்டும். அது தண்டத்தில் பாதி, பாதியில் பாதி விசாலமும் உயரமுமுடையதாக இருக்கவேண்டும். அதன் நடுவில் துவாரமிருக்கக்கூடாது. (வலீகம்—எரவாணம்.) 38

அதற்கு மேலே பலகைகளினுலே தண்டத்தின் உயரமுள்ள துலாத்தை ஸ்திரமாக கல்பிக்கவேண்டும். அது தண்ட விஸ்தாரத்தில் முக்கால் புங்கு விஸ்தாரத்துடன்

तुलोर्ध्वे विस्तारतारोत्सेधा जयन्ती स्यात्तुलोपरि ।
जयन्त्यूर्ध्वे तदर्धांशो जयन्त्यूर्ध्वेऽनुमार्गकम् ॥

तदूर्ध्वे फलकाः पादषडष्टांशतीव्रकाः ।
उत्कटा अर्धेन संघात व्यस्तस्तम्भविस्तृतम् ॥

करालमुद्गमाषादिकल्कैः कृष्णकपोततः ।
उत्तरं वाजनं चैव तत्पार्श्वानुगतं भवेत् ॥४१॥

तुलाद्वारानुयाता हि जयन्ती दीर्घमात्रता ।

வைக்கப்பட்டு பிரவேசானுகதமாக(பொருத்தமாக) அழகாக இருக்கவேண்டும். 39

துலாத்திற்கு மேலே துலாத்தின் விஸ்தாரத்தின் அகலமும் உயரமுமுள்ளதாக ஜயந்தியை கல்பிக்கவேண்டும்.

ஜயந்திக்குமேலே அரை தண்டம் உயரமுள்ளதாக அனுமார்கம் (இடைவெளி) இருக்கவேண்டும். 40

அதற்கு மேலேயுள்ள பலகைகள் ஜயந்தியின் விஸ்தாரத்தில் கால் பங்கு, அரைக்கால் பங்கு, ஆறில் ஒரு தீவிரமுள்ளதாக (நீபிரமுள்ளதாக நீபிரம்—மத்தியமானம்) இருக்கவேண்டும். 40½

கற்பொடிகளின் ஸங்காதமான பிரஸ்தரஸ்தம்பத்தின் விஸ்தாரமானது, கராளமுத்கி (கருப்புப்பயறு) காராமணி இவைகளின் கல்கத்தினாலே பசையுள்ள காரியமுடையதாக (பூசப்பட்டு) இருக்கவேண்டும். 41½

உத்தரமும் வாஜனமும் அதன் பக்கத்தை ஒட்டி இருக்க வேண்டும்.

துலா துவாரத்தை அனுஸரித்துச் செல்லுகின்ற ஜயந்தியானது. குறுக்கே வந்திருக்கவேண்டும். 42½

த்வாராந்தம் தத்பஹிர்வா து ஸாமீப்யாந்தம் ஸுகாவஹம் ॥

அந்தரம் த்ர்யம்ஸம் வா தண்டௌ த்விதண்டம் வலபீதுலயோ: ।
த்ரிதண்டம் வா த்விதண்டம் வா ஸ்யாத் ஜயந்த்யந்தராளகம் ॥௪௪॥

த்விதண்டம் ஸார்த்தத்விதண்டம் ஜயந்த்யா மத்யமிஷ்யதே ।
ஏகதண்டார்த்தமானம் ஸ்யாத் நிர்ஜ்ஜிதம் ஸ்யாத் தத்பஹிர்வித: ॥௪௫॥

கல் சித்ரவிசித்ராங்கா க்ரியா வக்ஷ்யாமி க்ரியா ।
க்ஷுத்ராணாம் து துலாதீநி யதா ஸ்தைர்யம் ததா
ந்யஸேத் ॥௪௬॥

தேவாலயம் அரச கிருஹங்களில் துலையானது ஜயந்திக்கு மேலே மார்கத்தையநுஸரித்து துவாரத்தை யொட்டியிருப்பது சுபகரமாகும். 43

அல்லது துவாரத்திற்குக் குறுக்கே செல்லுகின்றதாக இருப்பதுமாகும். 43½

வலீகம் துலாம், இவைகளின் இடைவெளியானது மூன்று தண்டம், அல்லது இரண்டு தண்டம் இருக்க வேண்டும். 44

ஜயந்தியின் மத்திய விஸ்தாரமானது இரண்டு தண்டம், இரண்டரை தண்டம் அல்லது ஒண்ணரை தண்டம் இருக்கவேண்டுமென்று விரும்பப்படுகிறது. 44½

ஜயந்திக்கு மேலேயுள்ள அனுமார்கமானது, சித்திர மில்லாமலிருக்கவேண்டும். 45

கருங்கற்களின் கிரியையானது, சித்திரங்களினுலே விசித்திரமாக இருக்கும்படி கல்பிக்கப்படவேண்டும்.

க்ஷுத்திர கிரஹங்களில், துலாதிகளை, எவ்விதமாக வைத்தால் உறுதியாக இருக்குமோ, அவ்விதமே செய்ய வேண்டும். 46

விரூபம் வா ஸரூபம் வா ஸர்வாங்க³ம் து யோஜயேத் ।
துலா து த்³ரவ்யோபரிஷ்டாத்து ப²லகாச்சா²த³நம் து வா ॥
இஷ்டகாபி⁴ர்விஹீநாத்³வா ஶேஷம் பூர்வவதா³சரேத் ॥

மஞ்சோச்ச்ராயம் மஸூரிகோச்ச்ராயாத்
த³ஶாம்ஶைகம் ஹீநமஷ்டாம்ஶைகம் வா ।
யாவத் ப³லம் விஸ்தாரம் ஸௌந்த³ர்யம்
தாவந்மஸூரிகாம் விதி⁴நா விதி⁴ஜ்ஞ: ॥௪௮॥

மத்⁴வாஜ்யத³தி⁴க்ஷீரம் மாஷயூஷம் ச சர்ம ச
கத³லீப²லம் கு³ட³ம் நாரிகேலம் ।
...

சகல அங்கங்களையும், ஒரே விதமாகவோ மாறுபாடு உடையதாகவோ உபயோகிப்பதாகும். $46\frac{1}{2}$

துலா திரவியத்திற்குமேலே, பலகைகளால் மறைப்பதாகும். அல்லது செங்கற்களினாலே மறைப்பதுமாகும். மற்றவைகளை முன்பு கூறியிருப்பதைப் போலவே செய்யவேண்டும். 47

மஞ்சத்தின் உயரமானது, மஸூரிகையின் உயரத்தில், பத்தில் ஒருபங்கு, அல்லது எட்டில் ஒருபங்கு குறைவாக இருக்கவேண்டுமென்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அல்லது தலிபத்தில் அரைபாகம் இருப்பதுமாகும். முறையறிந்தவர்கள், மஸூரிகையானது, பலமாகவும், விஸ்தாரமாகவும், அழகாகவும் இருக்குமோ அவ்விதமாக முறையுடன் கல்பிக்கவேண்டும். (தலிபம்-தூண்) 48

தேன் 1, நெய் 2, தயிர் 3, பால் 4, மாஷயூஷம் 5, (உளுந்தங்கஞ்சி) சர்மம் 6, மரப்பட்டை அல்லது தோல் 7, வாழைப்பழம் 8, வெல்லம் 9, தேங்காய் 10 இவைகளை

ஹஸ்தஸ்தம்பதுலாதிகா: நராணாமயுக்மஸங்க்யயா

யுக்மாயுக்மகஸங்க்யயா ஸுராணாம் யஜ்ஞீத ஹஸ்தாதிகா: ।

ஸத்யே ப்ராஹ்மணநிந்திதம் ஸாமாந்யதேவஸம்ஸ்தீர்ணாயே

ஶேஷாணாமுபமத்யேவ விஹிதம் தத்ஸர்வஸம்பதாம் பதம் ॥

ப்ரதேர்பரி வேதி: ஸ்யாத்ஸா பாதவத்த்வ்யம்ஶத்ர்யம்ஶோந்நதா ।

வேதிகாஸு த்வ்யம்ஶானி ஷட்வேதாந்தராணி வா ॥௫௧॥

தொடர்ச்சியான பாகங்களினுலே முன்றயே விருத்திசெய்து கிடைத்த சூர்ணமானது நூறு பங்குகளுள்ளதாக இருக்க வேண்டும். இதற்கு இருமடங்கு சர்க்கரையைச் சேர்க்க வேண்டும். *

மனிதர்களின் கிரஹங்களில் ஹஸ்தம், ஸ்தம்பம், துலாம் முதலியவைகளை ஒத்தைப்படையாகக் கல்பிக்க வேண்டும். தேவாலயங்களில் ஹஸ்தாதிகளை ஒத்தைப் படையாகவும் இரட்டைப்படையாகவும் கல்பிப்பதாம். தேவாலயங்கள், பிராம்ஹண கிரஹங்கள், ராஜகிரஹங் களில் மத்தியில் துவாரமிருப்பது நிந்திக்கப்படவில்லை. மற்றவர்களுக்கு துவாரமானது உபமத்தியமாகவே இருக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அதுவே ஸகல ஸம்பத்துக்களுக்கும் இருப்பிடமாகும். 50

பிரதிக்குமேலே வேதி இருக்கவேண்டும். அந்த வேதி யானது, பாதத்தைப்போல், இரண்டு அல்லது மூன்று பங்கு உயரமுள்ளதாக இருக்கவேண்டும்.

வேதிகைகளில், இரண்டு, ஆறு அல்லது நான்கு

---

* இது மஸூரிகை முகப்பு அவைகளில் கல்பிக்கப்படும் சித்திரங்கள் முதலியவைகளைக் கல்பிப்பதற்காகக் கூறப் பட்டதாம்.

पद्मशैवलपत्रादि चित्रैः सा वेदिका युता ।
कम्पाधस्तात् प्रयोक्तव्या हि स्तम्भास्तत्रैव युक्तितः ॥५२॥

ऊर्ध्वाख्यः कम्पवत् पट्टिकं अग्रबन्धनम् ।
वेदिकोपरि योज्यानि जालकानि विचक्षणैः ॥५३॥

त्यक्त्वा भित्तिस्तम्भमध्यं तच्चतुर्दण्डान्तविस्तृतम् ।
द्विदण्डादिकविस्तारं द्विगुणं तदुदीरितम् ॥५४॥

पादसंमितकम्पं वा पादांशं तद्घनं भवेत् ।

கம்பங்களிருக்கவேண்டும். பாதத்தின் அளவில், நான்கில் ஒரு பங்கு கனமுள்ளவைகளாகவும் இருக்கவேண்டும். 51

வேதிகைகள், பத்மம், சைவலம், (பாசிக்கொத்து) இலை முதலிய சித்திரங்களினாலே அலங்கரிக்கப்பட்டிருக்க வேண்டும். 51½

கம்பத்திற்குக் கீழே ஸ்தம்பங்களை பிரயோகிக்க வேண்டும். அவ்விடத்திலேயே, யுக்தியுடன், ஊர்துவ கம்பம்; அதக் கம்பத்தைப் போல, பட்டிகம், அக்கிர பந்தனம், இவைகளைக் கல்பிக்கவேண்டும். 52½

ஸமர்தனாக இருப்பவன், வேதிகைக்குமேலே, ஜாலகங்களை (ஜன்னல்களை) வைக்கவேண்டும். 53

ஜன்னல்களை சுவற்றிலுள்ள தூணின் மத்தியத்தை விலக்கிவிட்டு, கல்பிக்கவேண்டும். அது, நான்கு தண்டம் வரையில் விஸ்தாரமுள்ளதாக இருப்பதாகும்.

அந்த ஜன்னல்கள் இரண்டு தண்டம் முதல் விஸ்தாரமுடையதாகவும், அதைப்போல் இரண்டு பங்கு உயரமுள்ளதாகவும் இருக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. 54

பாதார்த்தபாதாம்ஶவிவ்ருத்திபி: கம்பை: பாதம் த்யஜேச்ச
மத்யமே ||ருரு||

கவாக்ஷம் குஞ்ஜராக்ஷம் ச நந்த்யாவர்தர்ஜுக்ரியம் ।
புஷ்பகண்டம் ஸகர்ணம் ச யோஜிதவ்யம் யதோசிதம் ||ருசு||

தீர்காஶ்ரம் கர்ணகத்வாரம் தத்கவாக்ஷமிதி ஸ்ம்ருதம் ।
யுக்மாஶ்ரம் கர்ணகத்வாரம் குஞ்ஜராக்ஷமிதி ஸ்ம்ருதம் ||ருஎ||

பஞ்சஸூத்ரமயம் சித்ரம் ப்ரதக்ஷிணவஶாத் க்ருதம் ।
நந்த்யாவர்தாக்ருதிவஶாத் நந்த்யாவர்தமிதி ஸ்ம்ருதம் ||ருஅ||

அவைகளின் உயரமானது, ஒண்ணரை, அல்லது ஒண்ணேகால் பங்கு குறைவாக இருப்பதுமாகும். இந்த அளவில், மத்தியிலுள்ள பாதத்தின் துவாரத்தை ஒதுக்கிவிட வேண்டும்.

இரட்டைப்படை அல்லது ஒத்தைப்படையான கால்கள், கம்பங்கள், இவைகள் அதன் உயரம், அகலங்களில் கல்பிக்கப்பட்டிருக்கவேண்டும். 55

ஜாலகங்கள், கவாக்ஷம், குஞ்சராக்ஷம், நந்தியாவர்தம், ருஜுக்கிரியம், புஷ்ப கண்டம், ஸகர்ணம் என்று பலவிதமாகும். இவைகளை உசிதம்போல் கல்பிக்கவேண்டும். 56

கர்ணக துவாரமானது தீர்காச்ரமாக இருந்தால் அதற்கு கவாக்ஷம் என்று பெயர்.

கர்ணக துவாரமானது யுக்மாச்ரமாக இருந்தால், அதற்கு குஞ்சராக்ஷம் என்று பெயர். 57

பஞ்ச ஸூத்திரமயமான சித்திரமானது பிரதக்ஷிண வசமாக கல்பிக்கப்பட்டிருந்தால், அது நந்தியா வர்தத்தின் உருவத்தைப்போலிருப்பதால், அதற்கு நந்தியாவர்தம் என்று பெயர். 58

ஸ்தம்பதிர்யக்கதம் கம்பம் ருஜுத்வாத் ருஜுக்ரியம் |
புஷ்பகண்டம் ஸகர்ணம் ச நந்த்யாவர்தம் ததோச்யதே ||

பித்திமத்யாத் பஹிஸ்தஸ்ய ஸ்தம்பம் ஸம்யோஜ்ய கவாடயோ: |
கவாடயுக்மம் ஏகம் வா ஸம்வ்ருதோத்காடனக்ஷமம் ||௬௰||

பாதவர்கே அதவா க்ரீவா வர்கே வாதாயனஸ்திதி: |
குளிகா ஜாலகம் தாமவிந்யாஸாக்ருதிலக்ஷணம் ||௬௧||

ஸ்வஸ்திகம் வர்தமானம் ச ஸர்வதோபத்ரஸந்நிபம் |
த்ருமைஶ்ஶைலேஷ்டகாத்யைர்வா யுக்த்யா யோஜ்யம் விசக்ஷணை: ||

ஜாலகம் ஹாலகம் கண்டிதேஷ்டகம் ச க்ரியாயுதம் |
ஜாலகம் ஜாலகைர்யுக்தம் ஷட்கோணேஷ்டகம் ||௬௩||

ஸ்தம்பத்திற்குக் குறுக்கே செல்லுகின்ற கம்பமானது, ருஜுவாக இருப்பதனாலே, அதற்கு ருஜுக்கிரியம், என்று பெயர்.

புஷ்பகண்டம், ஸகர்ணம், இவைகள் நந்தியாவர்தம் என்றே கூறப்படுகின்றன. 59

பித்திமத்தியிலிருந்து வெளியில், அதற்கு, கதவுடன் கூடிய ஸ்தம்பத்தைச் சேர்க்கவேண்டும்.

கவாடமானது, இரண்டு அல்லது ஒன்று, சாத்தக் கூடியதாகவும், திறக்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும்.

வாதாயன ஸ்திதியானது, பாதவர்கத்தில் அல்லது க்ரீவாவர்கத்திலிருக்கவேண்டும்.

வாதாயனமானது, குளிகாஜாலகம், தாமவிந்யாஸா கிருதி லக்ஷணம், ஸ்வஸ்திகம், வர்தமானம், ஸர்வதோபத்ர ஸன்னிபம், என்று பெயருடையதாகும். இவைகளை, மரம், கருங்கல், செங்கல், இவைகளினாலே யுக்தியுடன் யோஜனம் செய்யவேண்டும். 63

𑌜𑌾𑌲𑌕𑌂 𑌫𑌲𑌕𑍋𑌪𑍇𑌤𑌂 𑌇𑌷𑍍𑌟𑌕𑍁𑌡𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌇𑌷𑍍𑌟𑌿𑌬𑌨𑍍𑌧𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌪𑌾𑌦𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌃 ॥ ௬௪ ॥

𑌪𑌾𑌦𑌪𑌾𑌦𑌷𑌡𑌂𑌶𑍈𑌕𑌘𑌨𑌾 𑌫𑌲𑌕𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌶𑌿𑌬𑌿𑌕𑌾𑌕𑍁𑌡𑍍𑌯𑌵𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌫𑌲𑌕𑌾𑌮𑌯𑌮𑍍 ॥ ௬௫ ॥

𑌯𑌤𑍍𑌰 𑌫𑌲𑌕𑌾 𑌕𑍁𑌡𑍍𑌯𑌂 𑌯𑌤𑍍𑌰 𑌯𑌤𑍍𑌰 𑌯𑍋𑌜𑌿𑌤𑌮𑍍 ।
𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌤𑌤𑍍𑌰 𑌯𑍋𑌜𑍍𑌯𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑌕𑍇𑌨 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 ॥

𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌵𑌸𑍍𑌤𑌰𑌂 𑌵𑍇𑌦𑌿𑌕𑌾𑌂𑌶𑌂
𑌯𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌜𑌾𑌲𑌕𑌂 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌕𑍁𑌡𑍍𑌯𑌮𑍍 ।

ஜாலகம், பாலகம், ஐஷ்டம்குட்யம், என்று மூன்று விதமாகும்.

ஜாலங்களுடன் கூடியது ஜாலகம், எனப்படும்.

கற்களாலமைக்கப்பட்டது, ஐஷ்டகுட்யம், எனப் படும்.

பலகையுடன் கூடியது பாலகம் எனப்படும். இது ஒவ்வொன்றும் பித்திமத்தியில் பாதமுடையதாகும். பித்தி பந்தனமானது கீழும் மேலும் பத்மத்துடன் கல்பிக்கப் பட்ட பட்டிகையையுடையதாம். 64

பலகையானது பாதத்தில் கால்பங்கு ஆறில் ஒருபங்கு, கனமுடையதாக இருக்கவேண்டும். அல்லது பலகாமய மாக இருப்பது சிபிகாகுட்யத்தைப்போல் எங்கும் பலகை யினாலேயே அமைந்திருக்க வேண்டும். இதற்கு பலகாகுட்யம் என்று பெயர். 65½

ஸமர்தனை இருப்பவன், இவைகளில், எது எங்கு உசிதமாகத்தோன்றுகிறதோ அதை அங்கு கல்பித்துக் கொள்ளவேண்டும். 66

நைவ சேத்யா வேதிகா ஜாலகாத்யை:
ந ப்ரத்யங்கம் பாவயேத் சேதநீயம் || ௧௭ ||

இதி மயமதே வஸ்துசாஸ்த்ரே ப்ரஸ்தரகரணம் நாம
ஷோடசோऽத்யாய: ||

இவ்விதமாக வேதிகாங்கமான பிரஸ்தரம் கூறப்பட்டுள்ளது. அதை அறிந்தவர்கள், ஜாலகத்தையும், மூன்றுவிதமான குட்யத்தையும் யுக்தியுடன் கல்பிக்க வேண்டும்.

ஜாலகத்திற்காக வேதிகையை சேதிக்கக்கூடாது. எங்கும் ஒவ்வொரு அங்கத்திலும் சேதிக்கவும் கூடாது.

பிரஸ்தரகரணம் என்னும் பதினாறுவது அத்தியாயம் முற்றும்.

[illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||௫||

பதினேழாவது அத்தியாயம்

பக்கத்தில் வைப்பது, நிறுத்தி வைப்பது, படுக்கையாக வைப்பது, என்ற முறைகளில் திரவியங்களின் ஸந்தியைக் கூறுகிறேன்.

ஒரு பதார்த்தத்தில் பல பதார்த்தங்களை இணைத்து வைப்பதனாலே, துர்லபமான நுனி மரங்களில் பலத்தை விருத்தி செய்வதனாலே, ஸந்திகார்யமானது, சிலாகிக்கத் தக்கதாக இருக்கும். இவ்விதமாகச் செய்யப்படும் ஸந்தி கார்யமானது ஒரே ஜாதியான உத்தம விருக்ஷங்களினாலே செய்யப்படவேண்டும். 2

இந்தி ஸந்தியானது, மல்லலீலம் 1, பிரம்ஹராஜம் 2, வேணுபர்வகம் 3, பூகபர்வம் 4, தேவஸந்தி 5, தண்டிகை 6 என ஆறுவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. 3

ஸ்தபதியானவன், வீட்டிற்கு வெளியில் நான்கு பக்கங் களிலும் நின்று, வீட்டைப்பார்த்து தெற்கு வடக்குகளில்,

மத்யே ச தக்ஷிணே சைவ யத்ஸந்திம் கர்துமீஹதே ।
மத்யே தீர்கதரம் யாவத் தீர்கமத்யம் ச பார்ஶ்வயோ: ॥

வாமே தக்ஷிணே ஸமத்ரவ்யம் மத்ய(த்யே) தீர்கதரேऽபி வா ।
மத்யத்ரவ்யம் விநா வாமே தக்ஷிணே த்ரவ்யம் ஸமம் ததா ॥௫॥

ஏவம் தத்ஸந்திம் பஹி: காரயேத் ததைவாப்யந்தரே
விது: ।
ஸ்தபதிர்ஹ்ருதயஸ்தாநே ஸ்தித்வா சதுர்திக்ஷ்வபி ॥

தீர்கஹ்ரஸ்வம் ஸமத்ரவ்யம் பார்ஶ்வயோ: பரிகல்பயேத் ।
ஆதாராதேய நீத்யைவ த்ரவ்யஸந்தாநம் ஸமாஹரேத் ॥௮॥

கிரமமாக நீளமானதுடனும், குட்டையானதுடனும் இணைக்க வேண்டும். 4

மத்தியிலும் தக்ஷிணபாகத்திலும் இணைக்க விரும்புகின்றவன், மத்தியில் அதிதீர்கமாகவும், நடுத்தர தீர்கமாகவும், முன்போல் இணைக்கவேண்டும். 5

வாமபாகம் வலது பாகங்களில் ஸமமான திரவியம், அல்லது மத்திதீர்கத்திலே இணைக்கவேண்டும்.

வாம—தக்ஷ பாகங்களில் மத்திய திரவியமில்லாமல் ஸமமான திரவியத்திலே இணைப்பதுமாகும். 6

இவ்விதமாக ஸந்தியை வெளிப்பக்கத்தில் செய்ய வேண்டும். அவ்விதமே உள்கையில் செய்வதுமாகும் என்று கருதுகிறார்கள். 6½

ஸ்தபதியானவன், ஹிருதயஸ்தானத்தில் நின்று நான்கு பக்கங்களிலும் பார்த்து, தீர்க திரவியம், அல்ப திரவியம்; ஸமதிரவியங்களை, முன்பு கூறியிருப்பதைப்போல் கல்பிக்கவேண்டும். 7½

திரவிய ஸந்தியை, ஆதாரம், ஆதேயம், என்ற நீதியுடன் ஸங்கிரஹித்துக்கொள்ளவேண்டும். 8

𑌮𑍂𑌲𑍇 𑌮𑍂𑌲𑌂 𑌨 𑌯𑍁𑌞𑍍𑌜𑍀𑌯𑌾𑌦𑌗𑍍𑌰𑍇 𑌅𑌗𑍍𑌰𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 |
𑌮𑍂𑌲𑌾𑌗𑍍𑌰𑌤𑍍𑌵𑍍𑌯𑌯𑍋𑌗𑍇𑌨 𑌸𑌂𑌧𑌿𑌕𑌰𑍍𑌮 𑌸𑍁𑌖𑌾𑌵𑌹𑌮𑍍 ||௮||

𑌮𑍂𑌲𑌂 𑌹𑌿 𑌶𑌯𑌿𑌤𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑌗𑍍𑌰𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 |
𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍈𑌕𑌸𑌂𑌧𑌿𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌮𑌲𑍍𑌲𑌲𑍀𑌲𑍇𑌤𑌿 𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌮𑍍 ||௯||

𑌤𑍍𑌰𑌿𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍇 𑌦𑍍𑌵𑌿𑌸𑌂𑌧𑌿𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑌾𑌜𑍇𑌤𑌿 𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌮𑍍 |
𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌿𑌃 𑌪𑌞𑍍𑌚𑌭𑌿𑌰𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍈𑌃 𑌤𑍍𑌰𑌿𑌚𑌤𑍁𑌸𑍍𑌸𑌂𑌧𑌯𑌃 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ||

𑌵𑍇𑌣𑍁𑌪𑌰𑍍𑌵𑍇𑌤𑌿 𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌨𑍃𑌣𑌾𑌂
𑌗𑍃𑌹𑍇 |
𑌷𑌟𑍍𑌸𑌪𑍍𑌤 𑌸𑌪𑍍𑌤𑌭𑌿𑌰𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍈𑌃 𑌸𑌂𑌧𑌯𑌃 𑌪𑌞𑍍𑌚𑌷𑌟𑍍𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ||

மூலத்துடன் மூலத்தையும் அகிரத்துடன் அக்கிரத்தையும் (மூலம்—அடிப்பக்கம், அக்ரம்—நுணி) இணைக்கலாகாது. மூலத்துடன், அக்கிரத்தையும், அக்கிரத்துடன் மூலத்தையும் சேர்த்து இணைப்பதனுல், ஸந்திகாரியமானது ஸுகத்தையளிப்பதாகும். 9

மூலத்தை கீழ் பக்கத்தில் சயிதமாகவும், அக்ரத்தை மேலேயும் இணைக்கவேண்டும்.

இரண்டு திரவியங்களைச் சேர்த்து ஒறுங்க இணைத்தால், இதற்கு, மல்லலீலை, என்று பெயர்.

மூன்று திரவியங்களைச் சேர்த்து, இரண்டு ஸந்திகள் கல்பிக்கப்பட்டால், இதற்கு பிரம்ஹராஜம் என்று பெயர்.

நான்கு அல்லது ஐந்து திரவியங்களைச் சேர்த்து முறையே, மூன்று, அல்லது, நான்கு ஸந்திகள் கல்பிக்கப் பட்டால், அதற்கு வேணுபர்வம் என்று பெயர். இது தேவாலயங்களிலும், மனுஷ்ய கிரஹங்களிலும் கல்பிக்கப் படுவதாகும்.

ஷட்க(ம)ஸப்தகே த்³ரவ்யே பஞ்சஷட்ஸந்தி⁴கல்பிதம்
பூக³பர்வம் ।
த⁴நதா⁴ந்யப்ரத³ம் ஸம்யக் ஸர்வஸம்பத்ப்ரதா³யகம் ॥ ௧௩ ॥

தே³வஸந்தி⁴ரிதி ப்ரோக்த: ஸப்தாஷ்டஸந்தி⁴யோஜித: ।
நவாஷ்டத்³ரவ்யஸம்யுக்தோ க்³ருஹேஷு ஸர்வேஷு ஸம்மத: ॥ ௧௪ ॥

தீ³ர்க⁴ஹ்ரஸ்வஸமாயுக்தா ப³ஹுத்³ரவ்யஸமந்விதா ।
த³க்ஷிணாபரயோர்மூலம் த்³ரவ்யாணாம் ப்ரஶஸ்யதே ॥

அக்³ரமக்³ரம் ஸமாயோஜ்ய மூலம் மூலேந யோஜயேத் ।
த⁴நதா⁴ந்யம் ஸுக²ம் த³த்³யாத்³ த³ண்டி³கேதி ப்ரகீர்திதா ॥

ஆறு, ஏழு திரவியங்களினாலே, ஐந்து, ஆறு ஸந்திகள் கல்பிக்கப்பட்டால், அதற்கு பூகபர்வம், என்று பெயர். இது, தனம், தானியங்களையளிக்கும். 12½

எட்டு — ஒன்பது திரவியங்களினாலே, ஏழு — எட்டு ஸந்திகள் கல்பிக்கப்பட்டால், அது சகல வீடுகளுக்கும் யோக்யமாகையால், அதற்கு தேவஸந்தி என்று பெயர்.

பல திரவியங்களினாலே, தீர்கமாகவும், அல்பமாகவும், பல ஸந்திகள் கல்பிக்கப்பட்டால், அதற்குத் தண்டிகை என்று பெயர். இது, தனம், தானியம், சுகம் இவைகளை யளிக்கும்.

திரவியத்தின் மூலமானது (அடிப்பக்கமானது) தெற்கு, அல்லது மேற்கிலிருப்பது புகழப்படுகின்றது. 16

அவைகளின், நுணியை நுணியுடனும், அடியை அடியுடனும் வைத்து இணைக்கவேண்டும்.

அவைகளில் ஆதார திரவியத்தை அடியையும்

தக்ஷிணோத்தரயோரக்ரம் ததைவோபரி விந்யஸேத் ।
தக்ஷிணோத்தரயோர்மூலம் மூர்த்நி ஸம்யோஜயேத் ॥௧௭॥

பஶ்சிமஸ்யாதஸ்தாச்ச க்ஷேப்யமாதேய யோகத: ।
ஸா த்வேஷா ஸர்வதோபத்ரா ஸ்யாத் கல்பநா இதி ததா விது: ॥௧௮॥

நந்த்யாவர்த்தவிதாநேந நந்த்யாவர்த்தம் ப்ரகல்பயேத் ।
தக்ஷிணோத்தரமம் தீர்கம் தக்ஷிணே து ஸகர்ணகம் ॥௧௯॥

ப்ராகக்ரப்ரத்யகக்ராயாமம் பஶ்சிமே து ஸகர்ணகம் ।
தக்ஷிணோத்தரமம் தீர்கமுத்தரே து ஸகர்ணகம் ॥௨௰॥

நுணியையும் துண்டித்துவிட்டு, முதலில் கிழக்கில் வைக்க வேண்டும். (ஆதாரம்-தாங்கல், வளை) 16

அதன்மேலே தென்பக்கத்திலிருந்தும், வடக்கிலிருந்தும் வைக்கப்படும் திரவியங்களின் நுணிகளை வைத்து இணைக்கவேண்டும்.

தெற்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் மேலே வைக்கப்படும் திரவியங்களின் மூலமானது, உச்சியில் செதுக்கப்பட்டிருக்கவேண்டும். 17

மேற்கேயிருப்பதை ஆதேய வஸ்துவுக்கேற்றபடி அடிப்பக்கத்தில் செதுக்கி வைக்கவேண்டும்.

இவ்விதம் கல்பிப்பதற்கு ஸர்வதோபத்ரம் என்று பெயர்.

இவ்விதமே தெற்கிலிருந்து துவக்கி, நந்தியாவர்த்தத்திற்குக் கூறப்பட்டிருக்கும் முறையின்படியே நந்தியாவர்த்தத்தைக் கல்பிக்கவேண்டும். 18½

தெற்கிலிருந்து வடக்கே நீட்டி வைக்கப்படும் திரவியங்கள், தெற்கே கர்ணமுள்ளவைகளாக இருக்கவேண்டும். 19

பூர்வபஶ்சிமகம் தீர்கம் பூர்வாயாம் து ஸகர்ணகம் ।
ஆதாராதேயநீத்யைவ பூர்வாதிஷு விந்யஸேத் ॥

நந்த்யாவர்த்தமிதம் தத்வத்யாம்யாதிஷு ச க்ரமாத் ।
பக்ஷயோரபி நைகைஸ்து த்ரவ்யைர்தீர்கம்
ப்ராகுதகக்ரகம் ॥ ௨௨ ॥

ஸஶிகைர்பஹுத்ரவ்யைர்த்வாப்யாம் வா
திர்யகக்ரகம் ।
ஸ்வஸ்த்யாக்ருதிஸமாயுக்தம் ஸ்வஸ்திபந்தமிஹோச்யதே ॥ ௨௩ ॥

கிழக்கு மேற்காக நீட்டிவைக்கப்படுகின்ற வஸ்துவானது, மேற்கில் கர்ணமுடையதாக இருக்கவேண்டும்.

தெற்கு வடக்காக நீட்டி வைக்கப்படும் வஸ்துவானது, வடக்கில் கர்ணமுடையதாக இருக்கவேண்டும். 20

கிழக்கு மேற்காக நீட்டி வைக்கப்படும் வஸ்துவானது, கிழக்கில் கர்ணமுடையதாக இருக்கவேண்டும்.

கிழக்கு முதல் வைக்கப்படும் இவைகளை, ஆதாரம் ஆதேயம் என்ற முறையின்படியே வைக்கவேண்டும். 21

இவ்விதமாக வைத்து கல்பிக்கப்படுவதற்கு, **நந்தியாவர்தம்** என்று பெயர்.

அதைப்போலவே, தெற்கு முதலியவைகளிலிருப்பவைகளையும், முறையே, இரு பக்கங்களிலும், அநேக திரவியங்களினாலே, கிழக்கு நுனியாகவும் வடக்கு நுனியாகவும், இருக்கும்படி நீண்டிருப்பதும், சிகையுடன் கூடிய பல திரவியங்களினாலேயாவது, இரண்டு திரவியங்களினாலேயாவது, அமைக்கப்பட்டிருப்பதும், குறுக்கே அக்ரபாகத்தை யுடையதாகவும், ஸ்வஸ்திகத்தைப் போன்ற ஆகாரத்தை யுடையதாகவும் கல்பிக்கப்படுவதற்கு, **ஸ்வஸ்திக பந்தம்** என்று பெயர். 23

பரிதோ பஹுத்ரவ்யயுக்தம் தத்வதந்தரே |
மத்யாங்கணஸமாயுக்தம் ப்ராஹுர்பத்ரம் ஸதா புதா: ||

பூர்வத்ரவ்யம் பரத்ரவ்யம் ஸஹ பத்ரம் தக்ஷிணோத்தரே |
ஶாலாநாம் பித்திமாஶ்ரித்ய யுக்த்யா கல்பயேத்தத: ||

ஏவம் யுக்த்யாஹிதம் பந்தம் வர்த்தமாநமிதீரிதம் |
ஊர்த்வோர்த்வ கல்ப்யமாநாநாம் தலாநாமநுரூபத: |

விபரீதே விபத்த்யை ஸ்யாதிதி ஶாஸ்த்ரவிநிஶ்சய: |
தீர்க்கா தீர்க்கேஷு ஸம்யோஜ்ய த்ரவ்யாணி ஸந்தயேத் ||

மத்தியில் அங்கணத்துடன் கூடியதும், வெளிப்பக்கத்தில் யுக்தியுடன் பல திரவியங்களுடன் கூடியதும், அதே போல அதன் இடைவெளிகளிலும் பல திரவியங்களுடனும் கூடியது, பத்திரகம் என்று கூறப்படும். 24

பூர்வதிரவியம் பரதிரவியத்துடன் கூடிய பத்திரகத்தை தெற்கிலிருந்தும், வடக்கிலிருந்தும், சாலைகளின் சுவற்றை ஆசிரயித்து யுக்தியுடன் நன்கு கல்பிக்கவேண்டும். இவ்விதம் கல்பிக்கப்படும் இந்த பந்தத்திற்கு வர்தமானம் என்று பெயர். 25½

மேலே மேலே கல்பிக்கப்படவிருக்கின்ற தலங்களுக்கேற்றபடி, அடித்தலமான பூதலத்தில் யுக்தியுடன் காரியங்களைச் செய்ய வேண்டும். 26

அவ்வாறில்லாமல் விபரீதமாகக் கல்பித்தால், அது ஆபத்துக்கு ஹேதுவாகும் என்பது சாஸ்திரத்தின் நிச்சயமாகும். 26½

சாமர்த்தியசாலியாக இருப்பவன், நீளமாகவும், குட்டையாகவும் இருக்கும் திரவியங்களைச் சேர்த்து, அவைகளை இணைக்கும்பொழுது, பொருத்துவதற்கு ஏற்ற வலுவுடைய

யதாஸ்பதம் யதாயோக்யம் ததா யோஜ்யம் விசக்ஷணை: ।
ஏவம் விதிவிஶிஷ்டம் ஸ்யாத் ஸம்பத்ஸர்வஸம்பதம் ॥

மேஷயுக்தம் த்ரிகண்டம் ச ஸௌபத்ரம் சார்தபாணிகம் ।
மஹாவ்ருத்தம் ச பஞ்சைதே ஸ்தம்பஸந்தய: ஸ்ம்ருதா: ॥

ஷட்சிகாரஸதந்தம் ச ஸூகரக்ராணமேவ ச ।
ஸங்கீர்ணகீலம் வஜ்ராபம் பஞ்சைவ ஶயிதேஷ்வபி ॥௩௰॥

ஸ்வவ்யாஸகர்ணதைர்க்யம் ச ஶிகாமத்யாம் த்ரிபாகத: ।
த்ரம்ஶபாகம் ஶிகாயுக்தம் மேஷயுக்தம் ப்ரகீர்த்திதம் ॥௩௧॥

ஸஸ்வஸ்திகாபம் த்ரிகண்டம் ஸ்யாத் ஸ த்ரிஶூலி
த்ரிகண்டகம் ।

தாகவும், தகுதியுள்ளதாகவும் பார்த்து, ஏற்றவாறு கல்பிக்க வேண்டும். இவ்விதமாக திரவியங்களை விதியுடன் சேர்த்துப் பிணைத்தால், அது சகல சம்பத்துக்களையுமளிப்பதாகும். 28

ஸ்தம்பஸந்திகள், மேஷயுக்தம் 1, த்ரிகண்டம் 2, ஸௌபத்ரம் 3, அர்தபாணிகம் 4, மஹாவிருத்தம் 5 என்று ஐந்துவிதமாகக் கூறப்பட்டிருக்கின்றன. 29

சயிதஸந்திகள் (படுக்கையாக இருக்கின்ற வஸ்துக்களின் ஸந்திகள்) ஷட்சிகை 1, ரசஷதந்தம் 2, ஸூகர க்ராணம் 3, ஸங்கீர்ணகீலம் 4, வஜ்ராபம் 5 என்று ஐந்து விதமாகும். 30

தனது வியாசத்தில் கர்ணமுடையதும், வியாசத்தைப் போல் ஒண்ணரைப்பங்கு நீளமுடையதும், மூன்றிலொரு பாகம் மத்தியில் சிகையுடையதும், மேஷயுக்தம் என்னும் பந்தமென்று கூறப்பட்டிருக்கிறது. 31

ஸ்வஸ்திகத்தைப்போன்றிருப்பது திரிகண்டபந்தமாகும். திரிசூலியாக இருப்பது, திரிகண்டபந்தமாகும்.

பார்ஶ்வே சதுஶ்ஶிகோபேதம் ஸௌபத்ரமிதி ஸம்ஜ்ஞிதம்

அர்தம் சித்த்வா து ஊர்த்வாதரயோ: அந்யோந்யாபி
நிவேஶநாத் ।
அர்தபாணிரிதி ப்ரோக்தோ யுக்தஸ்தத்வஸ்துநாந்தத: ||௩௩||

அர்தவ்ருத்தஶிகம் மத்யே தந்மஹாவ்ருத்தமுச்யதே ।
வ்ருத்தாக்ருதிஷு பாதேஷு ப்ரயுஞ்ஜீத விசக்ஷண: ||௩௪||

ஸ்தம்பாநாம் ஸ்தம்பதைர்க்யார்தாத் அதஸ்ஸந்தாநமாசரேத் ।
ஸ்தம்பமத்யோர்த்வயோஸ்ஸந்திர் விபதாமாஸ்பதம் ஸதா ||௩௫||

பக்கத்தில் நான்கு சிகையுடன் கூடியதற்கு **ஸௌபத்திரம்** என்று பெயர். 32

இணைக்கப்படும் இரண்டு வஸ்துக்களின் கனபரிமாணத்தில், அடியிலுள்ள வஸ்துவில் அரைப்பங்கும் மேலேயுள்ளதில் அரைப்பங்கும் சேதித்துவிட்டு அவ்விரண்டுகளையும் ஒன்றுக்கொன்று எதிராகவைத்துக் கல்பிக்கப்படும் ஸந்திக்கு **அர்த்தபாணிபந்தம்** என்று பெயர். 33

மத்தியில் அரைவட்டமான சிகையுடையது **மஹாவிருத்தபந்தம்** என்று கூறப்பட்டிருக்கிறது.

சாமர்த்தியசாலியாக இருப்பவன், இந்த மஹாவிருத்தபந்தத்தை, விருத்தாகாரமான பாதங்களில் கல்பிக்க வேண்டும். 34

தூண்களில், தூணின் நீளத்தில் சரிபாதியளவுக்குக் கீழே, சந்தானத்தை (சந்தானம்—ஒட்டு) செய்யவேண்டும். அவ்வாறு செய்யாமல் ஸ்தம்பத்தின் நடுவிலாவது, பாதிக்கு மேலேயாவது சந்தியை கல்பித்தால், அது அடிக்கடி ஆபத்துக்களையுண்டுபண்ணும். 35

கும்பமண்ட்யாதிஸம்பந்தம் ஸந்தானம் ஸம்பதாம் பதம் ।
ஸாலங்காரே ஶிலாஸ்தம்பே யதா யோக்யம் ததா பவேத் ॥

ஸ்திதஸ்ய பாதபஸ்யாங்கம் யதா ஸ்தம்பம் ததா விது: ।
வ்யத்யயே மூலாக்ரம் து ஸர்வஸம்பத்விநாஶநம் ॥ ௩௭ ॥

அர்த்தபாணிர்த்விபார்ஶ்வே து ஹலாகாரஷட்ஶிகா ।
மத்யஸ்தூலகீலா யா ஸா ததா ஷட்ஶிகாஹ்வயா ॥ ௩௮ ॥

ஸ்வாயாமதிர்யக்பாஹ்வக்ரம் ஶிகம் தத் ஜஷதந்தகம் ।
வ்யத்யயாத் ... யதா யோக்யம் யதாபலம் ப்ரகீர்திதம் ॥ ௩௯ ॥

கும்பம், மண்டி, இவைகளின் சம்பந்தத்துடன் கல்பிக்கப்படுகின்ற சந்தியானது, சம்பத்துக்களுக்கு இருப்பிடமாகும்.

அலங்காரங்களுடன் கூடிய சிலாஸ்தம்பத்தில் பொருத்தமாக இருக்கும்படி, சந்தியைக் கல்பிப்பதாகும். 36

நிற்கின்ற மரத்தின் அங்கமானது எவ்வாறிருக்குமோ, அதேபோல ஸ்தம்பத்தைக் கல்பிக்கவேண்டும்.

அப்படிக்கில்லாமல், மேலே அடிப்பக்கத்தையும், கீழே நுனிப்பக்கத்தையும் வைத்தால், அது சகல சம்பத்துக்களையும் அழித்துவிடும். 37

அர்தபாணிபந்தத்தில், இரண்டு நெற்றிகளிலும் கலப்பையைப்போன்ற ஆறு குடுமிகளும், கனமாக மத்தியிலுள்ள கீலமு(கூறு அல்லது முளை)முடையது ஷட்சிகை என்று கூறப்படும். 38

தனது (ஸ்தம்பத்தின்) விஸ்தாரத்தில், குறுக்காகக் கைகளில் (பக்கங்களில்) நுனியையுடையதற்கு ச்சஷதந்தம் (மீன் அல்லது முதலைப் பல்) என்று பெயர்.

ஸௌகரக்ராணவத்ஸ்தம்பே ஸௌகரக்ராணஸந்திஷு ।
யதாபலம் யதாயுக்தி நாநாபலமிவார்பிதம் ॥ ௪௰ ॥

நாநாசிகைர்யுக்தம் ஸங்கீர்ணம் ஸ்யாத் ஸங்கீர்ணசிலகம் ।
வஜ்ராக்ருதிசிகம் நாம வஜ்ரஸந்திஸ்ததேவ தத் ॥ ௪௧ ॥

ஸமத்வேந ப்ரக்லுப்தேஷு ஸந்திரேகாக்ருதிர்பவேத் ।
உபர்யுபரி சைவம் ஸ்யாத் விபரீதே விபத்கரம் ॥ ௪௨ ॥

அக்ரமூலம் பஹிர்ப்ராந்தம் பூர்வத்ரவ்யேஷு யோஜயேத் ।
அக்ரமந்த: பஹிர்மூலம் ஸ்தாபயேதுத்தரத்ரவ்யகம் ॥ ௪௩ ॥

ஸ்தம்பத்தின் மேலும் கீழும் பொருத்தமாகவும், பலமான சிகையுடன் கூடியதாகவும், சூகரத்தின் கிராணத்தை (பன்றியின் மூக்கை)ப்போன்ற வடிவமுடையதுமான பந்தத்திற்கு சூகரக்ராணம் என்று பெயர். 39½

பலமாக இருக்கும்படி, பலவிதத்திலும் பலமுள்ள சிகைகளுடன் கூடியதாகவும், பல கீலங்களுடனும் கல்பிக்கப் படுகின்ற ஸந்திக்கு, ஸங்கீர்ணகீலகம் என்று பெயர்.

வஜ்ரத்தைப்போன்ற சிகையுடன் கூடிய ஸந்தியானது வஜ்ர ஸந்தி என்று கூறப்படும். இது வஜ்ரத்தைப் போன்றதேயாகும். 41

இதை வரிசையாகக் கல்பிக்கும்பொழுது, சந்தியானது ஒரேவிதமாகக் காணப்படும்.

மேன்மேலும் இவ்விதமாகவே கல்பிக்க வேண்டும். அவ்வாறில்லாமல், விபரீதமாகக் கல்பித்தால், அது விபத்தை யுண்டுபண்ணும். 42

பூர்வ திரவியங்களில், உள்ளே மூலத்தையும், வெளியில் நுனியையும் வைத்து ஸந்தியை கல்பிக்க வேண்டும்.

ஶிகா தண்டம் ச ஶூலம் ச வித்தம் பர்யாயஶப்திதம் ।
ஶல்யம் ச ஶங்குராணிஶ்ச கீலம் பர்யாயவாசகே ॥௪௪॥

அஷ்டஸப்தஷடம்ஶகே ஸ்தம்பே
பாகமாத்ரயோ ஶூலகீலயோ: ।
கீலபார்ஶ்வயோ பார்ஶ்வயோர்மத்யம்
யோஜயேத் ஸமத்வம் ப்ராஜ்ஞ: ॥ ௪௫ ॥

ஸ்தம்பாந்தம் தண்டாந்தகம் சேத்ததா
தண்டாந்தம் சேத் ஸ்தம்பாந்தம் ததைவ ।
ஸ்தம்பாந்தம் சேத் ஸந்தியுக்தம் ஸதா
ஸந்தியுக்தம் பாதயுக்தம் க்ஷயம் ஸ்யாத் ॥ ௪௬ ॥

உள்பக்கத்தில் நுணியும், வெளிப்பக்கத்தில் அடியுமாக கல்பிக்கப்படுகின்ற சந்தியானது, யஜமானனுக்கு அழிவை யுண்டுபண்ணும். 43

சிகை, தந்தம், சூலம், வித்தம், இந்த பதங்கள் பரியாய பதங்களாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

சல்யம், சங்கு, ஆணி, கீலம், இந்த பதங்கள் பரியாய வாசக பதங்களாகும் என்று கூறப்படுகிறது. 44

சிறந்த அறிவாளியாக இருப்பவன், எட்டு, ஏழு, அல்லது, ஆறு அம்சங்களுடன் கூடிய ஸ்தம்பத்தில், சூலம், கீலம், இவைகளுக்கு பாகத்துடன் கூறப்பட்டிருக்கின்ற அகலத்தையும், கீலத்தின் பார்சுவத்தையும், ஸ்தம்பத்தின் மத்தியையும், ஸமமாக இருக்கும்படி இணைக்கவேண்டும். 45

ஸ்தம்பாந்தமானது, தந்தாந்தகமாக இருந்தால், (தந்தத்தின் இறுதியானது, ஸ்தம்பாந்தமாக இருந்தால்) அது அழிவையுண்டுபண்ணும்.

திக்விதிக்த்வாரதேவாம்சம் ஸர்வம் த்யக்த்வா ப்ரயோஜயேத் ।
அர்கார்கிவருணேந்தூநாம் ஸ்தாநம் திக்ஷு கீர்த்திதம் ॥

அக்நிந்ருதிவாயவ்யேசாநாம் விதிக்ஷு ஸ்ம்ருதம் ।
க்ருஹக்ஷதஸ்ய புஷ்பஸ்ய பல்லாடஸ்ய மஹேந்த்ரக: ॥ ௪௮ ॥

ஏதேஷாமம்சக(கம்) த்வாரம் தத்ர ஸந்திம் ந ஸந்தயேத் ।
சல்யம் ச தந்தம் த்யக்த்வைவ பூர்வோக்தாநாம் ச ஸம்மதம் ॥

தந்தாந்தமானது, ஸ்தம்பத்தின் மத்தியமாக இருந்தாலும், அதேபோல அழிவையுண்டுபண்ணும்.

சந்தியின் மத்திய பாகமானது, ஸ்தம்பாந்தமாக இருந்தால், அது ரோகத்தையுண்டுபண்ணும்.

சந்தியின் மத்தியமானது, பாதத்தின் மத்தியமாக இருந்தால், அது அழிவையளிக்கும். 46

திக்குகள், விதிக்குகள், துவார தேவாம்சங்கள், இவைகள் எல்லாவற்றையும் நீக்கிவிட்டு, சந்தியைக் கல்பிக்கவேண்டும்.

அர்கன், யமன், வருணன், ஸோமன், இவர்களின் ஸ்தானங்கள், திக்குகளென்று கூறப்படுகின்றன. 47

அக்கினி நிருருதி வாயு, ஈசானன், இவர்களின் ஸ்தானங்கள், விதிக்குகள், என்று கூறப்படுகின்றன.

கிரஹக்ஷதன், புஷ்பன், பல்லாடன், இந்திரன், இவர்களின் அம்சங்கள், துவாரங்களாகும். அந்த விடங்களில் சந்தியைக் கல்பிக்கக்கூடாது. 48½

புத்திமானாக இருப்பவன், சல்யத்தையும், தந்தத்தையும் விட்டு விட்டு, முன்பு கூறப்பட்டவைகளுக்கு சம்மதமாக

मध्यार्धमध्यमध्यं च त्यक्त्वा योजितसन्धिकाः ।
द्रव्यमध्यस्थसूत्रस्य वामदक्षिणयोस्तु तत् ॥५०॥

द्रव्यविष्कम्भमध्यस्था शिखा शीघ्रविनाशिनी ।
सन्ध्यन्तसंघट्टं च शिखाकीलस्य वेधतः ॥५१॥

धर्मार्थकामसौख्यानां विपत्तिं नित्यशो दिशेत् ।
